2015

# ஆண்டறிக்கை



இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

## உள்ளடக்கம்

நோக்கு, பணி மற்றும் இலக்குகள் .......... 2

நிறுவனத் தகவல்கள் .......... 3

பணிப்பாளர் சபை .......... 4

2015 டிசம்பர் அன்று உள்ளவாறு பணிப்பாளர் குழாம் .......... 4

முன்னாள் பணிப்பாளர் குழாம் .......... 5

சிரேஸ்ட முகாமைத்துவம் .......... 7

இவ் அறிககை பற்றி .......... 9

செயலாற்றுகை சிறப்புக்கூறுகள் - 2015 .......... 11

எமது பெறுமதி உருவாக்க வியாபார மாதிரி .......... 12

தலைவரின் மீளாய்வு .......... 13

நாம் தொழிற்படும் சூழல் .......... 16

உலகப் பொருளாதாரம் .......... 16

இலங்கைப் பொருளாதாரம் .......... 17

பெற்றோலியக் கைத்தொழில் .......... 19

எமது பெறுமதி உருவாக்கமும் தாக்கங்களும் .......... 21

முதலீட்டாளர்களுக்கான பெறுமதி சேர்த்தல் .......... 21

சமூகத்திற்கான பெறுமதி உருவாக்கம் .......... 34

சுற்றாடலுக்கான பெறுமதி சேர்த்தல் .......... 43

எதிர்கால நோக்கு .......... 44

இடர் முகாமைத்துவ அறிக்கை .......... 47

நிறுவன ஆளுகை .......... 52

பணிப்பாளர்களின் அறிக்கை .......... 57

கணக்காய்வு குழு அறிக்கை .......... 63

நிதியியல் கூற்றுகள் .......... 65

விரிவான வருமானக் கூற்று .......... 66

நிதி நிலைக்கூற்று .......... 67

பங்குமூலதன மாற்றக் கூற்று .......... 68

காசுப்பாய்ச்சல் கூற்று .......... 69

நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் .......... 70

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை .......... 98

ஓரே பார்வையில் பத்தாண்டுகள் .......... 150

நிதியியல் கலைச் சொற்கள் .......... 152

# நோக்கு, பணி, இலக்குகள்

## நோக்கு

- "தேசத்தின் சுபீட்சத்திற்கு பங்களிப்புச் செய்து பிராந்தியத்தில் பெற்றோலியம் மற்றும் அதனோடிணைந்த கைத்தொழிலில் வாடிக்கையாளர் விரும்பத்தகு, நம்பகத்தகு, சூழல் நட்புமிகு தொழில் முயற்சியில் முதன்மை பெற்று விளங்குதல்"

## பணி

- "ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் சூழல் பற்றிய மிகுந்த கரிசனையுடனும் பங்குதாரர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதுடனும் கூடிய அனைத்து செயற்பாடுகளிலும் தொழிலாளர் பங்களிப்பினை ஈடுபடுத்தல், புதுமை படைத்தல் மற்றும் உயர்ந்த ஒழுக்க விழுமியங்களை பேணுதல் ஊடாக தொழில் முயற்சியின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக முன்னேற்றமடைந்த தொழில்நுட்பத்தினை பயன்படுத்துகின்ற அதேவேளை விசுவாசமும் வினைத்திறனுமிக்க விநியோகத்தர் வலையமைப்பொன்றினூடாக வாடிக்கையாளர் எதிர்பார்ப்புக்களையும் விஞ்சுகின்ற அனைத்து தீர்வுகளையும் சேவைகளையும் வழங்குவதனூடாக உயர்தரமிக்க பெற்றோலிய சுத்திகரிப்பு, விற்பனை மற்றும் சந்தைப்படுத்தலில் தலைசிறந்த தரத்தினை அடையப் பெறல்"

## இலக்குகள்

- சந்தைப் பங்கில் உயர்ந்த மட்டத்தினை தக்கவைத்தல்.
- கடுமையான போட்டிமிகு சூழலினை எதிர்கொள்ளும் பொருட்டு விற்பனை, சந்தைப்படுத்தல் மற்றும் தொழிற்பாடுகளில் தலைசிறந்த தரத்தினை அடைதல்.
- பிராந்தியத்தில் சக்தி மையமொன்றாக இலங்கை தோற்றம் பெறுவதற்கு மிக முக்கிய பங்காளராக விளங்குதல்.
- அனைத்து ஊழியர் மட்டங்களிலும் உயர்ந்தளவிலான தொழில் நிபுணத்துவத்தினை மேம்படுத்துதலும் பேணுதலும்.
- உற்பத்தித் திறனையும் முகாமைத்துவத்தினையும் மேம்படுத்துவதற்கான நிறுவன கட்டமைப்பு மாற்றங்கள்.
- குறித்துரைக்கப்பட்ட தரநியமங்களை அதிகரிப்பதற்காக நிறுவன ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் நட்பு நடவடிக்கைகள்
- சமூகத்தின் நல்வாழ்விற்காக தேசிய மற்றும் சமூக கடப்பாடுகளுக்கு ஆதரவளித்தல்.
- இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு பிரதான பங்களிப்பாளராக தோற்றம் பெறுதல்
- பெற்றோலிய மூன்றாம் நிலை துறையில் இலங்கையின் கட்டுப்பாட்டினை தக்கவைத்தல்.

# நிறுவனத் தகவல்கள்

**நிறுவனத்தின் பெயர்**

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**சட்ட வடிவம்**

1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அரசாங்கக் கூட்டுத்தாபனம்.

**பதிவு செய்யப்பட்ட காரியாலயம்**

இல. 609 கலாநிதி டானிஸ்டர் டி சில்வா மாவத்தை கொழும்பு - 09

| | | |
|---|---|---|
| தொலைபேசி | : | + 94 11 5455455 |
| தந்தி | : | “லங்கா ஓயில்” |
| கேபிள்கள் | : | சிபெற்கோ |
| டெலெக்ஸ் | : | 21235 – சீபெற்கோ- சீஈ |
| தொலைநகல் | : | + 94 11 5455400 |
| மின்னஞ்சல் | : | cpcsec@ceypetco.gov.lk |
| இணையத்தளம் | : | www.ceypetco.gov.lk |

**வரி செலுத்துநர் அடையாள இல. :**409000053
**பெறுமதி சேர் வரி பதிவு இல.** :409000053 - 7000

நிதியாண்டு: சனவரி 01 தொடக்கம் டிசம்பர் 31

**2015 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு பணிப்பாளர் சபை:**

திரு. ரி ஜி ஜயசிங்க (தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளரும்)

திரு. டி சி எஸ் செனவிரத்தின
திரு பி கல்ஹேன
திரு எம் ஜீ ஜயசேன
திரு. ஆர் ஹரிஸ்சந்திர
திரு.கே ஏ விமலேந்திரராஜா

**துணைக் கம்பனி**
சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட்,
எரிபொருள் நிரப்பு மையம், கொலன்னாவை

**கணக்காய்வாளர்**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**வங்கியாளர்கள்**
மக்கள் வங்கி, கொமர்ஷல் வங்கி,
இலங்கை வங்கி,ஹற்றன் நஷனல் வங்கி
நேஷன் ட்ரஸ்ட் வங்கி

# பணிப்பாளர் சபை

## 2015 டிசம்பர் அன்று உள்ளவாறு பணிப்பாளர் குழாம்

**திரு. ரி.ஜி ஜயசிங்க (தலைவரும் முகாமைத்துவ பணிப்பாளரும்)**

(2015.10.12.தொடக்கம்)

விஞ்ஞான முதுமானி (பிராந்திய அபிவிருத்தி திட்டமிடல்) ஏஜரி - தாய்லாந்து.
அபிவிருத்திக் கொள்கை மற்றும் திட்டமிடல் டிப்ளோமா வூவ்- ஐக்கிய இராச்சியம்
பிராந்திய அபிவிருத்தி திட்டமிடல் டிப்ளோமா – UNCRD – நாகோயா,
கலைமாணி (இலங்கை), இலங்கை திட்டமிடல் சேவை – வகுப்பு 1
பணிப்பாளர் - சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட்
முன்னாள் செயலாளர், நிதி ஆணைக்குழு
முன்னாள் தலைவர் - முன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழு
முன்னாள் துணைத் தலைவர், இலங்கை தேசிய தொழில்நுட்ப கல்வி நிறுவனம்
முன்னாள் உறுப்பினர் தேசிய கல்வி ஆணைக்குழு
முன்னாள் கருத்திட்டப் பணிப்பாளர் தென் மாகாண கிராமிய அபிவிருத்தி கருத்திட்டம்
முன்னாள் பிரதி பிரதம செயலாளர், திட்டமிடலும் கண்காணிப்பும்

**திரு. டி சீ எஸ் செனவிரத்தன**

( 2015.10.12. தொடக்கம்)

உற்பத்தி டிப்ளோமா, வியாபார முகாமைத்துவ டிப்ளோமா

தலைவர்/ முகாமைத்துவ பணிப்பாளர் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட்

தலைவர்/ முகாமைத்துவ பணிப்பாளர் எஸ்எம்எஸ் ஹோல்டிங் பிறைவட் லிமிடட்

தலைவர்/ முகாமைத்துவ பணிப்பாளர் கிரீனெரி கம்பனி பிறைவட் லிமிடட்

தலைவர்/ முகாமைத்துவ பணிப்பாளர் பிளக் டயமண்ட் செகியுரிடி பிறைவட் லிமிடட்

தலைவர்/ முகாமைத்துவ பணிப்பாளர் எஸ்எம்எஸ் பிளான்டேசன் பிறைவட் லிமிடட்

தலைவர்/ முகாமைத்துவ பணிப்பாளர் எஸ்எம்எஸ் ரியலிடிஸ் பிறைவட் லிமிடட்

**திரு. பி. கல்ஹேன**

(2015.10.12 தொடக்கம்)

தத்துவ முதுமானி மாணவர் - கொழும்பு, FCMA (UK),

CIM இறுதிப் பரீட்சை சித்தி, வியாபார நிருவாகமானி (கௌரவ) (2ஆம் வகுப்பு) – கொழும்பு,

வியாபார முதுமானி (திறமைச் சித்தி) – கொழும்பு,

ICASL-இறுதியாண்டு

தலைவர்- AAICO புரோபெர்டி டிவெலொப்மென்ட் லிமிடட்
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு உறுப்பினர்
சபைப் பணிப்பாளர்- வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
பணிப்பாளர் - டைட்டான் பெகேஜிங் பிறைவட் லிமிடட்
முன்னாள் தலைவர் - இலங்கை நிலைத்திருக்கத்தக்க சக்தி அதிகார சபை
முன்னாள் தலைவர்- தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபை
முன்னாள் தலைவர்- வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்
முன்னாள் தலைவர்- இலங்கை கைவினைப் பொருட்கள் சபை, லக்சல
முன்னால் பணிப்பாளர் - லங்கா கோல் லிமிடட்
முன்னால் பணிப்பாளர் - ஜி எஸ் எம் பி டெக்னிக்கல் சேர்விசஸ் பிரைவட் லிமிடட்

**திரு. எம் ஜி. ஜயசேன**
(2015.10.12. தொடக்கம்)

**திரு. ஆர் ஹரிஸ்சந்திர**
( 2015.10.12 தொடக்கம்)

**திரு. கே. ஏ. விமலேந்திரராஜா**
(2015. 11.11 தொடக்கம்)

## முன்னாள் பணிப்பாளர் குழாம்

**திரு. ஜே.ஆர் விக்ரமசிங்க (முன்னால் தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளரும்)**
(2015.01.21 தொடக்கம் 2015.10.12 வரை)
விஞ்ஞானமானிப் பொறியியல் (இயந்திரவியல் பொறியியல்) கௌரவ பட்டம் - மொரட்டுவ பட்டயப் பொறியியலாளர் இ.பொ.நி (இலங்கை)
பணிப்பாளர் பொலிப்டோ பிரைவட் லிமிடட்,
முன்னாள் கருத்திட்டப் பணிப்பாளர் (மத்தள மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம்)

**திரு. டப்லிவ் எஸ்.எம்.சி சிறிமேவன்**
(2015 .01. 23 தொடக்கம் 2015.10.12 வரை)

**திரு. பிஆர் குணவர்த்தன**
(2015 .01. 26 தொடக்கம் 2015.10.12 வரை)
விஞ்ஞானமானி (விஞ்ஞானம் ) – கொழும்பு
இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபன செயலாற்றுப் பணிப்பாளர்
தாபகப் பணிப்பாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலர் - பொலிப்டோ லங்கா பிரைவட் லிமிடட்
முன்னாள் தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட்
முன்னால் செயலாற்றுப் பணிப்பாளர் இலங்கை மின்சார சபை

**திரு. ஏ.கே செனவிரத்தின**
(2015 .01. 30 தொடக்கம் 2015.10.14 வரை)
வியாபார நிருவாகத்தில் முதுமானி (வியாபார நிருவாகம்) - கொழும்பு, வியாபார மற்றும் நிதிக் கணக்கீட்டில் பட்டப் பின் படிப்பு டிப்ளோமா – இலங்கைப் பட்டயக்கணக்காளர்கள் நிறுவனம், விஞ்ஞானமானி (இரசாயனவியல்) களனி.
பணிப்பாளர் நாயகம் - நாணயக் கொள்கைத் திணைக்களம்
பணிப்பாளர் - டி லா ரூலங்கா கரன்சி அன்ட் செக்யுரிடி பிரின்ட் பிரைவட் லிமிடட்
பணிப்பாளர் - தேசிய சேமிப்பு வங்கி
முன்னால் தலைவர் – தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம்

**திரு. டி டி எஸ் விக்ரமரத்ன**
(2015 .02. 06 தொடக்கம் 2015.10.12 வரை)

**திரு. எம் கே சமரசிங்க**
(2015 .02. 06 தொடக்கம் 2015.10.12 வரை)
வாகன மின்சாரவியல் டிப்ளோமா– ஜிரிரிஜ
முகாமைத்துவ பணிப்பாளர் - சிறி காந்த் புரொப்போசல் கிட்சென் பிரைவட் லிமிடட்
முன்னாள் பணிப்பாளர் அரச மரக் கூட்டுத்தாபனம்
முன்னாள் பணிப்பாளர் அடிப்படை ஆய்வுகள் நிறுவகம்

**திரு. ஏ.ஏச்.எஸ் விஜேசிங்க**

(2014 .01. 09 தொடக்கம் 2015.12.01வரை)

MHRDP – GGSIU – இந்தியா, உள்நாட்டு நிருவாகத்தில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா – பட்டப் பின் படிப்பு முகாமைத்துவ நிறுவனம் ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்,
கலைமானி– களனி

மேலதிகச் செயலாளர் - பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு
முன்னால் காணி உரிமை நிலத் தீர்வை ஆணையாளர் நாயகம்

# சிரேஸ்ட முகாமைத்துவம்

**தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர்**
திரு. ரி. ஜீ. ஜயசிங்க
MSc (Regional Development Planning) – AIT - Thailand, Dip in Development Policy & Planning – UOW – UK, Dip in Regional Development Planning – UNCRD – Nagoya, BA (Ceylon), SLPS – Class I

### எண்ணெய் சுத்திகரிப்புச்சாலை

**சுத்திகரிப்பு முகாமையாளர்**
திரு. என்.ஆர்.ஆர். ஜயசேகர
BSc (Eng.), MBA, C.Eng., MIE(SL)

**பிரதி சுத்திகரிப்பு முகாமையாளர் (தயாரித்தலும் தொழிற்படுத்தலும்)**
திரு. ஈ.ஏ.எஸ். எதிரிசிங்க
BSc (Eng.),C.Eng., MIE(SL), MSLEMA

**பதில் பிரதி சுத்திகரிப்பு முகாமையாளர் (பராமரித்தலும் கருத்திட்டங்களும்)**
திரு. டி.எம்.பி. திசாநாயக்க
BSc (Eng.) Hons., LLB Hons., C.Eng., MIE(SL)

**பிரதி சுத்திகரிப்பு முகாமையாளர் (மின்சாரம் மற்றும் உபகரணங்கள்)**
திரு. எல்.ஜீ.எம்.ஆர். பெரேரா
BSc Eng. (Electronics & Telecommunication Engineering) Hons.

**பிரதி சுத்திகரிப்புச்சாலை முகாமையாளர் (தொழிநுட்ப சேவைகள்)**
திரு. சீ. வீரசேகர
BSc (Eng.), C.Eng., MIE (SL)

**பிரதி தொழிற்படுத்தல் முகாமையாளர் (சப்புகஸ்கந்த முனையம்)**
திரு. டப்.எம்.ஏ.ஐ. வன்சேகர
BSc (Physical Science) – Colombo, Graduate Training Program in Information Technology

### தொழிநுட்ப சேவைகள் மற்றும் நிறுவன விவகாரங்கள்

**பிரதி பொது முகாமையாளர் (தொழிநுட்ப சேவைகள் மற்றும் நிறுவன விவகாரங்கள்)**
திரு. ஜி.ஏ.எஸ்.பி. குணவர்தன
BSc Eng. (Mechanical Engineer)

### மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்

**பிரதிப் பொது முகாமையாளர்**
திரு. எஸ்.டப். கமகே
MBA - PIM-USJP, MSc - WAU-Holland, BSc - Ruhuna, PG Dip B&FA - CASL, Assoc. M (CIPD-UK), FCPM

**முகாமையாளர் (மனித வளங்கள்)**
திரு. கே.டப். எஸ். புஷ்பலால்
BA (Political Science) Sp. Hons – Colombo, Certified professional member of AHRI – Australia, ACPM

### நிதி

**பதில் பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)**
திரு. ஆர்.எஸ். சுந்தரலிங்கம்
ACMA (UK), CGMA

**நிதி முகாமையாளர்**
திருமதி. ஆர்.டி.ஏ. தாபரே
ACMA (UK) , CGMA

### சட்டம்

**பிரதான சட்ட அலுவலர்**
திருமதி. ஆர்.ஏ.கே.சி. ஆரியரத்ன
ATTORNEY-AT-LAW, POST ATTORNEY DIPLOMA IN INTERNATIONAL LAW

### பாதுகாப்பு மற்றும் விசாரணை

**முகாமையாளர் (பாதுகாப்பு மற்றும் விசாரணை)**
மேஜர். எம்.ஆர்.எஸ்.பி. சமரசிங்க RWP RSP
PG Dip in Conflict Resolution & Peace Preparedness, Dip in HRM

### தகவல் தொழிநுட்ப பிரிவு

**முகாமையாளர் (தகவல் தொழிநுட்பம்)**
திருமதி.எம்.எஸ்.ஆர். பர்னாந்து
BSc (Computer Science) Hons. – Colombo, Master of IT – Colombo, Reading for Executive MBA - Colombo, MBCS, MIEEE

### பெறுகையும் களஞ்சியசாலையும்

**முகாமையாளர் (பெறுகையும்களஞ்சியசாலையும்)**
திரு.எஸ்.டி.எஸ். ராஜபக்ஷ
BSc Eng. (Mechanical), C.Eng.

### விமானத்துறை தொழிற்படுத்தல்கள்

**தொழிற்படுத்தல் முகாமையாளர் (விமானத்துறை)**
திரு. எம்.ஏ.டி. மல்லிகாராச்சி
BSc Eng. (Production), MPMI, MIE(SL)

### பொறியியல் மற்றும் வளாகம்

**முகாமையாளர் (பொறியியல் மற்றும் வளாகம்)**
திரு. ஜி.பி.கே. விஜேகோன்
BSc (Eng.), A.M.I.E (SL), PG Dip in Structural Design

### விவசாய இரசாயனங்கள்

**பதில் பொது முகாமையாளர் (விவசாய சந்தைப்படுத்தல்)**
திரு. எச்.எஸ்.கே. அபேவர்தன

### சந்தைப்படுத்தல்

**பிரதிப் பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்)**
திரு. டப்.எம்.கே.ஆர்.பி. விக்ரமசிங்க
MBM, BSc (Chemistry), M.I.Chem.C, CMSLIM

**பதில் சந்தைப்படுத்தல் முகாமையாளர் (சில்லறை)**
திரு. டப்.டி.எல்.சி அபேகுணவர்தன
BSc (Bus. Admin) – USJP, PGDM (Mgt) - Wayamba

### வணிகம் மற்றும் வழங்கல் வலையமைப்பு

**பிரதி பொது முகாமையாளர்**
**(வணிகம் மற்றும் வழங்கல் வலையமைப்பு)**
திரு. எம்.கே. கருசிங்ஹ
BSc - Colombo, MSc (Maritime Affairs)- WMU – Sweden, MBA - PIM-USJP, MICS (UK), MISMM, EDBA - Colombo, Dip in Professional Shipping - Norway

**வணிக முகாமையாளர்**
திரு. டப்.கே.எஸ். குணவர்தன
MSc (Maritime Affairs) - WMU – Sweden, MSc (Mgt & IT) -Kelaniya, BSc. (Mathematics) Sp. (2nd class upper) - Kelaniya, MSLIM

### செயலகம்

**பதில் செயலகப் பிரதானி**
திரு. எஸ். லியனாரச்சிகே
MBS - Colombo, CPM, BCom Sp. - Peradeniya

### கப்பற்துறை பிரிவு

**முகாமையாளர் (கப்பற் துறை)**
திரு. பி.ஏ.யூ.ஆர். கருணாரத்ன
BSc (Physical Science) – Colombo, Dip in General Management – NIBM, PG Certificate of Training in Management - PIM, Certificate in Shipping & Clearance – ISMM

### உள்ளகக் கணக்காய்வு

**பிரதி முகாமையாளர்(உள்ளகக் கணக்காய்வு)**
திரு. கே.டி.ஜி.என்.ஐ. சபரமாது
FCA, ACMA(UK), CGMA, MBA(USQ)

# இவ் அறிக்கை பற்றி

இவ் ஆண்டு, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மூலோபாயம், செயலாற்றுகை, ஆளுகை, பெறுமதி உருவாக்கம், நிலைத்திருக்கும் தன்மை என்பன மீது மிகவும் வெளிப்படைத் தன்மையுடன் காணப்படுகின்ற எமது ஆண்டறிக்கையினை நாம் எடுத்துரைக்கின்றோம். இவ் ஆண்டறிக்கையானது 2015 சனவரி 01 தொடக்கம் 2015 டிசம்பர் 31 வரையான காலப்பகுதிக்கான கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகை பற்றி கூறுகின்ற அதேவேளை பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் விடயங்களில் கவனம் செலுத்துகின்றது. வருடாந்த அறிக்கையிடும் வட்டமொன்றினை நாம் பின்பற்றுவதுடன் இவ் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பொருளடக்கங்கள் முறைமை சார்ந்த செயன் முறையொன்றினூடாக தெரிவு செய்யப்பட்டவையாகும். உலக அறிக்கையிடல் முயற்சிகளினதும் (GRI) எமது தொழிற்துறைக்கு குறித்துரைக்கப்பட்டவைகளினாலும்

விதந்துரைக்கப்பட்ட விடயங்களை உள்ளடக்குவதன் மூலம் கடந்த வருடத்தை விட இவ் அறிக்கையின் நோக்கெல்லையினையும் உள்ளடக்கத்தினையும் நாம் அதிகரித்துள்ளோம்.

விடய எல்லைகளை தாபிக்கும் நோக்கத்திற்காக கீழ்வரும் பங்குதாரர்களை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அங்கீகரிக்கின்றது.

- உள்ளகப் பங்குதாரர்கள்
    - ஊழியர்கள்
- வெளிவாரிப் பங்குதாரர்கள்
    - அரசாங்கம்
    - வாடிக்கையாளர்கள்
    - வர்த்தக பங்குதாரர்கள்
    - நிதி வழங்குநர்கள்
    - சமூகம்
    - ஒழுங்குபடுத்தல் அதிகாரிகள்

*கொந்தளிப்பான உலக மற்றும் உள்நாட்டுப் பொருளாதாரம் அத்துடன் சமூகநிலை என்பவற்றுக்கு மத்தியில் இவ்வாண்டு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு உறுதியான வருடமொன்றாக அமைந்திருந்தது*

# கூட்டுத்தாபனம் பற்றிய கண்ணோட்டம்




*எரிபொருள் நிரப்பு நிலையங்களின் எண்ணிக்கை* ***1,203***

*ஊழியர்களின் எண்ணிக்கை* ***2,579***

*அரசாங்கத்திற்கான கொடுப்பனவுகள் ரூபா* ***95 பில்லியன்***

*செயன்முறைப்படுத்தப்பட்ட மசகு எண்ணெய்* ***1,692,074 மெ.தொ***

# செயலாற்றுகை சிறப்புக் கூறுகள்- 2015


















# எமது பெறுமதி உருவாக்க வியாபார மாதிரி

## உள்ளீடுகள்

**நிதி மூலதனம்**
பங்கு மூலதனம்: (ரூபா 229 பில்)
கடன் பெறல்: (ரூபா 268 பில்)

**தயாரிக்கப்பட்ட மூலதனம்**
ஆ. பொ. உ: ரூபா. 14 பில்
எரிபொருள் நிரப்பு நிலையங்களின் எண்ணிக்கை- 1,203

**புலமைச் சொத்து மூலதனம்**
- அரசாங்கத்திற்கு உரித்தான நிறுவனமொன்றாக நற்பெயர்
- அறிவுள்ள மற்றும் அனுபவம் வாய்ந்த பணியாட் தொகுதி

**மனித மூலதனம்**
நிரந்தர பதவியினர் : 2,579
பணிக்கொடை:(ரூபா 861மில்)

**சமூக மற்றும் உறவு மூலதனம்**
- சர்வதேச சந்தையில் எரிபொருள் வழங்குநர்கள்
- கப்பல் நிறுவனங்கள்
- தனிப்பட்டவர்கள்
- கூட்டு நிறுவனங்கள்

**இயற்கை மூலதனம்**
- குறித்த சக்தி நுகர்வு (மசகு எண்ணெய்யின் மெ.தொ ஒன்றுககான MMK Cal அளவு : 0.4755
- பயன்படுத்தும் கடதாசி :ISO 9001:2008, ISO 14001:2004 சான்றுப்படுத்தப்பட்ட உயர்தர "டபல் ஏ" பயன்படுத்தல்

## செயற்பாடுகள்

**அடிப்படைச் செயற்பாடுகள்**

இறக்குமதி

சுத்திகரித்தல்

களஞ்சியப்படுத்தல்

விநியோகித்தல்

**துணை தொழிற்பாடுகள்**

வியாபார மூலோபாயம்

தொழில் நுட்ப சேவைகள்

மக்கள் முகாமைத்துவம்

தகவல் தொழில்நுட்ப ஆதரவு

## வெளியீடுகள்

**முதலீட்டாளர்கள்**
செலுத்தப்பட்ட வட்டி
(ரூபா. 15 பில்)

**அரசாங்கம்**
செலுத்தப்பட்ட வட்டி
(ரூபா. 95 பில்)

**வாடிக்கையாளர்**
வருமானம்
(ரூபா. 377 பில்)

**வழங்குநர்**
கொடுப்பனவுகள்
(ரூபா. 292 பில்)

**ஊழியர்கள்**
சம்பளங்களும் நலன்களும்
(ரூபா. 5பில்)

**சமூகம்**
அதிக மானிய விலையில் பெற்றோலிய உற்பத்திகளை வழங்குதல்

**சுற்றாடல்**
கழிவு நீர் சுத்திகரிப்பு பொறித் தொகுதியொன்றினை நிர்மாணித்தல்.

நிறுவன ஆளுகை

இடர் முகாமைத்துவமும் உள்ளகக் கட்டுப்பாடுகளும்

## தலைவரின் மீளாய்வு

2015 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையினையும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களையும் எடுத்துரைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். கொந்தளிப்பு மிக்க உலக மற்றும் உள்நாட்டுப் பொருளாதார அத்துடன் சமூக நிலைமைகள் என்பவற்றுக்கு மத்தியில் இவ்வாண்டு இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு உறுதிவாய்ந்த ஆண்டொன்றாக அமைந்திருந்தது. இந் நிலைமைகளுக்கு மத்தியல் ரூபா 39.62 பில்லியன் மொத்த இலாபத்தினை எய்துவதற்கு எமக்கு இயலுமாகவிருந்தது. இது முன்னைய ஆண்டினை விட 57% உயர்வாகவிருந்ததுடன் தொழிற்பாட்டு இலாபம் ரூபா 27.42 பில்லியன் ஆகவிருந்த அதேவேளை 2014 இல் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாட்டு இலாபம் வெறும் 12.3 பில்லியன் ஆகவிருந்தது. எவ்வாறாயினும், செலாவணி மாற்றுவிகித வேறுபாடு, நிதிச் செலவுகள், ஹெட்ஜிங் செலவுகள், மற்றும் வரிச் செலவுகள் என்பன தொழிற்பாட்டு இலாபத்தினை நட்டமொன்றாக மாற்றியமைத்தன. 2015 இல் வரிக்கு பிந்திய நட்டம் ரூபா 21.74 பில்லின் ஆகவிருந்தது.

### தொழிற்பாட்டு சூழ்நிலை

அனைத்து மூன்று உப துறையிலும் வளர்ச்சியுடன் இலங்கையின் பொருளாதாரமானது 2015 இல் 4.8% இனால் வளர்ச்சியடைந்தது. விவசாயத் துறையானது அதிகூடிய வளர்ச்சியினை எய்திய அதே வேளை பொருளாதாரத்திற்கு பாதியளவில் பங்களிப்புச் செய்கின்ற சேவைத் துறையானது 5.3%. வளர்ச்சி விகிதமொன்றினை எய்தியது. 2015ஆம் ஆண்டின்போது கைத்தொழில் துறையின் வளர்ச்சி, 3% ஆகவிருந்தது. 2015 ஆகஸ்ட் வரை இலங்கை ரூபா பரந்தளவில் நிலையானதாகவிருந்ததுடன் அதன் பின்னர் செலாவணி மாற்று வீதத்தினை தீர்மானிப்பதற்கு மிகவும் நெகிழ்வுத் தன்மைமிக்க அணுகுமுறையொன்றிற்காக இலங்கை மத்திய வங்கியின் தீர்மானத்துடன் கணிசமாக மதிப்பிப்பிறங்கியது. இவ் ஆண்டின் போது ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபா ஒட்டு மொத்தமாக 9.03% இனால் மதிப்பிறங்கியது. மேலும், இவ் ஆண்டின் போது, இறக்குமதியினைக் குறைக்கும் பொருட்டு சில பொருட்களின் சுங்கத் தீர்வையினை அரசாங்கம் அதிகரித்தது. மறுபக்கத்தில், 2015இல் உலக எரிபொருள் விலை 47.2% இனால் குறைவடைந்தது. உலக எரிபொருள் விலைகளுக்கிணங்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட மசகு எண்ணெய்யின் சராசரி விலைகளும் 47.6% இனால் குறைவடைந்தது.

### எமது செயலாற்றுகை

2015 ஆம் ஆண்டுக்கான வருவாய் ரூபா 376.73 பில்லியனாகவும் மொத்த இலாபம் 39.62 பில்லியனாகவும் இருந்தது. வருவாய் தொகையில் வீழ்ச்சியொன்றினை நாம் காணக்கூடியதாகவிருந்த போதிலும், சர்வதேச மசகு எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட குறைவுடன் மொத்த இலாபம், 57% இனால் துரிதமாக அதிகரித்தது. பங்கு தாரர்களின் உயர்மட்ட ஈடுபாட்டுடனும் சிறந்த முகாமைத்துவ நடைமுறைகளுடனும் தொழிற்பாட்டு இலாபமானது முந்திய ஆண்டில் ரூபா 12.3 பில்லியன் ஆகவிருந்து ரூபா 27.42 பில்லியனாக இரட்டிப்புக்கு மேல் அதிகரித்தது. மறுதலையாக, பல சமூகப் பொருளாதார காரணிகளின் விளைவாக மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய செலவாக ரூபா 21.9 பில்லியன் கொண்ட தொகையினை கூட்டுத்தாபனம் சந்தித்தது.

பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு சில்லறை விலை 2015 சனவரியில் கீழ் நோக்கி மீளாயப்பட்டதுடன் 2015 சனவரி தொடக்கம் ஜூன் வரை சர்வதேச விலைகள் அதிகரிக்கப்பட்ட போதிலும், சர்வதேச மசகு எண்ணெய் விலைகளில் உள்ள மாற்றத்திற்கு இடமளிப்பதற்கு விலை மீளாய்வு எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை. இது, கூட்டுத்தாபனத்தின் மொத்த இலாபத்தினை பாதித்தது. பெற்றோல் மீதான சுங்கத்தீர்வை லீற்றரொன்றுக்கு ரூபா 15 இலிருந்து ரூபா 35 ஆக அதிகரிக்கப்பட்டதிலிருந்து பெற்றோல் இறக்குமதி செய்யப்படுகின்றபோது கூட்டுத்தாபனம் அதிகளவு தொகையினை செலுத்த வேண்டியிருந்தது. 2015 இல் செலுத்தப்பட்ட சுங்கத் தீர்வை 2014 இனை விட ரூபா 32.98 பில்லியன் அதிகமாகவிருந்தது. ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் மதிப்பிறக்கமானது ரூபா 32.84 பில்லியன் செலாவணி மாற்றுவீத நட்டமொன்றுடன் கூட்டுத்தாபனத்தின் இலாபத் தன்மையினை மோசமாக்கியது. பெற்றுக் கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களுக்கான வட்டிச் செலவு, ரூபா 14.98 பில்லியன்

ஆகவிருந்ததுடன் அரசாங்கத்திடமிருந்து கிடைக்க வேண்டிய மானியக் கூறுகளுக்கெதிராக ஐக்கிய அமெரிக்க டொலர் கடன்களை தீரப்பனவு செய்வதற்கு பணியாற்றத்தக்க பொறிமுறையொன்று இல்லாமை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எதிர்கொண்ட பாரிய தடைகளில் ஒன்றாகக் காணப்பட்டது. மேலும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது, ஏனைய உரிமம் பெற்ற வங்கிகளில் ஐக்கிய அமெரிக்கா டொலர் கொள்வனவு செய்வதை தடுத்து அரசாங்கத்திற்கு உரித்தான இரண்டு வர்த்தக வங்கிகளில் இருந்து மாத்திரம் ஐ.அ.டொ. கொள்வனவு செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது.

வர்த்தகப் படுகடன்களை மீள அறவிடுவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டதுடன் இதன் விளைவாக வர்த்தக ரீதியான கிடைப்பனவுகள் 49.21% இனால் குறைவடைந்தன. இருந்த போதிலும், 2015 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு வர்த்தக கிடைக்கத்தக்கவை ரூபா 18.73 பில்லியன் ஆகவிருந்தது. இதில் ஸ்ரீலங்கன் ஏயார்லைன் ரூபா 8.61 பில்லியன், இலங்கை மின்சார சபை, சுயாதீன மின் உற்பத்தியாளர்கள், ஆயுதப் படையினர் மற்றும் மிஹின் லங்கா (பிறைவட்) லிமிடட் என்பன பிரதான கடன்படுநர்களாக 2015 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு முறையே ரூபா 2.72 பில்லியன் ரூபா 1.78 பில்லியன்,ரூபா 0.65 பில்லியன் ரூபா 0.55 பில்லியன் நிலுவைகளுடன் காணப்பட்டன.

**முன்னேற்றத்தை நோக்கிய பாதை**

உலக எரிபொருள் விலைகளில் வீழ்ச்சிப் போக்கு 2016 இன் முதற் காலாண்டின் பின்னர் நிலைக்கவில்லை. அதேவேளை சொற்ப கூடிக் குறைதலுடன் அது அதிகரித்த போக்கொன்றை காண்பித்ததுடன் எதிர்வரும் காலாண்டுகளில் அதிகரிக்கும் போக்கு தொடர்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், வெளிநாட்டு உழைப்பில் உள்ள வீழ்ச்சிப் போக்கானது வெளிநாட்டு நாணய மாற்று விகிதங்கள் மீது அழுத்தங்களை நெருக்கும் அத்துடன் உலக வட்டி விகிதங்கள் அதிகரிக்கும் எனவும் இதன் விளைவாக நிலவுகின்ற சந்தை விகிதங்களில் பெற்றுக் கொண்ட வெளிநாட்டுக் கடன்களுக்காக உயர் வட்டி விகிதங்களை இலங்கை செலுத்துவதற்கு நேரிடும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, பிரதானமாக அரசாங்கம் அதன் வரிகளை அதிகரிப்பதன் மூலம் தனது வருமானத்தினை அதிகரிப்பதற்கு திட்டமிடுகின்றது. இருந்த போதிலும் பொருத்தமான கொள்கைகளுடன் நடுத்தர காலத்தில் உயர் வளர்ச்சிப் பாதையொன்றினை பொருளதாரம் அனுபவிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வெளிவாரி சூழலில் இருந்து தோன்றுகின்ற சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கும் இலாமீட்டும் நிறுவனமொன்றாகத் தோற்றம் பெறும் அதேவேளை வளர்ச்சிப் பாதையொன்றிலும் நுழைவதற்கும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் தயார் நிலையில் உள்ளது.

கூட்டுத்தாபனத்தினை இலாபமீட்டும் நிறுவனமொன்றாக ஆக்குவதற்கும் அதனூடாக பொருளாதாரத்திற்கும் பொதுமக்களுக்கும் பெறுமதியினை அதிகரிக்கும் நோக்குடன் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாடுகளை தரமுயர்த்துவதற்கும் விஸ்தரிப்பதற்கும் அவசியமானதாக காணப்படுகின்ற சில அவசர நீண்ட கால மற்றும் குறுகிய கால கருத்திட்டங்களை நாம் சிரேஷ்ட முகாமைத்துவ அணியுடன் சேர்ந்து அடையாளங் கண்டுள்ளோம். அதற்கமைய, குறுகிய காலக் கருத்திட்டங்களுக்காக 2016 மற்றும் 2017 ஆண்டுகளுக்காக பொருத்தமான வரவு செலவு ஒதுக்கீடுகளை மேற்கொண்டுள்ளதுடன் உள்ளக ரீதியாக உருவாக்க கூடியதாக கிடைக்கத்தக்க நிதியங்களை கொண்டு கருத்திட்டங்களை முகாமை செய்வதற்கு தீர்மானித்துள்ள அதே வேளை நீண்டகால கருத்திட்டங்களாக வெளிவாரியாக நிதியங்களை திரட்டுவதற்கு திட்டமிடுகின்றோம். வியாபார விஸ்தரிப்பின் பகுதியொன்றாக, திரவப் பெற்றோலிய வாயுச் சந்தையினுள் கால்பதிக்கவும், கப்பல் எரிபொருள் வழங்குதல், மொத்த தார் மற்றும் உராய்வு நீக்கி எண்ணெய் வர்த்தகத்தினை விஸ்தரிப்பதற்கும் நாம் திட்டமிடுகின்றோம். மலேசியாவின் ஹைராக்ஸ் ஓயில் எஸ்டிஎன் பிஎச்டி நிறுவனத்துடன் கூட்டு முயற்சியில் நிர்மாணித்து தொழிற்படுத்தி கை மாற்றுதல் அடிப்படையில் உராய்வு நீக்கி எண்ணெய் கலக்கும் தொழிற்சாலையொன்றினை நிர்மாணிக்கும் வாயிலாக உராய்வு நீக்கி எண்ணெய் வர்த்தகத்தினை விஸ்தரிப்பதற்கு நாம் ஏற்கனவே ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

செலவினை பிரதிபலிக்க வேண்டிய உள்நாட்டு பெற்றோலிய உற்பத்திகளுக்கான வெளிப்படையான எரிபொருள் விலையிடல் பொறிமுறையொன்றுக்கான அவசரத் தேவையொன்று காணப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, தாமதமின்றி மானியக்கூறுகளை

தீரப்பனவு செய்வதற்கு நாம் அரசாங்கத்தினை எதிர்பார்ப்பதுடன் கிடைக்கத்தக்க மானியக் கூறுவாயிலாக வங்கி கடன் பெறல்களின் சில தொகையினை அரசாங்கம் பொறுப்பேற்க கூடியதாகயிருப்பின் நாம் அதனை பாராட்டுகின்றோம். நாம் எழுப்புகின்ற இப் பிரச்சினைக்கு அடுத்த நிதியாண்டினுள் தொடர்புடைய அதிகாரிகள் செவிசாய்ப்பர் என நான் நம்புகின்றேன். பெற்றோலியத்தினை கண்டறிவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளும் வாயு வர்த்தகமயமாக்கல் செயன்முறையும் வெற்றியளிக்குமாயின் வீட்டு எரிவாயுவினை பயன்படுத்துவதற்கு காய்ச்சி வடித்த உற்பத்திகளின் இறக்குமதியினை குறைப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**பாராட்டுக்கள்**

தாம் வழங்கிய தொடர்ச்சியான ஆதரவிற்கும் உதவிக்கும் நான் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் கௌரவ அமைச்சருக்கும் கௌரவ பிரதி அமைச்சருக்கும் ஏனைய அலுவலர்களுக்கும் எனது நன்றியினை தெரிவிக்கின்றேன். தமது அயராத ஆதரவிற்காக நிதி அமைச்சு, அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களம், இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி, உள்நாட்டு அரசிறைத் திணைக்களம், எமது வங்கிகள் ஆகியவற்றின் அலுவலர்களுக்கு எனது விஷேட பாராட்டுக்கள் உரித்தாகும். தமது விசுவாசத்திற்காகவும் வழங்கிய ஆதரவிற்காகவும் எனது சக பணிப்பாளர்கள், எமது அனைத்து விநியோகத்தர்கள் மற்றும் வியாபாரப் பங்காளிகளுடன் சேர்த்து இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவத்திற்கும் சகல ஊழியர்களுக்கும் நன்றி கூறுவதற்கு இச் சந்தர்ப்பத்தினை எடுத்துக் கொள்கின்றேன். உமது ஆற்றல் மிக்க முயற்சிகள் இன்றி இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சீராக தொழிற்பட்டிராது. இக் கூட்டுத்தாபனத்தினை சிறப்பான உயர் நிலைக்கு எடுத்துச் செல்லும் அதேவேளை பொருளாதாரத்திற்கு பெறுமதி சேர்ப்பதில் உங்கள் அனைவருடனும் இணைத்து பணியாற்ற எதிர்பார்க்கின்றேன்.

நன்றி



ரி ஜி ஜயசிங்க
**தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளரும்**

# நாம் தொழிற்படும் சூழல்

## உலகப் பொருளாதாரம்

வளர்ந்து வரும் சந்தையிலும் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களிலும் வளர்ச்சி விகிதம் வீழ்ச்சியடைந்த அதேவேளை முன்னேற்றமடைந்த பொருளாதாரங்கள் மிதமான வளர்ச்சியொன்றினைக் காண்பித்ததனால் 2015இல் உலகப் பொருளாதாரச் செயற்பாடுகள் தொடர்ந்தும் கீழ்படுத்தப்பட்டிருந்தன. 2015 இல் உலக வெளியீடுகள் 3.1% இனால் வளர்ச்சிடைந்த அதேவேளை 2014 இல் இது 3.4% இனால் வளர்ச்சியடைந்திருந்தன. முன்னேறிய பொருளாதாரங்களின் வளர்ச்சி வீதம் 1.9% ஆகவும் காணப்பட்டது. இதில் சீனாவும் இந்தியாவும் முறையே 6.9% மற்றும் 7.3% வளர்ச்சி வீதத்தினை அடையப் பெற்றன. எரிபொருள் விலையில் தொடர்ச்சியான வீழ்ச்சியுடன் அநேகமான நாடுகளில் பணவீக்கம் கீழ்மட்டத்தில் பேணப்பட்டது. எனினும் எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகள் தமது பொருளாதார சுருக்கங்களுக்கு முகம் கொடுத்தன. 2016 இல் உலகப் பொருளாதாரம் 3.2% ஆகவும் 2017ல் 3.5%ஆகவும் வளர்ச்சிடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.




மூலம்: உலகப் பொருளாதார போக்கு (2016 ஏப்ரல்) சர்வதேச நாணய நிதியம்

2015 இல் எரிபொருள் விலையானது 47.2% இனால் குறைவடைந்தது (2014இல் 7.5% இனால் மாத்திரம் குறைவடைந்திருந்தது) அத்துடன் 2016 ஆம் ஆண்டில் 2016 இன் முதலாம் காலாண்டுக்குப் பின்னர் உலக விலைகள் அதிகரித்த போதிலும் ஒட்டு மொத்த விலை 15.4% வீதத்தினால் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், 2017 இல் எரிபொருள் விலை 17.9% இனால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.




மூலம்: நடுத்தரகால பொருட்கள் விலைகளுக்கான ஒப்புநோக்கு (2016 ஏப்ரல்) சர்வதேச நாணய நிதியம்

2015 இல் உலகப் பொருளாதார சூழலின் தளம்பல் நிலைமைகள், சவால் விடும் விதம் ஒன்றில் இலங்கைப் பொருளாதாரத்தினைப் பாதித்தன. அத்துடன் 2016 இலும் சவால்களைத் தோற்றுவிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. உலக எரிபொருள் விலைகளில் தொடர்ச்சியான வீழ்ச்சி மத்திய கிழக்கு நாடுகளின் வளர்ச்சியில் தேக்கத்தினை ஏற்படுத்தும் இது, வெளிநாட்டு நாணய மாற்று விகிதம் மீதான அழுத்தத்தில் நெருக்குதலினை ஏற்படுத்துகின்ற பணியாளர்கள் பணம் அனுப்புதல்கள் மற்றும் தேயிலை ஏற்றுமதிகள் என்பவற்றிலிருந்தான வருமானத்தில் நேரடியற்ற வீழ்ச்சியினை ஏற்படுத்தும். உலக ரீதியான வட்டி விகிதங்கள் உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது இதன் விளைவாக

வேறுபட்ட விகிதங்களில் பெற்றுக் கொள்ளப்பட்ட வெளிநாட்டுக் கடன்களுக்காக இலங்கை உயர் வட்டி விகிதங்களை செலுத்த நேரிடும்.

## இலங்கைப் பொருளாதாரம்

2015இல் அனைத்து மூன்று உபதுறைகளும் அதாவது விவசாயம், சேவை, மற்றும் கைத்தொழில் என்பன 5.5%,15.3% மற்றும் 3% வளர்ச்சி விகிதங்களினால் பங்களிப்புச் செய்து மொத்த உள்நாட்டு உற்பத்தி 4.8% வளர்ச்சியினை (2014 – 4.9%) எய்தியது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 7.9% இனைக் கொண்டுள்ள விவசாயத்துறையானது கடற்தொழில், இறப்பர் மற்றும் தேயிலை உற்பத்தி என்பன சுருங்கியிருந்த போதிலும் பிரதானமாக காய்கறி மற்றும் நெல் என்பவற்றிலிருந்து உயர் வளர்ச்சியினை எய்தியது. மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு அதிக பங்களிப்புச் செய்கின்ற சேவைத்துறையானது, நிதிச் சேவைகள் நிலங்கள் வீடுகள் விற்பனைத்துறை, தகவல், போக்குவரத்துச் செயற்பாடுகள் அதே போன்று மொத்த மற்றும் சில்லறை வர்த்தகச் செயற்பாடுகள் ஆகியவற்றிலிருந்து அதன் வளர்ச்சியினை வலுப்படுத்தியது. கைத்தொழில் துறையானது நிர்மாணம் மற்றும் சுரங்கத் தொழில் அத்துடன் கல் அகழ்தல் உப துறைகளில் சிறிய சுருக்கத்தினை கருத்திற் கொள்ளாது பிரதானமாக கழிவுச் சுத்திகரிப்பு, மின்சாரம் மற்றும் தயாரித்தல் உப துறைகளில் இருந்து அதன் 3% விகித வளர்ச்சியினை எய்தியது.




குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபர திணைக்கள 2010 மொ. உ. உ ஆண்டை அடிப்படையாக கொண்ட தரவுகள் மூலம்: இலங்கை மத்திய வங்கி

குறைந்த எரிபொருள் விலைகளில் இருந்தும் சுற்றுலாத் துறையினதும் சாதகமான போக்கிலிருந்தும் அதிகளவில் நாடு நன்மை அடைந்த போதிலும் பணியாளர் பணம் அனுப்புதல்கள் மற்றும் மூலதன வெளிப்பாய்ச்சல் உள்ளடங்களாக தேறிய வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சலில் குறைப்பின் விளைவாக 2015இல் சென்மதி நிலுவைகள் ஒட்டு மொத்த பற்றாக் குறையொன்றினைத் தோற்றுவித்தன.




மூலம் : இலங்கை மத்திய வங்கி

பொருளாதார வளர்ச்சி மீது சாதகமான அறிகுறிகள் காணப்படுவதுடன் இது பொருத்தமான கொள்கைகளுடன் நடுத்தர காலத்தில் உயர்வான வளர்ச்சிப் பாதையில் நுழையும். பொருளாதாரம் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளுக்கு அரசாங்கத்தின் வருவாய்களை அதிகரிக்கும் அதே வேளை அரசாங்க செலவினத்தைக் குறைத்தல், ஏற்றுமதிகளையும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஊக்குவித்தல் என்பன ஊடாக தீர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், சக்திக்கும் பொதுப் பயன்பாடுகளும் சந்தையினை அடிப்படையாக கொண்ட விலையிடல் சூத்திரமொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு தேவை உள்ளது. 2016 இற்காக எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சி 5.8% ஆவதுடன் நடுத்தர காலத்தில் 7%ஆல் வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. குறைவான சர்வதேச எண்ணெய் விலை மற்றும் குறைவான வாகன இறக்குமதி ஆகியவற்றிலிருந்தும் அதே போன்று செலாவணி மாற்று வீதத்தினை நிர்ணயிப்பதில் பாரிய நெகிழ்வுத் தன்மையிலிருந்தும் 2016 இல் ஏற்றுமதிச் செலவினம் வீழ்ச்சியடையும் என எதிர் பார்க்கப்படுகின்றது. அதன் பின்னர்

ஏற்றுமதிச் செலவினமானது, எதிர்பார்க்கப்பட்ட உலக மசகு எண்ணெய் விலைகளில் அதிகரிப்புடனும் முதலீட்டுப் பொருட்களில் இறக்குமதியின் அதிகரிப்புடனும் உயர்வடையும்.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகையில் செல்வாக்குச் செலுத்துகின்ற சில முக்கிய பேரினப் பொருளாதார மாறிலிகள் பின்வரும் அட்டவணையில் சாரம்சப்படுத்தப்பட்டுள்ளன.

| **பொருளாதாரக் குறிகாட்டிகள்** | **கூட்டுத்தாபனத்திற்கான தாக்கம்** |
|---|---|
| **நாணயமாற்று விகிதங்கள்**<br><br>2015 ஆகஸ்ட் வரை இலங்கை ரூபாய் பரந்தளவில் உறுதியாக காணப்பட்டு நாணய மாற்று வீதத்தினை தீர்மானிப்பதற்கு பாரிய நெகிழ்வுத்தன்மையினை வழங்குவதற்கு இலங்கை மத்திய வங்கியின் தீர்மானத்தின் விளைவாக வருடத்தின் பிந்திய பகுதிகளில் கணிசமான அளவு மதிப்பிறங்கியது. இவ் ஆண்டின் போது ஐக்கிய அமெரிக்கா டொலருக்கு எதிரக 9.3% இனால் ரூபா ஒட்டு மொத்தமாக மதிப்பிறங்கியது.<br><br><br>மூலம்: இலங்கை மத்திய வங்கி | ரூபா மதிப்பிறத்தின் விளைவாக அதிகரிக்கப்பட்ட இறக்குமதி விலைகளின் காரணமாக சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலை குறைப்பினை முழுமையாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டு த்தாபனம் அனுபவிக்க முடியாதிருந்தது. இது ரூபா 32.84 பில் நாணயமாற்று வீத நட்டமொன்றுக்கு இட்டுச் சென்றது. |
| **வட்டி விகிதங்கள்**<br><br>அவ்வப்போது சில ஏற்றங்கள் காணப்பட்ட போதும், தளர்த்தப்பட்ட நாணய நிபந்தனைகளுடன் 2015 இன் போது சந்தை வட்டி வீதங்கள் குறைவாக காணப்பட்டன. தனியார் துறைக்கான கடன் வளர்ச்சியினை தூண்டுவதற்கும் முதலீடுகளை ஊக்குவிப்பதற்குமான குறிக்கோளுடன் இலங்கை மத்திய வங்கி வட்டி விகிதங்களை குறைவாகப் பேணியது. | குறைந்த வட்டி விகித சூழலானது குறைந்த வட்டி நிதி மூலங்களை நாடுவதற்கு கூட்டுத்தாபனத்தை இயலச் செய்கின்றது. எனினும், பெற்றுக் கொள்ளப்பட்ட ஐக்கிய அமெரிக்கா டொலர் கடன்களை தீரப்பனவு செய்வதற்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பொறிமுறையொன்றினை கொண்டிருக்காமையினால் வட்டி செலவு அதிகரித்துள்ளது. |




மூலம் இலஙவக மத்திய வங்கி

| பொருளாதாரக் குறிகாட்டிகள் | கூட்டுத்தாபனத்திற்கான தாக்கம் |
|---|---|
| **பணவீக்கம்**<br><br>2015 ஆண்டு பொருளாதாரத்திற்கு ஆதரவளித்து குறைந்த மற்றும் நிலையான பணவீக்கத்தினை கொண்டிருந்தது. பல்வேறு பொருட்களின் விலைகள் குறைவின் விளைவாக, 2015 ஜுலை - செப்டம்பர் காலத்தின் போது பணவீக்கம் எதிர்மறையாகவிருந்ததுடன் 2015 இன் இறுதியளவில் 2.8% ஆண்டுக்கு ஆண்டு மொத்த பணவீக்கமொன்றுக்கு படிப்படியாக இட்டுச் செல்லும் விதத்தில் அதிகரித்தது. | குறைந்த எரிபொருள் விலைகள், உள்நாட்டு வாகன எரிபொருளுக்கான கேள்வியினை அதிகரித்து விற்பனை அளவில் அதிகரிப்பினை ஏற்படுத்தியது. எனினும், விற்பனை விலைக் குறைப்பின் காரணமாக வருவாயில் வீழ்ச்சி ஏற்பட்டது. |




மூலம் : இலங்கை மத்திய வங்கி

## பெற்றோலியக் கைத்தொழில்

இலங்கையில் வாகன எரிபொருள் சில்லறைத் துறையானது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனி ஆகிய இரண்டு பாரிய நிறுவனங்களினாலும் ஆளப்படுவதுடன் இக் கைத்தொழிலின் போக்கிலிருந்து

அதிக எண்ணிக்கையிலான பங்குதாரர் குழுக்களும் ஏனைய தொழிற்துறைகளும் தாக்கத்திற்குள்ளாகின்றன.

சர்வதேச மசகு எண்ணெய் விலைகளுக்கு அமைவாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்படும் மசகு எண்ணெய்யின் சராசரி விலையும் 2014 இல் பீப்பாய்யொன்றுக்கு ஐக்கிய அமெரிக்கா டொலர் 104.53 இலிருந்து 2015 இல் பீப்பாயொன்றுக்கு ஐக்கிய அமெரிக்கா டொலர் 54.80 ஆக சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலைகள் வீழ்ச்சியடைந்தமையினால் உலக சந்தை விலைகுறைப்பின் நன்மைகளை பொதுமக்களுக்கு வழங்கும் நோக்குடன் பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு சில்லறை விலைகளுள் 2015 சனவரியில் கணிசமான அளவு குறைக்கப்பட்டன. எனினும், 2015 இன் முதல் சில மாதங்களில் சர்வதேச எரிபொருள் விலை அதிகரித்தபோது உள்நாட்டு விலைகள் மீளாயப்பட்டிருக்கவில்லை எரிபொருட்களின் சில்லறை விலைக் குறைப்பும் வாகனங்கள் அதிகரிப்பும் போக்குவரத்து துறையில் எரிபொருளுக்கு அதிக கேள்வியினைத் தோற்றுவித்து உள்நாட்டு பெற்றோல் விற்பனையில் 20.9% அதிகரிப்பிற்கு இட்டுச் சென்றன.

முக்கிய பெற்றோலிய உற்பத்திகள் சிலவற்றுக்கு மேற்கொள்ளப்பட்ட விலை மீளாய்வுகளை பின்வரும் அட்டவணை காண்பிக்கின்றது.

| உற்பத்தி | 2014.01.01 அன்று உள்ளவாறு | 2014 செப்டம்பர் மீளாயப்பட்டது | 2014 டிசம்பர் மீளாயப்பட்டது | 2015 சனவர் மீளாயப்பட்டது | 2015 ஜூலை மீளாயப் பட்டது | 2015 நவம்பர் மீளாயப்பட்டது | 2015.12.31 அன்று உள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|---|
| **பெற்றோல் 90/92** | 162.00 | 157.00 | 150.00 | 117.00 | - | - | 117.00 |
| **பெற்றோல் 95** | 170.00 | 165.00 | 158.00 | 128.00 | - | - | 128.00 |
| **ஓட்டோ டீசல்** | 121.00 | 118.00 | 111.00 | 95.00 | - | - | 95.00 |
| **சுப்பர் டீசல்** | 145.00 | 140.00 | 133.00 | 110.00 | - | - | 110.00 |
| **மண்ணெண்ணெய் (வீட்டு)** | 106.00 | 86.00 | 81.00 | 59.00 | - | 49.00 | 49.00 |
| **எரிபொருள் எண்ணெய் 800** | 92.20 | - | - | 82.20 | 80.00 | - | 80.00 |
| **எரிபொருள் எண்ணெய்-1500** | 90.00 | - | - | 80.00 | - | - | 80.00 |
| **எரிபொருள் எண்ணெய் 3500** | 90.00 | - | - | 80.00 | - | - | 80.00 |

கைத்தொழிற் துறையின் செயலாற்று கையினை நிர்ணயிப்பதில் எரிபொருள் முக்கியம் பெறுவதுடன் துறையில் நிதியியல் நிலைத்திருத்தல் தன்மையினை உறுதி செய்வதற்கு உள்நாட்டு பெற்றோலிய உற்பத்திகளுக்காக வெளிப்படையான எரிபொருள் விலையிடல் பொறிமுறையொன்றுக்கான அவசரமான தேவையொன்று காணப்படுகின்றது. மேலும், உலை எண்ணெய் மற்றும் படிக எண்ணெய் போன்ற சுத்திகரிப்புச்சாலையின் அடிநிலை உற்பத்திகளைப் பயன்படுத்துவதற்கு மாற்றுவழி வாய்ப்புக்களை தேடுவது அவசியமானதாகும். இயற்கை வாயுவினை அபிவிருத்தி செய்து உற்பத்தி செய்வதற்கான திட்டத்துடன் இலங்கையில் பெற்றோலியத்தினை கண்டறியும் முயற்சிகளைப் புதுப்பித்துள்ளது. வாயு வர்த்தகமயமாக்கல் செயன்முறை வெற்றியடையுமாயின், சமையல் எரிவாயுவாக பயன்படுத்துவதற்கும் இறக்குமதி செய்யப்படும் காய்ச்சி வடித்த திரவத்தினை குறைப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# எமது பெறுமதி உருவாக்கமும் தாக்கங்களும்




## முதலீட்டாளர்களுக்கான பெறுமதி சேர்த்தல்

### கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகை

2015 ஆண்டானது உலக மற்றும் உள்நாட்டு பொருளாதார அத்துடன் சமூக நிலைமைகளின் கொந்தளிப்புடன் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வல்லாற்றல் மிக்க ஆண்டாக அமைந்திருந்தது. அரசிற்கு உரித்தான தொழில் முயற்சிகளின் புறள்வு என்ற ரீதியில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முதல் தரத்தில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. மாறாக, 2015 இல் இது, அதி கூடிய நட்டம் ஏற்படும் தொழில் முயற்சியாக இருந்தது. உலக சந்தையில் மசகு எண்ணெய் விலைகளின் வீழ்ச்சியானது கூட்டுத்தாபனத்தின் மொத்த இலாபத்தினை அதிகரித்த அதேவேளை ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாயின் தொடர்ச்சியான பெறுமதி இறக்கம், நிதிச் செலவுகள் நிதிச் செலவுகளில் அதிகரிப்பினை ஏற்படுத்தி, சுங்கத் தீர்வைகள், கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாட்டு மற்றும் நிதியியல் பெறுபேறுகளில் பாதிப்பினை ஏற்படுத்தின.

2015 இல் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ரூபா. 376.73 பில்லியன் வருவாயினையும் ரூபா. 39.6 பில்லியன் மொத்த இலாபத்தினையும் உழைத்தது. வருவாயானது 28% இனால் குறைவடைந்துள்ள போதும் உலக சந்தையில் மசகு எண்ணெய் விலைகளில் காணப்படும் வீழ்ச்சியினைப் பிரதிபலித்து விற்பனைச் செலவுகளில் குறைவின் பிரதான காரணமாக, 57% இனால் ரூபா. 39.62 பில்லியனாக கணிசமான அளவு அதிகரித்தது. மேலும் தொழிற்பாட்டு இலாபம் முன்னைய ஆண்டில்

12.3 பில்லியனில் இருந்து 22.42 பில்லியனாக இரண்டு மடங்கிற்கும் மேலாக அதிகரித்தது. 2009 இன் பின்னர், இவ்வாண்டிலேயே இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ரூபா. 9.42 பில்லியன் தொழிற்பாட்டு செயற்பாடுகள் தொகையிலிருந்து சாதகமான காசுப் பாய்ச்சல் ஒன்றினை ஈட்டியது. எவ்வாறாயினும், இப்பிரிவின் இலாபத் தன்மையின் கீழ் விவரிக்கப்பட்டுள்ள பல காரணிகளின் பிரதான விளைவாக ரூபா. 21.74 பில்லியன் நட்டம் ஒன்றினைக் கூட்டுத்தாபனம் அனுபவித்தது.

**வருவாய்**

வருவாயானது உள்நாட்டு விற்பனை, ஏற்றுமதிகள் மற்றும் கப்பல் எரிபொருள் வழங்கல் வர்த்தகம் ஆகியவற்றில் இருந்து ஈட்டப்படுகின்றது. இதில், உள்நாட்டு விற்பனை பிரதான வருமான மூலமாகும்.




இவ்வாண்டின்போது உழைக்கப்பட்ட வருவாயானது, சில்லறை விற்பனை விலைகளின் குறைப்பின் பிரதான காரணமாக, ரூபா. 148 பில்லியனால் குறைவடைந்தது. விற்பனை வரிகளில் அதிகரிப்பும், டீசல் மற்றும் உலை எண்ணெய் என்பவற்றுக்கான கேள்வியின் அளவில், குறைவிற்கு மேலதிகமாக தேறிய வருவாயில் குறைவினை ஏற்படுத்தியது. இருந்த போதிலும், வாகன டீசல் ரூபா. 174.98 தொகை கொண்ட அதிகூடிய வருமானத்தை ஈட்டியது. இது முன்னைய ஆண்டை விட 28.4% குறைவாகும்.

அத்துடன், வேண்டப்பட்ட அளவும், 2014 ஆம் ஆண்டை விட 10.14% குறைவானதாகும்.







மொத்த வருவாய் வீழ்ச்சிக்கு மத்தியில், விற்பனை அளவு மற்றும் 95 ஒக்டேன் பெற்றோல், சுப்பர் டீசல், உலை எண்ணெய் 800, படிக எண்ணெய் நேரடி ஏற்றுமதி மற்றும் உலை எண்ணெய் 1500 என்பவற்றில் விற்பனைப் பெறுமதி ஆகிய இரண்டிலும் அதிகரிப்பொன்று காணப்படுகின்றது. 2015 இல் விற்பனை செய்யப்பட்ட அளவானது, முன்னைய ஆண்டை விட அவற்றின் விற்பனைப் பெறுமதி குறைவாக இருந்த போதிலும், 92 ஒக்டேன் பெற்றோல், மண்ணெண்ணெய், படிக எண்ணெய், விவசாய இரசாயனங்கள் என்பனவற்றின் 2014 ஆம் ஆண்டை விட 2015 இல் அதிகமானதாகும். பெற்றோலுக்கும், சுப்பர் டீசலுக்குமான கேள்வி நவீன வாகனங்களின் அதிகரிப்பின் காரணமாக அதிகரித்துள்ளது. சுப்பர் டீசல் கந்தகமற்ற

சூழல் நட்புடைய எரிபொருள் என்பதனால் சில வாடிக்கையாளர்கள் ஒட்டோ டீசலிலிருந்து சுப்பர் டீசலுக்கு மாறியதை நாம் காணக்கூடியதாகவிருந்தது.
இவ்வாண்டின்போது, லங்கா சுப்பர் டீசல் ரூபா. 894.16 மில்லியன் வருவாய் அதிகரிப்பொன்றுடன் 51.35% இனால் அதிகரித்தது. .

**ஏனைய வருமானம்**

பிரதானமாக, ஊழியர் கடன் வட்டி, வாடகை வருமானம், எரிபொருள் நிரப்பு நிலைய உபகரணங்கள் விற்பனை மீதான வருமானம் மற்றும் பங்கிலாப வருமானம் என்பவற்றினை உள்ளடக்குகின்ற ஏனைய தொழிற்பாட்டு வருமானம், பிரதானமாக பங்கிலாப வருமானத்தில் குறைவின் காரணமாக ரூபா. 414 மில்லியனால் குறைவடைந்துள்ளது. 2014 இல் கூட்டுத்தாபனம் ரூபா. 437 மில்லியன் பங்கிலாப வருமானத்தை பெற்றுக் கொண்ட அதேவேளை 2015 இல் இது பங்கிலாப வருமானமாக ரூபா. 4000 இனை மாத்திரம் பெற்றுக் கொண்டது.

**நாணய மாற்றுவீத வேறுபாடு**




ரூபா. 32.84 பில்லியன் கொண்ட நாணயமாற்றுவீத வேறுபாடு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இலாபத் தன்மையினை கணிசமாகப் பாதித்தது. இச்செலவிற்காக, மொத்த இலாபத்தின் 83% பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், தொழிற்படுத்தல் இலாபத்திலிருந்து 120% ஆக காணப்படுகின்றது. முன்னைய ஆண்டில் நாணய மாற்று வீத வேறுபாடு 0.97 பில்லியன் ஆக மாத்திரம் காணப்பட்டது.

**நிதி வருமானம்**

நிதி வருமானமானது 2015 இல் ரூபா. 880.29 மில்லியனால் அதிகரித்துள்ளது. நிலையான வைப்புகள், அழைப்பு வைப்பு மற்றும் அரசாங்க பிணையங்கள் என்பவற்றிலிருந்து வட்டி வருமானம், வட்டி வருமானத்தில் சிறிய அதிகரிப்பொன்றுடன் சேர்த்து இச் சாதனங்களில் முதலீடுகள் அதிகரித்தது. நிலுவையாக உள்ள வர்த்தக கடன்படுநர்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற வட்டி வருமானம் வர்த்தக கடன்படுநர்கள் குறைந்தமைக்கமைவாக, குறைந்துள்ளது.

**நிதிச் செலவுகள்**

ரூபா. 1.07 பில்லியனில் இருந்து ரூபா. 15.05 பில்லியனால், நிதிச் செலவில் அதிகரிப்பொன்று காணப்பட்டது, இது தொழிற்பாட்டு இலாபத்தின் 55% இனைப் பயன்படுத்தியது. இச்செலவினைக் குறைப்பதற்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கடுமையாகப் பாடுபடுவதுடன், செயல்திறன் மிக்க நிதி முகாமைத்துவத்தினால் இவ்வாண்டு ஏதேனும் மேலதிகப் பற்று வட்டியினை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கொடுப்பனவு செய்திருக்கவில்லை என்பது, பாராட்டத்தக்க ஒன்றாகும். இதற்கு மேலதிகமாக, நீண்டகால கடன்கள் மற்றும் நீண்டகால கடன்கள் மீதான வட்டி மற்றும் ஏனைய நிதிச் செலவுகள், கடன்களில் குறைப்பு ஏற்பட்டதனால், ரூபா. 16.85 மில்லியனினால் குறைவடைந்தது. மாறாக, வெளிநாட்டு நாணய வங்கிக் கடன்களிலிருந்தான வட்டிச் செலவுகள், ஐ.அ.டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் மதிப்பிறக்கத்திலிருந்து பிரதானமாக தோன்றிய ரூபா. 1,818 மில்லியன் அதிகரிப்புடன் இவ்வடைவினை பாதிக்கச் செய்தது. அரசாங்கத்திடமிருந்தான மானியக் கூறுகளைக் கொண்டு ஐ.அ.டொ கடன்களை தீர்ப்பனவு செய்வதற்குப் பணியாற்றத்தக்க பொறிமுறை ஒன்றினை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கொண்டிருந்திருக்கும் எனில், கூட்டுத்தாபனமானது இலாபகரமிக்க நிறுவனமொன்றாக இருந்திருக்கும்.

**இலாபத் தன்மை**

மொத்த இலாப எல்லையானது, ஆண்டுக்கு ஆண்டு என்ற அடிப்படையில் 5% இலிருந்து 11% ஆக வளர்ச்சி அடைந்த அதேவேளை தொழிற்பாட்டு இலாப எல்லையானது, 2% இலிருந்து 7% ஆக வளர்ச்சியுற்றது.







உலக சந்தையில் மசகு எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் விற்பனைச் செலவுகள் 32.57% இனால் கணிசமாக குறைவடைந்த அதேவேளை விற்பனைச் செலவில், 20.13% இனால் தொழிற்பாட்டு நட்டத்தினைக் குறைப்பதற்கு கூட்டுத்தாபனத்திற்கு இயலுமாக இருந்தது. மொத்த இலாபத்திற்கு அதிக பங்களிப்புச் செய்தது போக்குவரத்துத் துறையாகும். மீளாய்விற்குட்படுகின்ற ஆண்டின்போது, அத்துறையிடமிருந்து 15.62% இனால் இலாபத் தன்மை அதிகரித்துள்ளது. விமானத் துறையிலிருந்தான மொத்த இலாபம் 150% இனால் அதிகரித்துள்ள அதேவேளை மின்னுற்பத்தி துறை மொத்த இலாபமானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இரட்டிப்பாகியுள்ளது. கூட்டுத்தாபனமானது, ரூபா.1,309.40 மில்லியனிலிருந்து 515.46 மில்லியனாக கப்பல் எரிபொருள் வழங்குவதிலிருந்தான அதன் நட்டத்தினைக் குறைக்க இயலுமாக இருந்தது.




கூட்டுத்தாபனமானது, தொழிற்பாட்டு இலாபமாக ரூபா.22.42 பில்லியன் தொகையினை ஈட்டியது. இது முன்னைய ஆண்டை விட ரூபா. 15.12 பில்லியன் அதிகமாகும். நிர்வாகச் செலவுகளில் குறைவும், மொத்த இலாபத்தில் அதிகரிப்பிற்கு மேலதிகமாக தொழிற்பாட்டு இலாப அதிகரிப்பிற்கு பங்களிப்புச் செய்தது. மேலும், ரூபா. 3.86 பில்லியன் கொண்ட மண்ணெண்ணெய் மானியம் ஒன்றினை கூட்டுத்தாபனம் பெற்றுக் கொண்டது. இது, முன்னைய ஆண்டின் மானியத்தை விட 42% அதிகமானதாகும்.




2015 இல் ரூபா 21.9 பில்லியன் நட்டம் ஒன்றுடன் மொத்த விரிவான வருமானம் நிறைவுற்றிருந்தது. இது, முன்னைய ஆண்டில் ஈட்டிய சிறிய இலாபத்தினையும் தேய்வடையச் செய்தது. பின்வரும் காரணங்களின் வாயிலாக கூட்டுத்தாபனம் பிரதானமாக நட்டமடைந்திருந்தது.

- சர்வதேச எரிபொருள் விலை அசைவுகளுக்கிணங்க செலவு பிரதிபலிப்பு விலையிடல் பொறிமுறை ஒன்று காணப்படாமை மற்றும் அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விற்பனை விலையாக அதிக மானிய விலையில் பெற்றோலிய உற்பத்திகளை விற்பனை செய்வதன் காரணமாக. பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு சில்லறை விலைகள் 2015 சனவரியில் கீழ்நோக்கி மீளாயப்பட்டதுடன், 2015 சனவரி தொடக்கம் ஜூன் வரை சர்வதேச மசகு எண்ணெய் விலைகள் அதிகரித்திருந்த போதிலும், விலை மீளாயப்பட்டிருக்கவில்லை. இது கூட்டுத்தாபனத்தின் மொத்த இலாப எல்லையினைச் சீர்குலைத்தது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 17 ஆம் பிரிவிற்கமைவாக, அரசாங்கத்திடமிருந்து மானியத்தினைப் பெறுவதற்கு கூட்டுத்தாபனம் உரித்துடையதாகும்.
- ஐ.அ.டொ எதிராக, இலங்கை ரூபாவின் மதிப்பிறக்கத்தினால் ரூபா. 32.84 பில்லியன் கொண்ட நாணய மாற்றுவீத வேறுபாட்டு நட்டமொன்று கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டது. இவ்வாண்டின்போது, ஐ.அ.டொ. எதிராக 9.03% இனால் ரூபா மதிப்பிறங்கியது.
- இவ்வாண்டின்போது, லீற்றர் ஒன்றிற்கு ரூபா 15 இலிருந்து லீற்றர் ஒன்றிற்கு ரூபா. 35 ஆக பெற்றோலிற்கான சுங்கத் தீர்வை அதிகரிக்கப்பட்டது. இதன் விளைவாக, கூட்டுத்தாபனம் பெற்றோல் இறக்குமதி செய்யும்போது சுங்கத்திற்கு ரூபா. 31.21 பில்லியன் தொகையினை கூட்டுத்தாபனம் கொடுப்பனவு செய்தது.
- பெற்றுக் கொண்ட வெளிநாட்டு நாணயக் கடன்களுக்கான வட்டிச் செலவானது ரூபா. 14.98 பில்லியன் ஆகவிருந்ததுடன், அரசாங்கத்திடமிருந்து கிடைக்கத்தக்க மானியக் கூறுகள் ஊடாக, ஐ.அ.டொ கடன்களை தீர்ப்பனவு செய்வதற்கு பணியாற்றத்தக்க பொறிமுறை இல்லாமை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எதிர்கொள்கின்ற பாரிய தடையொன்றாகும். மேலும், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அரசாங்கத்திற்கு உரித்தான இரண்டு வங்கிகளிடமிருந்து மாத்திரம் ஐ.அ.டொ கொள்வனவு செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்ததுடன், உரிமம் பெற்ற வேறு வர்த்தக வங்கிகளிடமிருந்து போட்டி விகிதங்களில் ஐ.அ.டொ கொள்வனவு செய்வதற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.
- மழைவீழ்ச்சி மற்றும் குறைவான நிர்மாணச் செயற்பாடுகள் என்பவற்றிற்கு அமைவாக, நீர் மின்சாரத்திற்கு மாறியமையினால், இவ்வாண்டின்போது உலை எண்ணெய் மற்றும் படிக எண்ணெய் போன்ற அடிநிலை உற்பத்திகளுக்கு உள்நாட்டில் கேள்வி குறைந்தமையினால், மிகையான உலை எண்ணெய்யினை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஏற்றுமதி செய்ய வேண்டியிருந்தது. இவற்றைக் களஞ்சியப்படுத்துவதற்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் போதிய இடவசதியினைக் கொண்டிராமையினால் குறைந்த விலையில் அவற்றை ஏற்றுமதி செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டது.
- கப்பல் தாமதக் கட்டணங்களும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் ஏற்பட்ட முக்கிய செலவுகளில் ஒன்றாகவிருந்தது. துறைமுகத்திலிருந்து, முனையங்களுக்கு இறக்குமதி செய்யப்பட்ட உற்பத்திகளை

இறக்குவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற நாட்டிற்கு குறுக்கான குழாய்கள், அவற்றின் பம்புகளின் சிதைவடைந்த நிலைமைகளைத் தொடர்ந்து அவற்றின் அழுத்தம் பராமரிக்கப்பட்டு வருவதன் காரணமாக இறங்கு துறையில் பாரிய நெருக்கடியினைத் தோற்றுவித்தது. இதன் விளைவாக, கப்பற் சரக்கினை இறக்குவதற்கு எடுக்கின்ற சராசரி நேரம் நியமமான நேரத்தினை விட அதிகமானதாகும். இது, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு பாரியளவு கப்பல் தாமதக் கட்டணங்களைத் தோற்றுவிக்கின்றது.

- முன்னர் செய்து கொண்ட ஹெட்ஜிங் கொடுக்கல் வாங்கல்களின் விளைவாக, இலங்கைக்கு எதிரான வழக்கு நடவடிக்கைக்காக டொய்ஸ்ச் வங்கிக்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ரூபா. 3.86 பில்லியன் கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்தது.

கூட்டுத்தாபனம் எதிர்கொள்கின்ற பல்வேறு சவால்களுக்கு மத்தியில், பல பொறிமுறைகளுக்கூடாக அதன் நட்டங்களைக் குறைப்பதற்கு பாடுபடுகின்றது.

- பல கலந்துரையாடல்களுக்குப் பின்னர், ஐ.அ.டொ. நிதிகளில் 5.5% இலிருந்து 5% ஆக நாணயக் கடன் வட்டி குறைக்கப்பட்டுள்ளது. இது, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வட்டிச் செலவினைக் குறைத்துள்ளது.

- இலங்கை வங்கியுடனான பேச்சுவார்த்தைகளின் பின்னர், ஏற்றுக் கொள்ளல் தரகு குறைக்கப்பட்டுள்ளது. இது, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிச் செலவினைக் குறைத்தது.

- நிதியினை பயன்படுத்தாத நிலையில் வைத்திருக்காமல் திறைசேரித் தொழிற்பாடுகள் செயல்திறன் மிக்கதாகவும், வினைத்திறன் மிக்கதாகவும் முகாமை செய்யப்பட்டது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வங்கி மேலதிகப் பற்றுகளுக்கு செல்லாது என்பதனை உறுதிப்படுத்துகின்ற அதேவேளை மிகையான பணம் வட்டி உழைக்கும் மூலங்களில் முதலிடப்பட்டன. இதிலிருந்து, இவ்வாண்டின்போது, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ரூபா. 3.76 பில்லியன் தொகையினை ஈட்டியது. அத்துடன், வங்கி மேலதிகப் பற்று வட்டி ஏற்பட்டிருக்கவில்லை.

- இறக்குமதிப் பெறுகைச் செயன்முறையாது, மிக வெளிப்படை தன்மையானதுடன் விலை மனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு பல வழங்குனர்களுக்கு வாய்ப்புக் கிடைத்தது. இது, இறக்குமதி விலைகளில் ஒட்டுமொத்த குறைப்பொன்றினைத் தோற்றுவித்து, தரமான பெற்றோலிய உற்பத்திகளின் இறக்குமதிப் போட்டித் தன்மைக்குச் சாதகமாகப் பங்களித்தது.

- 2015.04.01 முதல் செயற்படத்தக்கவாறு, விமான எரிபொருள் விலைக்கு செலவுப் பிரதிபலிப்பு முறை பிரயோகிக்கப்பட்டது. 2015 இல் விமானத் துறையிலிருந்து ரூபா. 4.53 பில்லியன் மொத்த இலாபத்தினை எய்தியது.

- மின்சார உற்பத்தித் துறையிலிருந்து குறைவான கேள்விகளுக்கு மத்தியில், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சில்லறை விலைகளை நிலையாகப் பேணுவதற்கு இயலுமாக இருந்தது. இந் நடவடிக்கைகளிலிருந்து இவ்வாண்டின்போது, மின்சார உற்பத்தித் துறையிலிருந்து ரூபா. 12.97 பில்லியன் மொத்த இலாபத்தினை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எய்துவதற்கு இயலுமாக இருந்தது.

- உலை எண்ணெய்க்கான கேள்வியினைக் கருத்திற் கொள்ளாது, உலை எண்ணெய் சில்லறை விலைகள் இலாபம் உழைக்கும் மட்டத்தில் பேணப்பட்டன.

- மூல கப்பல் ஆவணங்கள் இல்லாமையின்போது, கப்பல் உத்தரவாதம்/வங்கி நட்ட உத்தரவாதத்தினைப் பயன்படுத்தி கப்பற் சரக்குகள் அகற்றப்பட்டன.

- பல நடைமுறை அபிவிருத்திப் பணிகள் கொண்டு நடாத்தப்பட்டன. எனினும், எரிபொருள் கையாளுவதில் பல குறைபாடுகள் காணப்படுமிடத்து, மேலதிக மேம்படுத்தல்கள்

தேவையாகவுள்ளன. அத்துடன், விநியோகப் பணிகள் கண்டுபிடிக்கப்பட்டு சரிசெய்யப்பட்டன.

- செலுத்த வேண்டிய வரி மற்றும் சுங்கத் தீர்வைகள் என்பன ரூபா. 11.74 பில்லியன் தொகை கொண்ட முப்படைகள், பொலிஸ் மற்றும் புகையிரதத் திணைக்களம் ஆகியவற்றிலிருந்து கிடைக்க வேண்டிய வர்த்தகக் கடன்களுக்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டன. மேலும், ரூபா. 4.46 பில்லியன் கொண்ட கிடைக்க வேண்டிய மானியம் செலுத்த வேண்டிய வரிகளுக்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டது.

## கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமை

இவ்வாண்டின்போது, மேம்படுத்தப்பட்ட படுகடன் சேகரித்தலின் ஊடாக பங்கு மூலதனமற்ற முதலீடுகளிலும், குறுகிய கால முதலீடுகளிலும் தனது முதலீடுகளை அதிகரித்த அதேவேளை வர்த்தக ரீதியாக கிடைக்கத்தக்கவை மற்றும் பொருட் பதிவேடுகளை குறைப்பதற்குக் கூட்டுத்தாபனத்திற்கு இயலுமாக இருந்தது. 2015 இல் அதன் பதிவழிப்புச் செய்யப்பட்ட வர்த்தக கிடைக்கத்தக்கவைகளிலிருந்து ரூபா. 1.4 மில்லியன் தொகையினை அறவிட்டது. பொதுத் திறைசேரியினால் விநியோகிக்கப்பட்ட திறைசேரி முறிகளிலிருந்து ரூபா. 25 பில்லியனினால், பங்களிப்புச் செய்யப்பட்ட மூலதனம் அதிகரிக்கப்பட்டது. இவ்வாண்டின்போது, கடன்களும், கடன் பெறுதல்களும் 47.92% இனால் சடுதியாகக் குறைவடைந்துள்ளன.

### வர்த்தக ரீதியாகக் கிடைக்கத்தக்கவை

வர்த்தகப் படுகடன்களை அறவிடுவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்துடன், வர்த்தக ரீதியாகக் கிடைக்கத் தக்கவை ரூபா. 18.73 பில்லியனாகக் குறைக்கப்பட்டது. இது, 2014 ஆம் ஆண்டு இறுதியினை விட 49.21% குறைவானதாகும். இவ்வாண்டின்போது, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது முப்படைகள், பொலிஸ் மற்றும் புகையிரதத் திணைக்களம் ஆகியவற்றிலிருந்து வர்த்தக ரீதியாகக் கிடைக்கத்தக்க அதன் ரூபா. 11.74 பில்லியன் தொகையினை வரிகள் மற்றும் சுங்கத் தீர்வைகளுக்கு எதிராக எதிரீடு செய்யக் கூடியதாக இருந்தது. 2015 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் லிமிடட்டின் நிலுவை மீதி ரூபா. 8.61 பில்லியன் ஆகவிருந்தது. இலங்கை மின்சார சபை, சுயாதீன மின்னுற்பத்தியாளர்கள், ஆயுதப் படையினர் மற்றும் மிஹின் லங்கா பிரைவட் லிமிட்டட் என்பன 2015 டிசம்பர் அன்று உள்ளவாறு முறையே ரூபா. 2.72 பில்லியன், ரூபா. 1.78 பில்லியன், ரூபா.0.65 பில்லியன் மற்றும் ரூபா. 0.55 பில்லியன் தொகை கொண்ட ஏனைய முக்கிய கடன்படுநர்களாகவிருந்தன.

### கடன்களும் கடன்படுதல்களும்

இவ்வாண்டின்போது, கடன்கள் மற்றும் கடன்படுதல்கள் ரூபா. 647 மில்லியனால் குறைவடைந்துள்ளது. எனினும், வெளிநாட்டு நாணயக் கடன்களில் தீர்ப்பனவு விகிதம் பிரதானமாக சந்தையில் போதிய டொலர்கள் கிடைக்கப் பெறாமையின் காரணமாக திருப்திகரமானதல்ல. அத்துடன், உரிய காலத்தில் பட்டியல்களைத் தீர்ப்பனவு செய்யாமையின் காரணமாக பாரிய நாணய மாற்று வேறுபாடு ஒன்றினை இது தோற்றுவித்தது. கூட்டுத்தாபனத்தினை நட்டமடையும் நிலைமைக்கு மாற்றுவதில், இது பிரதான பிரச்சினைகளில் ஒன்றாகும்.

### தக்க வைக்கப்பட்ட உழைப்புகள்

2014 இல் ஈட்டிய சிறிய இலாபத்தினை தவிர 2008 இன் தொடக்கம் தொடர்ச்சியாக ஏற்பட்டு வந்த நட்டத்தினால், தக்க வைக்கப்பட்ட எதிர்மறை உழைப்புகள் ரூபா. 262.65 பில்லியனாக மேலும் அதிகரித்தது. இந்நட்டங்களுக்குப் பிரதான காரணம் செலவு பிரதிபலிப்பு விலையிடல் கட்டமைப்பு ஒன்று இன்மையாகும். அத்துடன், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியியல் செயலாற்றுகையினை மோசமடையச் செய்கின்ற வட்டியுடனான வங்கிக் கடன்களின் ஊடாக இக்கடன்களுக்கு நிதியளிக்கப்பட்டு வந்தது.

## எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்பாடுகள்

எண்ணெய் சுத்திகரிப்பில் 46 வருடங்கள் அனுபவத்துடன் இவ்வாண்டின்போது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 1,692,074 மெட்ரிக் தொன் மசகு எண்ணெய்யினை செயல்முறைப்படுத்தியது. மசகு எண்ணெய் தொன் ஒன்றிற்கான செயல்முறைப்படுத்தல் செலவு 25.86% இனால் குறைவடைந்த அதேவேளை தொன் ஒன்றிற்கான நேரடி தொழிற்படுத்தல் செலவானது, எரிபொருள் எண்ணெய் மற்றும் வாயு சொந்தப் பயன்பாட்டுச் செலவில்

குறைப்பின் விளைவொன்றாக 21% இனால் குறைவடைந்துள்ளது.

ஈரான் மீதான ஐக்கிய அமெரிக்க தடையின் பின்னர், மர்பன் மற்றும் ஓமான் கலவை ஆகிய இரண்டு எண்ணெய்களினதும் கலவை ஒன்றினை சுத்திகரிப்புச் சாலை பயன்படுத்தி வருகின்றது. உற்பத்தி விவர மட்டத்தில் தயாரிக்கப்படுகின்ற எரிபொருள் ஊற்று நிலையின் சரிசெய்வதற்கு ஓமான் கலவை பயன்படுத்தப்படுகிறது. எனினும், ஓமான் கலவை மசகு எண்ணெய்யானது இலாபகரமற்றதுடன் மர்பன் மசகு எண்ணெய்யினை செயன்முறைப்படுத்தலானது, பயன்படுத்தப்படாத விஸ்பிரேக்கர் அலகினை பயன்படுத்தி, ஊற்றும் நிலை பிரச்சினையினைத் தீர்ப்பதன் மூலம் இவ்வாண்டின்போது மர்பன் மசகு எண்ணெய் செயன்முறைப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டது.

2015 இன் டீசல், பிரதான உற்பத்தியாக ஆதிக்கம் செலுத்திய அதேவேளை எஞ்சிய உற்பத்திகள் எரிபொருள் எண்ணெய் 800 மற்றும் 1500 என்பன 2ஆம் மற்றும் 3ஆம் இடங்களை வகித்தன. இரசாயன படிக எண்ணெய் பெற்றோல் 92 மற்றும் 95 ஒக்டேன் மண்ணெண்ணெய், டீசல், எரிபொருள் எண்ணெய் 800 மற்றும் சுத்திகரிப்புச்சாலை எரிபொருள் உற்பத்தி என்பன கடந்த வருடத்தை விட அதிகமாக இருந்தன.

## பெற்றோலிய உற்பத்திகள் தயாரிப்பு - 2015




### முக்கிய செயன்முறை அலகுகளின் தொழிற்படுத்தல் கால வினைத்திறன்

| | |
|---|---|
| மசகு வடித்தல் அலகு | 88.80% |
| படிக ஒன்றிணைப்பு அலகு | 83.05% |
| தள அலகு | 84.54% |
| டீசல் ஒன்றிணைப்பு அலகு | 60.64% |
| விஸ்பிரேக்கர் அலகு | 75.47% |
| திரவப் பெற்றோலிய வாயு மெரொக்ஸ் சுத்திகரிப்பு அலகு | 83.07% |
| டீசல், நீர் சுத்திகரிப்பு அலகு 07 | 74.61% |
| திரவப் பெற்றோலிய வாயு | 83.04% |
| மண்ணெண்ணெய் மெரொக்ஸ் அலகு | 48.21% |
| டேர்போ மின் பிறப்பாக்கி 1 | 64.76% |
| டேர்போ மின் பிறப்பாக்கி 2 | 83.16% |
| டீசல் மின் பிறப்பாக்கி 1 | 23.6% |
| டீசல் மின் பிறப்பாக்கி 2 | 26.47% |
| நீர் உள்ளெடுத்தல் நிலையம் | 49.06% |

மசகு எண்ணெய் வடித்தல் அலகானது, சில நிகழ்வுகள் தவிர ஆண்டு முழுவதும் தொழிற்பட்டது. இவ்வாண்டின்போது, கொதிகலன் V செயலிழந்தமையின் காரணமாக, 12.35 மணித்தியாலங்களாக, இரு தடவைகள் மின்சார தடை ஏற்பட்டதுடன், 01 எம்பீஜிபி இயந்திர அடைப்பு ஒழுக்கின் காரணமாக, 269.40 மணித்தியாலங்களுக்கு மசகு எண்ணெய் வடி நிலையம் மூடப்பட்டது. மேற்குறித்த காரணங்களுக்கு மேலதிகமாக இவ்வாண்டின்போது, மேற்கொள்ளப்பட்ட தள நிலை புத்தாக்கத்தின் போதான தொழிற்பாடுகளின் காரணமாக குறைவான செயன்முறைப்படுத்தலின் விளைவாக, முன்னைய ஆண்டினை விட சுத்திகரிப்புச்சாலை உற்பத்தி குறைவாகவிருந்தது.

பொறித் தொகுதியில் தொழிற்பாட்டு வினைத்திறன்களை அதிகரிக்கும் பொருட்டு, 3 வருடத்திற்கு ஒரு முறை திருத்த வேலைகளுக்காக சுத்திகரிப்புச்சாலை தொழிற்பாடுகள் நிறுத்தப்படுகின்றன.

இவ்வாண்டின்போது, பொறித் தொகுதியின் பராமரிப்பிற்கும் திருத்த வேலைகளுக்கும் மார்ச் 04 தொடக்கம் ஏப்ரல் 10 வரை தொழிற்பாடுகள் நிறுத்தப்பட்டன. இப்பாதுகாப்பு நடைமுறைகள் உற்பத்தி திறனை அதிகரிக்கும் அதேவேளை முறைமைகள் செயலிழப்பதைக் குறைக்கின்றன.

இந்நிலைமைகளுக்கு மத்தியில், செயன்முறைப்படுத்தல் நாளொன்றுக்கு 5,221 தொன்கள் சராசரி உள்ளெடுப்பொன்றுடன், 324.12 நாட்கள் சுத்திகரிப்புச்சாலை தொழிற்பட்டது. முன்னைய ஆண்டில், 0.65% ஆகவிருந்த சமுத்திர இழப்பானது, மாற்றுதலின் போது இழப்பினைக் குறைத்தமையின் விளைவாக இவ்வாண்டில் 0.38% ஆகவிருந்தது. எனினும், கரையோரத் தாங்கி இழப்பு அதிகரிப்பிற்கு இது வழிவகுத்தது

## ஆண்டின்போது விரிவாக்கங்கள்

நாட்டினது, பாரிய நிதி நட்டங்களைத் தோற்றுவிக்கக் கூடியதும் நாட்டினது சக்திப் பாதுகாப்பு அச்சுறுத்தலாக இருக்கக் கூடியதும் அல்லது கூட்டுத்தாபனம் பற்றியும், நாடு பற்றியும் எண்ணப்பாங்கிற்கு சேதம் விளைவிக்கக்கூடியதுமான, செயலிழப்புகளையும் இக்கட்டான நிலைமைகளையும் தவிர்க்கும் பொருட்டு அவசர கவனம் தேவைப்படுகின்ற பல விடயங்களை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இனங்கண்டுள்ளது. தேசத்திற்கு மேம்படுத்தப்பட்ட சேவையினை வழங்குவதற்கான, கூட்டுத்தாபனத்தின் திட்டத்துடன் முன்னெடுக்கப்படும் மூலதன கருத்திட்டங்கள் ரூபா. 235 மில்லியனால் அதிகரித்துள்ளது. முக்கிய கருத்திட்டங்களில் பல இவ்வாண்டின்போது, திருப்திகரமாக மேற்கொள்ளப்பட்டன. அதேவேளை, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது சிறிய மற்றும் மூலதனக் கொள்வனவுகளை நிறைவு செய்யக் கூடியதாகவிருந்தது.

இவ்வாண்டின்போது, நிறைவு செய்யப்பட்ட பிரதான கருத்திட்டங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- ISO அமுலாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தானியக்க போத்தல் நிரப்புதல் இயந்திரம், பொதி முத்திரையிடல் இயந்திரம் மற்றும் தொகுதி எண் பொறிக்கும் இயந்திரம் என்பன அறிமுகப்படுத்தப்பட்டன.
- சப்புகஸ்கந்த விநியோக முனையத்திற்கு பெற்றோல் விநியோக வசதி சேர்க்கப்பட்டது.
- மத்தளை சர்வதேச விமான நிலையம், தலைமை அலுவலகக் கட்டடம் மற்றும் முத்துராஜவெல உராய்வுநீக்கி எண்ணெய் களஞ்சியங்கள், வலையமைப்பு கருத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டது.
- சுத்திகரிப்புச்சாலை அனைத்து பிராந்திய அலுவலகங்கள், முத்துராஜவெல, விமானத்துறைப் பிரிவு ஆகியவற்றுக்கு கைவிரல் அடையாள வரவுப் பதிவு முறைமை பூர்த்தி செய்யப்பட்டது.
- மத்தளை சர்வதேச விமான நிலையத்தில் விமான நிலைய சுற்றுப் பிரதேச எரிபொருள் குழாய் முறைமை உருவாக்கம்.
- மசகு எண்ணெய் தனிநிலை மிதவையினைப் புதுப்பித்தல்
- கொழும்பு துறைமுகத்தில் டொல்பின் தாங்கி இறங்கு துறையினைப் பராமரிப்பு.
- தலைமை அலுவலகத்தில் களஞ்சியசாலை மற்றும் முத்துராஜவெலயில் உராய்வுநீக்கி கட்டடத் தொகுதி அத்துடன், பீப்பாய் முற்றம் நிர்மாணம்.

### *2015 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு எரிபொருள் நிரப்பு நிலையங்களின் எண்ணிக்கை*

| | |
|---|---|
| கூட்டுத்தாபனத்திற்கு உரித்தானவை | **248** |
| விநியோகத்தர்களிற்கு உரித்தானவை | **911** |
| விநியோகத்தர் கட்டுப்பாட்டில் உள்ளவை | **44** |
| **மொத்தம்** | **1,203** |
| 2015 இல் ஆரம்பிக்கப்பட்ட புதிய நிரப்பு நிலையங்கள் | **35** |

## துறைவாரியான மீளாய்வு




2015 ஆம் ஆண்டில் போக்குவரத்து உள்நாட்டு, விவசாய மற்றும் ஏற்றுமதிகள் துறைகள் தவிர அனைத்து ஏனைய துறைகளும் இலாபம் ஈட்டின.

**துறைசார் நட்ட விபரங்கள்**

| *துறை* | *2015 ரூபா.மில்* |
|---|---|
| **போக்குவரத்து** – மானிய விலையில் பெற்றோல் | ***22,935*** |
| **வீட்டுத்துறை** – மானிய விலையில் மண்ணெண்ணெய் | ***3,840*** |
| **விவசாய இரசாயனங்கள்** - மானிய விலை | ***79*** |
| **ஏற்றுமதி** – படிக எண்ணெய் மற்றும் எரிபொருள் எண்ணெய் செலவிற்கு கீழ் விலையிடப்பட்டது. | ***6,173*** |

**போக்குவரத்து**




போக்குவரத்துத் துறையானது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் பாரிய துறையாகக் காணப்படுவதுடன், இவ்வாண்டின்போது இது ரூபா 263.45 பில்லியன் மொத்த வருவாயினை ஈட்டியதுடன், ரூபா 24.96 பில்லியன் மொத்த இலாபத்தினையும் ஈட்டியது. இது, மொத்த இலாபத்திற்கான அதிகூடிய பங்களிப்பாகும். போக்குவரத்துத் துறையில் 2015 ஜனவரியில் அறிவிக்கப்பட்ட உள்நாட்டு எரிபொருள் விலைக் குறைப்பின் விளைவாக ஒட்டுமொத்த எரிபொருள் நுகர்வு 9% இனால் அதிகரித்துள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது, 95 ஒக்டேன் பெற்றோல் நுகர்வு 50% வளர்ச்சியொன்றினை அறிக்கையிட்டுள்ளது குறித்துக் காட்டப்பட வேண்டிய விடயமொன்றாகும். இம்மாற்றத்திற்கு சொகுசு வாகனங்களின் இறக்குமதியும் புகை வெளியீடு அற்ற எரிபொருள் பயன்பாடும் பங்களிப்புக் காரணிகளாக அமைந்தன. எவ்வாறாயினும் போக்குவரத்துத் துறையின் மொத்த இலாபமானது நாணயமாற்று வீத வேறுபாட்டு நட்டத்துடன் ரூபா. 22.94 பில்லியன் தேறிய

நட்டமொன்றாக, மாற்றமடைந்திருந்தது. லீற்றர் ஒன்றிற்கு ரூபா. 20 இனால் பெற்றோல் மீது சுங்கத் தீர்வை அதிகரித்ததும், இத்துறையில் இலாபத் தன்மையைச் சீர்குலைத்தது.

**எரிசக்தி**




வருவாய்க்கும், மொத்த இலாபத்துக்கும் இரண்டாவது பாரிய பங்களிப்புத் துறையாக ரூபா. 42.59 பில்லியன் மொத்த வருவாயினை உழைத்து ரூபா. 12.97 பில்லியன் மொத்த இலாபத்தினை ஈட்டியது. எனினும், மின்சார உற்பத்திக்காக, நீர் மின்சாரம் மற்றும் நிலக்கரி மின்சாரம் பயன்பாடு அதிகரித்ததனால், மின்சாரத்திற்கான பெற்றோலிய உற்பத்திகளின் கேள்வி 2014 இன் நுகர்வு வடிவத்துடன் ஒப்பிடுகையில் சடுதியாகக் குறைவடைந்திருந்தது. மின்சக்தி உற்பத்திக்கான டீசல் மற்றும் உலை எண்ணெய் நுகர்வு குறைந்தது. கேள்வி குறைவினைக் கருத்திற் கொள்ளாது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சில்லறை விலைகளை நிலையாகப் பேணியது. இது, துறையின் இலாபத் தன்மையினை அதிகரிப்பிற்குப் பங்களித்தது. இருந்தபோதிலும், விற்பனை விலை செலவுகளைச் சமாளிப்பதற்கு போதாமையினால், எரிபொருள் எண்ணெய் 1500 ரூபா. 252 மில்லியன் நட்டமொன்றினைத் தோற்றுவித்தது.

**விமானத்துறை**




விமானத் துறையிலிருந்தான வருவாய் ரூபா 34.73 பில்லியனாகவிருந்ததுடன் ரூபா. 4.53 பில்லியன் இலாபமொன்றினை அடையக்கூடியதாக இருந்தது. 2015.04.01 முதல் செயற்படத் தக்கவாறு விமான எரிபொருள் விலைக்கு செலவுப் பிரதிபலிப்பு முறையொன்றின் பிரயோகம் இத்துறையின் இலாபத்தினை மேலும் அதிகரிப்பதற்கு சாதகமான நகர்வொன்றாக இருந்தது. இவ்வாண்டின்போது, ரூபா. 1.01 பில்லியன் இலாபமொன்றினை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அடையக் கூடியதாக இருந்ததுடன், வருகின்ற ஆண்டுகளில் இலாபத் தன்மை மேலும் அதிகரித்தது.

இவ்வாண்டின்போது, மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில், விமான எரிபொருள் களஞ்சிய வசதியுடன் கூடிய விமான நிலைய சுற்றுப் பிரதேச எரிபொருள் குழாய் முறைமை அமுலாக்கப்பட்டது.

விமானங்களில் பாதுகாப்பிற்கு விமான எரிபொருளின் தரம் இன்றியமையாத முக்கியத்துவமுடையது என்பதனால், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இணைந்த பரிசோதனைக் குழுவினால் (JIG) குழுவினால் விநியோகிக்கப்பட்ட தர நியமங்களைப் பின்பற்றுகின்றது. தர உறுதிப்பாட்டு தேவைப்படுத்தல்கள் நிறைவேற்றப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்துவதற்காக வருடாந்த கணக்காய்வுகள் இணைந்த பரிசோதனைக் குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கையின் 27 வருட விமானத்துறை வரலாற்றில் முதல் தடவையாக 2014 மற்றும் 2015 ஆண்டுகளில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அமையப் பெற்றுள்ள விமான எரிபொருள் நிரப்பு நிலைய முனையத்திற்காக இணைந்த பரிசோதனைக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்விலிருந்து வரலாற்றில் முதற் தடவையாக,“சிறந்தது” என்ற அந்தஸ்து (சராசரிக்கு மேல்) அடையப் பெற்றது. இணைந்த பரிசோதனைக் குழு கணக்காய்விலிருந்து மத்தளை விமானத்துறை விமான எரிபொருள் நிரப்பு முனையம், சிறந்த தரப்படுத்தலினை (சராசரிக்கு மேல்) பெற்றுக் கொண்ட அதேவேளை ரத்மலான விமான நிலையம் திருப்திகரமான தரப்படுத்தல் ஒன்றினை (சராசரி) பெற்றுக் கொண்டது. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் எரிபொருள் குழாய் மற்றும் முனையம் தரமுயர்த்தல் கருத்திட்டம் நிறைவு பெற்றவுடன் “அதிசிறந்தது” அந்தஸ்தினை பெறுவது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எதிர்பார்க்கையாகும்.

## கைத்தொழிற் துறை




இவ்வாண்டின்போது, கைத்தொழிற் துறையானது ரூபா. 11.76 மில்லியன் வருமானாத்தினையும், 3.59 மில்லியன் மொத்த இலாபத்தினையும் உழைத்தது. கைத்தொழிற் துறையில் பிரதானமாக விற்பனை செய்யப்படும் உற்பத்தி எரிபொருள் எண்ணெய்யாகும். அத்துடன், 2015 இல், இதில் 133 மில்லியன் லீற்றர் விற்பனை செய்யப்பட்டுள்ளது. எனினும், விற்பனை செய்யப்பட்ட அளவு கடந்த வருடத்தினை விட 6% குறைவானதாகும். கைத்தொழிற் துறையிலிந்து ஈட்டிய தேறிய இலாபம் ரூபா. 1.7 பில்லியனாகும். இது,ரூபா. 262 மில்லியன் கொண்ட எரிபொருள் எண்ணெய் 1500 இழப்பிலிருந்து தோற்றம் பெற்றது.

## தார்

2015 இல் தார் விற்பனை வருவாய் ரூபா. 1.17 பில்லியனாக இருந்ததுடன், ரூபா. 0.29 பில்லியன் மொத்த நட்டமொன்று ஏற்பட்டது. இவ்வாண்டில், நாட்டில் நிர்மாணச் செயற்பாடுகள் பின்தள்ளப்பட்டதால் கார் விற்பனை வீழ்ச்சியடைந்தது. தார் விற்பனையிலிருந்து ஏற்பட்ட வீழ்ச்சிக்கு மேலதிகமாக தார் வியாபாரத்தின் இலாபத் தன்மையினை அதிகரிப்பதில், அதிக கையிருப்பினை வைத்திருக்கும் செலவு மற்றுமொரு விடயமாகும்.

## உராய்வுநீக்கி எண்ணெய்

உராய்வுநீக்கி எண்ணெய் துறையிலிருந்து ஈட்டப்பட்ட வருமானம் ரூபா. 2 பில்லியன் ஆகவும், மொத்த இலாபம் ரூபா. 187 மில்லியனாகவும் இருந்தது. உராய்வுநீக்கி துறையிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட இலாபம் கடந்த வருடத்தை விடக் குறைவாகவிருந்ததுடன், உள்நாட்டில் கொள்வனவு செய்கின்றவர்களுக்கு கடத்தப்படுகின்ற வரிநலன்களை அனுபவிக்கின்ற உள்நாட்டு உற்பத்தியாளர்களுடன் ஒப்பிடுகையில் பிரதானமாக இறக்குமதிச் செலவு மிக அதிகமாகக் காணப்படுகின்ற காரணத்தினால், திருப்திகரமற்றதாகவிருந்தது. எனவே, விற்பனை செய்யப்பட்ட அளவானது முன்னைய ஆண்டினை விட 6% குறைவாகவும் இருந்தது.

**வீட்டுத்துறை**

வீட்டுத்துறை தொழிற்பாடுகளிலிருந்தான வருமானம், ரூபா. 9.7 பில்லியனாகவிருந்தது. மாறாக, விற்பனைச் செலவுகள் 11.6 பில்லியனாகவிருந்து ரூபா. 1.36 பில்லியன் மொத்த நட்டத்திற்கு இட்டுச் சென்றது. 2015 இல் மொத்த நட்டம் ஒன்றினை ஏற்படுத்திய மற்றுமொரு துறை இதுவாகும். திரவப் பெற்றோலிய வாயு மற்றும் மண்ணெண்ணெய் மானிய விலையில் வழங்குதல் இந்நட்டத்திற்கான பிரதான காரணமாகும். வீட்டுத்துறை மண்ணெண்ணெய் அளவு 2014 ஐ விட 12% உயர்வாக விற்பனை செய்த போதிலும் ஈட்டப்பட்ட வருமானமானது நிலவிய சில்லறை விலைகளுடன், 33% குறைவாகவிருந்தது. விற்பனை செய்யப்பட்ட திரவப் பெற்றோலிய வாயுவும், ஈட்டப்பட்ட வருமானமும் 2014 ஐ விடக் குறைவாகவிருந்தது.

**வீட்டுத் துறையிலிருந்து தேறிய இலாபம்/(நட்டம்)**




**விவசாய இரசாயனங்கள்**

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது விவசாயத்துறையில் காணப்படும் சந்தைக் கேள்வியினை நிறைவு செய்வதற்கு விவசாய இரசாயனங்களை நியாயமான விலையில் தொடர்ந்தும் வழங்கல் செய்தது. இதனூடாக குறைந்த உற்பத்திச் செலவில் நாட்டின் விவசாய உற்பத்தி அதிகரிக்கப்படுகின்றது. 12 வகையான விவசாய இரசாயன உற்பத்திகள் விற்பனை செய்யப்பட்டன. எனினும், மிகவும் பிரபல்யம் வாய்ந்த உற்பத்தியான கிளைபோசேட் அரசாங்கத்தினால் 2015 நவம்பரில், முழுமையாகத் தடை செய்யப்பட்டதுடன், பொறுப்பு வாய்ந்த நிறுவன பிரஜையொன்றாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் தனது விற்பனையினை நிறுத்தியது. இந்நிலைமை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த விற்பனை அளவு மற்றும் பெறுமதியினை மோசமாகப் பாதித்தது. இச்சவால்களுக்கு மத்தியில், விவசாய இரசாயனங்களின் விற்பனை அளவு கடந்த வருடத்தினை விட 82% இனால் அதிகரித்தது. இருந்தும், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ரூபா. 79 மில்லியன் நட்டமடைய வேண்டியிருந்தது. மிகவும் சூழல் நட்புமிக்க புதிய பீடைநாசினிகளை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்கு கூட்டுத்தாபனம் திட்டமிடுகின்றது.

**விவசாய இரசாயனங்கள் விற்பனை (ரூபா)**






### கப்பல் எரிபொருள்

கப்பல் எரிபொருள் வழங்கலிருந்து வருமானம் ரூபா. 1.37 பில்லியனாகவிருந்ததுடன், மிகையான படிக எண்ணெய் மற்றும் உலை எண்ணெய் ஆகியவற்றைக் களஞ்சியப்படுத்துவதற்கு போதிய களஞ்சிய வசதிகள் இல்லாமையினால், இவற்றை குறைந்த விலையில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் விற்பனை செய்ய வேண்டியிருந்ததனால் ரூபா.0.5 பில்லியன் மொத்த நட்டமொன்று கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டது. எனினும், 2014 உடன் ஒப்பிடுகையில், மொத்த நட்டமானது 61% இனால் குறைவடைந்துள்ளது.

### ஏற்றுமதிகள்

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் படிக எண்ணெய் மற்றும் உலை எண்ணெய் என்பவற்றை ஏற்றுமதி செய்து ரூபா.9.8 பில்லியன் வருமானத்தினை உழைத்தது. எனினும், விற்பனைச் செலவு ரூபா. 14.59 பில்லியனாக இருந்தமையினால் கூட்டுத்தாபனம் ரூபா.4.77 பில்லியன் மொத்த நட்டமொன்றினை எதிர்கொண்டது. அதிகளவு மழைவீழ்ச்சியுடன் படிக எண்ணெய்க்கும் உலை எண்ணெய்க்கும் எரிசக்தி துறையிலிருந்தான உள்நாட்டு கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சி உலை எண்ணெய் மற்றும் படிக எண்ணெய்யினை களஞ்சியப்படுத்துவதில், நெருக்கடியினைத் தோற்றுவித்தது. மேலதிக உற்பத்தியினைக் களஞ்சியப்படுத்துவதில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் போதிய களஞ்சியக் கொள்ளளவினைக் கொண்டிராமையினால் இவ்வுற்பத்திகள் செலவினை விடக் குறைந்த விலையில் ஏற்றுமதி செய்யப்பட்டன.




## சமூகத்திற்கான பெறுமதி உருவாக்கம்

### பொருளாதாரத்திற்கான பெறுமதி உருவாக்கம்

| *சேர்க்கப்பட்ட பெறுமதி* | *2015 ரூபா.மில்* | *2014 ரூபா.மில்* |
|---|---|---|
| ஈட்டப்பட்ட பொருளாதார பெறுமதி | | |
| வருவாய் | 376,734 | 525,182 |
| நிதி வருமானம் | 4,910 | 4,030 |
| மண்ணெண்ணெய் மானியம் | 3,860 | 2,715 |
| ஏனைய வருமானம் | 375 | 792 |
| | **385,879** | **532,719** |

### விநியோகிக்கப்பட்ட பொருளாதார பெறுமதி

| | | |
|---|---|---|
| வழங்குனர் மற்றும் சேவை வழங்குனர்களுக்கான கொடுப்பனவுகள் | 292,307 | 450,011 |
| ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் | 4,530 | 3,727 |
| கடன் வழங்குனர்களுக்கான கொடுப்பனவுகள் | 15,049 | 13,980 |
| அரசாங்கத்திற்கான கொடுப்பனவு | 94,961 | 63,349 |
| | **406,847** | **531,067** |
| **பிடித்து வைக்கப்பட்ட பொருளாதார பெறுமதி** | | |
| பெறுமானத் தேய்வு | 935 | 635 |
| விற்பனை ஒதுக்கிற்காக கிடைக்கத்தக்கவை | 7 | - |
| **பிடித்து வைக்கப்பட்ட/ (பயன்படுத்தப்பட்ட) இலாபம்** | **(21,896)** | **1,017** |

2015 நிதியாண்டின்போது, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மூலமான பொருளாதாரப் பங்களிப்பு ரூபா 385,879 மில்லியனாகவிருந்ததுடன், மேலே அட்டவணையில் காண்பிக்கப்பட்டது போன்று கடன் வழங்குனர்கள், அரசாங்கம், ஊழியர்கள் மற்றும் சேவை வழங்குனர்கள் மத்தியில் மீள விநியோகிக்கப்படடது.

### எமது வர்த்தக பங்காளிகளுக்கான பெறுமதி சேர்த்தல்.

கூட்டுத்தாபனமானது, அதன் உபாயப் பங்காளிகளுடன் குறிப்பாக அரசாங்கத் திறைசேரி, இலங்கை மத்திய வங்கி, வங்கியாளர்கள், மசகு எண்ணெய் வழங்குனர்கள், கப்பல் நிறுவனங்கள், உள்நாட்டு வழங்குனர்கள், விநியோகத்தர்கள் மற்றும் மேலும் பலருடனும் அதன் உறவுகளை தொடர்ந்தும் பேணியதுடன் அதிகரித்தது.

இலங்கையானது பெற்றோலிய வளங்களைக் கொண்டிராமையினால், வெளிவாரி மூலங்களிலிருந்து அவை பெற்றுக் கொள்ளப்பட வேண்டியுள்ளது. ஏதேனும் இடைத்தடங்கல் இன்றி உள்நாட்டுச் சந்தைக்கு தரம் வாய்ந்த நம்பத் தகுந்த, வசதியான உற்பத்திகளை வழங்கல் செய்யும் பொருட்டு கையிருப்பு மீளாய்வுக் குழுவின் செயற்பாடுமிக்க ஈடுபாட்டுடன், சிறப்பாக வரையறை செய்யப்பட்ட பெறுகை நடைமுறைகள் அமுலிலுள்ளன. ஈரான் மீதான தடையின் பின்னர், மர்பன் எண்ணெய்யானது அடிநிலை உற்பத்தியினை விட மத்திம மற்றும் மென்வடிசாலையின் உயர் விளைச்சலினைத் தருவதனால் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதன் மசகு எண்ணெய் கலத்தலினுள் மர்பன் எண்ணெய்யினைப் பயன்படுத்தியது. இருந்தும், அடிநிலை உற்பத்தி வெளியீடுகள் தவிர்க்க முடியாதவையாகக் காணப்படுகின்றன.

### மசகு எண்ணெய் கலப்பு




### சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகளின் இறக்குமதிக் கலப்பு




சுத்திகரிப்புச்சாலைத் தொழிற்பாடுகளை சீராக முன்னெடுப்பதற்கு சுத்திகரிப்பு தொழிற்பாடுகளுக்கான அனைத்து தொழிற்படுத்தல் மற்றும் பராமரித்தல் பொருட்களும் கிடைக்கப் பெறுகின்றன என்பதனை சுத்திகரிப்புச்சாலை மூலப்பொருட்கள் பிரிவு உறுதி செய்கின்றது.இவ்வாண்டின்போது, கப்பற் செலவு நீங்கலாக, வெளிநாட்டுக்

கொள்வனவுகளின் மொத்தப் பெறுமதி ரூபா. 848.23 மில்லியன் ஆகவும், உள்நாட்டுக் கொள்வனவுகளின் பெறுமதி ரூபா. 259.35 மில்லியனாகவும் இருந்தது.

## *பெற்றோலிய உற்பத்தி வழங்கல்*

| | |
|---|---|
| **திரவப் பெற்றோலிய வாயு வழங்கல்** | |
| **லங்கா லாப் காஸ் லிமிட்டட்** | ***3,158 மெ.தொ*** |
| **லிட்ரோ காஸ்** | ***6,498 மெ.தொ*** |
| **பளுவான எரிபொருள் எண்ணெய்** | |
| **இ.மி.ச** | ***4,573 மெ.தொ*** |
| **ஏசியா பவர்** | ***4,036 மெ.தொ*** |

**அணி பற்றிய முகக்குறிப்பு**

| வயதுக் குழு | தரம் ஏ | | தரம் பீ | | தரம் சீ | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ |
| **18 – 30** வருடங்கள் | 6 | 1 | 38 | 2 | 67 | - | 111 | 3 |
| **31 – 40** வருடங்கள் | 42 | 9 | 216 | 78 | 304 | 18 | 562 | 105 |
| **41 – 50** வருடங்கள் | 81 | 29 | 282 | 106 | 355 | 12 | 718 | 147 |
| **51 – 60** வருடங்கள் | 123 | 33 | 368 | 74 | 323 | 12 | 814 | 119 |
| மொத்தம் | **252** | **72** | **904** | **260** | **1,049** | **42** | **2,205** | **374** |

| | |
|---|---|
| **மொத்த நிரந்தர ஊழியர்கள்** | ***2,579*** |
| | |
| ஒப்பந்த அடிப்படை | ***1*** |
| பயிலுநர் தொழிநுட்பவியலாளர்கள் | ***81*** |
| பயிலுநர் (வெளிவாரி கல்வி நிறுவனங்களிலிருந்து) | ***107*** |
| **பதவியினர் பலம்** | ***2,768*** |

தேவையான போதும், அவசியப்படுகின்ற போதும் யூ.ஓ.பி ஆலோசகர்களிடமிருந்து இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தொடர்ந்தும் தொழிநுட்ப உதவியினைப் பெற்றது.

### எமது ஊழியர்களுக்கான பெறுமதி சேர்த்தல்

நிறுவனம் ஒன்றின் வெற்றிக்கு விசுவாசமும், அர்ப்பணிப்பும் உள்ள ஊழியர்கள் அவசியமாகும். தேசத்திற்கு முன்னணி எரிபொருள் விநியோகத்தராக, ஊழியர்களின் ஈடுபாடு அத்தியாவசியமானதாகும். இவ்வுண்மையினை அறிந்து, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் கூட்டுத்தாபனத்தின் வெற்றிக்கு ஆகக் கூடிய பங்களிப்பினை வழங்குகின்றனர். கைமாறாக, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அவர்களைச் சிறப்பான முறையில் நடாத்துகின்றனது.

**பாலின ரீதியாக ஊழியர்பகுப்பாய்வு**






பாலின ரீதியதியாக ஊழியர் புரள்வு




பாலினம் ரீதியாக புதிய ஆட்சேர்ப்பு







வயது வாரியாக புதிய ஆட்சேர்ப்பு




**விருதுகளும் அங்கீகரித்தலும்**

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர் பொதியானது நிதி மற்றும் நிதிசாரா ஊக்குவிப்புகள் இரண்டுடனும் கவர்ச்சிமிக்கவை. இது, முறைமைசார்ந்த கட்டமைப்பொன்றினைக் கொண்டுள்ளதுடன் பாலினம், வயது அல்லது இனரீதியாக பாகுபாடுகாட்டுவதில்லை. விருது முறைமையானது வருகையுடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் அவர்களது வருகையினை அடிப்படையாக கொண்டு ஊழியர்களுக்கு பல ஊக்குவிப்புகளும் கொடுப்பனவு செய்யப்படுகின்றன.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எப்போதும் விசுவாமிக்க ஊழியர்களை மதிப்பதுடன் கூட்டுத்தாபனத்திற்கான அவர்களது பங்களிப்புகளுக்கு ஒவ்வொரு

வருடமும் மதிப்பளிக்கப்படுகின்றது. நீண்டகால சேவையினைக் கொண்ட ஊழியர்களுக்கு சேவை விருது வழங்கப்படுவதுடன் 2015 இன் விருதுகள் பற்றிய விபரம் பின்வருமாறு.

| வழங்கப்பட்ட சேவை விருது | |
|---|---|
| 20 வருடங்கள் சேவை | 242 |
| 30 வருடங்கள் சேவை | 54 |
| 35 வருடங்கள் சேவை | 18 |
| மொத்தம் | 314 |

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் தகைமையுடையவர்கள். ஓய்வின் பின்னர் தமது எதிர்காலத்தைப் பாதுகாக்கும் பொருட்டு இதற்கு மேலதிகமாக ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்கிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முறையே 15% மற்றும் 3% பங்களிப்புச் செய்கின்றது. பணிக்கொடைச் சட்டத்திற்கமைவாக ஓய்வு பெறுகின்றபோது கூட்டுத்தாபனம் பணிக் கொடையினை வழங்குகின்றது.

**பல்வகைமையும் வாய்ப்பும்**

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பாகுபாடு சாராத தொழில் தருநர் ஒன்றாவதுடன் ஊழியர் பதவியணியானது வயது, பாலினம், மதம் மற்றும் இனம் ஆகியவற்றின் ஆரோக்கியமான கலவையொன்றினை உள்ளடக்குகின்றது. திறமை மற்றும் தொழிலுக்கான பொருத்தப்பாடு ஆகிய அடிப்படையில் ஊழியர்கள் ஆட்சேர்க்கப்படுகின்றனர். மேலும், பாலினத்தை கருத்திற் கொள்ளாது சமமான ஊதியக் கொள்கையொன்றினை இது கொண்டுள்ளது. ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலாரும் ஒரே தொழில் வகுப்பில் அதே உதியப் பொதியினைப் பெறுகின்றனர். அத்துடன் அனைத்து ஊழியர் வகுப்பிலும் பெண்ணுக்கு ஆண் அடிப்டைச் சம்பள மற்றும் ஊதிய விகிதாசாரம் 1:1 ஆகும்.

**பயிற்சி**

தாம் பெறுகின்ற அனுபவத்திற்கு மேலதிகமாக பல்வேறு அறிவு சேர்த்தல்களை வழங்குவதன் மூலம் அதன் ஊழியர்களை விருத்தி செய்வதனை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கலாச்சாரம் ஊக்குவிக்கின்றது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், தனது ஊழியர்களுக்கு உள்வாரி அதே போன்று வெளிவாரி பயிற்சிகளை வழங்குவதுடன் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்கள் உள்ளடங்கலாக உயர்கல்வியினை தொடரும் வாய்ப்புகளுக்காக நிதியுதவியினை வழங்குகின்றது. 2015 வழங்கப்பட்ட பயிற்சி பற்றிய சாரம்சத்தினை பின்வரும் அட்டவணை காண்பிக்கின்றது.

| பயிற்சியின் வகை | தரம் ஏ | தரம் பி | தரம் பி | பயிலுநர்கள் |
|---|---|---|---|---|
| **வெளிநாட்டுப் பயிற்சி** | | | | |
| பொது முகாமைத்துவம் | 17 | - | - | - |
| தொழிற்படுத்தல் தொடர்புபட்ட பயிற்சி | 34 | - | - | - |
| சக்திப் பாதுகாப்பு | 3 | - | - | - |
| ஆரோக்கியமும் பாதுகாப்பும் | 4 | - | - | - |
| விளையாட்டுகள் | 8 | | | |
| **உள்நாட்டுப் பயிற்சிகள்** | | | | |
| ISO பயிற்சி | 5 | 2 | - | - |
| தொழில்சார் ஆரோக்கிமும் பாதுகாப்பும் | 472 | | | |
| விளம்பரப்படுத்தலும் வரைபட வடிவமைப்பும் | - | - | 1 | - |
| அறிமுகப்பயிற்சி – பயிலுநர்களும் | பயிலுநர்களும் புதிதாக ஆட்சேர்க்கப்பட்டவர்களும் | | | |
| இலங்கைப் பெற்றோலியக் நடைமுறைகள் விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகள் | - | - | 340 | - |
| போதைப் பொருள் தடுப்பு | 108 | | | |
| உள்நாட்டு நிறுவனங்கள் | 146 | | | |
| தொழிலாளர் சட்டமும் கைத்தொழில் உறவும் | - | 4 | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| தொழிற்படுத்தலுடன் தொடர்புபட்ட பயிற்சிகள் | 33 | 25 | 1 | - |
| தொடர்பாடலும் திறன்அபிவிருத்தியும் | 13 | 7 | - | - |
| சுற்றாடல் பாதுகாப்பு பயிற்சி | 6 | 3 | - | - |
| விமானத்துறை புத்தறிவு பயிற்சி | விமானத்துறை தொழிற்படுத்தல் பதவியின் | - | - | - |
| வழங்கப்பட்ட நிதிஉதவி | | | | |
| பட்டப் பின் படிப்பு பட்டம் | 7 | | | - |
| பட்டப் பின் படிப்பு டிப்ளோமா | 2 | | | - |
| டிப்ளோமா | 8 | | | - |
| சான்றிதழ் மட்டம் | 19 | | | - |

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன உழியர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்குவதனை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வழமையாகக் கொண்டுள்ளதுடன் இவ்வாண்டின் போது அத்தகைய பிள்ளைகளுக்கு 23 புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

உற்பத்திறன் மிக்கதும் தரம் வாய்ந்ததுமான சேவையினை வழங்கும் பொருட்டு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ISO தரத்தினை அமுலாக்குவதற்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பணிக்கப்பட்டுள்ளதுடன் மீளாய்விற்கு உட்பட்ட ஆண்டின்போது உற்பத்தி மற்றும் தர மேம்படுத்தல் பற்றிய பல நிகழ்ச்சித் திட்டங்கள் ஊழியர்களுக்காக நடாத்தப்பட்டன.

## ஆரோக்கியமும் பாதுகாப்பும்

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்திகளும் தொழிற்பாடுகளும், உற்பத்தியின் உள்ளமைந்த தீப்பற்று நிலையின் காரணமாக அதிக ஆரோக்கிய மற்றும் பாதுகாப்பு தாக்கங்களை கொண்டவையாகும். மேலும், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் காணப்படும் முறையான ஆரோக்கிய மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள், தொழிற்பாடுகளின் சீரான இயக்கங்களை பாதுகாக்கும் அதேவேளை ஒட்டுமொத்தத்தில் சமுகத்தினை பாதுகாக்கப்படுகின்றது. எனவே, அனைத்து பாதுகாப்பு முன் எச்சரிக்கை நடவடிக்கைகளும் அனைத்து வேளைகளிலும் செயற்பாட்டில் உள்ளன. பாதுகாப்பு சாதனங்களை ஆரம்பித்து வைக்கின்றபோது பரிசோதிக்கப்படும் அதே வேளை வழமையான மற்றும் மாதாந்தப் பரிசோதனைகளும் கணக்காய்வுகளும் உபகரணங்கள் சரியான பணியாற்றும் நிலையில் காணப்படுகின்றன என்பதனை உறுதி செய்வதற்கு பரிசோதனைப் பட்டியலுக் கமைவாக மேற்கொள்ளப்பட்டன. கிரமாக திறந்த இல்லம் பேணுதல் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு ஒவ்வொரு காலாண்டிலும் தொழிற்பாடுகள், பொறியியல், மற்றும் முகாமைத்துவ பாதுகாப்பு கூட்டங்கள் நடாத்தப்பட்டன பாதுகாப்பு, ஆரோக்கியம் மற்றும் சுற்றாடல் வாரம் 2015 நவம்பர் 16-23 வரை நடாத்தப்பட்டது.

உற்பத்திகளை சரியாக கையாளுதல், கொண்டு செல்லுதல் மற்றும் களஞ்சியப்படுத்தல் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு சமூகத்திற்கான ஏதேனும் ஆரோக்கிய ஆபத்துக்களை தவிர்ப்பதற்கும் ஊழியர்களுக்காக கிரமான தீயணைப்பு பயிற்சி வகுப்புகள் நடாத்தப்பட்டதுடன் மாதாந்த தீயணைப்பு படைப்பபயிற்சிகள் ஒழுங்கமைக்கப்பட்டன. இவ் ஆண்டின் போது உள்நாட்டில் ஏற்பாடு செய்யப்பட்ட பல ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு பயிற்சிகளில் 472 ஊழியர்கள் பங்கு பற்றிய அதேவேளை அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற தீயணைப்பு பயிற்சியில் 4 ஊழியர்கள் பங்கேற்றனர். பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் ஊழியர்களின் கவனத்தை ஈர்க்கும் நோக்குடன் ''மாதாத்தின் சிறந்த செயற்பாட்டாளர்'' விருது உட்பட பணப்பரிசுகளுடன் கூடிய பாதுகாப்பு விருதுத் திட்டமொன்றினை அடிப்படையாக கொண்ட இலக்குடன் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தொடர்ந்தும் முன்னெடுத்தது.

| சுத்திகரிப்புச்சாலையின் ஆரோக்கியமும் பாதுகாப்பும் | 2015 | 2014 |
|---|---|---|
| இழப்புகால விபத்துக்கள் | 1 | இல்லை |
| முதலுதவி விபத்துகள் | 10 | 5 |
| அறிக்கையிடப்பட்ட தீ விபத்து | 08 | இல்லை |

***நலநோம்புகைச் செயற்பாடுகள்***

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதன் தொழிற்பாடுகளை சமய வைபவமொன்றின் பின்னர் ஆரம்பித்தது.

பன ஒதுதல் உட்பட பல மதரீதியான செயற்பாடுகளை பௌத்த சங்கம் ஒழுங்கமைத்தது.

எட்டு ஊழியர்கள் வெளிநாட்டு விளையாட்டு நிகழ்வுகளில் பங்கேற்றதுடன் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ரூபா 280,410 செலவினை ஏற்றது.

478 மருத்துவ அனுமதிக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

**கைத்தொழில் உறவுகள்**

பெற்றோலிய உற்பத்திகளின் இடைத் தடங்கலற்ற வழங்கலானது முழு நாட்டினதும் நாளாந்த தொழிற்பாடுகளுக்கு இன்றியமையாததாகும் எனவே, நாட்டின் சக்திப் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கும் நோக்குடன் கைத்தொழில் உறவுகள் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்திற்கும் அதேபோன்று ஒட்டு மொத்த பொருளாதாரத்திற்கும் மிக முக்கியமானதாகும். ஊழியர்களுடனும் தொழிற்சங்கங்களுடனும் ஐக்கியமான கைத்தொழில் உறவுகளை பேணுதலானது இடைத்தடங்கலற்ற தொழிற்பாடுகள், உற்பத்தி, திறன், வியாபாரத் தொடர்ச்சி என்பவற்றுக்கும் இலாப வளர்ச்சிக்கும் அவசியமானதாகும். தரம், உரிய நேரத்திற்கு சேவை வழங்குதல் என்பன மூலம் வாடிக்கையாளர்கள், அரசாங்கம், விநியோகத்தர்கள் போன்ற புற பங்குதாரர்களுடன் கைத்தொழில் உறவுகள் நீடிக்கப்படுகின்றன. இவ் உண்மைகளை அறிந்து, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தொழிலாளர் உறவுகளை முகாமை செய்வதற்கு உயர்வான முன்னுரிமை வழங்குவதன் மூலம் அதன் தொழிற்பாடுகளை முகாமை செய்யப்படுகின்றது.

**சிறுவர் ஊழியம் நிர்ப்பந்தத்திக்கப்பட்ட ஊழியம் அல்லது கட்டாய ஊழியம்**

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அனைத்து ஊழியர்களும் 18 வயதிற்கு மேற்பட்டவர்களாவதுடன் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் உள்ள தொழிற்சங்கங்கள், ஏதேனும் தொழிலாளர் உரிமை மீறல்களையடுத்து நிறுத்தக் கூடியனவையாக செயற்படுகின்றன.

## சமூகங்களுக்கான பெறுமதி சேர்தல்கள்

சமூகத்தின் மத்தியில் நம்பிக்கையினை கட்டியெழுப்புவதற்கும் நற்பெயர் சார் ஒருமைப்பாட்டினை உறுதி செய்வதற்கும் ஒழுங்குபடுத்தலுடன் இணங்குதல் அடிப்படை இயற்பண்பு என இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நம்புகின்றது. இது சிறந்த ஆளுகையினை எடுத்துக் காட்டுவதுடன் நீண்ட காலம் நிலைத்திருக்கும் தன்மையினை பாதுகாக்கின்றது.

**அரசாங்கத்திற்கான கொடுப்பனவுகள்**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், பாரியளவிலான வரி செலுத்துநர்களில் ஒன்றாகக் காணப்படுவதுடன் இவ்வாண்டின் போது அரசாங்கத்திற்கு ரூபா 94.96 பில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டது. இது வருவாயில் 25.21% மாகும். 2014 இல் அரசாங்கத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்ட வரிகள் ரூபா 63.35 பில் அரசாங்கத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டதுடன் இது வருவாயின் 12% மாத்திரமாகும்.



இவ் ஆண்டின் போது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன சுங்கத் தீர்வையாக ரூபா 44.71 பில்லியன் செலுத்தியது இது முன்னைய ஆண்டினை விட 281.18% அதிகமானதாகும். பெற்றோலியத்திற்கான சுங்கத் தீர்வையினை ரூபா 15 இலிருந்து ரூபா 35 ஆக அதிகரிப்பதற்கான அரசாங்கத்தின் தீர்மானம், இவ் உயர்வுக்கு காரணமாக அமைந்ததுடன் கூட்டுத்தாபனத்தின் இலாப எல்லையினை சீர்குலைத்தது. மேலும், உற்பத்தி வரியும் ரூபா 35.69 பில்லியானாக 18.13% இனால் அதிகரித்துள்ளது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு மேலும் சுமையினை ஏற்படுத்தி முன்வரும் 10 வருடங்களுக்காக அரசாங்கம் ரூபா 10 பில்லியன் விசேட கட்டணமொன்றினை விதித்ததுடன் இது செலுத்தப்படத்தக்க சுங்கத் தீர்வைகளுக்கு எதிராக எதிரீடு செய்யப்பட வேண்டும் என இலங்கைக் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அபிப்பிராயப்படுகின்றது.

நிலையங்களில் ஏதேனும் ஆபத்துகள் அல்லது குறைபாடுகள் பற்றி கண்டறிவதற்கு பாதுகாப்பு பரிசோதனைகளும் கணக்காய்வுகளும் நடாத்தப்பட்டன. கூட்டுறவுச் சங்கங்களுக்கு உரித்தான எரிபொருள் நிரப்பு நிலையங்கள் அதிக கவனம் செலுத்த வேண்டிய இடங்களாக காணப்படுவதனால் இவற்றுக்கு இந்நிகழ்ச்சித் திட்டத்தில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. நடைமுறைகளை மீறுதல், பாதுகாப்பற்ற நடைமுறைகள், இல்லப் பேணுகை ஆபத்துக்களைக் கண்டுபிடித்தல் போன்ற மேலும் பல விடயங்கள் பற்றி பின்னூட்டல்களைப் பெறுதல் பிரதான குறிக்கோளாகவிருந்தது. பிராந்திய முகாமையாளர்கள், பிரதேச முகாமையாளர்கள், மற்றும் பொதுப் பணியாளர்கள் ஆகியோருக்கு அறிவூட்டுவதும் மற்றுமொரு குறிக்கோளாகும். இந் நிகழ்ச்சித்திட்டம் வெற்றியளித்ததுடன் இதனூடாக பல பிரச்சினைகள் கண்டுபிடிக்கப்பட்டன. மேலும் இது, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன பிராந்திய அலுவலர்கள் எரிபொருள் நிரப்பு நிலையம் உரிமையாளர்கள் மற்றும் அவர்களது ஊழியர்கள் மத்தியில் அதிக ஆர்வத்தினை தோற்றுவித்தது.

| | விற்பனை விலை | உற்பத்தி வரி | சுங்கத் தீர்வை | அறவீடு | தே.நி.வரி | மொத்தம் | விற்பனை மீதான% |
|---|---|---|---|---|---|---|---|
| **பெற்றோல் 92** | 117.00 | 27.00 | 35.00 | 2.97 | 0.87 | **65.84** | **56%** |
| **பெற்றோல் 95** | 128.00 | 27.00 | 35.00 | 3.16 | 0.98 | **66.14** | **52%** |
| **ஒட்டோ டீசல்** | 95.00 | 3.00 | 9.00 | 3.11 | 0.90 | **16.01** | **17%** |
| **சுப்பர் டீசல்** | 110.00 | 3.00 | 9.00 | 3.18 | 1.04 | **16.22** | **15%** |

பெற்றோலிய பொருட்களை இறக்குமதி செய்தல் மீது விதிக்கப்படும் லீற்றர் ஒன்றுக்கான நடைமுறை வரிகள் விற்பனை விலைகளுடன் ஒப்பீட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

அதற்கமைய, தொழிற்பாட்டுச் செலவுகளை சமாளிப்பதற்கு விற்பனைப் பெறுமதியின் 44% மற்றும் 48% மாத்திரம் கிடைக்கப் பெறுவதனால் 92 மற்றும் 95 பெற்றோல் இறக்குமதி செய்வது உசிதமானதல்ல.

**உற்பத்திப் பொறுப்புடைமை**

நாடுபூராகவும் வேறுபட்ட பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எழுமாறாக விஜயம் மேற் கொள்வதற்கு நிகழ்ச்சித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டதுடன் எரிபொருள் நிரப்பு

இலங்கையில் தடை செய்யப்பட்ட எரிபொருளினையும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் விற்பனை செய்வதில்லை. இவ்வாண்டின் போது, மிகவும் பிரபல்யம் வாய்ந்த விவசாய இரசாயனமான கிளைபோசேற் முழுமையாக தடை செய்யப்பட்டதுடன் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதன் விற்பனையினை உடனடியாக நிறுத்தியது.

**உற்பத்தி மற்றும் சேவை சுட்டுத்துண்டு இடல்**

ஆரோக்கியத்தினையும் பாதுகாப்பினையும் காக்கும் பொருட்டு பெற்றோலிய உற்பத்திகளுக்கு சரியான உற்பத்தி மற்றும் சேவை சுட்டுத் துண்டு இடுதல் மிக முக்கியதுவமிக்கதாகும். எனவே, சுட்டுத் துண்டு இடலானது சமூகம் பொறுப்புடைமையொன்றாக கருதப்படக் கூடிய

அதே தொடர்புடைய நோக்கத்திற்காக சரியான பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றது என்பதனை உறுதிசெய்கின்றது. இதற்கு மேலதிகமாக, சுட்டுத்துண்டு இடலானது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன வர்த்தக நாமத்தினை முன்னிலைப்படுத்துவதுடன் போட்டியிடுவதற்காக சந்தை கருவியொன்றாகவும் செயற்படுகின்றது.

**ஆதரவளித்தல் கல்வி**

பொறுப்புள்ள நிறுவனப் பிரசையொன்றாக, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அது ஈடுபடுகின்ற சமூகத்தின் வாழ்க்கைத் தரத்திற்கு தொடர்ந்தும் ஆதரவளித்தது. நாட்டில் உள்ள ஓரேயொரு மசகு எண்ணெய் சுத்திகரிப்புச்சாலையாக எமது எண்ணெய் சுத்திகரிப்புச் சாலை காணப்படுவதனால் பல மாணவர்கள் பயிற்சி பெறுவதற்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை நாடுகின்றனர். நாட்டின் எதிர்கால அபிவிருத்திக்காக ஆர்வமிக்க மாணவர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கு எமது அலுவலர்கள் தமது பெறுமதி மிக்க காலத்தினை செலவிடுகின்றனர்.

**மாணவர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகள்**

பல்கலைக்கழக மாணவர்களுக்கு பொறித் தொகுதி பயிற்சி நடாத்தப்பட்டது.

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை பயிலுநர்களுக்காக (2013 வருடம்) மாதாந்த மற்றும் வருடாந்த மதிபீடுகள்

அனைத்து NAITA பயிலுநர்களும் NAITA இனால் நடாத்தப்பட்ட தகவல் தொழில்நுட்ப பயிற்சி நடாத்தப்பட்ட தகவல் தொழிநுட்ப பயிற்சி நிறைவு செய்யப்பட்டது. .

இலங்கை இராணுவம், பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகளின் 14 கைத்தொழில் விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கையில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன தொழிற்பாடுகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் பொருளாதாரத்தில் தாக்கம் செலுத்துகின்றன. நேரடியற்ற பொருளாதார தாக்கங்களானவை, ஏனைய கைத்தொழில்களின் பொருளாதார செயற்பாடுகளை ஊக்குவிக்கும் செயன்முறையூடாக திரட்டப்படுவதுடன் இது, ஒட்டு மொத்த தேசிய பொருளாதார வளர்ச்சியிலும் மக்களின் வாழ்க்கைத் தர மேம்படுத்தல் தரத்திலும் தாக்கம் செலுத்துகின்றது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனக் கொள்கையானது பின்வருவன மூலம் சாதகமான பொருளாதார தாக்கங்களை உயர்த்துகின்றது.

- பொதுமக்களுக்கு மானிய விலையில் எரிபொருள் வழங்குதல்
- மிகவும் வினைத்திறன் மிக்க மற்றும் சுற்றாடல் நட்பு மிக்க தரம் வாய்ந்த பெற்றோலிய உற்பத்திகளை வழங்குதல்.
- பெற்றோலிய உற்பத்திகளுக்கான அணுகு வழியினை அதிகரித்தல்
- நேரடி தொழில் உருவாக்குதல்.
- சிறப்பு அங்காடி, ஏரிஎம், உணவகங்கள் காற்று நிரப்புதல், போன்றனவற்றை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வழங்குவதன் மூலம் பெறுமதி சேரக்கப்பட்ட சேவை வழங்குவதற்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களை இயலச் செய்தல்.
- ஏழை விவசாயிகளை சுரண்டுவதனை கட்டுப்படுத்தும் நோக்குடன் குறைந்த விலையில் விவசாய இராசயனங்கள் விற்பனை செய்தல்.

**அமைப்புகளில் உறுப்புரிமைகள்**

ஒழுங்குபடுத்தல் முகவர் நிலையங்களுடனும் தாபிக்கப்பட்ட தொழிற்துறை நிறுவனங்களுடனும் இடைத் தொடர்புகளையும் உறுப்புரிமைகளையும் பேணுதல்.

- இலங்கை மத்திய வங்கி
- நிதி அமைச்சு
- இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம்
- உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
- இலங்கை வர்த்தக சம்மேளனம்
- இலங்கைச் சங்கம்
- இலங்கை ஊழியர்கள் சம்மேளனம்
- இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனம்
- இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம்

## சுற்றாடலுக்கான பெறுமதி சேர்த்தல்

### சுற்றாடல்சார் பங்குடமை

நாம் சுற்றாடலை பேணி வளர்ப்பதுடன் பாதுகாப்பதற்கு கடமைப்பட்டுள்ளோம். சிறப்பான சுற்றாடல் நடைமுறைகளை பின்பற்றுவதன் மூலம் சுற்றாடல் நோக்கிய அதன் பொறுப்புடமைகளை தொடர்ந்தும் முன்னெடுத்தது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன செயற்பாடுகள் சமூகத்தில் உள்ள பாரிய எண்ணிக்கையிலான மக்களை பாதிப்பதனால் மட்டுப்படுத்தப்பட்ட மூலவளங்கள் உச்ச மட்ட பயன்பாட்டினை ஆக்குகின்ற அதே வேளை சுற்றாடலை பாதுகாத்தல் மீது அதன் ஊழியர்கள் பயிற்றுவிப்பதற்கு அரப்பணித்துள்ளது.

**கழிவு முகாமைத்துவம்**

கழிவு முகாமைத்துவம் பற்றியும் வாயு வெளியேற்றம் பற்றியும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மிகவும் அக்கறை கொள்கின்றது. இவ் ஆண்டின் போது "கைத்தொழில் திடக் கழிவு, கழிவு நீர், வாயு வெளியேற்றம் முகாமைத்துவம்" பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றில் இயந்திரவியல் பொறியியலாளர் ஒருவர் பங்கேற்றார். அத்துடன் நீர், கழிவுநீர் மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு பொறித்தொகுதி தொழிற்படுத்தல் மற்றும் பராமரித்தல் பற்றிய வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சியில் இரண்டு அலுவலர்கள் பங்கேற்றனர். அவர்கள் பெற்றுக் கொண்ட அறிவினை சக ஊழியர்களுக்கும் வழங்குவர் எனவும் அப் பொறிமுறைகளை கூட்டுத்தாபனத்தில் அமுலாக்குவர் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. 2015 இன் போது கழிவு நீர் சுத்திகரிப்பு பொறித் தொகுதி நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டதுடன் கழுவுதல் பகுதியொன்றினை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்படுகின்றது ISO அமுலாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அசுத்தமடைந்த மற்றும் அசுத்தமடையாத கழிவுகளை வேறுபடுத்துவதன் மூலம் அதன் கழிவு நீர் முகாமைத்துவத்தை கூட்டுத்தாபனம் மேம்படுத்தியது.

**நீர்**

இவ் ஆண்டின் போது நீர் உள்ளெடுத்தல் மூலங்களில் இருந்து கணிசமான அளவு நீர் எடுக்கப்பட்ட அதேவேளை, நீர் வழங்கல் சபையிடமிருந்து. சிறியளவு தொகை நீர் எடுக்கப்பட்டது.

**எண்ணெய் கசிவு**

இடமாறுதலில் ஆகக் குறைந்த இழப்பு காரணமாக 2014 ஆம் ஆண்டின் போது 0.65% ஆகவிருந்த சமுத்திர இழப்பு 2015 ஆம் ஆண்டின் போது 0.38% ஆக குறைந்தவடைந்தது. எனினும், இது கரைத்தாங்கி இழப்பு அதிகரிப்பதற்கு இட்டுச் சென்றது. எண்ணெய் கழிவினை குறைப்பதற்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முறையான பொறிமுறையொன்றினை உருவாக்க வேண்டும்.

**சக்தி**

சக்தி இன்றி இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன தொழிற்பாடுகள் ஸ்திரமடையும். கூட்டுத்தாபனத்தில் அதிகூடிய சக்திக்கான சக்தி அளவுகளில் கணிசமான அளவினை சுத்திகரிப்புச்சாலை வேண்டுகின்றது. எனவே, ஒவ்வொரு ஆண்டும் சக்தி நுகர்வினை கட்டுப்படுத்தும் பொருட்டு இழப்பு மற்றும் வினைத்திறன் அளவீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன

***சுத்திகரிப்புச்சாலை தொழிற்பாடுகளின் மின்சக்தி நுகர்வு***

| | 2015 | 2014 |
|---|---|---|
| டீசல் நுகர்வு | 32,029 மெ.தொ | 31,325 மெ.தொ |
| எரிபொருள் எண்ணெய் நுகர்வு | 43,633 மெ.தொ | 38,904 மெ.தொ |
| குறித்துரைத்த சக்தி நுகர்வு (மசகிற்கான MMK Cal) மெ.தொ. | 0.4755 | 0.4195 |

சக்தி நுகர்வானது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் செலவுக் கட்டமைப்பில் தாக்கத்தினைக் கொண்டிருப்பதுடன் சுற்றாடலுக்கு வாயு வெளியிடுவதன் ஊடாக சூழலுக்கும் தாக்கம் செலுத்துகின்றது.

**செயலாற்றப்பட்ட சூழல் நட்புச் செயற்பாடுகள்**

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சந்தைக்கு எப்போதும் சூழல் நட்புமிக்க பெற்றோலியப் பொருட்களையே வழங்கல் செய்வதற்கு முயற்சிக்கின்றது அதற்கமைய, மிகவும் வினைத்திறன் மிக்க சூழல் நட்பு மிக்க லங்கா சுப்பர் டீசலினை நாம் அறிமுகப்படுத்தினோம்.

**உயர் பல்வகைமை**

எண்ணெய்க் கசிவு, வாயு வெளியேற்றம் போன்றன ஊடாக உயிர் பல்வகைமை மீது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன தொழிற்பாடுகள் பாதகமான தாக்கத்தினைக் கொண்டிருக்கலாம் உயிர் பல்வகைத் தன்மைக்கான பாதகமான தாக்கங்களைத் தணிப்பதற்கு கண்டிப்பான தொழிற்பாட்டு நடைமுறைகள் அமுலில் காணப்படுவதுடன் அனைத்து முன்னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கையும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எடுக்கின்றது.

| விபரம் | உயிர் பல்வகைமை மீதான தாக்கம் |
| --- | --- |
| துளையிடும் உயிரினங்கள் பீடைகள் மற்றும் நோய்க் கிருமிகள் அறிமுகப்படுத்தல் | அத்தகைய தரவுகள் பதிவாக வில்லை |
| உயிரினங்கள் குறைதல் | அத்தகைய தரவுகள் பதிவாக வில்லை |
| வாழிடங்களை மாற்றுதல் | அத்தகைய தரவுகள் பதிவாக வில்லை |
| இயற்கை மாறுபாட்டு விதத்திற்கு வெளியில் உயிர்ச் சூழலியல் செயன் முறையில் மாற்றங்கள் | அத்தகைய தரவுகள் கழிவாக வில்லை |
| உயிரினங்கள் பாதிப்பு | அத்தகைய தாக்கங்கள் பதிவாகவில்லை. |
| பாதிக்கப்பட்ட பகுதிகளை விஸ்தரித்தல் | அத்தகைய தாக்கங்கள் பதிவாகவில்லை. |
| தாக்கங்களின் காலம் | அத்தகைய தாக்கங்கள் பதிவாகவில்லை. |
| தாக்கங்களின் எதிர்மாறு தன்மை அல்லது மீள முடியாத் தன்மை | அத்தகைய தாக்கங்கள் பதிவாகவில்லை. |

**இணங்குவித்தல்**

இவ் ஆண்டின் போது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன சுற்றாடல் கட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் இணங்காமைக்காக ஏதேனும் முக்கிய தண்டங்களை அல்லது நிதிசாரா தண்டத் தடைகளை செலுத்தியிருக்கவில்லை.

## எதிர்கால காலநோக்கு

உலக எரிபொருள் விலையானது முன்னர் வீழ்ச்சியடைந்திருந்த போதிலும், 2016 இன் இரண்டாம் காலாண்டின் பின்னர் மேல் நோக்கிய போக்கொன்றில் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மத்திய கிழக்கு நாடுகளின் பொருளாதாரங்கள் மந்தமடைந்து உள்ளமையினால், அந்நாடுகளில் இருந்தான அந்நியச் செலாவணி உழைத்தல், சுருக்கமடையக் கூடும் என்பதுடன் அந்நிய செலாவணி மாற்று வீதத்தில் அழுத்தங்களை கொடுக்கும். உலக வட்டி விகிதங்கள், உயரும் என மதிப்பிடப்படப்பட்டுள்ளதுடன் மாறுபடுகின்ற வட்டி வீதங்களில் பெற்றுக் கொள்ளப்பட்ட வெளிநாட்டு கடன்களுக்காக இலங்கை உயர் வட்டியினை செலுத்துவதை உண்டு பண்ணும், உள்நாட்டு அரசாங்கமும் வரிகள் ஊடாக அதன் வருவாயினை அதிகரிப்பதற்கு திட்டம் வகுக்கிறது.

எண்ணெய்க் கைத்தொழிலின் தீவிரப் பிரச்சினைக்கு உள்நாட்டு பெற்றோலிய உற்பத்திகளுக்கு செலவுப் பிரதிபலிப்பு, வெளிப்படையான எரிபொருள் விலையிடல் பொறிமுறை அவசியமானதாகும். மேலும், மானியக் கூறுகளை அரசாங்கம் தாமதமின்றி தீர்ப்பனவு செய்வதற்கு நாம் எதிர்பார்ப்பதுடன் கிடைக்க வேண்டிய மானியக் கூறுகள் வாயிலாக வங்கிக்கடன் பெறுதல்களின் சில தொகையினை அரசாங்கம் பொறுப்பேற்கும் என எண்ணுகின்றோம். ஐக்கிய அமெரிக்க டொலர்களாக போட்டி விலைகளில் கொள்வனவு செய்ய அனுமதிக்கப்படுமானால், அது தனது இலாபத்தன்மையினை அதிகரிக்க முடியும் அரசாங்கத்தின் பெற்றோலியம் கண்டறியும் முயற்சிகள் வெற்றியடைந்து, வாயு வர்த்தக மயமாக்கல் செயன்முறை உற்பத்தி திறன் மிக்கதானதுடன், சமையல் எரிவாயுவாக பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், வடிக்கப்பட்ட பொருட்கள் இறக்குமதி மட்டுப்படுத்தப்படும்.

2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கான விசேட கட்டணமொன்றாக பொதுத் திறைசேரி ரூபா 1000 மில் விதித்துள்ளது. அத்துடன் அத்தகைய கட்டணம் மிகவும் நியாயமற்றது என இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அபிப்பிராயப்படுவதுடன் கொடுப்பனவு செய்ய வேணடிய சுங்கத் தீர்வைகளுக்கு எதிராக எதிரீடு செய்ய இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு ஆலோசிக்கின்றது. இதற்கு மேலதிகமாக, தற்போது இடம்பெற்று வருகின்ற பெற்றோல் மீதான சுங்க வரியினையும் புரள்வினை அடிப்படையாக கொண்ட பொருளதார சேவைகள் கட்டணத்தினையும் குறைப்பதற்கு அரசாங்கத்துடன் கலந்துரையாடுவதற்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் திட்டமிடுகின்றது. பொருளாதார சேவைகள் கட்டணத்தில் அதிகரிப்புடனும் புரள்வினை அடிப்படையாக கொண்ட அறவீட்டுத்

தன்மையுடனும் ஒன்று சேர்த்து, கூட்டுத்தாபனம், கணிசமான வரித் தொகையொன்றினை சுமக்கின்றது.

2015 வரவு செலவுத்திட்டம் ரூபா 100 பில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டதிற்கமைய ரூபா 75 பில்லியன் பெறுமதியான திறைசேரி முறிகளை அரசாங்கம் விநியோகிப்பதற்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எதிர்பார்ப்பதுடன் அத்தகைய நிதியங்களை கருத்திட்ட விஸ்தரிப்பிற்கும் வெளிநாட்டு நாணயக் கடன்களை தீர்ப்பனவு செய்வதற்கும் அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. இது, கூட்டுத்தாபனத்தின் இலாபத் தன்மையினை மேம்படுத்தும். சுத்திகரிப்புச்சாலை திருத்தப் பணிகள் அமுல்படுத்தப்படுமாயின், களஞ்சிய கொள்ளளவு போதாமையின் காரணமாக உலை எண்ணெய் மற்றும் படிக எண்ணெய் ஏற்றுமதியிலிருந்து தோன்றுகின்றது. நட்டத்தினை தவிர்க்க கூடியதாகவிருக்கும். அதற்காக, அரசாங்க உத்தரவாதத்துடன் கூடிய வெளிவாரி நிதி வழங்கலுக்கான கொள்கைத் தீர்மானமொன்று தேவைப்படும்.

அதிகரித்து வரும் பெற்றோலியப் பொருட்களின் கேள்விக்கு தடங்களற்ற வழங்கல் செய்வதற்கான வளர்ச்சி மற்றும் வினைத்திறன் மீது தொடர்ச்சியாக கவனம் செலுத்தும் அதேவேளை செலவினை குறைப்பதற்கும் கவனம் செலுத்தும், சந்தை தலைமை அந்தஸ்தினைப் பேணுவதற்கு மூலோபாய முன்னுரிமைகள், செயற்பாட்டில் உள்ளதுடன் பொதுத் தொழில் முயற்சியொன்றாக அரசாங்க ஆதரவினை மூலதனமாக்குவதற்கு எண்ணுகின்றோம். சுற்றாடலுக்கு நட்பு மிக்க புதிய பீடைநாசினிகளை அறிமுகப்படுத்துவதன் ஊடாக விவசாய இரசாயன அலகு அதன் தொழிற்பாடு ஆகியவற்றை விஸ்தரிப்பதற்கு திட்டமிடுகின்றது. உலை எண்ணெய் போன்ற அடி நிலை உற்பத்திகளை உயர் விளைச்சல் மிக்க உற்பத்திகளாக மாற்றுவதனை இயலச் செய்கின்ற தற்போது எரிபொருள் சுத்திகரிப்புச் செய்முறையை செய்கின்ற செயன்முறை கொள்கை ரீதியான மாற்றியமைக்கப்பட்டதுடன் நட்டம் ஏற்பட்ட நிலை தவிர்க்க கூடியதாக உள்ளது. மறுகரத்தில், குறைந்த கேள்விக்கான பருவ காலங்களின் போது மேலதிக உற்பத்திகளை களஞ்சியப்படுத்துவதற்கும் சர்வதேச சந்தையில் எண்ணெய் விலை குறைகின்ற போது மசகு எண்ணெய் களஞ்சியப்படுத்துவதற்கும் களஞ்சிய கொள்கை அளவினை அதிகரிக்க வேண்டியுள்ளது.

**முன்னெடுக்கப்படும் பிரதான கருத் திட்டங்களின் நிலைமை**

1. மொத்த தார் மற்றும் திரவ பெற்றோலிய வாயு நிரப்பு முற்றம் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது.
2. அழுத்தப்பட்ட வாயு முறைமைக்கு கட்டளை வழங்கப்பட்டது.
3. தொழில்நுட்ப மற்றும் வர்த்தக ரீதியாக விளக்கமளித்த பின்னர் நீராவி கொதிகலன் கொள்வனவிற்காக உற்பத்தி செய்பவரோடு ஒப்பந்தம் கைச் சாத்திட்டது.
4. பம்பி அலகினை மாற்றீடு செய்வதற்காக மின்சார மற்றும் சாதனங்களுக்கான வடம் அகழிகளை நிர்மாணித்தல் முன்னெடுக்கப்படுகின்றது. வடங்கள் புதைக்கப்பட்ட பின்னர் பம்பி அலகு பொருத்தப்படும்.
5. முத்துராஜவெல இல் ஜெட் ஏ வன் எரிபொருளுக்கான களஞ்சியத் தாங்கியொன்றினை நிர்மாணித்தலும் குழாயொன்றினூடாக மேலதிகச் களஞ்சியம் பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு இணைத்தலும்.
6. கொதிகலன் நீர் நிரப்புவற்கு நீர் இறைக்கும் இயந்திரத்துக்கு கொள்ளளவுக் கட்டளை முன் வைக்கப்பட்டுள்ளது.
7. எண்ணெய் ஏற்பு தன்மை உபகரணங்களின் போதுமை மற்றும் தற்போது காணப்படும் உபகரணங்களின் தொழிற்படுதன்மை ஆகியவற்றை மீளாய்வு செய்த பின்னர் அத்தியாவசியமான ஆய்வு கூட உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு கொள்வனவு நடைமுறை முன்னெடுக்கின்றது.
8. சுத்திகரிப்புச்சாலையிலிருந்து நீர் உள்ளெடுத்தல் நீர் குழாயினை மாற்றீடு செய்வதற்கும் கேள்வி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.
9. சபுகஸ்ந்த விநியோக முனையத்தில் தானியக்க முறைமையினை தரமுயர்த்துவதற்கு விலை மனுக்கள் அழைக்கப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்பட்டது.

10. கழிவு நீர் சுத்திகரிப்பு பொறித் தொகுதி நிர்மாணித்தல் ஆரம்பிக்கப்பட்டது.
11. கழுவுதல் பகுதியொன்றினையும் கொங்கிரீட்டு பீப்பாய் முற்றம் ஒன்றினையும் நிர்மாணிப்பதற்கு விலைமனுக்கள் அழைக்கப்பட்டன.
12. பாரமான படிக எண்ணெய் களஞ்சிய தாங்கி நிர்மாணம் முன்னெடுக்கப்படுகின்றது.

**திட்டமிடப்பட்ட கருத்திட்டங்கள்**

இலங்கையில் மேலும் பெற்றோலிய கைத்தொழிலினை நிலைபேறு மிக்கதாக ஆக்குவதற்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் அண்மைய எதிர்காலத்தில் குறுதிய காலம் மற்றும் நீண்டகால அடிப்படையில் அமுலாக்கப்படுவதற்கான சில பிரதான கருத்திட்டங்களை இனங்கண்டுள்ளது.

1. சபுகஸ்கந்தையிலுள்ள சுத்திகரிப்புச் சாலை பொறித் தொகுதியினையும் ஆய்வு கூட்டத்தினையும் தரம் உயர்த்தி விரிவாக்ககுதலும் மின் உற்பத்தி வசதிகளையும் மேம்படுத்தலும் மாபிம வீதிக்கு மாற்று வழியமைத்தலும் மீள் வழியமைத்தலும்.
2. ஹம்பாந்தோட்டை தாங்கிப் பண்ணையினையும், எண்ணெய் இறைக்கும் துறையினையும் பெற்றுக் கொள்ளல்.
3. களஞ்சிய முனையத்திலும் தாங்கி இறைக்கும் நிலைகள், சுத்திகரிப்புச்சாலை அடுக்கு வரையறைகளிலும் தினிவு பாய்ச்சல் மீற்றரை அறிமுகப்படுத்தல்.
4. கொலன்னாவையில் விமான எரிபொருளுக்கான நிலைமின் எதிர்ப்பு கூட்டுப் பொருள் (STADIS) உட்செலுத்தி அலகொன்றினை தாபித்தலும் வடியொன்றினை பொருத்துதலும்.
5. சுத்திகரிப்புச் சாலையில் இருந்தும் துறைமுகத்திலிருந்தும் ஓரேநேரத்தில் எரிபொருள் பெறுவதன் தொழிற்படுத்துவதற்கு கொலன்னாவையில் குழாய்/வால்வு திருத்துதல்.
6. ஜெட் ஏ வன் கொண்டு செல்வதற்கு குழாய் ஊடாக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் சுத்திகரிப்புச்சாலை, மற்றும் முத்துராஜவெல ஆகியவற்றை இணைத்தல்.
7. சப்புகஸ்கந்தையில் உள்ள உர தொழிற்சாலைக்கான புகையிரத பாதையினைப் புனரமைத்தலும் சபுகஸ்ந்தையில் சுமையேற்றுவதற்கு புகையிரத சரக்கு கொள்கலன்களை அறிமுகப்படுத்தலும்.
8. முத்துராஜவெல முனையத்தினையும் கொலன்னாவை முனையத்தினையும் இணைத்தல்.
9. காலி துறைமுகத்தில் மொத்த தார் இறக்குமதி,இறக்குதல்,களஞ்சியப்படுத் தல், விநியோக வசதி ஆகியவற்றை தாபித்தல்.
10. சபுகஸ்ந்த முனையத்தில் களஞ்சியக் கொள்ளளவினை அதிகரித்தல்.
11. 60,000 மெற்றிக் தொன் தாங்கிகள் இறக்குமதியினை இயலச் செய்கின்ற கப்பல்கள் மீதான முத்துராஜவெல தனி நிலை மிதவைத் தாங்கியின் தொழிநுட்ப மட்டுப்பாடுகளை தளர்த்தலும் பாரியளவு எடை கொண்ட கொள்ளவுடன் கூடிய கப்பல் நங்கூரமிடுவதனை அனுமதிக்கின்ற கப்பல்கள் மீதான மசகு எண்ணெய் தனி நிலை மிதவைத் தாங்கியின் தொழில்நுட்ப மட்டுப்பாடுகளைத் தளர்த்தல்.
12. தனி நிலை மிதவைத் தாங்கியின் ஊடாக மசகு எண்ணெய் இறக்குதலின் போது தடங்கல்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் மசகு எண்ணெய் இறக்கும் தெரிவொன்றாக வைத்திருப்பதற்கு டொல்பின் இறங்கு துறையில் மசகு எண்ணெய் ஏற்றுதல்/ இறக்குதல் புயத்தினை புணரமைத்தல்.
13. சுயசேவையாற்று பம்பிகளுடன் தன்னியக்கமாக்கலும் லங்கா எரிபொருள் நிரப்பு நிலையங்களை இணைத்தலும்.

குறுகிய காலக் கருத்திட்டங்களுக்கு உள்ளக ரீதியான உருவாக்கப்பட்ட நிதியங்களை பயன்படுத்துவதற்கும் நீண்டகாலக் கருத்திட்டங்களுக்கு வெளிவாரி நிதியங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# இடர் முகாமைத்துவ அறிக்கை

செயல்திறன் மிக்க இடர் முகாமைத்துவமானது, வளர்ச்சி மற்றும் இடர் என்பவற்றினை முறையாகச் சமப்படுத்துவதன் மூலம் கூட்டுத்தாபனத்தின் நிலையான அபிவிருத்தியினை உறுதி செய்கின்றது. இவ் உண்மையினை அறிந்து கூட்டுத்தாபனம், மூலோபாயங்களை உருவாக்கும்போதும் நாளாந்தத் தொழிற்பாடுகளை மேற்கொள்கின்ற போதும் இணையப் பெற்ற இடர்கள் மீது அதிக கவனம் செலுத்துகின்றது. கூட்டுத்தாபனத்தின் இடர் முகாமைத்துவ வரைச் சட்டத்தின் செயல்திறன் தன்மையானது, சிறப்பான ஆளுகைக் கட்டமைப்பு ஒன்றுடன் கூடிய, செயல்திறன் வாய்ந்த அனைத்தையும் உள்ளடக்கிய உள்ளகக் கட்டுப்பாடுகள் முறைமை ஒன்றினால் வசதிபடுத்தப்படுகின்றது.

**இடர் ஆளுகை**

கூட்டுத்தாபனத்தின் இடர் முகாமைத்துவத்திற்கான அதி உயர் பொறுப்புடைமையானது, பணிப்பாளர் சபையின் மீது அமைந்துள்ளதுடன் சபை மற்றும் நிறைவேற்று மட்டங்கள் ஆகிய இரண்டிலும் ஏனைய ஆளுகைக் குழுக்களினால் ஆதரவளிக்கப்படுகின்றது. அக்குழுக்கள் தெளிவாக வரையறை செய்யப்பட்ட வகிபாகங்கள் மற்றும் பொறுப்புடைமைகளுடன் தொழிற்படுகின்றன.

**இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஆளுகைக் கட்டமைப்பு**



**இடர் முகாமைத்துவத்திற்கான இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அணுகுமுறை**

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இடர் முகாமைத்துவ அணுகுமுறையானது இடர்களை அடையாளம் கண்டு முகாமை செய்து முறையாக தடுக்கின்ற இரண்டு திடமான பாதுகாப்பு நிலைகளை அடிப்படையாகக் கொண்டது.




**உள்ளகக் கட்டுப்பாடுகள் முறைமை**

இணையப் பெற்ற இடர்களை கண்டுபிடிப்பதற்கும் முகாமை செய்வதற்கும், தடுப்பதற்கும் கூட்டுத்தாபனத்தை இயலச் செய்கின்ற அனைத்து கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை உள்ளடக்குகின்ற அனைத்தும் அடங்கிய உள்ளகக் கட்டுப்பாடுகள் முறைமை ஒன்றினை கூட்டுத்தாபனம் வடிவமைத்துள்ளது. 1961 இன் 28 ஆம் இலக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டம், 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் மற்றும் ஏனைய ஒழுங்குபடுத்தல் நடவடிக்கை முறைகள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகள் உள்ளகக் கட்டுப்பாடினை வடிவமைத்தலில் கருத்திற் கொள்ளப்பட்டன. இச்சட்டங்கள் கூட்டுத்தாபனத்தின் இடர்களை முகாமை செய்வதில், திடமான அத்திவாரமொன்றினை உருவாக்கும் அதேவேளை, வர்த்தகத் தொடர்ச்சியினை உறுதி செய்கின்றது. அதே சந்தர்ப்பத்தில் முறைகேடுகளையும், மோசடிகளையும் அவை தடுக்கின்றன.

**உள்ளக மற்றும் புற கணக்காய்வு**

இடர் முகாமைத்துவச் செயன்முறையில், உள்ளக மற்றும் புறக் கணக்காய்வுகள் இன்றியமையாத வகிபாகம் ஒன்றினை ஆற்றுகின்றன. உள்ளக மற்றும் புறக் கணக்காய்வாளர்கள் நிதியியல் முறைமைகளினதும், ஏனைய தொழிற்பாட்டு முறைமைகளினதும் வடிவத்தினையும், செயல்திறனையும் பரிசோதிப்பதுடன் அவர்கள் அடையாளம் காண்கின்ற ஏதேனும் இடர்களை முகாமை செய்வதற்கு பரிகார நடவடிக்கைகளை மேம்படுத்தலையும் பரிந்துரைக்கின்றனர். பணிப்பாளர் சபையினால் தாபிக்கப்பட்ட கணக்காய்வுக் குழு முக்கிய கணக்காய்வுக் காண்புகளை மீளாய்வு செய்கின்றது.

**இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எதிர்கொள்கின்ற இடர்கள்**

கூட்டுத்தாபனம் ஆட்படுகின்ற இடர்கள் மற்றும் எடுக்கப்பட்ட இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள் பற்றிய சுருக்க விவரணம் ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

**பொருளாதார இடர்**

உலகப் பொருளாதார நிலைமைகளும் அதேபோன்று இலங்கைப் பொருளாதார நிலைமைகளும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தானத்தினை மோசமாகப் பாதிக்கின்றன. உலக சந்தையில் மசகு எண்ணெய் விலைகளில் மாற்றங்கள், நாணய மாற்று விகிதம், நாட்டின் பணவீக்க விகிதம் என்பன கூட்டுத்தாபனத்திற்கு நெருக்கடியினை ஏற்படுத்துகின்ற முக்கிய அழுத்தங்களாகும். பெற்றோலிய உற்பத்திகளை வழங்குகின்ற சந்தையின் முதன்மையாளர்களாகவும், அரசாங்கத்திற்கு உரித்தான நிறுவனமாகவும், இலாபம் உழைப்பதினை விடவும் சமூகப் பொருளாதார சூழ்நிலைகளைச் சமாளிக்கும் பொருட்டு சில உற்பத்திகள் அதிகளவு மானிய விலைக்கு வழங்கப்படுகின்றன. பெற்றோலிய விலைகளில் சிறிய மாற்றங்கள் ஒட்டு மொத்த பொருளாதாரத்தில் திடீர் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. பொருளாதார இடர்களில் தோன்றுகின்ற மோசமான தாக்கங்களைத் தவிர்க்கும் பொருட்டு கூட்டுத்தாபனத்தின் இலாபத்தன்மை மற்றும் நாட்டின் சமூகப் பொருளாதார நிலைமைகளை ஆகிய இரண்டினையும் சமப்படுத்தும் நோக்கில் போட்டி விலைகளில் பெற்றோலிய

உற்பத்திகளை விற்பனைச் செய்வதற்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினை இயலச் செய்கின்ற செலவு முகாமைத்துவ முயற்சிகளை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அடிக்கடி பணிக்கமர்த்துகின்றது. செலவினைப் பிரதிபலிக்கின்ற உள்நாட்டு பெற்றோலிய உற்பத்திகளுக்கான வெளிப்படையான எரிபொருள் விலையிடல் பொறிமுறையொன்றினை அறிமுகப்படுத்தலானது, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினை இலாபகரமான வியாபாரம் ஒன்றாக ஆக்குவதற்கு அழுத்தம் தருகின்ற தேவைப்பாடொன்றாகக் காணப்படுகின்றது.

**நிதிசார் இடர்**

கூட்டுத்தாபனத்தின் சீரான தொழிற்பாட்டிற்காக கிடைக்கப் பெறும் நிதி வழங்கலுடன் நிதிசார்ந்த இடர்கள் தொடர்புபடுகின்றன. அனைத்து வேலைகளிலும், செயல்திறன் மிக்க நிதியளித்தல்கள் கிடைக்கப் பெறுகின்ற அதேவேளை இலாபத் தன்மை மீதான சந்தை நிலைமைகளிலிருந்து தோன்றுகின்ற எதிர்மறையான தாக்கங்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன என்பதனை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உறுதி செய்கின்றன. வெளிப்படுகின்ற பிரதான இடர் காரணிகள் வெளிநாட்டு நாணயமாற்று விகிதமும் வட்டி விகிதமுமாகும். எவ்வாறாயினும், ஐ.அ.டொ கடன்களைத் தீர்ப்பனவு செய்வதற்குப் பணியாற்றத்தக்க பொறிமுறையொன்று இல்லாமை எதிர்கொள்கின்ற பாரிய தடைகளில் ஒன்றாகும். கிடைக்கப் பெற வேண்டிய மானியக் கூறுகள் வாயிலாக, வங்கிக் கடன்படுதல்களில் சில தொகைகளை அரசாங்கம் பொறுப்பேற்கக் கூடியதாகவிருப்பின், நிதிசார் இடர்களை மேலும் தணிக்கக் கூடியதாகவிருக்கும்.

**வெளிநாட்டு நாணயமாற்று இடர்**

நாட்டின் பிரதான இறக்குமதியாளர்களில் ஒன்றாக, மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்கள் வழங்குனர்களுக்குத் தீர்ப்பனவு செய்வதற்காக இரண்டு அரசிற்கு உரித்தான வங்கிகளிடமிருந்தும், ஐ.அ.டொ. களை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கொள்வனவு செய்தது. மறுமுனையில், வருவாயானது, பிரதானமாக இலங்கை ரூபாயில் ஈட்டப்படுகின்றது. எனவே, கூட்டுத்தாபனம் வெளிநாட்டு நாணய இடர்களுக்கு உட்படுகின்றது. இவ்விடரினைக் குறைப்பதற்கு நாளாந்த அடிப்படையில், அனைத்து வங்கிகளினாலும் குறிக்கப்படும் செலாவணி மாற்று விகிதம் கண்காணிக்கப்படுவதுடன், வங்கிக் குறித்த விகிதங்களில் அன்றி சந்தைப் போக்கினை கண்காணித்த பின்னர், சந்தை விகிதங்களில் டொலர் கொள்வனவு செய்யப்பட்டது. இந்நடைமுறையிலிருந்து இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கணிசமான இலாபத்தினை உழைத்தது. எனினும், அரசிற்கு உரித்தான இரண்டு வர்த்தக வங்கிகளிலிருந்து மாத்திரம் கொள்வனவு செய்வதற்கு அது மட்டுப்படுத்தப்பட்டிருப்பதற்குப் பதிலாக, ஏதேனும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்து போட்டி விகிதத்தில் ஐ.அ.டொ கொள்வனவு செய்வதற்கு சுயஉரிமை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்படும் எனில், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு குறைத்திருக்கும்.

**திரவத் தன்மை இடர்**

திரவத் தன்மை இடரானது, கடப்பாடுகள் நிலுவையாகின்ற போது உரிய காலத்திற்கு கூட்டுத்தானத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு இயலாத நிலைமையில் இருந்து தோன்றுகின்ற சாத்தியமான இழப்பாகும். ஒப்பந்தக் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு, போதிய திரவத் தன்மை மட்டங்களைக் கூட்டுத்தாபனம் பேணுகின்றது என்பதற்கு நடைமுறைகள் செயற்பாட்டில் உள்ளன. கூட்டுத்தாபனத்தில் திரவத் தன்மை முகாமைத்துவ வரைச்சட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு,

- கூட்டுத்தாபனத்தின் திரவத் தன்மை நிலை தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்பட்டு எதிர்கால திரவத்தன்மை தேவைப்பாடுகள் உறுதிப்படுத்தப்படுகின்றன.
- வங்கிகளுடனும், பொதுத் திறை சேரியுடனும் ஐக்கியமான உறவுகளைப் பேணுவதன் ஊடாக கூட்டுத்தாபனம் பன்முகப்படுத்தப்பட்ட நிதியளித்தல் மூலோபாயங்களை ஒழுங்குபடுத்தியுள்ளது.
  கூட்டுத்தாபனத்தின் இலாபத் தன்மை மற்றும் திரவத் தன்மை என்பவற்றைச் சமநிலைப்படுத்துவதன் ஊடாக விஞ்சிய காசு பொருத்தமான வகையில் முதலிடப்படுகின்றன.

### வட்டி விகித இடர்

வட்டி விகித மாற்றங்களுக்கமைவாக அவற்றின் பெறுமதி, தளம்புகின்ற சொத்துகளுக்கும், பொறுப்புகளுக்கும் கூட்டுத்தாபனம் ஆட்படுகின்றதிலிருந்து தோன்றுகின்ற சாத்தியமான நட்டங்களை வட்டியிடலாகும். இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது பிரதானமாக, அதன் கடன்படுதலின் ஊடாக அதன் வட்டி விகித இடருக்கு ஆட்படுவதுடன் வட்டிச் செலவுகள் மற்றும் ஏனைய நிதிக் கட்டணங்களிலிருந்து கூட்டுத்தாபனத்தின் இலாபத் தன்மை பாரியளவில் தாக்கத்திற்கு உள்ளாகின்றது. பல கலந்துரையாடல்களை மேற்கொண்டதன் பின்னர், இவ்வாண்டின் போது ஐ.அ.டொ நியதிகளில் அதன் வெளிநாட்டு நாணயக் கடன்களின் வட்டியினை 5.5% இலிருந்து 5% ஆகக் குறைக்கக் கூடியதாக இருந்தது. தாமதமின்றி மானியக் கூறுகளை அரசாங்கம் தீர்ப்பனவு செய்யுமென இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எதிர்பார்ப்பதுடன் கிடைக்க வேண்டிய மானியக் கூறுகள் வாயிலாக வங்கிக் கடன்படுதல்களில், குறித்த தொகையினை அரசாங்கம் பொறுப்பேற்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம் வட்டி வீத இடருக்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆட்படுவது குறைக்கப்படக் கூடியதாக இருக்கும்.

### தொழிற்பாட்டு இடர்

தொழிற்பாட்டு இடரென்பது போதாத அல்லது தவறான உள்ளகச் செயன்முறைகள் ஆட்கள், மற்றும் முறைமைகள் என்பவற்றிலிருந்து அல்லது வெளிவாரி நிகழ்வுகளிலிருந்து தோன்றுகின்ற நட்ட இடராக வரையறை செய்யப்படுகின்றது. தொழிற்பாட்டு இடரானது, மிக முக்கியச் செயற்பாடுகள் அல்லது நிகழ்வுகள் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் நடைமுறைகளை போதாத அல்லது செயல்திறன் அற்ற கட்டுப்பாடுகளிலிருந்து தோன்றுகின்றது. பெற்றோலிய உற்பத்திகள் சமூகத்திற்கான அத்தியாவசியப் பொருளாகாத் தற்போது தோற்றம் பெற்றுள்ளதுடன் சிறிய தவறொன்று ஆபத்தை விளைவிப்பதற்கு இட்டுச் செல்லலாம். இவ் உண்மையினை அறிந்து இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கட்டமைப்பு வாய்ந்த விதமொன்றில் இவ்விடரை முகாமை செய்வதற்கு அதிகூடிய கவனம் செலுத்துகின்றது. தொழிற்பாட்டு இடர்கள் பின்வருமாறு முகாமை செய்யப்படுகின்றது.

- தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவக் கொள்கை உள்ளடங்கலாக தெளிவாக வரையறை செய்யப்பட்ட கொள்கைகளும், நடைமுறைகளும் செயற்பாட்டில் உள்ளன.
- உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளில் காணப்படும் தவறுகளை இனங்காண்பதற்கு முன்னெடுக்கப்படும் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- கூட்டுத்தாபனம் இணையப் பெற்ற தொழிற்பாட்டு இடர்களைத் தணிப்பதற்கு பெறுகைக் குழு மற்றும் கேள்வி மதிப்பீட்டுக் குழு போன்ற பல்வேறு குழுக்கள் தொழிற்படுகின்றன.

### வழங்குனர் இடர்

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பெற்றோலிய பொருட்கள் சர்வதேச சந்தையிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதுடன், வழங்குனர் தடங்கல்கள், உற்பத்திக் குறைப்பாடுகள் மற்றும் வேண்டப்படும் உற்பத்தித் தரங்கள் அற்ற உற்பத்திகள் கூட்டுத்தாபனத்திற்கு வழங்குனர் இடரை தோற்றுவிக்கின்றனர். பெற்றோலிய உற்பத்திகள் உள்ளடங்கலாக பொருட்களினதும், சேவைகளினதும் தரமானதும், சீரானதுமான வழங்கலை உறுதி செய்வதற்கு கையிருப்பு மீளாய்வுக் குழு, பெறுகைக் குழு, கேள்வி மதிப்பீட்டுக் குழு போன்ற உப குழுக்களைக் கூட்டுத்தாபனம் தாபித்துள்ளது.

### கடன் இடர்

கடன் இடர் என்பது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கான தமது ஒப்பந்தக் கட்டுப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அதன் வாடிக்கையாளர்கள் எவரேனும் தவறுகின்ற நிதி நட்டங்களில் இருந்து தோன்றுகின்றது. கடன் இடரானது பாரிய அளவில் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படக் கூடியன. அவை, தவணை தவறுதல் இடல், திரட்சி இடர் என்பனவாகும்.

தவணைத் தவறுதல் இடரென்பது வாடிக்கையாளர் ஒருவர் தவணைத் தவறுவதிலிருந்து தோன்றுகின்ற சாத்தியமான நட்டங்களாகும். இவ்வாண்டின்போது, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதன் வர்த்தக ரீதியாகக் கிடைக்கத் தக்கவை 41.21% இனால், குறைக்கக் கூடியதாகவிருந்தது.

செறிவு இடர்என்பது குறித்த வாடிக்கையாளர் ஒருவருக்கு, துறைக்கு அல்லது உற்பத்திக்கு அதிகளவு கடன் வழங்கும் வெளிப்பாடுகளிலிருந்து தோன்றுகின்ற இடராகும். வேறுபட்ட துறைகளுக்கு வழங்கப்படும் பல்வேறு வகையான உற்பத்திகளுடன் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்கத் தக்கவை பன்முகப்படுத்தப்பட்டுள்ளன. எனினும் 2015 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு வர்த்தக ரீதியாக கிடைக்கத் தக்கவையின், 50% இற்கு மேலானவை அரசிற்குரித்தான தாபனங்களிலிருந்து காணப்படுவதுடன், மீள அறவிடுதலின் மீது பின்தொடர் அழுத்தத்தை நிறுத்துகின்றது.




## தொழிலாளர் இடர்

ஊழியர் பிரச்சினைகள் பெற்றோலிய உற்பத்திகளின் தரத்தினையும், கூட்டுத்தாபனத்தின் நல்லெண்ணத்தினையும் பாதிக்கக் கூடியன. ஊழியர்கள் தொடர்புடைய வழக்குகள் நிகழக் கூடிய தன்மை மற்றும் தகுதியான வேலைப் படையொன்றினை உருவாக்குவதற்கு ஆட்சேரப்புகளுக்காகவும், பயிற்சிகளுக்கா கவும் நேரத்தினையும், மூல வளங்களையும் முதலீடு செய்தல் என்பன ஏனைய விடயங்களுக்கு மத்தியில் காணப்படுபவையாகும். அதன் பணியாளர்களை பிரதிநிதித்துவம் செய்கின்ற தொழிற் சங்கங்களுடனான கூட்டு உடன்படிக்கையின் ஊடாகக் கூட்டுத்தாபனம் அனைத்து வேலைகளிலும், ஊக்கமளிக்கப்பட்ட வேலைப் படையொன்றினை உறுதி செய்தற்கு சகல முயற்சிகளையும் மேற்கொள்கின்றது. இவ்வுடன்படிக்கைகள் தொழில் தருநரின் நலன்களுக்கும், ஊழியர்களின் நலன்களுக்கும் இடையிலான சம நிலையினை நிலைபெறச் செய்கின்றன. எமது ஊழியர்களுக்கு வழங்கப்படும் பதவியினர் நலனோம்புகை மற்றும் ஏனைய நலத்திட்டங்கள் ஆர்வமும் உற்சாகமும் மிக்க வேலைப்படையொன்றினைப் பேணுவதற்கு முக்கியமானதாகும். அதற்கமைய செயலாற்றுகையினை அடிப்படையாகக் கொண்ட விருது முறைமையும், பதவியுயர்வுத் திட்டமும் மிக ஆர்வமிக்க வேலைப்படையொன்றினை உருவாக்கும்.

# நிறுவன ஆளுகை

வலுவான நிறுவன ஆளுகை நடைமுறைகள் பங்குதாரர் பெறுமதி உருவாக்கத்துடன் ஒன்று சேர்த்து நீண்டகால நிலைத்திருக்கத்தக்க அபிவிருத்தியினை உறுதி செய்கின்ற கூட்டுத்தாபனத்தின் இதயமாக விளங்குகின்றன. மேலும், தேசிய பொருளாதாரத்தில் இது இன்றியமையாத பங்கொன்றினை வகிப்பதனால், மொத்தத்தில் சமூகத்திற்கும் மிக முக்கியமானகதாக விளங்குகின்றது. கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாட்டு செயற்பாடுகளைக் கொண்டு நடாத்துதல் ஒழுக்கம் மிக்கதாக இருந்து வருகின்ற அதேவேளை நேர்மை, பொருண்மை, ஒருமைப்பாடு மற்றும் வெளிப்படைத் தன்மை என்பன ஊடாக நிறுவன ஆளுகையில் உயர்வான தரங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அர்ப்பணித்துள்ளது.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிறுவன ஆளுகையானது, இலங்கை சிறந்த ஆளுகைக்காக இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட நிறுவன ஆளுகை மற்றும் 2003 இன் நிதி அமைச்சு மற்றும் பொதுத் தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சிறந்த ஆளுகைக்கான பொதுத் தொழில் முயற்சி ஆளுகைக்கான தொழில் முயற்சி வழிகாட்டல்கள் என்பன மீதான சிறந்த நடத்தைக் கோவையின் தேவைப்படுத்தல்களினால் ஆதரவளிக்கப் படுகின்றது. அத்தேவைப்படுத்தல்களைக் கடைப்பிடிப்பதற்கான பொறுப்பும் உறுதியும் பணிப்பாளர் சபையைச் சார்ந்ததாகும். இதன் ஊடாக பின்வரும் வலுவான நிறுவன ஆளுகை நடைமுறைகள், பொறுப்புக் கூறல்கள் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுமைப்பாடு என்பனவற்றை எய்துவதற்காகும்.

### பணிப்பாளர்கள் சபை

முக்கிய கருமங்கள் விசேட மூலோபாயம் நிதியியல் மற்றும் நற்பெயர் சார் விடயங்கள் போன்றவற்றுக்கு கூட்டுத்தாபனத்தின் முக்கிய தீர்மானமெடுப்பவராக பணிப்பாளர் சபை காணப்படுகின்றது. இவ்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 1961 இன் 28 ஆம் இலக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டம் மற்றும் அதனைத் தொடர்ந்த திருத்தங்களுக்கு அமைவாக பெற்றோலிய வளங்கள் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள்/முகாமைத்துவப் பணிப்பாளர்கள் உள்ளடங்கலாக 7 பணிப்பாளர்களை பணிப்பாளர் சபை உள்ளடக்கப்படுகின்றது. அத்தகைய பணிப்பாளர்களில் ஒருவர் நிதித் திட்டமிடல் அமைச்சரின் ஆலோசனைகளில் நியமிக்கப்பட்ட பொதுத் திறைசேரியின் பிரதிநிதியொருவராவார்.

மீள் நியமனத்திற்குட்பட்டு பணிப்பாளர்கள் ஆரம்பத்தில் சபைக்கு மூன்று வருட காலத்தை விஞ்சாத பதவியினை வகிப்பர். தீர்மானம் எடுத்தலின்போது நிறுவன முகாமைத்துவத்திடமிருந்து சபை உரிய தகவல்களைப் பெற்றுக் கொள்வதுடன், புற தொழில் நிபுணர்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்கின்றது. சபை தனது கடமைகளை வினைத்திறன் மிக்கதாக மேற்கொள்வதனை இயலச் செய்கின்ற பொருத்தமான தகவல்களை உரிய காலத்தில், சபைக்கு வழங்குவது நிறுவன முகாமைத்துவத்தின் பொறுப்புடைமையாகும்.

### பணிப்பாளர்களின் பொறுப்புகள்

சபையின் பிரதான பொறுப்புடைமையானது நியதிச் சட்டத் தேவைப்பாடுகளைக் கடைப்பிடிக்கும் அதேவேளை பங்குதாரர் நம்பிக்கை, வர்த்தக ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பேணுகின்ற வலுவான நிறுவன ஆளுகைக் கட்டமைப்பொன்றினுள் நிலைத்திருக்கத்தக்க பங்குதாரர் பெறுமதியினை உருவாக்குவதும் வழங்குவதுமாகும். கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் அமுல்படுத்தல் மூலம் நிறுவனத்தின் மீது செயல்திறன் மிக்க கட்டுப்பாடுகளைப் பிரயோகிப்பதற்கு சபை முயற்சிப்பதுடன் அவற்றில் செயல்திறன் மிக்க அமுலாக்கத்தினை உறுதி செய்கின்றது. சபைக் கூட்டங்களில் கலந்து கொள்வதன் மூலம் கூட்டுத்தாபன விவகாரங்களில் பணிப்பாளர்கள் தம்மை அர்ப்பணிக்கின்றனர். சிறந்த ஆளுகையில் உரியவாறான இணங்குதலினை உறுதி செய்வதற்கு சபை சகல முயற்சிகளையும் எடுப்பதுடன் கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகை மற்றும் வாய்ப்புகளின் பொருண்மையான மதிப்பீட்டினையும் ஆக்குகின்றது.

மேற்குறித்ததற்கு மேலதிகமாக, வருடாந்த நிதியியல் கூற்றுகள், வருடாந்த வரவு செலவுத் திட்டங்கள், நிறுவனத் திட்டம், செயல்திட்டம் போன்றவற்றுக்கு அனுமதி வழங்குதல் மற்றும் கிரமமான அடிப்படையில் நிதிச் செயலாற்றுகையினை மீளாய்வு செய்தல் ஆகிய பொறுப்புகளையும் சபை கொண்டுள்ளது. முக்கிய நியமனங்கள், ஊழியர் பதவி உயர்வுகள், பிரதான மூலதன செலவின முதலீடுகள் மற்றும் நிறுவன வாடிக்கையாளர்களுக்கு கடன் வசதி வழங்குதல் தொடர்பிலான அனுமதி வழங்குவதனையும் சபை மேற்பார்வை செய்கின்றது.

**சபைக் கூட்டங்கள்**

சபைக் கூட்டங்கள் கிரமமாக மாதாந்தம் நடாத்தப்படுவதுடன் விசேட சபைக் கூட்டங்கள் தேவைப்படும் வேளையில் கூட்டப்படுகின்றன. அழைப்பின் பேரில் சிரேஷ்ட முகாமையாளர்களும் கூட்டங்களுக்கு வருகை தருகின்றனர். முறையான நிகழ்ச்சி நிரல் ஒன்றின் அடிப்படையில் சபைக் கூட்டங்கள் நடாத்தப்படுவதுடன் கூட்டங்களுக்கு முன்னர் பணிப்பாளர்களுக்கு நிறுவன முகாமைத்துவத்தினால் தொடர்புடைய விரிவான பின்னணித் தகவல்கள் வழங்கப்படுகின்றன. மீளாய்விற்குட்பட்ட ஆண்டின் போது 25 சபைக் கூட்டங்கள் இடம் பெற்றன.

சபை அதன் கடமைகளை நிறைவேற்றுவதற்கு கணக்காய்வுக் குழு உதவியளிக்கின்றது. கணக்காய்வுக் குழுவானது உள்ளக விடயங்களுக்கான பொறுப்புடமையினை கொண்டுள்ள அதேவேளை பல நிறைவேற்று மட்ட உப குழுக்கள் செயற்படுகின்றன.

**கணக்காய்வுக் குழு**

பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படும் கணக்காய்வுக் குழு பணிப்பாளர் சபைக்கு பொறுப்புடையதாகும். கணக்காய்வுப் பட்டயமானது, அரசாங்க வர்த்தக தொழில் முயற்சிகளில் கணக்காய்வுக் குழுக்களை நடாத்துவது தொடர்பில் வெளியிடப்பட்ட திறைசேரி சுற்றறிக்கையில் விதந்துரைக்கப்பட்ட பொறுப்புகள், அதிகாரங்கள் மற்றும் குறித்த கடமைகள் ஆகியவற்றின் நோக்கெல்லையினை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டின்போது, கணக்காய்வுக் குழுவின் பொறுப்புகள், உள்ளடக்கம், நடைபெற்ற கூட்டங்கள் மற்றும் கொண்டு நடாத்தப்பட்ட செயற்பாடுகள் பற்றி விவரிக்கின்ற அறிக்கை இவ்வாண்டறிக்கையின் 63 மற்றும் 64 ஆம் பக்கங்களில் எடுத்துரைக்கப்படுகின்றது.

**உள்ளகக் கட்டுப்பாடுகள்**

செயல்திறன் மிக்க உள்ளகக் கட்டுப்பாடுகள் முறைமை ஒன்றினைப் பேணுவது கூட்டுத்தாபனத்தின் பொறுப்பாகும். இம் முறைமையானது கூட்டுத்தாபனத்தின் சொத்துகளைப் பாதுகாப்பதற்கும் முறையான பதிவேடுகள் பேணப்படுகின்றன, நம்பத் தகுந்த தகவல்கள் உருவாக்கப்படுகின்றன என்பதனை உறுதி செய்வதற்கும் எண்ணப்படுகின்றது. இப்பொறுப்புடைமை யானது, நிதியியல், தொழிற்பாட்டு மற்றும் ஒத்திசைவு மற்றும் இடர் முகாமைத்துவம் என்பன உள்ளடங்கலாக அனைத்து வகையான கட்டுப்பாடுகளையும் உள்ளடக்குகின்றன. எனினும், கொள்கைகளையும் வியாபார குறிக்கோள்களையும் அடைவதற்கு தவறுகின்ற இடரினை இல்லாதொழிப்பதனை விடவும் ஏற்றுக் கொள்ளத்தக்க முகப்பொன்றினுள் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முக்கிய இடர் பகுதிகளை முகாமை செய்வதற்கு அத்தகைய முறைமையொன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, உள்ளகக் கட்டுப்பாடுகள் முறைமையானது முக்கிய முகாமைத்துவ மற்றும் நிதி தகவல்களின் தவறான கூற்றுகள் மற்றும் பதிவேடுகள் என்பவற்றுக்கு எதிராக அல்லது, நிதியியல் நட்டங்கள் அல்லது மோசடி என்பவற்றுக்கெதிராக நியாயமான ஆனால் முழுமையற்ற உத்தரவாதம் ஒன்றினை மாத்திரம் வழங்கக் கூடியது.

கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு அனைத்து உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு அனைத்து உள்ளகக் கணக்காய்வு நடைமுறைகளையும், அவற்றின் போதுமை மற்றும் செயற்றிறன் என்பவற்றை மீளாய்ந்து உள்ளகக் கட்டுப்பாடுகளை மேம்படுத்தலிற்கான பரிந்துரைகளை ஆக்குவதற்கும் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

**உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு தொழில் ரீதியாகத் தகைமை பெற்ற பட்டயக் கணக்காளர் ஒருவரினால் தலைமை வகிக்கப்படுகின்றது. கணக்காய்வுக் குழுவினால் அனுமதிக்கப்பட்ட கணக்காய்வுத் திட்டங்கள், உள்ளக கட்டுப்பாடுகளை மதிப்பிடுவதற்கும் இடர்ப் பிரதேசங்களை அடையாளம் காண்பதற்கும் கொடுக்கல், வாங்கல்களின் பூரணத் தன்மையினை சரி

பார்ப்பதற்கும் கணக்காய்வுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வுத் திட்டங்கள் செயலில் இருந்தன. இதற்கு மேலதிகமாக, முகாமைத்துவத்திற்கு அவதானத்தினையும், பரிந்துரைகளையும் வழங்கும் நோக்குடன் விசேட புலனாய்வுகளை மேற்கொள்வதற்கு அவர்கள் குறித்தொதுக்கப்பட்டுள்ளனர். உற்பத்தி இழப்புகள் மற்றும் வருமான இழப்புகள் போன்றவற்றுடன் தொடர்புடைய இடர்களை இனங்காணுதல், கணக்காய்வு வினவல்களுக்கான பதில்களுடன், கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை பற்றிய கலந்துரையாடல் மற்றும் உண்மையாகக் கொண்டு நடாத்தப்பட்ட பணிகளுடன் கணக்காய்வுத் திட்டங்களின் கால முறையான மீளாய்வு என்பன உள்ளகக் கணக்காய்வினால் செயலாற்றப்படுகின்ற ஏனைய தொழிற்பாடுகளாகும்.

**முகாமைத்துவக் குழு**

முகாமைத்துவக் குழுவானது இரண்டு நிறைவேற்றுத் தரமற்ற பணிப்பாளர்களைக் கொண்டுள்ளதுடன், அவர்களில் ஒருவர் முகாமைத்துவக் குழுவின் தலைவராவார். பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடப்படும் சகல கருமங்களையும் கலந்துரையாடுவதற்கு மாதாந்த சபைக் கூட்டத்திற்கு முன்னர், மாதத்திற்கு ஒரு தடவை முகாமைத்துவக் குழு கூடுகின்றது. இக்குழு தனது அறிக்கையினை இறுதி அனுமதிக்காக சபைக்கு சமர்ப்பிக்கின்றது. முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் அனைத்து சிரேஷ்ட முகாமையாளர்கள் மற்றும் பிரிவுகளில் பிரதானிகள் பங்கேற்கின்றன.

**நிறுவன முகாமைத்துவம்**

மூலோபாய பணிப்புரைகள், உருவாக்கப்பட்ட கொள்கைகள் காலத்திற்குக் காலம் பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்படும் நடைமுறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் கூட்டுத்தாபனத்தின் நாளாந்த விவகாரங்களை தலைவர்/முகாமைத்துவப் பணிப்பாளர் முகாமை செய்கின்றார். இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன தொழிற்பாடுகளையும், பிரதான நிர்வாகத்தினையும் இரண்டு பரந்த வகுதிகளாகப் பிரிக்கலாம். அவை, சுத்திகரிப்புச்சாலை தொழிற்பாடுகள் மற்றும் பிராந்திய அலுவலகங்கள் உள்ளடங்கலாக தலைமை அலுவலகத் தொழிற்பாடுகள்.

சுத்திகரிப்புச்சாலை தொழிற்பாடுகள் மின்சாரம் மற்றும் சாதனங்கள், தயாரிப்பும் தொழிற்படுத்தலும், பராமரித்தலும் கருத்திட்டங்களும் மற்றும் தொழிநுட்ப சேவைகள் போன்ற வேறுபட்ட மைய தொழிநுட்ப விடயங்களுக்குப் பொறுப்பான பிரதி சுத்திகரிப்புச்சாலை முகாமையாளர்களின் உதவியுடன், சுத்திகரிப்புச்சாலை முகாமையாளரினால் தலைமை வகிக்கப்படுகின்றது.

சிறந்த முகாமைத்துவத்திற்காக, தலைமை அலுவலகம் பல்வேறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவும் கூட்டுத்தாபனத்தின் நாளாந்தப் பணிகளில் தலைவர்/ முகாமைத்துவப் பணிப்பாளருக்கு உதவியளிக்கின்ற பிரதிப் பொது முகாமையாளரினால் அல்லது முகாமையாளரினால் ஒவ்வொரு பிரிவும் தலைமை வகிக்கப்படுகின்றது. நிறுவன முகாமையாளர்கள் தமக்குப் பொறுப்பான துறைகளில் திறன்கள், அனுபவம் மற்றும் கல்விசார் பட்டங்கள் அத்துடன் தொடர்புடைய தொழில்சார் தகைமைகளுடன் சிறந்த தகைமை பெற்றவர்களாகும்.

**கையிருப்பு மீளாய்வுக் குழு**

கையிருப்பு மீளாய்வுக் குழுவானது, சி.பெ.ஸ்.ரே.லி. ஊழியர்கள் மற்றும் இ.மி.ச அத்துடன் இந்தியன் ஒயில் கம்பனி பிரதிநிதிகளின் பங்கேற்புடன் வாராந்தம் கூடுகின்றது. கையிருப்பு நிலை மீளாயப்பட்டு இக்குழுவூடாக அடுத்து வரும் மூன்று மாதங்களுக்கான தேவைகள் மதிப்பிடப்படுகின்றன. இறக்குமதி செய்வதற்கான அளவுகளும் கப்பற் சரக்குகளும் நாட்டின் எதிர்வு கூறப்பட்ட கேள்வி, சுத்திகரிப்புச்சாலை உற்பத்திக் கொள்ளளவுகள் மற்றும் தாங்கி கையிருப்புக் கருத்திற் கொண்ட பின்னர் திட்டமிடப்படுகின்றது. இக்கிரமமான உன்னிப்பான கண்காணிப்பு செயன்முறையானது நாட்டில் தடங்கலற்ற எரிபொருள் வழங்கலுடன் கூடிய சீரான தொழிற்பாட்டிற்கும் அதேவேளை இறக்குமதி, உற்பத்தி கையிருப்பில் வைத்திருத்தல் செலவுகளைக் குறைப்பதற்கும் கூட்டுத்தாபனத்தை இயலச் செய்கின்றது.

**பெறுகைக் குழுவும் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவும்**

உற்பத்திகள், பொருட்கள், சேவைகள் மற்றும் பணிகள் ஆகியவற்றைக் கொள்வனவு செய்வதற்கு தேசிய பெறுகை முகவர் நிலையம் வழிகாட்டல் தொகுதியொன்றினை வெளியிட்டுள்ளது. வெளிப்படைத் தன்மையினை உறுதி செய்வதற்கும், தாமதங்களைக் குறைப்பதற்கும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு மிகவும் அனுகூலமான மற்றும் தரமான சிறந்த சேவைகள் மற்றும் வழங்குனர்களை நிதியியல் ரீதியாக நன்மை பயக்கக் கூடிய விதத்தில் பெற்றுக் கொள்வதற்கு தேசிய பெறுகை முகவர் நிலைத்தினால் வழிகாட்டப்பட்ட வழிகாட்டல்களின் கீழ் பெறுகைக் குழுவும், தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவும் இயங்குகின்றன.

**பொதுத் திறைசேரி மற்றும் இலங்கை மத்திய வங்கியுடனான உறவு**

கூட்டுத்தாபனம் இலங்கை மத்திய வங்கியுடனும், பொதுத் திறைசேரியுடனும் நெருங்கி கூட்டுத்தாபனத்தின் திறைசேரி தொழிற்பாடுகளை முகாமை செய்வதற்கு அவர்களது சேவைகளைப் பெறுகின்றது.

**இணங்குவித்தலும் வெளிப்படைத் தன்மையும்**

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதன் அனைத்து செயற்பாடுகளிலும், வெளிப்படைத் தன்மையினைப் பேணுவதற்கு அர்ப்பணித்துள்ளது. கூட்டுத்தாபனம், பொறுப்புடைமையினை உறுதி செய்வதற்கு இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனும் தொடர்புடைய ஒழுங்கு விதிகளுடனும் இணங்கி ஒழுகுகின்றது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்திற்கமைவாக கூட்டுத்தாபனத்தின் நாளாந்த தொழிற்பாடுகளில், உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. நிதிக் கூற்றுகள் வருடாந்தம் வெளியிடப்பட்டு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது. நிதிச் சட்டத்திற்கு இசைவாக, கணக்காய்வாளர் தலைமை அதிபதி கூட்டுத்தாபனத்தின் புறக்கணக்காய்வினைக் கொண்டு நடாத்துகின்றார்.

**2015 நிதியாண்டின்போது நடைபெற்ற சபை மற்றும் உபகுழுக்கான வருகை**

| பணிப்பாளரின் பெயர் | பணிப்பாளர் அந்தஸ்து | சபை | கணக்காய்வுக் குழு | குறிப்புகள் |
|---|---|---|---|---|
| | | இடம்பெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை | | |
| | | 25 | 4 | |
| ஜே.ஆர். விக்ரமசிங்க (முன்னாள் தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர்) | நிறைவேற்றுத்தர பணிப்பாளர் | 19 | - | 12.10.2015 ஆம் திகதியிலிருந்து பதவி விலகினார். |
| டப்.எஸ்.எம்.சீ. சிறிமெவன் | நிறைவேற்றுத் தரமற்ற பணிப்பாளர் | 18 | 2 | 12.10.2015 ஆம் திகதியிலிருந்து பதவி விலகினார். |
| பீ.ஆர். குணவர்தன | நிறைவேற்றுத் தரமற்ற பணிப்பாளர் | 19 | - | 12.10.2015 ஆம் திகதியிலிருந்து பதவி விலகினார். |
| ஏ.கே. செனெவிரத்ன | நிறைவேற்றுத் தரமற்ற பணிப்பாளர் | 20 | 3 | 14.10.2015 ஆம் திகதியிலிருந்து பதவி விலகினார். |
| டீ.டீ.எஸ். விக்ரமரத்ன | நிறைவேற்றுத் தரமற்ற பணிப்பாளர் | 16 | - | 12.10.2015 ஆம் திகதியிலிருந்து பதவி விலகினார். |
| எம்.கே. சமரசிங்க | நிறைவேற்றுத் தரமற்ற பணிப்பாளர் | 15 | - | 12.10.2015 ஆம் திகதியிலிருந்து பதவி விலகினார். |
| ஏ.எச்.எஸ். விஜேசிங்க | நிறைவேற்றுத் தரமற்ற பணிப்பாளர் | 21 | 3 | 01.12.2015 ஆம் திகதியிலிருந்து பதவி விலகினார். |
| ரி.ஜீ.ஜயசிங்க (தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர்) | நிறைவேற்றுத்தர பணிப்பாளர் | 6 | - | 12.10.2015 ஆம் திகதியிலிருந்து பதவி நியமிக்கப்பட்டார் |
| டீ.சீ.எஸ். செனெவிரத்ன | நிறைவேற்றுத் தரமற்ற பணிப்பாளர் | 6 | - | 12.10.2015 ஆம் திகதியிலிருந்து பதவி நியமிக்கப்பட்டார் |
| எம்.ஜி. ஜயசேன | நிறைவேற்றுத் தரமற்ற பணிப்பாளர் | 6 | - | 12.10.2015 ஆம் திகதியிலிருந்து பதவி நியமிக்கப்பட்டார் |
| பி.க. ல்ஹேன | நிறைவேற்றுத் தரமற்ற பணிப்பாளர் | 5 | 2 | 12.10.2015 ஆம் திகதியிலிருந்து பதவி நியமிக்கப்பட்டார் |
| ஆர். ஹரிஸ்சந்திர | நிறைவேற்றுத் தரமற்ற பணிப்பாளர் | 6 | 1 | 12.10.2015 ஆம் திகதியிலிருந்து பதவி நியமிக்கப்பட்டார் |
| கே.ஏ. விமலேந்திரராஜா | நிறைவேற்றுத் தரமற்ற பணிப்பாளர் | 4 | 1 | 11.11.2015 ஆம் திகதியிலிருந்து பதவி நியமிக்கப்பட்டார். |

## பணிப்பாளர்களின் அறிக்கை

1961 ஆண்டின் 28 ஆம் இலக்கத்தின் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 32 (3) பிரிவுக்கு அமைவாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 2015.12.31 முடிவுற்ற ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களுடன் சேர்த்து ஆண்டறிக்கையினை முன் வைப்பதில் பணிப்பாளர் சபை மகிழ்ச்சியடைகின்றது.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 1961 28ஆம் இலக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அரசங்கத்துக்கு உரித்தான தொழில் முயற்சி ஒன்றாகும்.

இவ் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட நிதியில் கூற்றுக்கள், இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாகவும் 1971 இன் 31 ஆம் இலக்க நிதிசட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அத்துடன் அதற்கான அதற்கு பிந்திய திருத்தங்களுக்கு இணங்கவும் தொடர்புடைய வெளிப்படுத்தலுடன் தயாரிக்கப்பட்டு எடுத்துரைக்கப்பட்டன.

கூட்டுத்தாபனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் கொழும்பு - 09 காலநிதி டானிஸ்டர் த சில்வா மாவத்தை கொழும்பு-09 என்ற விலாசத்தில் அமைந்துள்ளது.

### நோக்கு, பணி மற்றும் நிறுவன இலக்குகள்

கூட்டுத்தாபனத்தின் நோக்கு பணி மற்றும் நிறுவன இலக்குகள் என்பன இவ் ஆண்டறிக்கையில் 2 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளன. அதன் நோக்கினையும் பணியினையும் அடைவதில் அனைத்து ஊழியரும் ஒருமைப்பாட்டின் அதி உயர் மட்டத்தில் தமது செயற்பாட்டினை கொண்டு நடாத்துகின்றனர்.

### பிரதான செயற்பாடுகள்

கூட்டுத்தாபனத்தின் பிரதான செயற்பாடுகள், இலங்கையில் பெற்றோலிய உற்பத்திகளை இறக்குமதி செய்தல், சுத்திகரித்தல், விற்பனை செய்தல் மற்றும் விநியோகம் செய்தல் என்பனவாகும். பெற்றோலிய உற்பத்திகளை கூட்டுத்தாபனம் ஏற்றுமதியும் செய்கின்றது.

### துணைக் கம்பனி

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது 2/3 பங்கு உரிமையுடன் ஒரேயொரு துணைக் கம்பனியாக சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல் லிமிடட் (CPSTL) காணப்படுகின்றது. துணைக் கம்பனியின் செயற்பாடுகள், எரிபொருள் சேமிப்பு கொள்கலன் வசதி வழங்குதல், விநியோக வசதிகள் மற்றும் தகவல் தொழிநுட்ப சேவை என்பனவாகும்.

### ஆண்டின் செயலாற்றுகை பற்றிய மீளாய்வு

2015 நிதி ஆண்டிற்கான கூட்டுத்தாபனச் செயலாற்றுகையும் அத்தொழிற்பாடுகளின் பெறுபேறுகளும் பக்கம் 13 தொடக்கம் 15 வரை காணப்படும் தவிசாளரின் மீளாய்விலும் 21 தொடக்கம் 46 வரை கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகையிலும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவ் அறிக்கைகள், ஆண்டறிக்கையின் முழுமையாக்கும் பாகமொன்றினை தோற்றுவிக்கின்றன.

### கூட்டுத்தாபனத்தினதும் குழுவினதும் நிதிக் கூற்றுகள்

2015 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினதும் அதன் குழுவினதும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுகள் பதில் பிரதி முகாமையாளர் (நிதி) நிதி முகாமையாளர் ஆகியோரினால் கைச்சாத்திடப்பட்டு, பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்பட்டு 65 தொடக்கம் 97 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளதுடன், ஆண்டறிக்கையினை முழுமையாக்கும் பாகமொன்றினைத் தோற்றுவிக்கின்றது.

### நிதி அறிக்கையிடுதலுக்கான பணிப்பாளர்களது பொறுப்புடைமை

கூட்டுத்தாபனத்தினதும், குழுவினதும் விவகாரங்களின் நிலை பற்றி உண்மையானதும் நியாயமானதுமான நோக்கொன்றினைப் பிரதிபலிக்கின்ற குழுவினதும் கூட்டுத்தாபனத்தினதும் நிதிக் கூற்றுகளைத் தயாரிப்பதற்கான பொறுப்புடைமை பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். விரிவான வருமான கூற்று, நிதிநிலைக் கூற்று, பங்கு மூலதன மாற்றக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் 65தொடக்கம் 97 ஆம் பக்கங்களில் தோன்றுகின்ற முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் அத்துடன், அவற்றுக்கான குறிப்புகள் என்பன 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீடு மற்றும் கணக்காய்வு

நியமங்களினாலும், 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தினாலும் பணிக்கப்பட்டவாறு இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் தேவைப்பாடுகளுடன், ஒத்திசைந்து காணப்படுகின்றன.

**கணக்காய்வாளரின் அறிக்கை**

கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வாளரான, கணக்காய்வாளர் தலைமை அதிபதி 2015 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவுற்ற ஆண்டுக்கான கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுகளையும் அதே போன்று திரட்டிய நிதிக் கூற்றுகளையும் கணக்காய்வு செய்து வழங்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 1961 இன் 28 ஆம் இலக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன சட்டத்தின் 31 ஆம் பிரிவினால், தேவைப்படுத்தப்பட்டவாறு 98 தொடக்கம் 149 ஆம் பக்கம் வரை தரப்பட்டுள்ளது.

**இவ்வாண்டின்போது முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளும் மாற்றங்களும்**

மீளாய்வுக்குட்படும் ஆண்டின்போது, ''நிதிக் கூற்றுகளை எடுத்துரைத்தல்'' மீதான 1ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு நியமத்தினால் வேண்டப்பபட்டவாறு முன்னைய நிதியாண்டில் பின்பற்றப்பட்டவற்றுடன் இசைந்திருந்த பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளில் மாற்றங்கள் எதுவும் காணப்பட்டிருக்கவில்லை. குழுவினதும், கூட்டுத்தாபனத்தினதும் நிதிக் கூற்றுகளைத் தயாரிக்கையில் பின்பற்றப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் குறிப்புகளுடன் சேர்த்து 71 தொடக்கம் 99 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

**நிதிப் பெறுபேறுகள்**

**வருவாயும் இலாபமும்**

2015 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான கூட்டுத்தாபனத்தின் நிதிப் பெறுபேறுகளின் சாராம்சம் ஒப்பீட்டுத் தொகைகளில் கீழே தரப்பட்டுள்ளது.

| | 2015 ரூபா.பில் | 2014 ரூபா.பில் |
|---|---|---|
| வருவாய் | **414.50** | **558.32** |
| **கழிக்குக : விற்பனை வரிகள் (உற்பத்தி வரி மற்றும் தே.நி.வ)** | (37.76) | (33.14) |
| தேறிய விற்பனை வருவாய் | **376.74** | **525.18** |
| **சுங்க இறக்குமதித் தீர்வை மற்றும் து.வி.அ நீங்கலாக விற்பனைச் செலவு** | (283.48) | (472.75) |
| **கழிக்குக : இறக்குமதி வரிகள் (சுங்க இறக்குமதி தீர்வை மற்றும் து.வி.அ)** | (53.64) | (27.20) |
| மொத்த இலாபம் | **39.62** | **25.23** |
| **ஏனைய தொழிற்படு வருமானம்** | 0.37 | 0.79 |
| **மண்ணெண்ணெய் மானியம்** | 3.86 | 2.71 |
| **விற்பனை மற்றும் விநியோகச் செலவுகள்** | (13.62) | (11.53) |
| **நிர்வாகச் செலவுகள்** | (7.43) | (5.15) |
| **நிதிக் கட்டணங்கள்** | (15.05) | (13.98) |
| **நிதி வருமானம்** | 4.91 | 4.03 |
| **நாணய மாற்று வேறுபாடு** | (32.84) | (0.97) |
| வரிக்கு முந்திய இலாபம் / (நட்டம்) | **(20.18)** | **1.13** |

2015 இற்கான துறைசார் நட்டங்கள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **துறை** | **2015 ரூபா பில்** | **நட்டத்திற்கான காரணம்** |
|---|---|---|
| **போக்குவரத்து 92 ஒக்டேன் பெற்றோல்** | 26.53 | • சுங்கத் தீர்வை அதிகரிப்பு<br>• ஐ.அ.டொ. எதிராக இலங்கை ரூபா. பெறுமதி இறக்கம்<br>• மானிய சில்லறை விலை |
| 95 ஒக்டேன் பெற்றோல் | 2.79 | |
| **மின் உற்பத்தி** எரிபொருள் எண்ணெய் 1500 | 0.25 | • கேள்வியின் வீழ்ச்சி<br>• சனவரியில் மேலும் 10 ரூபாவால் மானிய விலை குறைக்கப்பட்டதுடன் அதன் பின்னர் மீளாய்வு செய்யப்படவில்லை. |
| **கைத்தொழில்** எரிபொருள் எண்ணெய் 1500 | 0.26 | |
| தார் | 0.34 | • கேள்வியில் வீழ்ச்சி<br>• அதிகளவு கையிருப்பு பேணுதல் செலவு |
| **வீட்டுத்துறை** மண்ணெண்ணெய் | 3.86 | • 2015 சனவரி மற்றும் நவம்பர் மாதங்களில் மானிய விலை மேலும் குறைக்கப்பட்டுள்ளது . |

| | | |
|---|---|---|
| **விவசாயம்**<br>விவசாய இரசாயனங்கள் | 0.08 | • 2015 நவம்பரில் கிளைபோசேட் முற்றாகத் தடை செய்யப்பட்டது.<br>• நாட்டின் விவசாயத் துறையில் உற்பத்திச் செலவைக் குறைந்த மட்டத்தில் பேணும் நோக்குடன் சில்லறை விலை நியாய விலையாகக் காணப்படுகின்றது. |
| **ஏற்றுமதி**<br>எரிபொருள் எண்ணெய் 1500<br>எரிபொருள் எண்ணெய் 800<br>படிக எண்ணெய் | 3.57<br>1.78<br>0.83 | • உள்நாட்டில் கேள்வி குறைந்தமையினால் களஞ்சிய வசதி போதாமையினால் குறைந்த விலையில் ஏற்றுமதி செய்வதற்குக் கூட்டுத்தாபனம் நிர்ப்பந்திக்கப்பட்டது. |

**வரி விதிப்பு**

2011/ 2012 வரியாண்டிலிருந்து ஆரம்பிக்கின்ற 5 வருட காலம் ஒன்றிற்கும் வர்த்தக இலாபம் மீதான வருமான வரி செலுத்துவதில் கூட்டுத்தாபனம் விலக்களிக்கப்பட்டுள்ளது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஏனைய வருமான மூலங்கள் 28% வருமான வரிக்கு பொறுப்புடையதாகும்.

2014 ஆம் ஆண்டின்போது, விசேட கட்டணம் ஒன்றாக ரூபா. 10 பில்லியனைக் கொடுப்பனவு செய்வதற்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினை திறைசேரி அறிவுறுத்தியதுடன், 2014 ஆம் ஆண்டிற்காக ரூபா. 250 மில்லியன், 2015 ஆம் ஆண்டிற்காக ரூபா. 750 மில்லியன் மற்றும் 2016 தொடக்கம் 2024 வரையான காலப் பகுதிக்கு ரூபா.1000 மில்லியன் செலவொன்றாக வருமான கூற்றுக் கட்டணமாக, அறவிடுவதற்கும் அறிவுறுத்தியது.

**ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள்**

கூட்டுத்தாபனத்தின் ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் பற்றிய விவரங்களும் அவற்றின் அசைவுகளும் 83 ஆம் பக்கத்தில் நிதிக் கூற்றுகளுக்கான குறிப்பு 12 இல் தரப்பட்டுள்ளன.

**பங்களிக்கப்பட்ட மூலதனம்**

2015 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் மொத்த பங்களிக்கப்பட்ட மூலதனம் ரூபா. 28,500 மில்லியனாக இருந்தது. இவ்வாண்டின்போது, மூலதன மேம்படுத்தலுக்காக ரூபா. 25,000 மில்லியன் தொகைக்கான திறைசேரி முறிகளை பொதுத் திறைசேரி வழங்கியது. பங்களிக்கப்பட்ட மூலதனத்தின் விபரங்கள் 88 ஆம் பக்கத்தில் நிதிக் கூற்றுகளுக்கான குறிப்பு 19 இல் தரப்பட்டுள்ளன.

**ஒதுக்குகள்**

கூட்டுத்தாபனத்தின் ஒதுக்குகள் பற்றிய சாராம்சம் கீழே தரப்பட்டுள்ளது.

| | **2015**<br>**ரூபா. மில்** | **2014**<br>**ரூபா. மில்** |
|---|---|---|
| மூலதன ஒதுக்கு | 4.99 | 4.99 |
| பிடித்து வைக்கப்பட்ட உழைப்பு | (262.65) | (240.75) |

பங்கு மூலதன அசைவுகள் 66 ஆம் பக்கத்தில் பங்கு மூலதன மாற்றக் கூற்றில் தரப்பட்டுள்ளன.

**பணிப்பாளர்கள்**

2015 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையிலிருந்த பணிப்பாளர்களின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **பணிப்பாளரின் பெயர்** | **நிறைவேற்று / நிறைவேற்று தரமற்ற அந்தஸ்து** |
|---|---|
| ரி.ஜி. ஜயசிங்க(தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர்) | நிறைவேற்றுப் பணிப்பாளர் |
| டி.சீ.எஸ். செனெவிரத்ன | நிறைவேற்று தரமற்ற பணிப்பாளர் |
| எம். ஜயசேன | நிறைவேற்று தரமற்ற பணிப்பாளர் |
| பி. கல்ஹேன | நிறைவேற்று தரமற்ற பணிப்பாளர் |
| ஆர். ஹரிஸ்சந்திர | நிறைவேற்று தரமற்ற பணிப்பாளர் |
| கே.ஏ. விமலேந்திரராஜா | நிறைவேற்று தரமற்ற பணிப்பாளர் |

**பணிப்பாளர்களது கூட்டங்கள்**

சபைக் கூட்டங்களையும், கணக்காய்வுக் கூட்டங்களையும் உள்ளடக்குகின்ற பணிப்பாளர்களின் கூட்டங்கள் பற்றிய விபரம் 52 தொடக்கம் 56 ஆம் பக்கங்கள் வரை எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

இவ்வாண்டின்போது, நடைபெற்ற கூட்டங்களுக்கான பணிப்பாளர்களது வருகை ஆண்டறிக்கையில் 56 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

**பணிப்பாளர்களது ஊதியங்கள்**

இவ்வாண்டின்போது கொடுப்பனவு செய்யப்பட்ட பணிப்பாளர்களது வேதனங்கள் பின்வருமாறு

| | 2015 ரூபா.மில் | 2014 ரூபா.மில் |
|---|---|---|
| பணிப்பாளர்களின் வேதனாதிகள் | 2.49 | 0.83 |

**ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களது நலன்கள்**

கூட்டுத்தாபனத்துடனான ஒப்பந்தங்களில் நேரடியான மற்றும் நேரடியற்ற பணிப்பாளர்களது நலன்கள் 94 ஆம் பக்கத்தில் 31 ஆம் குறிப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**இடர் முகாமைத்துவமும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையும்**

இடர்களை முகாமை செய்வதற்கான ஒட்டுமொத்த பொறுப்புடைமையினை பணிப்பாளர் சபை பொறுப்பேற்கின்றது. இந்நோக்கத்திற்காக கூட்டுத்தாபனத்தில் செயல்திறன் மிக்க அனைத்தையும் உள்ளடக்கிய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றினைப் பணிப்பாளர் சபை நிறுவியுள்ளது. இடர்களை முகாமை செய்வதில் கூட்டுத்தாபனத்தினால் எடுக்கப்படுகின்ற குறித்துரைத்த நடவடிக்கைகள் 47 தொடக்கம் 51 வரையான பக்கங்களில் இடர் முகாமைத்துவ அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளது.

**நிறுவன ஆளுகை**

**பணிப்பாளர்களது பிரகடனங்கள்**

பணிப்பாளர் சபை பின்வருமாறு பிரகடனம் செய்கின்றது.

(அ) கூட்டுத்தாபனம் அதன் தொழிற்பாட்டினை நடாத்துவதில் ஏற்புடைய அனைத்து சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் இணங்கி ஒழுகுகின்றது. அத்துடன், தொடர்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் முரண்படுகின்ற எவ்வித செயற்பாட்டிலும் ஈடுபட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனம் ஈடுபடுகின்ற ஒப்பந்தங்களில் உள்ள முக்கிய நலன்களை பணிப்பாளர்கள் பிரகடனம் செய்துள்ளனர்.

(இ) ஆதரவளிக்கும் ஊகங்களுடன் வர்த்தகம் தொடர்ந்தியங்கும் நிலையில் உள்ளதுடன், பணிப்பாளர்கள் சபையானது கூட்டுத்தாபனத்தின் நிறுவன/ வியாபாரத் திட்டங்களை மீளாய்வு செய்து எதிர் நோக்குகின்ற எதிர்காலத்தில் கூட்டுத்தாபனம் அதன் தொழிற்பாடுகளைத் தொடர்வதற்கு போதிய மூலவளங்களை அது கொண்டுள்ளது என திருப்தியடைகின்றது. அதற்கமைய கூட்டுத்தாபத்தினதும் அதன் குழுவினதும் நிதிக் கூற்றுகள் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. அத்துடன்,

(உ) நிதியியல், தொழிற்பாடுகள் மற்றும் ஒத்திசைவுக் கட்டுப்பாடுகள் அத்துடன் இடர் முகாமைத்துவம் ஆகியவற்றை உள்ளடக்கி உள்ளகக் கட்டுப்பாடுகள் பற்றிய மீளாய்வொன்றினை பணிப்பாளர்கள் மேற்கொண்டு, அவற்றின் செயல்திறன் தன்மை மற்றும் வெற்றிகரமாக கடைப்பிடித்தல் பற்றிய நியாயமான உத்தரவாதமொன்றினைப் பெற்றுள்ளனர்.

நிறுவன ஆளுகை விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் இணங்குவதில் உள்ள நடைமுறைகள் மற்றும் செயற்பாங்குகள் என்பன இவ்வறிக்கையின் 52 தொடக்கம் 56 ஆம் பக்கங்களில் நிறுவன ஆளுகை அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளன.

**மனித வளங்கள்**

கூட்டுத்தாபனத்தின் வர்த்தக பணிக் கூற்றினையும், நோக்கக் கூற்றினையும் மெய்ப்பிப்பதில் மனித வளங்களின் பெறுமதி வாய்ந்த வகிபாகத்தினைக் கூட்டுத்தாபனம் ஏற்றுக் கொள்கின்றது. அதற்கமைய அதன் மனித வள மூலதனத்தினை அதிகரிப்பதற்கும், நிறுவன இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை அடைதல் நோக்கியே அவர்களின் பங்களிப்பினை உச்சப்படுத்துவதற்கும், பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி ஊடாக தமது அறிவினையும் திறன்களையும் தொடர்ச்சியாகத் தரமுயர்த்துவதற்கு அனைத்து வகுப்பிலுள்ள ஊழியர் வகுப்புகளுக்கும் போதிய வாய்ப்புகளை வழங்குவதன் மீது எமது மனிதவள கொள்கை வலியுறுத்துகின்றது. அதன் மனித வளங்களுள் உயர்மட்ட தொழிநுட்ப மற்றும் முகாமைத்துவ கொள்ளளவொன்று கிடைப்பதனை உறுதி

செய்வதற்கு மனித மூலதன அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் முன்னுரிமை அளிக்கப்பட்ட குறிக்கோளாகத் தோற்றம் பெற்றுள்ளது.

**முடிவுறாதுள்ள வழக்காடல்கள்**

பணிப்பாளர்கள் மற்றும் கூட்டுத்தாபனத்தின் சட்டத்தரணிகள் ஆகியோரின் அபிப்ராயத்தின்படி நிதிக் கூற்றுகளின் 30 ஆம் குறிப்பின் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ள கூட்டுத்தாபனத்திற்கு எதிரான முடிவுறாதுள்ள வழக்காடல்கள் கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமையில் அல்லது அதன் எதிர்காலத் தொழிற்பாடுகளில் முக்கிய தாக்கத்தினைக் கொண்டிருக்காது.

## சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் இணங்குதல்

ஏற்புடைய சட்டங்களுக்கு மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு முரணான எந்த செயற்பாடுகளிலும் கூட்டுத்தாபனம் ஈடுபட்டிருக்கவில்லை.

**சுற்றாடல் பாதுகாப்பு**

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது நாட்டில் பெற்றோலியப் பொருட்கள் சந்தையில் முன்னோடியாகவும் நாட்டின் உள்ள ஒரேயொரு உள்நாட்டு சுத்திகரிப்பு ஆலையாகவும் சுற்றாடல் மாசுபடுத்தலினை குறைப்பதற்கான அதன் கடப்பாடுகளில் முழுமையான விழிப்புணர்வினைக் கொண்டுள்ளதுடன் பெற்றோலிய பொருட்களை கையாளுதல் மற்றும் பயன்படுத்துவதில் உள்ள சுற்றாடல் மீது அக்கறை கொண்டுள்ளது.

**நியதிச் சட்டக் கொடுப்பனவுகள்**

அரசாங்கம் மற்றும் ஊழியர்களுடன் தொடர்புபட்ட அனைத்து நியதிச்சட்ட கொடுப்பனவுகள் உரிய காலத்தில் மேற்கொள்ளப்பட்டது என பணிப்பாளர்கள் தங்கள் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் திருப்தியடைகின்றனர்.

## நிதிநிலைக் கூற்று திகதிக்கு பிந்திய நிகழ்வுகள்

96 ஆம் பக்கத்தில் வெளிப்படுத்தப்பட்டவை தவிர நிதிக்கூற்றுகளில் சீராக்கல்களை வேண்டுகின்ற முக்கிய நிகழ்வெதுவும் நிதி நிலைக் கூற்றுத் திகதிக்கு பின்னர் நிகழவில்லை.

ஐந்தொகை திகதிக்கு பிந்திய அனைத்து முக்கிய நிகழ்வுகளும் கருத்திற் கொள்ளப்பட்டு நிதியல் கூற்றுக்களில் ஏற்புடைய சரிப்படுத்தல்கள் / வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

பணிப்பாளர்கள் சபை, எதிர்காலத்திற்கான வர்த்தக ரீதியான நிலைத்திருத்தல் தன்மையின் வலுவூட்டலினை உறுதி செய்யும் பொருட்டு கூட்டுத்தானத்தின் எதிர்கால வாய்ப்புக்களை மேம்படுத்தும் நோக்குடன் நிறுவன வியாபாரத் திட்டத்தை தயாரித்துள்ளது. அதற்கமைய, நிதியியல் கூற்றுக்கள் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவினை அடிப்படையாக கொண்டு தாயரிக்கப்பட்டுள்ளன

**கணக்காய்வாளர்களின் நியமனம்**

கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வாளர், கணக்காய்வாளர் அதிபதியாகும். அவர் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் உறுப்புரை 154 இல் உள்ள ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைவாக நியமிக்கப்பட்டுள்ளார். கணக்காய்விற்காக கணக்காய்வாளரின் ஊதியங்கள், 1961 இன் 28 ஆம் இலக்க கூட்டுத்தாபனச் சட்டத்தின் 31 ஆம் பிரிவிற்கு அமைய தீர்மானிப்பட வேண்டும்.

**கணக்காய்வாளர்களின் ஊதியங்களும் கூட்டுத்தாபனத்துடனான ஒப்பந்தங்களில் அவர்களது அக்கறையும்**

2015 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்காக கணக்காய்வுக் கட்டணங்களாக கூட்டுத்தாபனத்தினால் ரூபா 1 மில் செலுத்தப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் அறிந்த வரையில், கூட்டுத்தாபனத்துடனான அல்லது அதன் துணைக் கம்பனியுடனான எவையேனும் ஒப்பந்தத்தில் கண்ககாய்வாளர்கள் ஏதேனும் வேறு உறவினை அல்லது அக்கறையினை கொண்டிருக்கவில்லை.

**அறிக்கையின் உள்ளடக்கங்களை அங்கீகரித்தல்**

1961 இன் 28 ஆம் இலக்க இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனச்சட்டத்தின் 32 (3) ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறு, இவ் ஆண்டறிக்கையின் உள்ளடக்கங்களை

பணிப்பாளர் சபை இத்தாள் அங்கீகரிக்கின்றது.

பணிப்பாளர் சபைக்காகவும் சார்பாகவும் இவ் ஆண்டறிக்கை கையொப்பமிடப்படுகின்றது.



ரி ஜி ஜயசிங்க
தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளரும்



டீ சீ எஸ் செனவிரத்ன
பணிப்பாளர்

கொழும்பு

# கணக்காய்வு குழு அறிக்கை

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வு குழுவானது, பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படுவதுடன், பணிப்பாளர் சபைக்கு பொறுப்புக் கூறக் கூடியதாகும். கணக்காய்வுக் குழுவானது, அரசாங்க வர்த்தக தொழில் முயற்சிகளில் கணக்காய்வுக் குழுக்களை நடத்துவது தொடர்பில், விநியோகிக்கப்பட்ட திறைசேரி சுற்றறிக்கையில் விதந்துரைக்கப்பட்ட பொறுப்புகள், அதிகாரங்கள் மற்றும் குறித்துரைத்த கடமைகள் ஆகியவற்றின் நோக்கெல்லையினை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்டுள்ளது.

**கணக்காய்வுக் குழுவின் முக்கிய பொறுப்புகள்**

சபையில் முக்கிய உப குழுவாகத் தொழிற்படுகின்ற இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வுக் குழுவானது, பிரதான சபை அதன் பொறுப்புடைமைகளை மேற்பார்வை செய்வதில், சபைக்கு உதவுவதுடன், நிதியறிக்கையுடன் மற்றும் இடர் முகாமைத்துவ செயன்முறைகள் பற்றிய சுயாதீன மீளாய்வு ஒன்றினை வழங்குகின்றது. பின்வருவன கணக்காய்வுக் குழுவின் முக்கிய பொறுப்புடைமைகளாகும்.

- உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் போதுமை, காலம் குறித்தல் மற்றும் நிலைத்திருத்தல் பற்றிய மீளாய்வு.
- வர்த்தகத் தொழிற்பாடுகளின் இசைவுத் தன்மையினைக் கண்காணித்தல்.
- நிதியறிக்கையிடல் முறைமையிலுள்ள, வெளிப்படுத்தல்களின் போதுமையினை உறுதி செய்யும் பொருட்டு நிதிக் கூற்றுகளை மீளாய்தல்.
- நிதிக் கூற்றுகளைத் தயாரிக்கும்போது பயன்படுத்தப்படும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் உள்ளடங்கலாகப் பின்பற்றப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நிதியறிக்கையிடல் ஒழுங்குவிதிகள் என்பவற்றின், ஒத்திசைவினை உறுதி செய்தல்.
- கூட்டுத்தாபனம் ஆட்படுகின்ற இடர்களை மீளாய்தலும், இடரினை தணிப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் அவற்றின் செயல்திறனையும் மீளாய்தலும்.
- நிதியியல் மற்றும் தொழிற்பாட்டு நடைமுறைகள் அத்துடன் கட்டுப்பாடுகள் ஆகியவற்றின் செயல்திறனை மதிப்பிடுவதற்குப் பாதிக்கப்பட்டுள்ள உள்ளகக் கணக்காய்வுச் செயல்முறையின் நோக்கெல்லையினைத் தீர்மானித்தல்.
- உள்ளகக் கணக்காய்வின் காண்புகளை மீளாய்தல்.

**கணக்காய்வுக் குழுக் கூட்டங்களும் உள்ளடக்கமும்**

முறையான நிகழ்ச்சி நிரல் ஒன்றின் மீது கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடைபெறுவதுடன், கூட்டங்களுக்கு முன்னர் நிறுவன முகாமைத்துவத்தினால் தொடர்புடைய விரிவான பின்னணித் தகவல்கள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. பிரதிப் பொது முகாமையாளர்களும், முகாமையாளர்களும் விளக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்காக பல்வேறு காலங்களில் அழைக்கப்படுவதன் மூலம் கணக்காய்வுக் கூட்டங்களில் பங்குபற்றுகின்றன.

மீளாய்வுக்குட்படுகின்ற காலத்தின்போது, அவர்களுக்கு பொறுப்பளிக்கப்பட்ட கடமைகளை கலந்துரையாடுவதற்கு கணக்காய்வுக் குழு நான்கு தடவைகள் சந்தித்தது. கூட்டத்தில் பங்குபற்றிய உறுப்பினர்கள் பின்வருமாறு,

| திகதி | எண்ணிக்கை | உறுப்பினர் பெயர் |
|---|---|---|
| 02/03/2015 | 3 | திரு.ஏ.கே. செனெவிரத்ன (தலைவர்)<br>திரு. ஏ.எச்.எஸ். விஜேசிங்க<br>திரு.டப்.எஸ்.எம்.சீ.சிரிமேவன |
| 06/08/2015 | 3 | திரு.ஏ.கே. செனெவிரத்ன (தலைவர்)<br>திரு. ஏ.எச்.எஸ். விஜேசிங்க<br>திரு.டப்.எஸ்.எம்.சீ.சிரிமேவன |
| 28/10/2015 | 4 | திரு.ஏ.கே.செனெவிரத்ன (தலைவர்)<br>திரு. ஏ.எச்.எஸ். விஜேசிங்க<br>திரு. பி.கல்ஹேன<br>திரு. ஆர்.ஹரிஸ்சந்திர |
| 04/12/2015 | 3 | திரு.கே.ஏ. விமலேந்திரராஜா (தலைவர்)<br>திரு. பி. கல்ஹேன<br>திரு. ஆர். ஹரிஸ்சந்திர சமூகமளிக்கவில்லை. |

கணக்காய்வுக் குழு உறுப்பினர்கள் பற்றிய சுருக்க முகவுரை 04 தொடக்கம் 06 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளது. வியாபாரத் துறை, நிதி, சட்டம் மற்றும் இடர் முகாமைத்துவம் போன்றன மீதான அவர்களது தனிப்பட்ட மற்றும் கூட்டான அறிவும், அனுபவமும் அவர்களது

கடமைகளை செயலாற்றும்போது ஒன்று சேர்க்கப்பட்டுள்ளன.

**இவ்வாண்டின்போது கணக்காய்வுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் சுருக்கம்**

மீளாய்வுக்குட்படும் ஆண்டின்போது கணக்காய்வுக் குழு நிறைவேற்றிய அதன் கடமைகள் பின்வருமாறு,

- 2014 டிசம்பர் 14 இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிக் கூற்றுகளையும், நிதிக் கூற்றுகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையினையும் கலந்துரையாடியது.
- முகாமைத்துவம், கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் உள்ளகக் கணக்காய்வாளர்கள் ஆகியோருடன் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் போதுமை மீளாய்வு செய்யப்பட்டது.
- 2015 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டுக்காக வழங்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளையும், அவற்றின் மீதான அவதானிப்புகளையும் கலந்துரையாடியது.
- இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முகங் கொடுக்கின்ற முக்கிய மூலோபாய விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.
- தற்போது காணப்படுகின்ற கூட்டுத்தாபனத்தின் நிதி ஒப்படைத்தல் பொறிமுறை தொடர்புடைய பிரச்சினைகளைக் கலந்துரையாடி சிறந்த ஆளுகைக் கோட்பாடுகளுக்கிணங்க முன்கூட்டிய திருத்தங்களுக்காக பணிப்பாளர் சபையின் கவனத்திற்குக் கொண்டு வந்தது.
- 2016 ஆம் ஆண்டிற்கான, வருடாந்தக் கணக்காய்வுத் திட்டம் மீளாய்வு செய்யப்பட்டது.

**முடிவுரை**

கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளுக்கமைவாக, கூட்டுத்தாபனத்தின் விவகாரங்கள் முகாமை செய்யப்படுகின்றன என்றும், கூட்டுத்தாபனத்தின் சொத்துகள் போதியளவு முறையாக கணக்கெடுக்கப்படுகின்றன அத்துடன் பாதுகாக்கப்படுகின்றன என்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை நியாயமான உத்தரவாதமொன்றினை வழங்குகின்றது என கணக்காய்வுக் குழு திருப்தியடைகின்றது.



கே.ஏ.விமலேந்திரராஜா
**தலைவர் - கணக்காய்வுக் குழு**

கொழும்பு
நவம்பர் 15, 2016

# நிதியியல் கூற்றுகள்


விரிவான வருமானக் கூற்று …………………………………………………………….. 66

நிதி நிலைக் கூற்று ……………………………………………………………………… 67

பங்கு மூலதனக் கூற்று ……………………………………………………………… 68

காசுப் பாய்ச்சல் கூற்று …………………………………………………………….. 69

நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் ………………………………………………… 70

# விரிவான வருமானக் கூற்று

| | | இ.பெ.கூ | | குழு | |
|---|---|---|---|---|---|
| டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கானது | குறிப்பு | 2015 | *2014 மீள்குறிப்பிடப்ட்டது* | 2015 | *2014 மீள்குறிப்பிடப்ட்டது* |
| | | ரூபா. மில் | ரூபா. மில் | ரூபா. மில் | ரூபா. மில் |
| வருமானம் | *2* | 376,734.487 | *525,182.094* | 377,261.652 | *527,168.712* |
| விற்பனைச் செலவுகள் | *3* | (337,118.644) | *(499,955.539)* | (343,301.815) | *(506,834.181)* |
| **மொத்த இலாபம்** | | **39,615.843** | ***25,226.555*** | **33,959.837** | ***20,334.531*** |
| ஏனைய தொழிற்படுத்தல் வருமானம் | *4* | 326.391 | *739.652* | 836.644 | *1,197.116* |
| மண்ணெண்ணெய் மானியம் | | 3,860.000 | *2,715.000* | 3,860.000 | *2,715.000* |
| முதலீட்டு ஆதனம் மீதான வருமானம் | *5* | 47.590 | *51.823* | 47.590 | *51.823* |
| விற்பனை விநியோகச் செலவு | | (13,617.902) | *(11,532.812)* | (2,957.522) | *(1,760.156)* |
| நிருவாகச் செலவுகள் | | (2,813.565) | *(4,904.127)* | (6,391.546) | *(8,082.450)* |
| **தொழிற்படுத்தல் இலாபம்** | *6* | **27,418.357** | **12,296.090** | **29,355.002** | **14,455.864** |
| நிதிக் கட்டணங்கள | | (32,841.590) | (967.489) | (32,841.590) | (967.489) |
| நிதி வருமானம் | *7* | 4,910.347 | *4,030.057* | 4,936.157 | *4,058.754* |
| ஹெட்ஜிங் செலவுகள் | *8* | (3,864.375) | - | (3,864.375) | |
| விசேட கட்டணம் | *9* | (750.000) | *(250.000)* | (750.000) | *(250.000)* |
| நிதிச் செலவுகள் | *10* | (15,048.660) | *(13,979.634)* | (15,048.660) | *(13,979.634)* |
| **வரிக்கு முன்னர் இலாபம்/(நட்டம்)** | | **(20,175.920)** | ***1,129.025*** | **(18,213.465)** | ***3,317.495*** |
| வரிச் செலவுகள் | *11* | (1,559.263) | - | (1,846.248) | *(275.168)* |
| **ஆண்டிற்கான இலாபம் / (நட்டம்)** | | **(21,735.183)** | ***1,129.025*** | **(20,059.713)** | ***3,042.327*** |
| **ஏனைய விரிவான வருமானம்** | | | | | |
| **இலாபம் அல்லது நட்டத்திற்கு வகைப்படுத்தப்படாத விடயங்கள்** | | | | | |
| ஓய்வு நலத்திட்டம் மீதான மீள்-அளவீட்டு இலாபம்/(நட்டம்) | *21* | (167.186) | *(112.498)* | (299.648) | *(152.495)* |
| **இலாபத்திற்கு அல்லது நட்டத்திற்கு அதனைத் தொடர்ந்து வகைப்படுத்தப்பட்டுள்ள அல்லது படக்கூடிய விடயா** | | | | - | |
| விற்பனைக்காக கிடைக்கத்தக்க நிதி சொத்துக்கள் மீள் தேறிய பெறு | | 6.500 | - | 6.500 | - |
| **ஆண்டுக்கான ஏனைய விரிவான நட்டம்** | | (160.686) | *(112.498)* | (293.148) | *(152.495)* |
| **கட்டுப்பாடாத வட்டி** | | - | - | (514.336) | *(624.435)* |
| **ஆண்டுக்கான மொத்த விரிவான இலாபம்/(நட்டம்)** | | **(21,895.869)** | **1,016.527** | **(20,867.197)** | **2,265.397** |

70 முதல் 97 வரை காணப்படும் குறிப்புகள் இந்நிதியியல் கூற்றுகளை முழுமையாக்கும் பாகங்களாகும்

# நிதி நிலைக்கூற்று

| 2015.12.31 அன்று உள்ளவாறு | குறிப்பு | இ.பெ.கூ 2015 ரூபா. மில் . | இ.பெ.கூ 2014 (மீள் குறிப்பிடப்பட்டது) ரூபா. மில் | குழு 2015 ரூபா. மில் | குழு 2014 (மீள் குறிப்பிடப்பட்டது) ரூபா. மில் |
|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள** | | | | | |
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | | | |
| ஆதனம் பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | 12 | 13,613.866 | 13,591.470 | 30,267.359 | 30,879.895 |
| முதலீட்டு ஆதனம் | 12.5 | 24.558 | 25.362 | 24.558 | 25.362 |
| புலனாகச் சொத்துக்கள் | 12.6 | - | - | 17.350 | 47.358 |
| துணை நிறுவணங்களின் முதலீடுகள் | 13 | 5,000.000 | 5,000.000 | - | - |
| நடைமுறையற்ற நிதிச் சொத்துகள் | 14 | 36,849.405 | 10,027.557 | 36,849.405 | 10,027.557 |
| வணிக கிடைக்கப் பெறத்தக்கவையும் | 15 | 11,675.654 | 12,047.778 | 11,389.949 | 11,190.663 |
| | | 67,163.483 | 40,692.167 | 78,548.621 | 52,170.835 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| பதிவேட்டுப் பொருட்கள் | 16 | 41,035.111 | 63,581.753 | 41,363.947 | 63,949.846 |
| வணிக ஏனைய கிடைக்கப்பெறத்தக்கவை | 15 | 27,128.594 | 43,120.185 | 30,833.435 | 44,457.037 |
| மீள˙அறவிடப்பட்ட வருமானவரி | | - | 962.151 | - | 962.151 |
| குறுகிய கால முதலீடுகள் | 17 | 12,721.916 | 11,994.697 | 12,721.916 | 11,994.697 |
| காசும் காசுக்கு சமமானவையும் | 18 | 51,058.261 | 21,474.788 | 51,806.227 | 23,384.985 |
| | | 131,943.882 | 141,133.573 | 136,725.525 | 144,748.716 |
| **மொத்தச் சொத்துக்கயள** | | **199,107.365** | **181,825.740** | **215,274.145** | **196,919.551** |
| **பங்கு மூலதனமும் பொறுப்புக்களும்** | | | | | |
| மூலதனமும் ஒதுக்குகளும் | | | | | |
| பங்களிக்கப்பட்ட மூலதனமும் | 19 | 28,500.000 | 3,500.000 | 28,500.000 | 3,500.000 |
| மூலதன ஒதுக்கு | 20 | 4,992.686 | 4,992.686 | 4,992.686 | 4,992.686 |
| பிடித்துவைக்கப்பட்ட உழைப்பு | | (262,645.305) | (240,749.436) | (253,451.479) | (232,584.282) |
| கட்டுப்படுத்தப்படாத வட்டி | | - | - | 7,096.913 | 6,582.577 |
| **மொத்த பங்கு மூலதனமும்** | | (229,152.619) | (232,256.750) | (212,861.880) | (217,509.019) |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | | | | |
| ஒய்வூதிய நலம் பொறுப்புக்கள் | 21 | 861.114 | 663.950 | 2,414.251 | 2,006.254 |
| பிற்போடப்பட்ட வரி | 22 | - | - | 544.864 | 492.982 |
| கடன்கள் மற்றும் கடன் பெறல்கள் | 23 | 341.817 | 703.481 | 1,740.668 | 2,590.131 |
| | | 1,202.931 | 1,367.431 | 4,699.783 | 5,089.368 |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | | | | |
| வர்த்தகமும் ஏனைய கொடுப்பனவு செய்யத்தக்க | 24 | 159,473.117 | 164,280.022 | 155,356.351 | 160,416.364 |
| கடன்களினதும் கடன் பெறல்களினதும் | 23.1 | 361.664 | 647.369 | 857.619 | 1,135.168 |
| குறுகிய கால கடன் பெறல் | 25 | 267,222.272 | 247,787.669 | 267,222.272 | 247,787.669 |
| | | 427,057.053 | 412,715.059 | 423,436.242 | 409,339.202 |
| **மொத்த பங்கு மூலதனமும் பொறுப்புகளும்** | | **199,107.365** | **181,825.740** | **215,274.145** | **196,919.551** |

பக்கம்70 தொடக்கம் 97 வரைநிதியியல் சொத்துக்களின் முழுமையாக்கும் பாக மொன்றினை தோற்றுவிக்கின்றன. இந் நிதியியல் கூற்றுக்கள் கூட்டுத்தாபனத்தினதும் அதன் குழுவின தோற்றுவிக்கின்றன. இந் நிதியியல் கூட்டுத்தாபனத்தினதும் அதன் குழுவினதும் 2015.12.31 அன்றுஉள்ளவாறான விவகார நிலைபற்றிய உண்மையான மற்றும் நியாயமான நோக்கொன்றினை தருகின்றன..

ஆர்.எஸ்.சுற்தரலிங்கம்
**பதில் பிரதிப் பொது முகாரமயாளர்**

ஆர்.ரி.ஏ.தாபரே
நிதி முகாமையாளர்

வுாஇந்நிதிக் கூற்றுக்களின் தயாரித்து எடுத்துரைப்பதற்கு பணிப்பாளர் சபை பொறுப்புடையதாகும். சுபை சார்பாக அனுமதிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்டது

**ரிஇதயசிங்க**
துவீசுர்ளுரமும் முகாமைத்துவப் பணிப்பாளர்ரும்

M.S.S.S.Fernando
DIRECTOR
எம்இள்ள்எஜ். புர்ணாந்து
பணிப்பாளர்

# பங்கு மூலதன மாற்றக் கூற்று

**இ பெ. கூ**

| 2015 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ண்டுக்கானது | பங்களிக்கப்பட்ட மூலதனம் | மூலதன ஒதுக்கு | வருமான ஒதுக்கு | மொத்த பங்கு மூலதனம் |
|---|---|---|---|---|
| | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் |
| 2014 ஜனவரி 01 இல் உள்ளவாறு | **3,500.000** | **4,992.686** | **244,959.429** | **(236,466.743** |
| ஆண்டுக்கான மீள்குறிப்பிடப்பட்ட இலாபம் | | | 1,129.025 | 1,129.025 |
| ஏனைய விரிவான வருமானம் | | | (112.498) | (112.498) |
| கருதப்பட்ட பங்கிலாப ஏற்பாடுகளின் திரும்பல் | | | 170.691 | 170.691 |
| முந்திய ஆண்டுக்காக கிடைக்கப்பெற்ற மானியம் | | | 3,022.775 | 3,022.775 |
| 2014 டிசம்பர் 31 இல் உள்ளவாறு | **3,500.000** | **4,992.686** | **240,749.436** | **(232,256.750)** |
| முந்திய ஆண்டுக்கான இலாபம் | | | (21,735.183) | (21,735.183) |
| ஏனைய விரிவான வருமானம் | | | (160.686) | (160.686) |
| முதலீட்டு மேம்பாடுகளுக்காக விநியோகிக்கப்பட்ட | 25,000.000 | | - | 25,000.000 |
| **2015 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு** | **28,500.000** | **4,992686** | **(262,645.305)** | **(229,152.619)** |

**குழு**

| 2015 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ண்டுக்கானது | பங்களிக்கப்பட்ட மூலதனம் | மூலதன ஒதுக்கு | வருமான ஒதுக்கு | பங்குதார் நிதியம் | கட்டுப்படாத வட்டி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் |
| 2014 ஜனவரி 01 இல் உள்ளவாறு | **3,500.000** | **4,992.686** | **(238,043.145)** | **(229,550.459)** | **5,958.142** | **(223,592.317)** |
| ஆண்டுக்கான மீள்குறிப்பிடப்பட்ட இலாபம் | | | 2,417.892 | 2,417.892 | 624.435 | 3,042.327 |
| ஏனைய விரிவான வருமானம் | | | (152.495) | (152.495) | | (152.495) |
| கருதப்பட்ட பங்கிலாப ஏற்பாடுகளின் திரும்பல் | | | 170.691 | 170.691 | | 170.691 |
| முந்திய ஆண்டுக்காக துணைக்கம்னியிடமிருந்து கிடைக்கப்பெற்ற இலாபம் | | | 3,022.775 | 3,022.775 | | 3,022.775 |
| 2014 டிசம்பர் 31 இல் உள்ளவாறு | **3,500.000** | **4,992.686** | **(232,584.282)** | **(224,091.596)** | **6,582.577** | **(217,509.019)** |
| ஆண்டுக்கான இலாபம் | | | (20,574.049) | (20,574.049) | 514.336 | (20,059.713) |
| ஏனைய விரிவான வருமானம் | | | (293.148) | (293.148) | | (293.148) |
| முதலீட்டு மேம்பாடுகளுக்காக விநியோகிக்கப்பட்ட | 25,000.000 | | - | 25,000.000 | | 25,000.000 |
| 2015 டிசம்பர் 31 இல் உள்ளவாறு | **28,500.000** | **4,992.686** | **(253,451.479)** | **(219,958.793)** | **7,096.913** | **(212,861.880)** |

70 முதல் 97 வரை காணப்படும் குறிப்புகள் இந்நிதியியல் கூற்றுகளை முழுமையாக்கும் பாகங்களாகும்

# காசுப் பாய்ச்சல் கூற்று

| | | இபெகூ | | குழு | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் |
| முடிவுற்ற ஆண்டிற்கானது | குறிப்பு | **31.12.2015** | **31.12.2014** | **31.12.2015** | **31.12.2014** |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | **26** | 24,947.455 | 12,467.371 | 25,324.955 | 10,880.117 |
| | | | | - | |
| செலுத்தப்பட்ட வட்டி | **10** | (15,048.660) | (13,979.634) | (15,282.220) | (14,384.351) |
| செலுத்தப்பட்ட ஓய்வூதிய பனிக்கொடை | **21** | (68.623) | (64.187) | (167.892) | (143.028) |
| செலுத்தப்பட்ட வருமான வரி ∴ பி.வை வ | | (413.710) | (240.607) | (413.710) | (240.607) |
| **தொழிற்பாடுகளில் இருந்து ஈட்டப்பட்ட தேறிய காசு** | | 9,416.462 | (1,817.057) | 9,461.133 | (3,887.869) |
| **முதலீட்டு செயற்பாடுகளில் இருந்து காசுப் பாய்ச்சல்** | | | | | |
| ஆதனம் பொறித்தொகுதி, உபகரணம் விற்பனை வரவு | | 36.151 | 16.216 | 36.151 | 21.006 |
| ஆதனம் பொறித்தொகுதி, உபகரணம் பெற்றுக் கொள்ளல் | **12** | (972.115) | (1,116.716) | (1,162.087) | (1,325.867) |
| முதலீட்டிலிருந்து வருமானம் | | 0.004 | 437.501 | 8.316 | - |
| கிடைக்கப்பெற்ற வட்டி | **7** | 4,910.347 | 4,030.057 | 4,936.157 | 4,058.754 |
| திறைசேரி முறிகளில் முதலீடு | | (27,817.081) | - | (27,817.081) | - |
| நிலையான வைப்புகளில் முதலீடு | | 274.514 | (5,193.046) | 274.514 | (5,193.046) |
| **முதலீட்டுச் செயற்பாடுகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | | (23,568.180) | (1,825.988) | (23,724.030) | (2,439.153) |
| **நிதியிடல் செயற்பாடுகளில் இருந்து காசுப் பாய்ச்சல்** | | | | | |
| முலதன முதலீடு | | 25,000.000 | - | 25,000.000 | - |
| பெறப்பட்ட பிதிய கடன்கள்∴ கடன் மீள் செலுத்தல் | | 16,048.986 | 28,745.610 | 14,997.932 | 28,257.810 |
| **நிதியிடல் செயற்பாடுகளில் இருந்து∴ (பயன்னடுத்தப்பட்ட)** | | 41,048.986 | 28,745.610 | 39,997.932 | 28,257.810 |
| **காசுப் பாய்ச்சல்** | | | | | |
| **காசு மற்றும் காசுக்கு சமமானவற்றில் தேறிய அதிகரிப்பு / (குறைவு)** | | 26,897.268 | 25,102.563 | 25,735.035 | 21,930.788 |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்கு சமமானவை | | 17,803.174 | (7,299.390) | 19,713.372 | (2,217.415) |
| ஆண்டின்இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவை | **18** | **44,700.441** | **17,803.174** | **45,448.407** | **19,713.372** |

70 முதல் 97 வரை காணப்படும் குறிப்புகள் இந்நிதியியல் கூற்றுகளை முழுமையாக்கும் பாகங்களாகும்

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்

## 1. நிறுவனத் தகவல்கள்

**பொது**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், 1961 ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டு இலங்கையை அதன் வாழிடமாக கொண்டுள்ளது. கூட்டுத்தாபனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 609 கலாநிதி டானிஸ்டர் டி சில்வா மாவத்தை கொழும்பு 09 என்ற முகவரியில் அமையப் பெற்றுள்ளது.

**பிரதான செயற்பாடுகளும் வியாபாரத்தின் தன்மையும்**

இலங்கையில் பெற்றோலிய உற்பத்திகளை சுத்திகரித்தல், விற்பனை செய்தல், விநியோகம் செய்தல் மற்றும் கண்டறிதல் ஆய்வு என்பன கூட்டுத்தாபனத்தின் பிரதான செயற்பாடுகளாகும்.

**தற்போதைய பங்கு மூலதனம் தாய்க் குழுமம், சிறப்புத் தாய்க் குழுமம் மற்றும் துணைக் கம்பனி**

கூட்டுத்தாபனம், பெற்றோலிய கைத்தொழில் அமைச்சின் மேற்பார்வையின் கீழ் உள்ளது. பணிப்பாளர்கள் கருத்தில் கூட்டுத்தாபனத்தின் சிறப்பு நிறுவன பொறுப்பாளரும் கட்டுப்படுத்தும் தரப்பினரும் இலங்கை அரசாங்கமாகும். சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது 2/3 பங்கு உரித்துக் கொண்டுள்ளது.

**விநியோகத்திற்கான அங்கீகாரத் திகதி**

2015 டிசம்பர் 31 உடன் முடிவுற்ற ஆண்டிற்கான இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியியல் கூற்றுகள் பணிப்பாளர்கள் சபையின் 2016 செப்டம்பர் 07 ஆம் திகதிய தீர்மானத்திற்கமைய விநியோகிப்பதற்கு அங்கீகாரமளிக்கப்பட் டிருந்தது.

**இணங்குதல் கூற்று**

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியியல் கூற்றுகள், இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்ட இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள்/இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (இ.நி.அ.நி/இ.க.நி) மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க மற்றும் அதற்கான திருத்தங்களின் வரலாற்று கிரய அடிப்படையின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன.

## 1.2. தயாரித்தலுக்கான அடிப்படை

நிதிக்கூற்றுகள், நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டுள்ள நிதிச் சாதனங்களுக்கானவை தவிர (விலை குறிக்கப்பட்ட பங்கு மூலதன முதலீடுகள் மற்றும் திறைசேரி முறிகள்) தவிர வரலாற்று கிரய அடிப்படையின் கீழ் திரண்ட அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

**எடுத்துரைத்தல் மற்றும் தொழிற்பாட்டு நாணயம்**

நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாயில் எடுத்துரைக்கப்பட்டுள்ளதுடன் வேறு வகையில் குறித்துக் காட்டப்பட்டவை தவிர அனைத்து பெறுமானங்களும் கிட்டிய மில்லியனுக்கு முழுப் பெறுமானமாக்கப்பட்டுள்ளது.

**திரட்டுதலுக்கான அடிப்படை**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் துணைக் கம்பனியான சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் 2/3 பங்குகளை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உரிமை கொண்டுள்ளதனால் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கான முக்கிய பாகமொன்றாகவுள்ள சிபெஸ்ரேலி நிறுவனத்தின் நிதியியல் கூற்றுக்களின் திரட்டுதலினை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன நிதிக் கூற்றுகள் உள்ளடக்குகின்றது. குழு நிதியியல் கூற்றுகள், சிபெஸ்ரேலி கூற்றுகளுடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுகளின் திரட்டுதலினை உள்ளடக்குகின்றது.

**விநியோகிக்கப்பட்ட ஆனால் பின்பற்றப்படாத கணக்கீட்டு நியமங்கள்**

எதிர்காலத்தில் செயற்படு திகதியொன்றினைக் கொண்டுள்ள இந்நிதியியல் கூற்றுகள் தயாரிக்கின்றபோது, பிரயோகிக்கப்படாத இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்டுள்ள பின்வரும் நிதியறிக்கைகள் நியமங்கள் காணப்படுகின்றன.

அ) இ.நி.அ.நி. 09 – நிதியியல் சாதனங்கள் : வகைப்படுத்தலும், அளவீடும்

இலங்கைக் கணக்கீட்டு நியமம் 39 இல், மாற்றீடு மீதான பணியின் முதலாம் கட்டத்தில் பிரதிபலிக்கின்ற இ.நி.அ.நி. 09 – வெளியிடப்பட்டதும், நிதி சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் வகைப்படுத்தலுக்கும், அளவீட்டுக்கும் பிரயோகிக்கப்படுகின்றது. கூட்டுத்தாபனம் விளைவினை உரிய காலத்தில் அளவீடு செய்யும்.

இந்நியமமானது, 2018 ஜனவரி 01 அன்று அல்லது அதன் பின்னர் ஆரம்பிக்கின்ற வருடாந்த காலங்களுக்கு அடிப்படையில் செயற்பாடுடையதாகும். எனினும், செயற்படும் திகதி அதனைத் தொடர்ந்து பிற்போடப்பட்டுள்ளது. இந்நியமங்கள் இச்செயற்பாட்டுக்கு வருகின்றபோது, அவற்றை கூட்டுத்தாபனம் பின்பற்றும். விரிவான மீளாய்வின் நிறைவு முடிவுறாத நிலையில், இந்நிதிக் கூற்றுகள் வெளியிடும் திகதியன்று உள்ளவாறு நிதியியல் தாக்கங்கள் நியாயபூர்வமாக மதிப்பிடப்பட முடியாதவை.

ஆ) இ.நி.அ.நி 15 –வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்து வருமானம்

இ.நி.அ.நி 15 ஆனது, எவ்வளவு, எப்போது வருவாய் அடையாளப்படுத்தப்படுகின்றது என்பதனை நிர்ணயிப்பதற்கான அனைத்தையும் உள்ளடக்கிய சட்டகம் ஒன்றினைத் தாபிக்கின்றது. இது, இ.க.நி. 18 வருவாய், இ.க.நி. 11 நிர்மாண ஒப்பந்தங்கள் மற்றும் சர்வதேச நிதியறிக்கையிடல் நியமம் 13 வாடிக்கையாளர் விசுவாச நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளடங்கலாக தற்போது காணப்படுகின்ற வருவாய் அடையாளப்படுத்தல் வழிகாட்டலினை மாற்றீடு செய்கின்றது. இந்நியமமானது, 2018 ஜனவரி 01 அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கின்ற வருடாந்த காலங்களுக்கு செயற்பாடுடையதாகும்.

இந்நியமங்கள் இச்செயற்பாட்டுக்கு வருகின்றபோது, அவற்றை கூட்டுத்தாபனம் பின்பற்றும். விரிவான மீளாய்வின் நிறைவு முடிவுறாத நிலையில், இந்நிதிக் கூற்றுகள் வெளியிடும் திகதியன்று உள்ளவாறு நிதியியல் தாக்கங்கள் நியாயபூர்வமாக மதிப்பிடப்பட முடியாதவை.

## 1.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

**கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள்**

கூட்டுத்தாபனத்தினால் பின்பற்றப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய ஆண்டுடன் பயன்படுத்தப்பட்டவையுடன் ஒத்திசைவாகக் காணப்படுகின்றன.

### தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினதும் அதன் குழுவினதும் தொடர்ந்தியங்கும் நிலையினை அடிப்படையாகக் கொண்டு, அதாவது எதிர் வருகின்ற காலத்திற்கு அவை தொழிற்பாடுகளைத் தொடரும் ஊகத்துடன் இந்நிதியியல் கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. எனவே, 2015 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளுக்கமைவாக ரூபா.21,896 மில்லியன் நட்டமொன்றினையும் ரூபா.229,153 பில்லியன் எதிர்மறையான பங்கு மூலதன நிலையினையும் கூட்டுத்தாபனம் ஏற்படுத்தியிருந்த போதிலும், அதன் தொழிற்பாடுகளை ஒழித்துக் கட்டுவதற்கும் அதன் தொழிற்பாடுகளின் முக்கிய அளவுகளை மட்டுப்படுத்துவதற்கோ ஊகிக்கவில்லை.

**ஒப்பீட்டத் தகவல்கள்**

முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுகளை எடுத்துரைத்தலும், வகைப்படுத்தலும் சிறப்பான எடுத்துரைத்தலுக்காகவும் நடைமுறை ஆண்டில் உள்ளவற்றுடன் ஒப்பிடக் கூடியதாக இருப்பதற்கும் பொருத்தமானவாறு திருத்தப்பட்டுள்ளன.

**முக்கிய கணக்கீட்டுத் தீர்வுகள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள் பற்றிய சாராம்சம்**

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக நிதிக் கூற்றுகளைத் தயாரித்தலானது சில முக்கிய கணக்கீட்டு மதிப்பீடுகளின் பயன்பாட்டினை தேவைப்படுத்துகின்றது. கூட்டுத்தாபனத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளை பிரயோகிக்கின்ற செயன்முறையில் முகாமைத்துவம் அதன் தீர்மானத்தினை பிரயோகிப்பதனையும் வேண்டுகின்றது. தீர்மானத்தின் அல்லது சிக்கல் வாய்ந்த தன்மையின் அல்லது ஊகங்கள் மற்றும் மதிப்பீடுகள் இருக்கும் விடயங்களில் உயர் மட்டமொன்றினை ஈடுபடுத்துகின்ற பகுதிகள் அத்துடன், நிதிக்கூற்றுகளுக்கு முக்கியமாகக் காணப்படுகின்ற மதிப்பீடுகள் கீழே வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**ஓய்வூதியக் கடப்பாடு (பணிக்கொடை)**

ஓய்வூதியக் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியானது, பல ஊகங்களைப் பயன்படுத்தி கணிப்பீட்டு அடிப்படையொன்றில் நிர்ணயிக்கப்படுகின்ற காரணிகள் பலவற்றில் சார்ந்துள்ளது. கழிவு விகிதம் உள்ளடங்கலாக, ஓய்வூதியச் செலவை நிர்ணயிப்பதில் இவ்வூகங்கள் பயன்படுத்தப்படுகின்றது. இவ்வூகங்களில் ஏதேனும் மாற்றங்கள் ஓய்வூதியக் கடப்பாடு கொண்டு செல்லும் தொகையில் தாக்கம் செலுத்தும்.

முகாமைத்துவமானது ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் பொருத்தமான கழிவு விகிதத்தினை நிர்ணயிக்கின்றது. ஓய்வூதியக் கடப்பாட்டினைத் தீர்ப்பனவு செய்வதற்குத் தேவைப்படுத்தப்பட வேண்டிய எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால மதிப்பிடப்பட்ட காசுப் பாய்ச்சலின் தற்போதைய பெறுமதியினை நிர்ணயிப்பதில் பயன்படுத்தப்பட வேண்டிய வட்டி விகிதம் இதுவாகும். கழிவு விகிதத்தினை நிர்ணயிப்பதில் இலங்கையில் நிறுவன முறிகளுக்காக ஆழமான சந்தை இல்லாத நிலையில் அரசாங்க முறிகளின் வட்டி விகிதங்களை முகாமைத்துவம் கருத்திற் கொள்கின்றது. ஓய்வூதியக் கடப்பாட்டிற்கான ஏனைய முக்கிய ஊகங்கள், நடப்புச் சந்தை நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டன.

**விற்பனைக்காகக் கிடைக்கும் பங்கு மூலதனச் சாதனங்களின் பெறுமதிக் குறைப்பு**

விற்பனைக்காக கிடைக்கத்தக்க பங்கு மூலதன சாதனமொன்று பெறுமதிக் குறைக்கப்படுகின்றபோது கூட்டுத்தாபனம் நிர்ணயிப்பதற்கு இ.க.நி. 39 இன் வழிகாட்டலினைப் பின்பற்றுகின்றது. இந்நிர்ணயித்தலானது, முக்கியத் தீர்ப்பினை வேண்டுகின்றது. இத்தீர்ப்பினை மேற்கொள்கையில் ஏனைய காரணிகளுக்கு மத்தியில், முதலீடொன்றின் நியாயப் பெறுமதியானது அதன் செலவை விடக் குறைவாகவிருக்கின்ற காலம் மற்றும் அளவு அத்துடன், தொழிற்றுறை மற்றும் செயலாற்றுகை தொழிநுட்பத்தில் மாற்றங்கள், தொழிற்பாட்டு மற்றும் நிதியளித்தல் காசுப் பாய்ச்சல்கள் போன்ற காரணிகள் உள்ளடங்கலாக, முதலீட்டாளருக்கான நிதி ஆரோக்கியம் மற்றும் குறுகிய கால வியாபார எதிர்நோக்கு போன்றவற்றை முகாமைத்துவம் மதிப்பீடு செய்கின்றது.

**1.4 முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சாராம்சம்**

**1.4.1 வருமானத்தினை இனங்காணல்**

அத்தகைய உட்பாய்ச்சலுக்கு, பங்கு மூலதனம், பங்கு மூலதன பங்கு பற்றுனர்களிடமிருந்தான பங்களிப்புடன் தொடர்புடைய அதிகரிப்பினைத் தவிர விளைவினை ஏற்படுத்துகின்றபோது, நிறுவனமொன்றின் சாதாரண செயற்பாடுகளில் தோன்றுகின்ற காலப்பகுதியொன்றின் போதான பொருளாதார நலன்களின் மொத்த உள்பாய்ச்சல் வருமானமாகும்.

வருமானமானது, கிடைக்கப் பெற்ற வரவுகளின் அல்லது வர்த்தகக் கழிவுகள் மற்றும் விற்பனை வரிகளைக் கழித்து வருமதிகளின் நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்றது. வருமானத்தினை அடையாளப்படுத்தும் நோக்கத்திற்காகப் பின்வரும், குறித்த மூலப்பிரமாணங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

**பொருட்கள் விற்பனை**

பொருட்கள் விற்பனையிலிருந்து கிடைக்கப் பெறும் வருமானமானது பொருட்களின் முக்கிய இடர்கள் மற்றும் உரிமைத்துவத்தின் வெகுமதிகள் உரிமையாளருக்கு மாற்றப்படுகின்றபோது வழமையாகப் பொருட்கள் அனுப்பப்படுதலில் மீது இனங்காணப்படுகின்றது.

**வட்டி வருமானமும் செலவுகளும்**

வட்டிச் செலவுகளும் வருமானமும் கணிப்பீட்டு அடிப்படையில் இனங் காணப்படுகின்றன.

**பங்கிலாபங்கள்**

பங்கிலாப வருமானமானது, கொடுப்பனவினைப் பெறுவதற்கு பங்குதாரர்களின் உரிமை உறுதிப்படுத்தப்படுகின்ற போது இனங் காணப்படுகின்றது.

**வாடகை வருமானம்**

வாடகை வருமானமானது, வாடகைக் காலங்களின் மீது நேர்நிறை அடிப்படையொன்றில் கணக்கிடப்படுகின்றது.

**ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண விற்பனையிலிருந்து இலாபம் /(நட்டம்)**

ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண விற்பனையிலிருந்து தோன்றுகின்ற இலாபம்/(நட்டம்), வியாபாரம் இடம்பெற்ற காலப்பகுதியில் இனங்காணப்பட்டு ஏனைய வருமானமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

### முதலீட்டுப் பிணையங்களிலிருந்து தோன்றுகின்ற இலாபம்/(நட்டம்)

பங்கு மூலதனப் பங்குகள் மற்றும் நிதியியல் சாதனங்களின் விற்பனையிலிருந்து தோன்றுகின்ற இலாபம்/ (நட்டம்) கொடுக்கல் வாங்கல் இடம்பெற்ற திகதியன்று கணக்கிடப்படுகின்றது.

### மண்ணெண்ணெய் மானியம்

1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 17 ஆம் பிரிவிற்கமையவும் திறைசேரியின் செயலாளரினால் வழங்கப்பட்ட 771 பி/1/83 (1) ரி ஆம் இலக்க கடிதத்திற்கமைவாகவும், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதன் செலவுக்குக் கீழ் மண்ணெண்ணெய் விற்பனை செய்தல் மீதான மானியத்திற்கு உரித்துடையதாகும். மானியம் திரண்ட அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளது.

### ஏனைய வருமானம்

ஏனைய வருமானம் திரண்ட அடிப்படையில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

### 1.4.2 செலவின அடையாளப்படுத்தல்

குறித்த வருமான விடயமொன்றின் உறப்பட்ட செலவு மற்றும் உழைப்பு என்பவற்றுக்கிடையிலான நேரடித் தொடர்பின் அடிப்படையில் வருமானக் கூற்றில் செலவினம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

### தொழிற்பாட்டுச் செலவுகள்

செலுத்த வேண்டிய அனைத்துச் செலவுகளும் அவை தொடர்புபடுகின்ற காலத்திற்காக, வருமானக் கூற்றில் திரண்ட அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளன.

## வரிவிதிப்பு

### நடைமுறை வரி

காலப்பகுதிக்கான செலவுகள் நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரிகளை உள்ளடக்குகின்றன. நடைமுறை மற்றும் முந்திய காலப்பகுதிக்கான நடைமுறை வருமான வரி சொத்துகளும், பொறுப்புகளும் வருமான அதிகார சபைகளிடமிருந்து அறவிடப்படக் கூடியது அல்லது அவற்றுக்கு செலுத்த வேண்டியது என எதிர்பார்க்கப்படும் தொகையில் அளவிடப்பட்டுள்ளன. தொகையினைக் கணிப்பதற்கு பயன்படுத்தப்படும் வட்டி விகிதங்களும் வட்டிச் சட்டங்களும் ஐந்தொகைத் திகதி அன்று சட்டமாக்கப்பட்டவை அல்லது உறுதியாக சட்டமாக்கப்பட்டவையாகும்.

நிதிக் கூற்றுகளில் அறிக்கையிடப்பட்டவாறு வருமான அல்லது செலவின கூறுகளை அடிப்படையாகக் கொண்டு வருமான வரிக்கான ஏற்பாடு செய்யப்படுவதுடன், 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தினதும் அதற்கான திருத்தங்களினதும் ஏற்பாடுகளுக்கமைவாக கணிக்கப்படுகின்றன.

### பிற்போடப்பட்ட வரி விதிப்பு

நிதியறிக்கையிடல் நோக்கங்களுக்காக, சொத்துகள் மற்றும் பொறுப்புகள் அத்துடன் அவை கொண்டுள்ள தொகை என்பவற்றின் வரித் தளங்களுக்கிடையில் ஐந்தொகைத் திகதியில் தற்காலிக வேறுபாடுகளின் மீது, பொறுப்பு முறையினைப் பயன்படுத்தி பிற்போடப்பட்ட வருமான வரி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிற்போடப்பட்ட வருமான வரி பொறுப்புகளானவை,

பிற்போடப்பட்ட வருமானவரிப் பொறுப்புக்கள், கொடுக்கல் வாங்கலின் போது கணக்கீட்டு இலாபத்தினை அல்லது வரிவிதிக்கத்தக்க இலாபம் அல்லது நட்டம் இரண்டையும் பாதிக்காத கொடுக்கல் வாங்கலொன்றில் உள்ள சொத்து அல்லது பொறுப்பொன்றின் ஆரம்ப அடையாளப்படுத்தலில் இருந்து தோன்றுகின்ற பிற்போடப்பட்ட வருமான வரிப் பொறுப்பு உள்ளவை தவிர அனைத்து வரிவிதிக்கத்தக்க தற்காலிக வித்தியாசங்களுக்குமானதாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளன.

பிற்போடப்பட்ட வருமான வரி சொத்துக்கள் கழிக்கப்படத்தக்க தற்காலிக வேறுபாடுகளுக்கெதிராக கிடைக்கத்தக்க வரி விதிக்கக் கூடியதாக நிகழக்கூடியதானவை என்ற ரீதியில் பயன்படுத்தப்படாத வரிச் சொத்துக்கள் மற்றும் பயன்படுத்தப்படாத வரி இழப்புகளின் முன் கொண்டு செல்லப்பட்ட அத்துடன் வியாபார இணைப்பொன்றான தல்லாத மற்றும் கொடுக்கல் வாங்கலின் போது கணக்கீட்டு இலாபத்தினையோ அல்லது வரி விதிக்கத்தக்க இலாபம் அல்லது நட்டம் ஆகிய இரண்டையும் பாதிக்காத கொடுக்கல் வாங்கலொன்றில் உள்ள சொத்து அல்லது பொறுப்பொன்றாக ஆரம்ப அடையாளப்படுத்தலில் இருந்து தோன்றுகின்ற கழிக்கப்படத்தக்க தற்காலிக வேறுபாடுகளுடன் தொடர்புறுகின்ற பிற்போடப்பட்ட வருமான வரி சொத்துக்கள் உள்ளவை தவிர பயன்படுத்தக் கூடிய முன் கொண்டு செல்லப்பட்ட

பயன்படுத்தாத வரிச் சொத்துக்கள் மற்றும் பயன்படுத்தாத வரி இழப்புகளின் அனைத்து கழிக்கப்படத்தக்க தற்காலிக வேறுபாடுகளுக்குமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

பிற்போடப்பட்ட வருமான வரிச் சொத்துக்கள் கொண்டுள்ள தொகை ஒவ்வொரு ஐந்தொகைத் திகதியன்றும் மீளாயப்பட்டு பயன்படுத்தப்படுவதற்கு பிற்போடப்பட்ட வருமான வரிச் சொத்தினை முழுமையான அல்லது பகுதியாக அனுமதிப்பதற்கு போதிய வரிவிதிப்பு இலாபம் கிடைக்கப்பெறும் என்பது இனிமேலும் சாத்தியமற்றது என்ற ரீதியில் குறைக்கப்பட்டுள்ளது.

பிற்போடப்பட்ட வருமான வரி சொத்துகளும் பொறுப்புகளும், சொத்து இனங் காணப்படுகின்றபோது அல்லது பொறுப்புத் தீர்ப்பனவு செய்யப்படுகின்றபோது ஐந்தொகைத் திகதியன்று சட்டமாக்கப்பட்டுள்ள அல்லது நிலையாக சட்டமாக்கப்பட்டுள்ள வரி விகிதங்களின் அடிப்படையில் (மற்றும் வரிச்சட்டங்கள்) ஆண்டொன்றுக்கு ஏற்புடையதாக எதிர்பார்க்கப்படுகின்ற வட்டி விகிதங்களில் அளவிடப்பட்டுள்ளன. பங்கு மூலதனத்தில் நேரடியாக இனங்காணப்பட்ட விடயங்களில் தொடர்புடைய பிற்போடப்பட்ட வருமான வரியானது, பங்கு மூலதனத்தில் இனங்காணப்பட்டுள்ளதுடன், வருமானக் கூற்றில் இனங்காணப்படவில்லை.

**விற்பனை வரி**

வருமானங்கள், செலவுகள் மற்றும் சொத்துகள் என்பன விற்பனைகள் வரி உள்ளடக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்ட பொருத்தமான, கிடைக்கப் பெறத்தக்க மற்றும் செலுத்தப்படத்தக்கவையாக சொத்துச் செலவு பகுதியொன்றாக அல்லது செலவு வகையொன்றின் பகுதியாக அடையாளப்படுத்தப்பட்ட விற்பனைகள் வரியாக இருக்கும் சந்தர்ப்பங்களில் சொத்துக்களின் அல்லது சேவையின் கொள்வனவொன்றின் மீது உறபட்ட விற்பனைகள், வரி, வரி விதிப்பு அதிகார சபைகளிடமிருந்து மீளப்பெற்றுக் கொள்ள முடியாதவை தவிர விற்பனைகள் வரியினுள் நிகரத் தொகை அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. வரிவிதிப்பு அதிகார சபைகளுடன் தொடர்புடைய மீளப் பெறத்தக்க அல்லது செலுத்தப்படத்தக்க விற்பனைகள் வரித் தொகை ஐந்தொகையில் மீளப்பெறத்தக்க அல்லது செலுத்தப்படத்தக்கவைகளின் பகுதியொன்றாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

**கடனாக்க செலவுகள்**

சொத்துகள் அவற்றின் உத்தேசிக்கப்பட்ட பயன்பாட்டிற்கு அல்லது விற்பனைக்கு தயார்படுத்துவதற்கு கணிசமான காலப்பகுதியினை அவசியமாக எடுக்கின்ற சொத்துகளாக தகைமை பெறுகின்ற சொத்துகளை பெற்றுக் கொள்வதற்கு, நிர்மாணிப்பதற்கு அல்லது உற்பத்தி செய்வதற்கு நேரடியாக சாட்டத்தக்க பொது அல்லது குறித்த கடன் பெறுதல் செலவுகள் அவற்றின் உத்தேசிக்கப்பட்ட பயன்பாட்டிற்கு அல்லது விற்பனை செய்வதற்கு சொத்துக்கள் கணிசமான அளவு தயாராக உள்ள அத்தகைய காலம் வரை அச் சொத்துக்களின் செலவுகளுக்கு சேர்க்கப்பட்டுள்ளன.

### 1.4.3. வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்கள்

கூட்டுத்தாபனத்தின் தொழிற்படு மற்றும் எடுத்துரைத்தல் நாணயமான இலங்கை ரூபாவில் நிதிக்கூற்றுகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டு நாணயங்களில் காணப்படும் கொடுக்கல் வாங்கல்கள் கொடுக்கல் வாங்கல் திகதியன்று நிலவுகின்ற தொழிற்பாட்டு நாணய விகிதத்தில் ஆரம்பத்தில் பதிவு செய்யப்படுகின்றன. வெளிநாட்டு நாணயங்களில் மாற்றப்பட்ட நாணயச் சொத்துகளும் பொறுப்புகளும் ஐந்தொகைத் திகதியன்று நிலவுகின்ற தொழிற்பாட்டு நாணயத்தின் நாணயமாற்று விகிதத்தில் மீள மாற்றம் செய்யப்பட்டுள்ளன. அனைத்து வித்தியாசங்களும் வருமானக் கூற்றுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. வெளிநாட்டு நாணயமொன்றில் வரலாற்றுச் செலவில் நியமங்களுக்கமைவாக அளவிடப்பட்ட நாணயம் சாரா விடயங்கள் ஆரம்பக் கொடுக்கல் வாங்கல்களில் திகதியன்று உள்ளவாறு நாணயமாற்று விகிதத்தினைப் பயன்படுத்தி நாணய மாற்றம் செய்யப்படுகின்றது. வெளிநாட்டு நாணயத்தில் நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நாணயம் சாரா விடயங்கள் நியாயப் பெறுமதி நிர்ணயிக்கப்படுகின்ற போது உள்ள திகதியில் நாணயமாற்று விகிதங்களைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றன.

### 1.4.4. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

பொறித் தொகுதியும் உபகரணங்களும் நாளாந்த சேவைகள் செலவு உள்ளடங்காது பெறுமதியின் ஒன்று சேர்ந்த பெறுமானத் தேய்வு மற்றும் குறைபாடுகள் கழிக்கப்பட்ட

விலையில் குறிப்பிடப்பட்டுள்ளன. அத்தகைய விலைகளானது அடையாளப்படுத்தல் மூலப் பிரமாணங்களுக்கு அமைவான தொகை இருப்பின் பொறித்தொகுதி மற்றும் உபகரணப் பாகங்களை மாற்றீடு செய்யும் போது உறப்பட்ட செலவினையும் உள்ளடக்குகின்றது. காணியும் கட்டிடங்களும் கட்டிடங்கள் மீதான தேய்மானம் கழித்த விலையில் மதிப்பீடு செய்ப்பட்டுள்ளன. சொத்தின் எஞ்சிய பெறுமதிகள், பயன்பாட்டு ஆயுட்காலம் மற்றும் பெறுமானத் தேய்வு முறைமைகள் ஒவ்வொரு நிதி ஆண்டும் பொருத்தமானதாக மீளாயப்பட்டு சரி செய்யப்படுகின்றது.

**அளவீடு**

சொத்தொன்றாக அடையாளப்படுத்துவதற்கான தகைமை பெறுகின்ற ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் வகையொன்று சொத்தினை அல்லது நிர்மாணத்தினை அல்லது பெறுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு நேரடியாக சாட்டத்தக்க கொள்வனவுச் செலவில் அதனோடிணைந்த இடைநேர் விளைவான, ஏதேனும் செலவுகளுடன் சேர்த்து ஆரம்பத்தில் அடையாளப்படுத்தப்படுகின்றன.

சுயமாக நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்களின் செலவு, பொருட்களுக்கான செலவு, நேரடியான ஊழியம், அவற்றின் உத்தேசிக்கப்பட்ட பயன்பாட்டு நிலைக்கு சொத்தினை கொண்டு வருவதற்கு நேரடியாக சாட்டத்தக்க ஏனைய ஏதேனும் செலவுகள் மற்றும் பாகங்களைப் பிரித்தல் மற்றும் அகற்றுதல் அத்துடன் அவை அமையப் பெற்றுள்ள இடத்திற்கு மீள் பொருத்துவதற்கான செலவு என்பவற்றை உள்ளடக்குகின்றது.

**செலவு மாதிரி**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களுக்கு செலவு மாதிரியினை பிரயோகிக்கின்றதுடன் ஒன்று திரட்டிய பெறுமானத் தேய்வு மற்றும் ஏதேனும் ஒன்று திரட்டிய குறைபாட்டு இழப்புகளை கழித்து, அவற்றுடனான ஏதேனும் இடைநேர் விளைவான செலவுகளுடன் சேர்த்து கொள்வனவு அல்லது நிர்மாணச் செலவில் பதிவு செய்கின்றது.

**தொடர் செலவுகள்**

ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண பொருளொன்றின் பாகம் மாற்றுதல் செலவு அப்பாகத்தினுள் அமையப் பெற்ற எதிர்கால நலன்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினுள் செல்லும் என்ற நிகழ்வுத் தன்மை இருக்குமிடத்தும் அதன் செலவு நம்பத்தகுந்தவாறு அளவிடக் கூடியதாகவிருப்பின் பொருள் கொண்டுள்ள தொகை அடையாளப்படுத்தப்படுகின்றது.

**மீளமைத்தல் செலவு**

மீளமைத்தல் அல்லது எதிர்கால பொருளாதார நலன்களை பேணுதல் நோக்கத்திற்காக ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களின் திருத்தங்கள் மற்றும் பராமரிப்புகளுக்காக உறப்பட்ட செலவு உறப்பட்டவாறு வருமானக் கூற்றில் அறவிடப்பட்டுள்ளது.

**இனங்காணாமை**

ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணமொன்று கொண்டுள்ள தொகை பயன்பாட்டிலிருந்து அகற்றுதல் அல்லது அதன் பயன்பாட்டில் அல்லது அகற்றுதலிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதார நலன்கள் இல்லாமையின் பேரில் அடையாளப்படுத்தாது விடப்படுகின்றது. ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணமொன்றின் அடையாளப்படுத்தாமையிலிருந்து தோன்றுகின்ற பெறுகை அல்லது இழப்பு பொருள் அடையாளப்படுத்தாது விடப்பட்ட போது வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**பெறுமானத்தேய்வு**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது வேறுபட்ட வகையான சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு வாழ்விற்கு பொருத்தமான காலப்பகுதியின் மீது நேர்நிலை அடிப்படையில் பெறுமானத் தேய்வு வழங்குகின்றது.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களுக்கான தேய்மான ஏற்பாடுகள்,சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு வாழ்வின் மீதான விகிதமுறை அடிப்படையினைப் பயன்படுத்தி நேர்நிலை அடிப்படையில் பெறுமானத் தேய்வு ஏற்பாடு செய்யப்படுகின்றது.

குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் சொத்தின் எஞ்சிய பெறுமதி, பன்னாட்டு ஆயுட்காலம், மற்றும் தேய்மான முறை மீளாய்வு செய்யப்படுவதுடன் பொருத்தமானவாறு சீர்செய்யப்படுகின்றது.

**முன்னெடுக்கப்படும் மூலதனப் பணி**

முன்னெடுக்கப்படும் மூலதனப் பணி, செலவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவை கட்டிட நிர்மாணம், பிரதான பொறித் தொகுதி, இயந்திரங்கள் மற்றும் முறைமை வடிவமைப்பு, முதலீடாக்களில் காத்திருப்பவற்றில் நேரடியாக உறப்பட்ட மூலதனத் தன்மையிலான செலவுகளாகும்.

**நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதிக்கழிவு**

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் அவை கொண்டுள்ள தொகை அறவிடப்படமுடியாது என்று குறித்துக் காட்டப்படும் சந்தர்ப்பத்தில் நிகழ்வுகள் அல்லது மாற்றங்கள் ஏற்படும் போது பெறுமதிக்கழிவுக்காக மீளாயப்படுகின்றன. பெறுமதிக் கழிவுக்கான இழப்பொன்று,சொத்துகள் கொண்டுள்ள தொகை அதன் அறவிடப்படுகின்ற தொகை விஞ்சுகின்ற தொகைக்காக அடையாளப்படுத்தப்படுகின்றது. அறவிடப்பட்ட தொகையானது விற்பனை செய்வதற்கும் பயன்பாட்டில் உள்ள பெறுமதிக்குமான செலவினை கழித்து சொத்தின் உயர்வான நியாயப் பெறுமதியாகும்.

பெறுமதிக் கழிவினை மதிப்பிடும் நோக்கத்திற்காக சொத்துக்கள் வேறாக இனங்காணத்தக்க காசுப்பாய்ச்சல்களாக (காசு ஈட்டும் அலகுகள்) இருக்கின்றன என்ற மட்டங்களில் சொத்துகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. பெறுமதிக் கழிவைக் கொண்ட நிதியல்லாத சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதிக்கும் பெறுமதிக்கழிவில் சாத்தியமாக பின்நோக்கி செல்லல் மீளாயப்படுகின்றன.

**1.4.5. முதலீடுகள்**

**துணை நிறுவனங்களில் முதலீடு**

துணை நிறுவனங்களில் உள்ள முதலீடுகள், திரட்டிய மற்றும் தனியான நிதியின் கூற்றுக்கள் மீது இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கமைவாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியியல் கூற்றுகளில் கணக்கீட்டு செலவு முறையின்கீழ் கணிக்கப்படுகின்றன.

அதற்கமைய, துணை நிறுவனங்களிலான முதலீடுகள் ஏதேனும் குறைபாட்டு இழப்புகள் இருப்பின் கழித்து இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**முதலீட்டு ஆதனங்கள்**

**அடையாளப்படுத்துதல் அடிப்படை**

வாடகை உழைக்கின்ற அல்லது மூலதன அதிகரித்தலுக்கான அல்லது இரண்டுக்குமான அத்துடன் முதலீட்டு ஆதனங்களுடன் இணையப்பெற்ற எதிர்கால பொருளாதார நலன்கள் ஆனால் சாதாரண வியாபாரத்தில் விற்பனைக்காக அல்லாத ஆதனம் முதலீட்டு ஆதனமாகும்.

**அளவீடு**

முதலீட்டு ஆதனம் நிதியியல் கூற்றுக்களில் செலவு முறையின் கீழ் கணிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய சொத்தொன்றாக அடையாளப்படுத்தப்பட்டதன் பின்னர் ஆதனமானது ஒன்று திரட்டிய தேய்மானம் மற்றும் குறைபாட்டு இழப்புக்களை கழித்து செலவில் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

**பெறுமானத் தேய்வு**

பெறுமானத் தேய்வானது கொள்வனவுத் திகதியிலிருந்து பயன்பாட்டில் இருந்து அகற்றும் திகதி வரை சொத்து வகுப்புக்களின் மதிப்பிடப்பட்ட ஆயுட்காலம் மீது நேர் நிரை அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**இனங்காணாமை**

முதலீட்டு ஆதனங்கள், எதிர்கால நலன்கள் எதிர்பார்க்கப்படாமையினால் அகற்றப்பட்டு அல்லது நிரந்தமாக மீளப் பெறப்படும் போது இனங்காணாது விடப்பட்டுள்ளது. பயன்பாட்டில் மாற்றங்கள் உள்ள போது மாத்திரம் முதலீட்டு ஆதனங்களுக்கு அல்லது ஆதனங்களிலிருந்து இடமாற்றங்கள் செய்யப்படுகின்றன.

**1.4.6.பதிவேட்டுப் பொருட்கள்**

பதிவேட்டுப் பொருட்கள், பயன்பாட்டிலிருந்து ஒதுக்குதல் மற்றும் மெதுவாக அசையும் பொருட்கள் என்பவற்றிற்கான போதிய ஒதுக்கீடுகள் செய்யப்பட்டதன் பின்னர் குறைந்த விலையில் அல்லது நிகர தேறத்தக்க பெறுமதியில் விலை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. நிகர தேறத்தக்க பெறுமதியானது விற்பனை மேற்கொள்வதற்கு அவசியமான மதிப்பிடப்பட்ட செலவு என்பனவற்றைக் கழித்து சாதாரண வியாபாரத்தில் பதிவேட்டுப் பொருட்கள்

விற்பனை செய்யக்கூடிய விலையில் விலை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போதைய அமைவிடத்திற்கும் நிலைக்கும் பதிவேட்டுப் பொருட்களை கொண்டு வருவதற்கு உறப்பட்ட செலவு பின்வரும் செலவுச் சூத்திரத்தினைப் பயன்படுத்தி கணக்கிடப்பட்டது:

| | |
|---|---|
| மூலப் பொருட்கள் | முதலில் உள்வந்தது முதலில் வெளிச் செல்லல் - அடிப்படையில் கொள்வனவுச் செலவில் |
| முடிவுப் பொருட்கள்<br>அ) சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் | நேரடி பொருட்கள், நேரடி தொழிலாளர் மற்றும் சாதாரண தொழிற்பாட்டு கொள்வனவு அடிப்படையினை கொண்டு தயாரித்தல் மேலதிக செலவுகளின் பொருத்தமான பகுதியொன்றின் செலவில் ஆனால் கடன் பெறல் செலவுகள் உள்ளடங்காது.<br>- |
| ஆ) இறக்குமதிகள் | முதலில் உள்வந்தது, முதலில் வெளிச் செல்லல் அடிப்டையில் கொள்வனவுச் செலவில் |
| முன்னெடுக்கப் படும் பணி<br>அ)சுத்திகரிப்பட்ட உற்பத்திகள் | நேரடி பொருட்கள், நேரடி தொழிலாளர் மற்றும் சாதாரண தொழிற்பாட்டு கொள்வனவு அடிப்படையான கொண்டு தயாரித்தல் மேலதிக செலவுகளின் பொருத்தமான பகுதியொன்றின் செலவில் ஆனால் கடன் பெறுதல் செலவுகள் உள்ளடக்காது. |
| ஆ) இறக்குமதிகள் | முதலில் உள்வந்தது, முதலில் வெளிச் செல்லல் அடிப்டையில் கொள்வனவுச் செலவில் |
| நுகரத் தக்கவையும் உதிரிப் பாகங்களும் | நிறையிடப்பட்ட சராசரி அடிப்படையில் கொள்வனவுச் செலவில் |
| நுகரத் தக்கவையும் உதிரிப் பாகங்களும் | நிறையிடப்பட்ட சரசரி அடிப்படையில் கொள்வனவுச் செலவில் |

### 1.4.7. வணிக மற்றும் ஏனைய கிடைக்கப் பெறத்தக்கவை

வணிக கிடைக்கப் பெறத்தக்கவைகள், எரிபொருள் விற்பனைக்காக வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைக்கத்தக்க நிலுவைத் தொகைகளாகும். வணிக கிடைக்கப் பெறத்தக்கவை ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அடையாளப்படுத்தப்பட்டு அதனைத் தொடர்ந்து செயற்பாட்டு வட்டி முறையினைப் பயன்படுத்தி பெறுமதிக் கழிவில் அளவிடப்பட்டது. தொடர்புடைய திறத்தவர்களிடமிருந்தான ஏனைய கிடைக்கப் பெறத்தக்கவைகளும் நிலுவைகளும் பெறுமதிக் கழிவிற்கான ஏற்பாட்டினை கழித்து கிரயத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

### 1.4.8. காசும் காசுக்கு சமமானவையும்

காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் கையிலுள்ள காசு, கேள்வி கையிருப்புக்களும் குறுகிய கால உயர் திரவத் தன்மை கொண்ட முதலீடுகளும் பெறுமதி மாற்றத்தில் முக்கியமற்ற ஆபத்துக்குட்பட்ட அறியப்பட்ட தொகைகளுக்கு உடனடியாக மாற்றக் கூடியன என்பனவாகும். காசுப்பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காக கையிலுள்ள காசு, நிகர வங்கி மேலதிக பற்று நிலுவைகளின் வங்கிகளில் உள்ள வைப்புகளை காசு மற்றும் காசுக்கு சமமானவை உள்ளடங்குகின்றன. குறுகிய முதிர்வுகளுடனான முதலீடு அதாவது பெற்றுக்கொள்ளல் திகதியிலிருந்து மூன்று மாதங்கள் அல்லது அதனை விடக் குறைந்த காலம் கொண்டவையும், காசு மற்றும் காசுக்கு சமமானவையாக கொள்ளப்பட்டுள்ளன.

### 1.4.9. ஏற்பாடுகளும் பொறுப்புகளும்

**ஏற்பாடுகள்**

கடப்பாடுகளைத் தீர்ப்பனவு செய்வதற்கு பொருளாதார நலன்களை தன்னகத்தே கொண்ட வள வெளிப் பாய்ச்சல்லொன்று தேவைப்படும் என்றும் கடப்பாடுகளின் தொகைகளுக்கு நம்பத் தகுந்த மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட முடியும் என்றும் நிகழத்தக்க கடந்த கால நிகழ்வொன்றின் விளைவாக கூட்டுத்தாபனம் தற்போது கடப்பாடு (சட்ட அல்லது பயன்மிகு) கொண்டுள்ளபோது ஏற்பாடுகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. சில அல்லது அனைத்து ஏற்பாடுகளும் மீள் நிரப்பப்படுவதற்கு கம்பனி எதிர்பார்க்கும் போது நிரப்பலானது அந்த மீள் நிரப்பல் அநேகமாக நிச்சயமாக இருப்பின் மாத்திரம் வேறான சொத்தொன்றாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. ஏதேனும் ஏற்பாடுகளுடன் தொடர்புடைய செலவு ஏதேனும் தேறிய மீள் நிரப்பலுக்காக வருமானக் கூற்றில்

எடுத்துரைக்கப்பட்டுள்ள பணப் பெறுமதின் காலத்தாக்கம் முக்கியமானதாக இருப்பின் பணப் பெறுமதிக் காலத்தில் நடைமுறைச் சந்தை மதிப்பீடுகளைப் பிரதிபலிக்கின்ற வரி விகிதத்திற்கு முந்திய எதிர்கால காசுப் பாய்ச்சலில் எதிர்பார்க்கப்பட்ட மற்றும் பொருத்தமாயின், பொறுப்பிற்கான ஆபத்துக்களில் விலைக்கழிவு மூலம் ஏற்பாடுகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. விலைக் கழிவு பயன் படுத்தப்பட்டபோது காலப் பெயர்ச்சியின் காரணத்தினால் ஏற்பாடுகளில் உள்ள அதிகரிப்பு வட்டிச் செலவொன்றாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

**பணிக்கொடை**

அனைத்து ஊழியர்களுக்குமென சேவையின் முதல் வருடத்திலிருந்து ஓய்வுப் பணிக் கொடைகளுக்காக நிதியியல் கூற்றுக்களில் ஏற்பாடொன்று செய்யப்படுகின்றது. பணிக் கொடையானது அறிக்கையிடும் கால இறுதியில் உள்ள கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியாகும். இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை கணக்கீட்டு நியமம் - 19 இல் பரிந்துரைக்கப்பட்ட எதிர்வுகூறப்பட்ட அலகு வரவு முறையினைப் பயன்படுத்தி ஓய்வு நலன்களைக் கணித்துள்ளது. வரையறை செய்யப்பட்ட நலக் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதி, இலங்கையில் நிறுவன முறிகளுக்கான மதிப்பிடப்பட்ட ஆழ்ந்த சந்தையொன்று இல்லாமையின்போது அரசாங்க முறிகளின் வட்டி வீதங்களைப் பயன்படுத்தி மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களை தள்ளுபடி செய்வதன் மூலம் நிர்ணயிக்கப்படுகின்றது.

இடம்பெற்ற சரிப்படுத்தல்களில் இருந்து தோன்றுகின்ற காப்பீட்டுக் கணிப்பு பெறுகை/இழப்பு அத்துடன் காப்பீட்டுக் கணிப்பு ஊகங்களில் உள்ள மாற்றங்கள் அவை தோன்றுகின்ற காலப்பகுதியில் ஏனைய விரிவான வருமானத்தில் அறவிடப்பட்டுகின்றன அல்லது வரவு வைக்கப்படுகின்றன. கடந்த சேவைகள் கிரயங்கள் விரிவான வருமானக் கூற்றில் உடனடியாக அடையாளப்படுத்தப்படுகின்றன.

**வரையறை செய்யப்பட்ட பங்களிப்புத் திட்டம் - ஊழிய சேமலாப நிதியம் மற்றும் ஊழிய நம்பிக்கை பொறுப்பு நிதியம்**

தொடர்புடைய நியதிச் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கமைவாக ஊழியர்கள் ஊழிய சேமலாப மற்றும் ஊழிய நம்பிக்கைப் பொறுப்பு நிதிய பங்களிப்புகளுக்கு உரித்துடையவராவர். கூட்டுத்தாபனமானது ஊழியர்களின் மொத்த வேதனத்தில் முறையே 15% மற்றும் 3% இனை ஊழிய சேமலாப நிதியம் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புச் செய்கின்றது.

### 1.4.10. மூலதன ஒதுக்கு

அரசாங்கத்தின் திரட்டு நிதியத்திலிருந்து கிடைக்கப் பெற்ற குறித்த தொகைகளும், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கான பின்னுரித்தாளியின் விநியோகிக்கப்பட்ட மூலதனத்தினை இறுதியாகத் தோற்றுவிக்கின்ற மீள் கட்டமைத்தல், விற்பனை வரவுகளின் தேறிய பெறுமதி என்பன மூதன ஒதுக்கு ஒன்றுக்கு வரவு வைக்கப்பட்டுள்ளன.

### 1.4.11. வர்த்க ரீதியாகச் செலுத்தத் தக்கவை

வர்த்தக ரீதிாகச் செலுத்தத் தக்கவை என்பது சாதாரண வியாபார நடவடிக்கையின் போது கூட்டுத்தாபனத்தின் வழங்குனர்களுக்குச் செலுத்த வேண்டிய கடப்பாடுகளாகும். செலுத்தத் தக்கவை ஆரம்பத்தில், நியாயப் பெறுமதியில் இனங் காணப்பட்டு, அதனைத் தொடர்ந்து பெறுமதிக் குறைப்புச் செலவு அளவிடப்படுகின்றது.

### 1.4.12. நிதியியல் சாதனங்கள்

சாதனத்தின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கான தரப்பினர் ஒருவராக கூட்டுத்தாபனம் ஆகுகின்ற போது, நிதிச் சொத்துகளும் பொறுப்புகளும் இனங் காணப்படுகின்றன. சொத்துகள் காலாவதியாகியதிலிருந்து அல்லது மாற்றப்பட்டதிலிருந்து அத்துடன், கூட்டுத்தாபனம் அனைத்து உரிமைத்துவ இடர்களையும், வெகுமதிகளையும் கணிசமான அளவில் மாற்றம் செய்துள்ள போது காசுப் பாய்ச்சல் கிடைக்கப் பெறுவதற்கான உரிமைகளின் போது, நிதிச் சொத்துகள் இனங்காணாது விடப்படுகின்றன. ஒப்பந்தத்தில் குறித்துரைக்கப்பட்ட கடப்பாடு நிறைவேற்றப்படுகின்ற போது, இரத்துச் செய்யப்படுகின்ற போது அல்லது காலாவதியாகின்ற போது நிதிப் பொறுப்புகள் இனங்காணாது விடப்படுகின்றன.

ஆரம்ப இனங்காணலில் கூட்டுத்தாபனமானது அதன் நிதியியல் சாதனங்களை பின்வரும் வகைகளாக வகைப்படுத்துகின்றது.

**(i) விற்பனைக்கு கிடைக்கத்தக்க முதலீடுகள்**

விற்பனைக்காக கிடைக்கத்தக்க முதலீடுகளானவை இவ்வகுப்பில், நியமிக்கப்பட்டவையோ அல்லது ஏதேனும் வேறு வகுப்பில் வகைப்படுத்தப்படாத பெறுதிகள் அற்றவையாகும். கூட்டுத்தாபனத்தின் விற்பனைக்காகக் கிடைக்கத்தக்க சொத்துகளானவை காசுக்கு நிகரானவையாக தகுதி பெறாதவை தவிர, பங்கு மூலதனப் பிணையங்களிலுள்ள (பட்டியலிடப்பட்டவையும், பட்டியலிடப்படாதவையும் ஆகும்) முதலீடுகளை உள்ளடக்குகின்றது. விலை குறிக்கப்பட்ட பங்கு மூலதன முதலீடுகளுக்கான நியாயப் பெறுமதிகள் செயற்பாடு மிக்க சந்தையில் குறிக்கப்படும் பொது விலையினை தொடர்புபடுத்துவதன் மூலம் நேரடியாக நிர்ணயிக்கப்படுகின்றன.

### (ii) கடன்களும் வருமதிகளும்

கடன்களும் வருமதிகளும், செயற்பாடு மிக்க சந்தையொன்றில் விலை குறிக்கப்படாத நிலையான அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவுகளுடன் கூடிய பெறுதியற்ற நிதியியல் சொத்துகளாகும். கூட்டுத்தாபனத்தின் கடன்களும் வருமதிகளும், வர்த்தகக் கிடைக்கத்தக்கவை ஊழியர் கடன்கள் மற்றும் காசுக்கும் சமனானவை ஆகியவற்றை உள்ளடக்குவதுடன், நடைமுறை மற்றும் நடைமுறை அற்ற சொத்துகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. கடன்களும் வருமதிகளும் நியாயப் பெறுமதிக்கு கடன்களையும் வருமதிகளையும் குறைப்பதற்காக முக்கிய மற்றும் கழிவு காணப்படுகின்றபோது குறைத்து கிடைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற தொகையில் ஆரம்பத்தில் இனங் காணப்படுகின்றன. அதனைத் தொடர்ந்து, கடன்களும் வருமதிகளும் விளைவு வட்டி முறையினைப் பயன்படுத்தி பெறுமதிக் கழிவிற்கான ஏற்பாட்டினைக் கழித்து பெறுமதிக் கழிப்பில் அளவிடப்படுகின்றன.

### (iii) முதிர்வு முதலீட்டுக்காக பிடித்து வைக்கப்பட்டவை

நிலையான அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவுடன் கூடிய நிதியியல் சொத்துகள் அத்துடன், நிலையான முதிர்வுகள் என்பன இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முதிர்வுக்காக அவற்றைப் பிடித்து வைத்திருப்பதற்கு சாத்தியமான நோக்கத்தினையும், இயலுமையினையும் கொண்டிருக்கின்றபோது முதிர்வுக்காக பிடித்து வகைக்கப்பட்டவையாக வகைப்படுத்தப்படுகின்றன.

ஆரம்ப அளவீடுகளின் பின்னர், முதிர்வுக்காக பிடித்து வைக்கப்பட்டவை விளைவு வட்டி முறையினைப் பயன்படுத்தி ஏதேனும் பெறுமதிக் குறைவினைக் கழித்து, மதிப்புக் குறைப்பு செலவில் அளவிடப்படுகின்றன.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முதிர்வுக்காகப் பிடித்து வைக்கப்பட்டுள்ள முதலீடுகள் முதிர்வு வரை அவற்றை வைத்திருப்பதற்கான நோக்கத்துடன் பிடித்து வைக்கப்படுகின்ற திறைசேரி முறிகளை உள்ளடக்குகின்றது.

### (iv) மதிப்புக் குறைப்புச் செலவில் நிதியியல் பொறுப்புகள்

மதிப்பு குறைக்கப்பட்ட செலவில், நிதியியல் பொறுப்புக்களானவை வர்த்தக ரீதியாகக் கொடுப்பனவு செய்யத்தக்கவை வங்கிப் படுகடன்கள் மற்றும் நீண்ட காலப் படுகடன்கள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. வர்த்தக ரீதியாகக் கொடுப்பனவு செய்யத்தக்கவையும், நியாயப் பெறுமதிக்கு கொடுப்பனவு செய்யத் தக்கவையினைக் குறைப்பதற்கு முக்கிய, கழிவொன்று உள்ளபோது கழித்து கொடுப்பனவு செய்யப்பட்ட வேண்டிய தொகையில் ஆரம்பத்தில் இனங் காணப்படுகின்றது.

### நிதியியல் சொத்துகளின் பெறுமதிக் குறைப்பு

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும், நிதியியல் சொத்தொன்று பெறுமதி குறைந்துள்ளது என்ற உண்மையான சான்று உள்ளதா என்பதனை கூட்டுத்தாபனம் மதிப்பிடுகின்றது. மதிப்பு குறைத்தல் இழப்பு ஒன்றின் உண்மையான சான்று உள்ளதா என்பதனை நிர்ணயிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் மூலப்பிரமாணங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது.

(i) கடப்பாட்டளரின் முக்கிய நிதியியல் கஷ்டம்

(ii) அடிப்படை கொடுப்பனவின் வட்டியில் மாறுபாடுகள்

(iii) கடன்பட்டவர் வங்குரோத்துக்கு அல்லது ஏனைய நிதிசார் மீள் அமைப்பிற்கு உட்படுவார் என்ற நிகழ்வு தோற்றம் பெறுதல்.

பங்கு மூலதனப் பிணையங்களுக்காக, அதன் செலவிற்குக் கீழ் பிணையத்தின் நியாயப் பெறுமதியின் குறிப்பிடத்தக்க அல்லது நீண்ட வீழ்ச்சியும் சொத்துகள் பெறுமதி குறைக்கப்பட்டுள்ளன என்பதற்கு சான்றாகும். அத்தகைய சான்றுகள் காணப்படுமிடத்து, பெறுமதிக் குறைப்பு நட்டமொன்றினைக்

கூட்டுத்தாபனம் பின்வருமாறு இனங் காண்கின்றது.

(i) பெறுமதி கழிக்கப்பட்ட செலவில் கொண்டு செல்லப்படும் நிதியியல் சொத்துகள் :
நட்டமானது கடன் அல்லது கிடைப்பனவின் பெறுமதி கழிக்கப்பட்ட செலவு மற்றும் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சலின் தற்போதைய பெறுமதிக்கும், இடையிலான சாதனத்தின் அடிப்படை விளைவு வட்டி வீதத்தினைப் பயன்படுத்தி கழிவு செய்யப்பட்ட வேறுபாடாகும். சொத்தின் கொண்டு செல்லும் தொகையானது கணக்கிற்கு ஒதுக்கீடு ஒன்றின் பயன்பாட்டின் ஊடாக நேரடியாகவோ, நேரடியின்றியோ இத்தொகையினால் குறைக்கப்படுகின்றது.

(ii) விற்பனை நிதியியல் சொத்திற்காகக் கிடைக்கத்தக்கவை :
பெறுமதிக் குறைப்பு நட்டமானது சொத்தின் அடிப்படை செலவிற்கும் அளவீட்டுத் திகதியில் உள்ளவாறு அதன் நியாயப் பெறுமதிக்கும் இடையிலான விரிவான வருமானக் கூற்றில் இனங் காணப்பட்ட ஏதேனும் முன்னைய பெறுமதிக் குறைப்பு நட்டங்களைக் கழித்த வேறுபாடொன்றாகும். இத் தொகையானது, தேறிய வருமானத்திற்கு மீள் வகைப்படுத்தப்பட்டுள்ள திரண்ட ஏனைய விரிவான வருமானத்தில் உள்ள நட்டத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்து கின்றது.

பெறுமதிக் கழிக்கப்பட்ட செலவில் கொண்டு செல்லப்படும் நிதியியல் சொத்துகள் மீதான பெறுமதிக் குறைப்பு நட்டங்கள், பெறுமதிக் குறைப்பு இனங்காணப்பட்ட பின்னர் நிகழ்கின்ற நிகழ்வொன்றுக்கு பொருண்மையாக தொடர்புபடக் கூடிய நட்டக் குறைப்புகளினது தொகையாகவிருப்பின் அதனைத் தொடர்ந்த காலத்தில் திருப்பப்படுகின்றன.

### 1.5 எதிர்பாரா பொறுப்புகள், வழக்காடல்கள் மற்றும் கடமைப் பொறுப்புகள்

பொருளாதார நலன்களை மாற்றுவது நிகழாததாக அல்லது நம்பத்தகுந்தவாறு அளவிடமுடியாதாக இருக்கின்ற நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் அல்லது தற்போதய கடப்பாடுகள் மூலம் மாத்திரம் அதன் உள்ள தன்மை உறுதிப்படுத்தப்படும் சாத்தியமான கடப்பாடுகள் எதிர்பாராப் பொறுப்புகளாகும். எதிர்பாரப் பொறுப்புகள் ஐந்தொகையில் இனங்காணப்படவில்லை ஆனால் அவை சேய்மையில் இல்லாத விடத்து வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**2. வருமானம்**

| | இபெகூ | | குழு | |
|---|---|---|---|---|
| | 2015 | 2014 | 2015 | 2014 |
| | ரூபா. மில் | ரூபா. மில் | ரூபா. மில் | ரூபா. மில் |
| பெற்றோலிய உற்பத்திகள் தேறிய விற்பனை வருமானம் | 376,734.487 | 525,182.094 | 376,281.320 | 525,182.094 |
| முனையக் கட்டணமம் ஏனைய வருமானமும் | - | - | 980.332 | 1,986.618 |
| | **376,734.487** | **525,182.094** | **377,261.652** | **527,168.712** |

| 3. விற்பனைச் செலவுகள் | இ.பெ.கூ | | குழு | |
|---|---|---|---|---|
| | 2015 | 2014 | 2015 | 2014 |
| | ரூபா. மில் | ரூபா. மில் | ரூபா. மில் | ரூபா. மில் |
| விற்பனைச் செலவுகள் | 336,479.470 | 499,155.298 | 336,479.470 | 499,155.311 |
| தொழிற்பாட்டு நட்டம் ∴ (இலாபம்) | 639.174 | 800.241 | 639.174 | 800.228 |
| நேரடிச் செலவுகளும் ஏனையவையும் | - | - | 6,183.171 | 6,878.642 |
| மொத்த விற்பனைச் செலவுகள் | **337,118.644** | **499,955.539** | **343,301.815** | **506,834.181** |

உற்பத்திச் செலவு மற்றும் பெற்றோலிய பொருட்கள் இறக்குமதி செய்வதன் மீது, இறக்குமதிச் செலவு தீர்வைகள், துறைமுக மற்றும் விமான அறவீடு, நாணயக் கடிதங்கள் திறத்தல் மற்றும் ஏற்றுக் கொள்ளல் கட்டணங்கள், வழங்குனர் வட்டி, துறைமுகக் கட்டணம், பரிசோதனைக் கட்டணங்கள், போக்குவரத்துக் கட்டணங்கள் போன்றவற்றை விற்பனைச் செலவுகள் உள்ளடக்குகின்றன.

| 4. ஏனைய தொழிற்படுத்தல் வருமானம் | இ.பெ.கூ | | குழு | |
|---|---|---|---|---|
| | 2015 | 2014 | 2015 | 2014 |
| | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் |
| ஊழியர் கடன் வட்டி | 173.181 | 145.061 | 530.949 | 379.285 |
| வாடகை வருமானம் | 53.938 | 50.009 | 56.030 | 45.636 |
| எரிபொருள் நிலைய உபகரணங்கள் விற்பனை வருமானம் | 16.642 | 25.940 | 16.642 | 30.730 |
| பங்கிலாப வருமானம் | 0.004 | 437.501 | 0.004 | 437.500 |
| நானாவித வருமானம் | 82.625 | 81.141 | 233.017 | 303.965 |
| | **326.391** | **739.652** | **836.644** | **1,197.116** |

நிரந்தரச் சொத்துகள், ஒதுக்கப்பட்ட பொருட்கள் விற்பனை, வாடகை வருமானம், வழங்குனர் பதிவு செய்வதற்கான கட்டணங்கள், முறிகளைப் பணமாக்குதல், தண்டப் பணங்கள் ஆகியவற்றை நானாவித வருமானம் உள்ளடக்குகின்றது.

| | | | | |
|---|---|---|---|---|
| **5. முதலீட்டு ஆதனம் மீதான வருமானம்** | **47.590** | **51.823** | **47.590** | **51.823** |

வாடகைக்கு விடப்பட்ட ப்ளவர் வீதியில் அமைந்துள்ள ஆதனம், எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்து கிடைக்கப்பட்ட வாடகையினை முதலீட்டு ஆதனம் மீதான வருமானம் உள்ளடக்குகின்றது.

**6. தொழிற்படுத்தல் வருமானம்**

பின்வரும் செலவுகள் விதிக்கப்பட்ட பின்னர் தொழிற்படு செலவுக

| செலவுகளின் தன்மை | இ.பெ.கூ | |
|---|---|---|
| | 2015 | 2014 |
| | ரூபா.மில | ரூபா.மில |
| பணிப்பாளர்கள் வேதனாதிகள் | 2.487 | 0.832 |
| கணக்காய்வாளர் ஊதியம் | 1.000 | 1.000 |
| பெறுமானத் தேய்வு (குறிப்பு 11) | 758.605 | 494.584 |
| ஊழியர் நலன்கள் | 2,239.969 | 1,909.652 |
| வாடகையும் வரிப்பணங்களும் | 52.558 | 81.019 |
| விற்பனைச் செலவுகள் | 336,479.470 | 499,155.298 |
| உற்பத்தி மாறுபாடு | 639.174 | 800.241 |
| திருத்தங்களும் பராமரிப்பும் | 177.247 | 377.378 |
| போக்குவரத்து | 2,623.193 | 1,993.624 |
| முனையக் கட்டணம் | 8,865.130 | 7,699.539 |
| விளம்பரச் செலவுகள் | 30.057 | 233.823 |
| சட்டக் கட்டணங்களும் ஏனைய தொழில் சார் கட்டணங்களும் | 67.119 | 70.168 |
| அனுமதிக்கப்பட்டாத பெ.சே.வ | 1,280.392 | 2,741.436 |
| வராகடன் / பதிவழிப்பு | 8.405 | 3.855 |
| ஏனையவை | 325.307 | 829.989 |
| **மொத்த விற்பனைச் செலவுகள், விநியோகச் செலவுகள் ம** | **353,550.111** | **516,392.438** |

| | இ.பெ.கூ | | குழு | |
|---|---|---|---|---|
| | 2015 | 2014 | 2015 | 2014 |
| 7. நிதி வருமானம | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் |
| திறைசேரி உண்டியல்கள், நிலையான வைப்புகள், அழைப்பு வைப்புகள் மீதான வட்டி வருமானம் | 2,782.123 | 1,222.395 | 2,807.933 | 1,251.092 |
| வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு மீதான வட்டி வருமானம | 1,045 | 1.801 | 1.045 | 1.801 |
| கடன் பட்டியல், நிலுவை வர்த்தகப் படுகடன்கள் மீதான வட்டி வருமானம் | 42.664 | 115.698 | 42.664 | 11.698 |
| இ.மி.ச.்.. சுயாதீன மின் உற்பத்தியாளர்கள்.். விமானத்துறை படுகடன் மீதான வட்டி வருமானம் | 1,105.732 | 1,961.930 | 1,105.732 | 1,961.930 |
| திறைசேரி முறிகள் மீதான வட்டி வருமானம் | 978.783 | 655.409 | 998.783 | 728.233 |
| | **4,910347** | **4,030.057** | **4,936.157** | **4,058.754** |

**8. ஹெட்ஜிங் செலவுகள்**

சர்வதேச பிணக்கு தீர்ப்பதற்கான சர்வதேச மன்றத்தின் முன்னால் இலங்கைக்கு எதிராக டொய்ஷ்ச் வங்கி வழக்கு தொடுத்திருந்தது. இதனுடன் தொடர்புபட்ட 2015 நவம்பர் 18 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மாத்திற்கமைவாக கூட்டுத்தாபனம் சொல்லப்பட்ட தீர்ப்பனவு ஒன்றிற்கு உடன்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டில் டொய்ஷ்ச் வங்கிக்கு

**9. திறைசேரிக்கான விசேட கட்டணம**

| | | | | |
|---|---|---|---|---|
| 2014-2024 ஆண்டுக்குச் செயற்படத் தக்கவாறு பொதுத் திறைசேரி கட்டணமொன்றினை அறவிட்டது. | 750.000 | 250.000 | 750.000 | 250.000 |

| 10. நிதிச் செலவுகள் | 2015 | 2014 | 2015 | 2014 |
|---|---|---|---|---|
| | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் |
| நீண்டகாலக் கடன்கள் மீதான வட்டி | 61.147 | 71.782 | 61.147 | 71.782 |
| வங்கி மேலதிகப் பற்று மீதான வட்டி | - | 30.346 | - | 30.346 |
| வெளிநாட்டு நாணய வங்கிக் கடன்கள் மீதான வட்டி | 14,975.672 | 13,156.730 | 14,975.672 | 13,156.730 |
| திறைசேரி முறிகள் மீதான நட்டம் | - | 702.717 | - | 702.717 |
| ஏனைய நிதிச் செலவுகள் | 11.841 | 18.060 | 11.841 | 18.060 |
| | **15,048.660** | **13,979.634** | **15,048.660** | **13,979.634** |

**11. வருமான வரி**

2011.். 2012 வரியாண்டுகளில் இருந்து ஆரம்பிக்கின்ற 05 வருட காலத்திற்கு வர்த்தக இலாபத்தின் மீது வருமான வரி செலுத்துவதற்கு கூட்டுத்தாபனம் விலக்களிக்கப்பட்டுள்ளது. வர்த்தக இலாபம் மீது இ.பெ.கூ. விலக்களிக்கப்பபட்டிருந்த போதிலும், ஏனைய வருமான மூலங்கள் மீது 28% வரி வருமானம் செலுத்துவதற்கு கூட்டுத்தாபனம் பொறுப்புடையதாகும்.

. அதற்கமைய 2011/ 2012 தொடக்கம் 2012/ 2013 வரை ஆரம்பிக்கின்ற வரியாண்டுகளுக்கான வரிப் பொறுப்புகள், உள்நாட்டு அரசிறைத் திணைக்களத்தினால் நிறைவு செய்யப்பட்டு 2013/2014 தொடக்கம் 2015/2016 வரையான ஆண்டுகளுக்காக அதே அடிப்படையில் பிரயோகிக்கப்பட்டுள்ளது.

| | இ.பெ.கூ | | குழு | |
|---|---|---|---|---|
| | 2015 | 2014 | 2015 | 2014 |
| | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் |
| | ரூபா.மில் | | ரூபா.மில் | |
| ஆண்டுக்கான விதிப்பனவு | 634.384 | | 921.369 | 275.168 |
| முன்னைய ஆண்டுக்கான குறைவான ஏற்பாடு | 924.879 | | 924.879 | - |
| மொத்தம் | **1,559.263** | - | **1,846.248** | 275.168 |

### 12.ஆதனம் பொறித் தொகுதி உபகரணங்கள்

#### 12.1 மொத்த கொண்டு செல்லம் தொகை

| செலவு | காணி கட்டங்கள் | உரிதளிக்கப்பட் ஆதனம் | யாறித்தொகுதி உபகரணங்கள் | எஸ்பஜ எம் வசதிகள் | மோட்டார் வாகனங்கள் | பொருத்துகள் உபகரணம் சொத்துகள் | இ பெ கூ மொத்தம் | குழு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் |
| **2015.01.01 இல் மீதி** | 4,318.419 | 1.016 | 8,548.810 | 2,142.422 | 514.651 | 2,151.987 | 17,677.305 | 45,015.329 |
| சேர்தல்கள் | 142.258 | | 213.668 | | 355.998 | 25.247 | 737.171 | 853.153 |
| அகற்றல்கள் | (0.005) | | (15.134) | | (18.859) | (13.344) | (47.342) | (59.926) |
| **2015.12.31 இல் மீதி** | **4,460.672** | **1.016** | **8,747.344** | **2,142.422** | **851.790** | **2,163.890** | **18,367.134** | **45,808.556** |

#### 12.2 தேய்மானம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **2015.01.01 இல் மீதி** | 472.499 | 0.397 | 3,798.963 | 1,290.634 | 281.260 | 1,501.459 | 7,345.212 | 17,452.180 |
| சேர்தல்கள் | 138.976 | | 626.618 | | 76.393 | 91.790 | 933.790 | 1,758.682 |
| அகற்றல்கள் | | | (12.449) | | (18.859) | (0.095) | (31.403) | (43.987) |
| **2015.12.31 இல் மீதி** | 611.475 | 0.397 | 4,413.134 | 1,290.634 | 338.794 | 1,593.154 | 8,247.588 | 19,166.875 |
| **2015.12.31 இல் தேறிய புத்தகப் பெறுமதி** | **3,849.197** | **0.619** | **4,334.210** | **851.788** | **512.996** | **570.736** | **10,119.545** | **26,641.681** |
| **2015.12.31 இல் செலவு** | 4,318.419 | 1.016 | 8,548.810 | 2,142.422 | 514.651 | 2,151.987 | 17,677.305 | 45,015.329 |
| **2014.12.31 இல் திரட்டிய தேய்மானம்** | 472.499 | 0.397 | 3,798.963 | 1,290.634 | 281.260 | 1,501.459 | 7,345.212 | 17,452.179 |
| **2014.12.31 இல் தேறிய புத்தகப் பெறுமதி** | **3,845.920** | **0.619** | **4,749.847** | **851.788** | **233.391** | **650.028** | **10,332.093** | **27,563.150** |

| | | இ.பெ.கூ | | குழு | |
|---|---|---|---|---|---|
| | | 2015.12.31 | 2014.12.31 | 2015.12.31 | 2014.12.31 |
| 12.3 | சொத்துக்களும் முன்னெடுக்கப்படும் கருத்திட்டங்களும் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் |
| | சுத்திகரிப்பு பிரிவு விரிவாக்க கருத்திட்டம் | 837.034 | 837.628 | 837.034 | 837.628 |
| | கட்டிடங்கள் | 84.870 | 126.275 | 84.870 | 126.275 |
| | பொறித் தொகுதியும் இயற்திரங்களும் | 2,255.266 | 2,119.661 | 2,255.266 | 2,119.661 |
| | களஞ்சிய வசதி | 128.188 | 70.024 | 128.188 | 70.024 |
| | எரிபொருள் நிலையங்கள் மீள்கட்டமைப்பு | 4.042 | 3.736 | 4.042 | 3.736 |
| | ஏனையவை | 184.920 | 102.053 | 316.278 | 159.421 |
| | | **3,494.320** | **3,259.377** | **3,625.678** | **3,316.745** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12.4 | தேறிய புத்தகப் பெறுமதி | | | | |
| | ஆதனம் பொறித் தொகுதி உபகரணங்கள் | 10,119.546 | 10,332.093 | 26,641.681 | 27,563.150 |
| | சொத்துக்களும் முன்னெடுக்கப்படும் மூலதன கருத்திட்டங்களும் | 3,494.320 | 3,259.377 | 3,625.678 | 3,316745 |
| | **ஆதனம் தொகுதி மற்றும் உபகரணங்கள் கொண்டுள்ள பெறுமதி** | **13,613.866** | **13,591.470** | **30,267.359** | **30,879.895** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **12.5** | **மதலீட்டு ஆதனம** | 2015.12.31 | 2014.12.31 | 2015.12.31 | 2014.12.31 |
| | | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் |
| | **செலவு** | | | | |
| | ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறு | 33.570 | 3.570 | 33.570 | 33.570 |
| | கூட்டுக.சேர்தல்கள் | | | - | |
| | ஆண்டின் இறுதியில் உள்ளவாறு | 33.570 | 3.570 | 33.570 | 33.570 |
| | **தேய்மானம்** | | | | |
| | ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறு | 8.208 | 7.404 | 8.208 | 7.404 |
| | கூட்டுக.சேர்தல்கள் | 0.804 | 0.804 | 0.804 | 0.804 |
| | ஆண்டின் இறுதியில் உள்ளவாறு | 9.012 | 8.208 | 9.012 | 8.208 |
| | தேறிய புத்தகப் பெறுமதி | **24.558** | **25.362** | **24.558** | **25.362** |

வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள பிளவர் வீதியில் அமைந்துள்ள ஆதனத்தினையும் நிரப்பு நிலையத்தினையும் முதலீட்டு ஆதனம் உள்ளடக்கின்றது தற்போது விலைமதிப்பீட்டுச் செயன்முறை முன்னெ:க்கப்படுகிறது.

| 12.6 புலப்டாச் சொத்துகள் | ஈஆர்பீ முறைமை ரூபா மில் | சப், ஈஆர்பி எத்தரவுப்பத்திரம் ரூபா மில் | தானியக்க முறைமை ரூபா மில் | மொத்தம் ரூபா மில் |
|---|---|---|---|---|
| **செலவு** | | | | |
| 2015.01.01 இல் மீதி | 412.496 | 9.380 | 37.793 | 459.669 |
| சேர்தல்கள் | - | - | - | - |
| அகற்றல் | - | - | - | - |
| 2015.12.31 இல் மீதி | 412.496 | 9.380 | 37.793 | 459.669 |
| **ஒன்று திரட்டிய பெறுமதி கழிவு** | | | | |
| 2015.01.01 இல் மீதி | 391.037 | 4.234 | 17.040 | 412.311 |
| ஆண்டுக்கான விதிப்பனவு | **20.419** | **0.930** | 8.659 | 30.008 |
| அகற்றல் | - | - | - | - |
| 2015.12.31 இல் மீதி | 411.456 | 5.164 | 25.699 | 442.319 |
| **2015.12.31 இல் உள்ளவாறு கொண்டு செல்லும் தொகை** | **1.040** | **4.216** | **12.094** | **17.350** |
| **2014.12.31 இல் உள்ளவாறு கொண்டு செல்லும் தொகை** | 21.459 | 5.146 | 20.753 | 47.358 |

| 12.7 சொத்துகளின் பயன்பாட்டு ஆயட்காலம் பின்வருமாறு | இ.பெ.கூ 2015.12.31 | 2014.12.31 |
|---|---|---|
| நிரந்தரக் காணி | இல்லை | இல்லை |
| கட்டிடங்கள் | 40 வருடங்கள் | 40 வருடங்கள் |
| புதிய தலைமை அலுவலக்க் கட்டிடம் | 50 வருடங்கள் | 50வருடங்கள் |
| சுத்திகரிப்பு தாங்கிகளும் குழாய்களும் | 40 வருடங்கள் | 40 வருடங்கள் |
| சுத்திகரிப்பு பொறித் தொகுதியும் இயற்திரங்களும் | 10 வருடங்கள் | 10 வருடங்கள் |
| ஏனைய அமைவிட தாங்கிகள் | 40/20 வருடங்கள் | 40/20 வருடங்கள் |
| ஏனைய அமைவிட குழாய்கள் | 10/5 வருடங்கள் | 10/5 வருடங்கள் |
| பொறித் தொகுதியும் இயந்திரங்களும் | 10/5 வருடங்கள் | 10/5 வருடங்கள் |
| பவுசர் மற்றும் தாங்கி லொறியும் | 5வருடங்கள் | 5வருடங்கள் |
| வேகன் மற்றும் வாகனங்களும் | 4வருடங்கள் | 4வருடங்கள் |
**(உ) எல்கேஏஎஸ் 32 – நிதிசார் கருவிகள்: முன்னிலைப்படுத்தல்**

(i) நிதி அமைச்சினால் கேட்டுக்கொள்ளப்பட்டதற்கு இணங்க, விசேட கட்டணமொன்றாக 2014 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 10,000 மில்லியன் தொகை பொதுத் திறைசேரிக்கு செலுத்தப்பட்டு அதில் ரூபா 250 மில்லியன் மற்றும் ரூபா 750 மில்லியன் முறையே 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளிற்கான செலவினமாக சாட்டுதல் செய்யப்பட்டிருந்ததுடன் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 9,000 மில்லியன் தொகை 2016 முதல் 2024 வரையிலான காலத்திற்கு பிற்போடப்பட்டிருந்தது. இருப்பினும், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், குறித்த தொகை வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகளில் உள்ளடக்கப்பட்டு நியமத்திற்கு முரணாக 2015 திசெம்பர் 31 இல்உள்ளவாறான நிதிக் கருவிகளாக வகைப்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய,வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள் ரூபா 9,000 மில்லியனால் அதிகரித்துக் கூறப்பட்டிருக்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைச் சொத்துக்களின் கீழுள்ள முற்செலுத்துகைகள் முறையே ரூபா 8,000 மில்லியன் மற்றும் ரூபா 1,000 மில்லியனால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(ii) அத்துடன், 2015 திசெம்பர் 31 இல்உள்ளவாறான நடைமுறைச் சொத்துக்களின் கீழுள்ள வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளரூபா 269.4 மில்லியன் முற்செலுத்துகைகள் நியமத்திற்கு முரணாக நிதிக் கருவிகளாக வகைப்படுத்தப்பட்டிருந்தது.

**(ஊ) எல்கேஏஎஸ் 37 – ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள்**

இடர்குறைப்பு கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் யூஎஸ்டொலர் 8,648,300 இழப்பீட்டினைக் கோரி கொமர்ஷல் வங்கியினால் கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றத்தில் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது. இருப்பினும்,இடர்குறைப்பு கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடைய தேவையான வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(எ) எல்கேஏஎஸ் 40 – முதலீட்டு ஆதனங்கள்**

கூட்டுத்தாபனம் முதலீட்டு ஆதனங்களை கிரயத்தில் அங்கீகரித்திருந்தது. இருப்பினும், கூட்டுத்தாபனம் முதலீட்டு ஆதனங்களை நம்பகரமான நியாயப் பெறுமதியில் நிச்சியிக்க முடியாதுள்ள வேளையில் வெளிப்படுத்த வேண்டிய பின்வரும் விபரங்கள்

நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களிற்கான , குறிப்புக்களாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- முதலீடு ஆதனங்களின் விபரம்,
- நியாயப் பெறுமதியினைநம்பகரமாக நிச்சியிக்க முடியாதுள்ளாமைக்கான விளக்கமளித்தல், மற்றும்
- முடியுமாயிருப்பின், நியாயப் பெறுமதி அதிகளவில் காணப்படும் மதிப்பீட்டு வீச்செல்லை.

### 2.2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திறைசேரி முறிகள் மீது கூப்பன் வீதத்தில் கணிப்பிடப்பட்டிருந்த 2014 ஆம் ஆண்டிற்காக பெறப்பட வேண்டிய ரூபா 264.3 மில்லியன் வட்டி வருமானம் நடைமுறையல்லாத நிதிச் சொத்துக்களின் கீழுள்ள திறைசேறி முறிகள் கணக்கின் முதலீட்டிற்கு செலவு வைக்கப்படுவதற்குப் பதிலாக ஏனைய பெறவேண்டிய கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு வட்டி வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அதேவேளை, திறைசேரி முறிகள் மீது தாக்கமுள்ள வட்டி திரும்பல் வீதத்தின் (ஈஜஆர்ஆர்) அடிப்படையில் கணிப்பிடப்பட்டிருந்த ரூபா 214.4 மில்லியன் வட்டி வட்டி வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு திறைசேரி முறிகள் முதலீட்டுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, திறைசேரி முறிகள் முதலீட்டுக் கணக்கு ரூபா 264.3 மில்லியனால் கூட்டிக் காட்டப்பட்டிருந்தது. மேலும் கூட்டுத்தாபனம் ரூபா 29.4 மில்லியன் தேசிய வரி செலுவைத்தலை சேர்த்து வட்டி வருமானத்தினை மொத்தமாக் காண்பித்து 2014 ஆம் ஆண்டிற்கான வருமானமாக அங்கீகரித்திருந்தது. அதன் விளைவாக வட்டி வருமானம் ரூபா 293.7 மில்லியனால் அதிகரித்துக் கூறப்பட்டும் வருமான வரி ஏற்பாட்டுக் கணக்கு ரூபா 29.4 மில்லியனால் குறைத்துக் கூறப்பட்டுமிருந்தது. அத்துடன், இந்த வழுக்கள் 2015 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டிருக்கவுமில்லை. ஆகையால்,மீளாய்வாண்டில் வருமான ஒதுக்கம் ரூபா 293.7 மில்லியனால் கூடுதலாகக் கூறப்பட்டிருக்க பெறவேண்டிய முதலீட்டுக் கணக்கு ரூபா 264.3 மில்லியனால் அதிகரித்துக் கூறப்பட்டிருந்ததுடன் வருமான வரி ஏற்பாட்டுக் கணக்கு ரூபா 29.4 மில்லியனால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமானவையாக வணிகர்களால் செயற்படுத்தப்பட்ட நிலையங்களில் (சீஓடிஓ) தாபிக்கப்பட்ட விற்பனை நிலையங்களிலிருந்தான வாடகை வருமானம் காசு அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், அதற்கமைய 2015 இல் கிடைத்திருந்த 2014 ஆம் ஆண்டிற்கான ரூபா 6.1 மில்லியன் வாடகை வருமானம்

2015 ஆம் ஆண்டிற்கான வாடகை வருமானமாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் விளைவாக, 2015 ஆம் ஆண்டிற்காக கிடைக்க வேண்டிய தொகை மீளாய்வாண்டிற்கான வருமானமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய சில ஆண்டுகளுடன் தொடர்புடைய ரூபா 622 மில்லியன் தொகையான நிலையான வைப்புக்கள் மீதான வட்டி வருமானம் நிதிக்கூற்றுக்களில் மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பேரேட்டுக் கணக்குகளின் படி, யூஎஸ்டொ. 7.5 மில்லியன் தொகையான நிலையான வைப்பொன்று இலங்கை வங்கியில் 2013 ஆகஸ்ட் 22 முதல் கூட்டுத்தாபனத்தால் பேணிவரப்பட்டிருந்தது. இருப்பினும், 2015 ஆம் ஆண்டில் 70 நாட்களிற்கு மாத்திரம் வட்டி வருமானம் கணிப்பிடப்பட்டு அட்டுறு வட்டி வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுகளிற்கான வட்டி வருமானத்துடன் தொடர்புடைய தகவல்கள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை. அதற்கமைய, வட்டி வருமானத்தின் பூரணத்தன்மையினையும் சரியான தன்மையினையும் கணக்காய்வில் உறுதிப்படுத்த முடிந்திருக்கவில்லை.

(ii) நிலையான வைப்பிலுள்ள தொகையினை மீளெடுக்கும் வேளை வரையிலும் அதன் மீதான வட்டியினை மீள்முதலீடு செய்யும் நோக்குடன் ரூபா 1,102,676,727 தொகையினை 2013 செப்தெம்பர் 24 ஆந் திகதி இலங்கை வங்கியின் நிலையான வைப்புக்களில் கூட்டுத்தாபனம் முதலீடு செய்திருந்தது. அதற்கமைய,ரூபா 98,241,638 மீள்முதலீடு செய்யப்பட்டு 2014 திசெம்பர் 24 ஆந் திகதி வரை நிலையான வைப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், 2015 இல் நிலையான வைப்பினை மீளெடுக்கும் வரையிலான காலப்பகுதிக்குரிய மீள்முதலீடு செய்யப்படாத வட்டியினைக் கருத்திற்கொள்ளாது, நிலையான வைப்புக் கணக்கிலிருந்து 2015 செப்தெம்பர் 25 ஆந் திகதி ரூபா 1,245,202,499 மீளெடுக்கப்பட்டிருந்ததுடன், அதற்கிணங்க, ரூபா 44,284,133 தொகை நிலையான வைப்புக் கணக்கிலிருந்து மேலதிகமாக மீளெடுக்கப்பட்டிருந்தது. அதன் விளைவாக, மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்புக் கணக்கும் வட்டி வலுமானமும் ரூபா 44,284,133 இனால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(iii) 2014 ஆம் ஆண்டிற்காக பெறப்பட வேண்டிய ரூபா 174,557,534 வட்டி வருமானமொன்று தவறுதலாக மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானக்

கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு ஏனைய பெறவேண்டிய கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, வட்டி வருமானமும் ஏனைய பெறவேண்டியவைகளும் அத் தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தன.

(ஈ) ரூபா 5,000,000 மீதியினைக் கொண்ட நீண்டகால நிலையான வைப்பொன்றை கூட்டுத்தாபனம் வைத்திருந்ததுடன் அதன் மீதான வட்டி வருமானம் கூட்டுத்தாபனத்தின் வருமானமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், வருமானத்துடன் தொடர்புடைய தகவல்கள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை. ஆகையால், வட்டி வருமானத்தின் சரியான மற்றும் பூரணத்துவ தன்மையினை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை.

(உ) "மசகு எண்ணெய் குழாய் வழியினை மீளமைத்தல் - கொழும்பு துறைமுக விரிவாக்கல் செயற்திட்டம்" இற்காக 2011 இலி கூட்டுத்தாபனம் ரூபா 2,116.18 மில்லியன் தொகையினை செலவிட்டிருந்ததுடன், அது மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழுள்ள சொத்துக்களில் ஆதனம் மற்றும் உபகரணங்கள் எனவும் நடைபெற்றுவரும் மூலதனச் செயற்திட்டம் எனவும் உள்ளடக்கப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டத்தின் செயற்முன்னேற்ற விபரங்கள் மற்றும் அத்தொகை மூலதனமாக்கப்படாமைக்கான காரணங்கள் போன்றன கணக்காய்விற்குக் கிடைக்கப்பெறவில்லை.

(ஊ) கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி, மத்தளையிலுள்ள அம்பாந்தோட்டை சர்வதேச விமான நிலையத்தில் விமானச்சேவை எரிபொருள் களஞ்சிய வசதிமற்றும் எரிபொருள் உலர்த்தல் முறைமையினை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 5,071.7 மில்லியன் தொகையினை செயற்திட்டம் செலவிட்டிருந்த பின்னர் செயற்திட்டம் பூரணப்படுத்தப்பட்டு 2014 யூன் 22 ஆந் திகதி கூட்டுத்தாபனத்திற்குக் கையளிக்கப்பட்டிருந்ததுடன் கையேற்புச் சான்றிதழ் 2014 யூலை 16 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய, எரிபொருள் உலர்த்தல் முறைமையின் செயற்பாடுகள் 2014 யூன் 22 ஆந் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களிலுள்ள இயந்திரங்களின் சில பாகங்கள் வேறுபட்ட திகதிகளில் தனித்தனியாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தன.

(ii) பெறுமானத்தேய்வினை கணிப்பிடுவதற்காக கூட்டுத்தாபனத்தினால் பிரயோகிக்கப்பட்ட பெறுமானத்தேய்வு வீதங்களும் திகதிகளும் மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரண விடயங்களுடன் தொடர்புடைய பயன்தரு

ஆயுட் காலங்களும் ஒப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக, மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்தின் அடிப்படையில் கணப்பிடப்பட்ட பெறுமானத்தேய்விற்கும் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளிற்கான நிதிக்கூற்றுக்களில் (எஸ்ஏபி முறைமையின் படி) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த உள்ளபடியான தொகைகளிற்குமிடையே முறையே ரூபா 128,576,712 மற்றும் ரூபா 36,487,486 ஆன வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### 2.2.2.4 கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள்

2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தினதும் அதன் உப கம்பனியினதும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த தொகைகளிற்கிடையே பின்வரும் கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| விடயங்கள் | ஆண்டு | தனிப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் தொகை | | வேறுபாடு |
|---|---|---|---|---|
| | | கூட்டுத்தாபனம் | சீபிஎஸ்ரீஎல் | |
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| **தொடர்புடைய தரப்பு கொடுக்கல்வாங்கல்கள்:** | | | | |
| இறங்குதுறை (கப்பல்தள) மற்றும் போக்குவரத்துக் கட்டணங்கள்/ எண்ணெய் களஞ்சிய மற்றும் விநியோக சேவைகள் | 2015 | 10,660.4 | 10,234.4 | 426.0 |
| | 2014 | 9,772.7 | 10,185.5 | 412.8 |
| **நிலுவைத் தொகை:** | | | | |
| செலுத்த வேண்டிய / பெறவேண்டிய (தொடர்புடைய தரப்பு) மீதி | 2015 | 5,828.7 | 6,164.2 | 335.5 |
| | 2014 | 5,605.7 | 7,237.6 | 1,631.9 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒன்றிணைத்தல் செயன்முறையின் போது, தொடர்புடைய தரப்பு கொடுக்கல் வாங்கல்களின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்த இறங்குதுறை (கப்பல்தள) மற்றும் போக்குவரத்துக் கட்டணங்கள் தொடர்பில் 2015 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளிற்காக முறையே ரூபா 10,660.4 மில்லியன் மற்றும் ரூபா 9,772.6 மில்லியன் மாத்திரம் நீக்கப்பட்டிருந்தன. கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம், ரூபா 338 மில்லியன் தொகையான ஐந்து விடயங்கள் கைவிடப்பட்டிருந்தன.

(ஆ) அத்துடன், துணைக் கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த நேரொத்த மீதிகளுடன் கூட்டுத்தாபனத்தின் கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த தொடர்புடைய தரப்பு மீதிகள் தொடர்பில் கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம், ரூபா 172 மில்லியன் தொகையான மீதியொன்று கைவிடப்பட்டிருந்தது.

### 2.2.2.5 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த வியாபார பெறவேண்டியவை அரசாங்க நிறுவனங்களிடமிருந்தும் தனியார் நிறுவனங்களிடமிருந்தும் பெறப்பட வேண்டிய முறையே ரூபா 4,313.5 மில்லியன் மற்றும் ரூபா 14,473.2 மில்லியன் அடங்கலாக ரூபா 18,786.8 மில்லியன் ஆகக் காணப்பட்டது. இருப்பினும், முன்னைய ஆண்டின் ரூபா 37,060 மில்லியனுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான மொத்த பெறவேண்டியவை 49 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேணிடிய கணக்குகளின் வயதுப் பகுப்பாய்வு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வாடிக்கையாளர் வகை | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | திசெம்பர் 31 இல் உள்ளவாறு வயதுப் பகுப்பாய்வு | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஓராண்டிற்குக் குறைந்த | 1 – 2 ஆண்டுகள் | 2 – 3 ஆண்டுகள் | 3 – 4 ஆண்டுகள் | 4 – 5 ஆண்டுகள் | 5 ஆண்டு களிற்கு மேல் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வணிகர் | 814,620,088 | 783,717,567 | 10,981,377 | 3,267,723 | 1,379,217 | 252,922 | 15,021,283 |
| விமானச்சேவை | 9,477,595,864 | 7,335,533,925 | 5,173,970 | 23,376,709 | 2,111,097,630 | 2,326,616 | 87,015 |
| மின்வலு பொறிகள் | 4,497,947,417 | 3,500,944,742 | 243,391,845 | 753,610,830 | | | - |
| அரசாங்க பாவனையாளர் | 1,593,523,430 | 928,829,094 | 480,740,633 | 61,544,346 | 51,100,014 | 46,952,425 | 24,356,918 |
| தனியார் பாவனையாளர் | 494,299,036 | 206,643,766 | 21,662,297 | 22,568,177 | 25,412,079 | 24,665,945 | 193,346,772 |
| விவசாய இரசாயனம் | 23,048,258 | 16,350,064 | (421,790) | 28,210 | (30,360) | 81,988 | 7,040,145 |
| ஏனையோர் | 1,885,747,417 | 1,884,321,245 | (4,081,296) | 1,362,001 | 65,474 | 201 | 4,079,793 |
| **மொத்தம்** | **18,786,781,509** | **14,656,340,403** | **757,447,035** | **865,757,995** | **2,189,024,054** | **74,280,097** | **243,931,926** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 ஆகஸ்ட் 08 ஆந் திகதி சபைத் தீர்மானத்தின் பிரகாரம் வெளி நிலுவையாகவுள்ள வாடிக்கையாளர்களின் மீதிகளின் மீது ஆண்டிற்கு 24 சதவீத

வட்டி தாக்கீடு செய்யப்படுதல் வேண்டும் என தேவைப்படுத்தப்பட்டது. இருப்பினும், கூட்டுத்தாபனத்தினால் தரவுச் செயன்முறைப்படுத்தலுக்கும் இருப்பு மட்டங்களை கண்காணிப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்ற சீபீஎஸ்ரீஎல் துணைக்கம்பனியினால் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தொழில்முயற்சி வளத் திட்டமிடல் (ஈஆர்பீ) முறைமையின் முறைமைப் பிரயோகமும் உற்பத்திப் பொருட்கள் (எஸ்ஏபீ) முறைமையும், கடன் காலப்பகுதியில் தீர்க்கப்படாதுள்ள விலைப் பட்டியல்களின் மீது வட்டிக் கட்டணத்தை கணிப்பீடு செய்வதற்கான வசதியினை வழங்குவதில்லை. ஆகையால், தீர்க்கப்படாதுள்ள விலைப்பட்டியல்கள் மீதான வட்டியினைக் கணிப்பதற்கும் எஸ்ஏபீ முறைமையினை நாளதுவரையாக்குவதற்கும் கூட்டுத்தாபனம் வழமையான கணிப்பீட்டு முறையை பயன்படுத்தியிருந்தது. அதன்படி வெளிநிலுவையாகவுள்ள மீதிகளின் மீது வட்டிக் கட்டணங்களின் செம்மை மற்றும் பூரணத்தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக கூட்டுத்தாபனத்தினால் பொருத்தமான முறைமையொன்று வடிவமைக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஸ்ரீ லங்கன் எயர்லைன்ஸ் லிமிடட் மற்றும் மிஹின் லங்கா (தனியார்) லிமிடட் ஆகியவை ஒப்பந்த வழங்குனர்களாக காணப்பட்ட போதிலும் மேற்படி கம்பனிகளுக்கு விமானச் சேவை எரிபொருள் விற்கப்பட்டமையின் மீது 2014 ஆம் ஆண்டு வரை கூட்டுத்தாபனத்திற்கு நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் அவற்றினது நலிவான நிதிச்செயலாற்றல்கள் காரணமாக நிலுவையான எரிபொருள் சிட்டைகளைத் தீர்த்தல் மிகவும் பலவீனமானதாக காணப்பட்டது. இருப்பினும், 2014 ஆம் ஆண்டின் ரூபா 22,239.1 மில்லியனிலிருந்து 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2015 ஆம் ஆண்டிற்கான மீதியினை ரூபா 9,156.7 மில்லியனாக குறைப்பதற்கு கூட்டுத்தாபனத்திற்கு முடிந்திருந்தது. 2010 ஆம் ஆண்டு முதல் நிலுவையாக காணப்பட்ட மீதிகளின் போக்கு கீழே தரப்பட்டுள்ளது.

| கம்பனியின் பெயர் | 2016 யூலை 31 | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை மீதி 2015- | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். |
| ஸ்ரீ லங்கன் எயர்லைன்ஸ் லிமிடட் | 10,709.30 | 8,607.36 | 20,900.35 | 29,519.68 | 25,890.12 | 12,351.43 | 541.54 |
| மிஹின் லங்கா (தனியார்) லிமிடட் | 247.50 | 549.37 | 1,338.73 | 4,313.68 | 3,416.10 | 1,227.02 | 361.24 |
| **மொத்தம்** | 10,956.80 | 9,156.73 | 22,239.08 | 33,833.36 | 29,306.22 | 13,578.45 | 902.78 |

(இ) ஸ்ரீ லங்கன் எயர்லைன்ஸ் லிமிட்ட் உடன் விமானச்சேவை எரிபொருள் வழங்கல் உடன்படிக்கையொன்றில் கூட்டுத்தாபனம் கைச்சாத்திட்டிருக்காமையால், கூட்டுத்தாபனத்திற்கு சட்டரீதியான உரிமை இல்லாதிருப்பதன் காரணமாக கடன் ஏய்ப்புச் செய்தல் ஐயப்பாடு காணப்படுகின்றது. மேலும், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 8,607.4 மில்லியன் நிலுவையான மீதி 2016 யூலை 31 இல் உள்ளவாறு ரூபா 10,709.3 மில்லியன் வரை அதிகரித்திருந்தது.

(ஈ) 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் ஐயக்கடன் ஏற்பாடு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனைகளின் பிரகாரம், பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு ஆண்டு முதல் 29 ஆண்டுகள் வரையான காலவீச்சில் நிலுவையாகக் காணப்பட்ட ஐயக் கடன்களிற்காக ரூபா 52,099,042 விசேட ஏற்பாடொன்றை கூட்டுத்தாபனம் மேற்கொண்டிருந்ததுடன் அதில் ரூபா 8,219,208 ஆன ஏற்பாடு 2015 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்தது. விபரங்கள் வருமாறு.

| **வாடிக்கையாளர் பெயர்** | **ஐயக் கடனிற்கான ஏற்பாடு** | |
|---|---|---|
| | **2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான** | **மொத்த ஏற்பாட்டின் சதவீதமாக** |
| | ரூபா | |
| வணிகர் மற்றும் மண்ணெண்ணெய் முகவர் | 26,900,233 | 52 |
| அரசாங்க மற்றும் தனியார் வாடிக்கையாளர் | 9,264,132 | 17 |
| அரச திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் | 4,625,679 | 09 |
| விமானச்சேவை | 4,032,957 | 08 |
| விவசாய இரசாயணம் மற்றும் கால்நடை வளர்ப்பாளர் | 7,276,041 | 14 |
| **மொத்தம்** | **52,099,042** | **100** |

(ii) வணிகர்கள் மற்றும் மண்ணெண்ணெய் முகவர்களிற்காக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்டிருந்த அறவிடமுடியாத மற்றும் ஐயக் கடன்களிற்கான ஏற்பாடு ரூபா 26.9 மில்லியனாகக் காணப்பட்டதுடன், அதில் ரூபா 8.1 மில்லியன் அல்லது 30 சதவீதமானவை ஒரு வணிகரை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது. குறித்த வணிகள் 2014 திசெம்பர் 31 இல்

இருந்தவாறான ரூபா 7,817,395 நிலுவைத் தொகையினை தீர்ப்பதற்கு தவறியிருந்ததுடன், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட மொத்த நிலுவை ரூபா 8,102,409 (வட்டியுடன்) ஆகும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படு:கின்றன.

- 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் கூட்டுத்தாபனத்தினால் பிரயோகிக்கப்பட்டிருந்த விநியோக வாடிக்கையாளர் (சீஓடீ) அடிப்படை மீதான காசோலைகளின பிரகாரம், காசோலை மறுக்கப்பட்டு வாடிக்கையாளர் நிலுவையினை தீர்ப்பதற்கு தவறும் வேளையில் வாடிக்கையாளர் வன் ரொக்க வாடிக்கையார் என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு மறுக்கப்பட்ட காசோலைக்கும் ரூபா 1,000 தண்டப் பணம் விதிக்கப்பட்டது. மேலும், நிலுவையான தெகையினை பின்னர் செலுத்தித் தீர்க்கையில், அந்த வாடிக்கையார் சீஓடீ வாடிக்கையாளர் என மீண்டும் வகைப்படுத்தப்படுகின்றார். இவ்வாறான பலவீனமான கடன் கட்டுப்பாட்டிற்கு அமைய, சில வாடிக்கையார்கள் இச் சந்தர்ப்பங்களை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி உச்ச நலன்களை அனுபவத்திருந்தனர்.

- இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையில், மேற்படி வாடிக்கையாளர் வழங்கப்பட்டிருந்த கடன் கால எல்லைக்குள் நிலுவை மீதிகளை தீர்ப்பதற்கு தொடர்ச்சியாக தவறியிருந்த போதிலும், விசேட கடன் வசதிகள் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அத்துடன், கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி, கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் குறித்த வாடிக்கையாளருக்கு முறையற்ற கடன் வசதிகளை வழங்கியிருந்ததுடன், அதன் விளைவாக வாடிக்கையாளர் அந்த வாய்ப்புக்களை பயன்படுத்தி கடந்த சில ஆண்டுகளாக உச்ச பயனடைந்திருந்தார். அதற்கமைய, 2015 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனம் ரூபா 8,102,409 நட்டமொன்றை அடைந்திருந்தது.

- காணப்படுகின்ற சீஓடீ வசதிக்குள்நிலுவை மீதிகளை தீர்ப்பதற்கு கடந்த சில ஆண்டுகளாக தொடர்ச்சியாக தவறியிருந்தமை காரணமாக கடன்ஏய்ப்புச் செய்வதற்கான ஆபத்துக் காணப்படுவதாக மேலதிக நிதி முகாமையாளர் (ஏஎவ்எம்) சுட்டிக்காட்டியிருந்த போதிலும்,அந்த ஆபத்தினை குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை கூட்டுத்தாபனம் எடுத்திருக்காததுடன், அதற்குப் பதிலாக சந்தைப்படுத்தும் முகாமையாளர், வணிகர்களின் நிதி இயலுமை மற்றும் முன்னைய கொடுப்பனவு சாதனைகளை மதிப்பீடு செய்யாது அதிகளவு கடன் வசதிகளை வழங்கியிருந்தார்.

- சிட்டைகளிற்கான கொடுப்பனவுகளை செலுத்தாமலும் காசோலைகள் மதிப்பிழந்திருந்தும் காணப்பட்ட போதிலும், உத்தரவாதம் எதுவுமின்றி இரண்டு மாத காலத்திற்காக அந்த வாடிக்கையாளருக்கு ஏற்றும் வசதிக்கான ஏற்றுதுல் (ஏனைய ஏற்றுதல் வந்ததன் பின்னர் தொகையினை தீர்த்தல்) போன்ற ஏனைய வசதிகளை சந்தைப்படுத்தல் முகாமையாளர் வழங்கியிருந்தார்.

- 2013 மார்ச் 06 ஆந் திகதி வணிகரால் மேற்கொள்ளப்பட்டிருந்த கோரிக்கைக்கு அமைய, 45 நாட்களிற்கு வங்கி உத்தரவாதமொன்றை வழங்கும் நிபந்தனையின் கீழ் கடன் எல்லையினை ரூபா 3,641,008 வரைக்கும் 3 நாட்கள் கடன் காலத்தினை 45 நாட்களிற்கும் அதிகரிப்பதற்கு முகாமைப் பணிப்பாளர் அங்கீகாரம் வழங்கியிருந்தார். அத்துடன், பிரதி பொது முகாமையாளர் (நிதி) 2013 ஏப்ரல் 22 ஆந் திகதி இரண்டு மாதங்களிற்கான கடன் காலத்திற்கு மீண்டும் அங்கீகாரம் வழங்கியிருந்ததுடன், வங்கி உத்தரவாதமொன்றை பெற்றுக்கொள்ளாது 2013 யூன் 26 முதல் மூன்று மாதங்களால் மேலும் அதிகரிக்கப்பட்டிருந்தது.

- அவர் சந்தைச் செயற்பாடுகளை நிறுத்துகையில் 2014 சனவரி 21 ஆந் திகதியில் உள்ளவாறான நிலுவை மீதி ரூபா 7,224,416 ஆகக் காணப்பட்டது. இருப்பினும், அவரது வேண்டுகோளிற்கமைய, வங்கி உத்திரவாதமொன்றும் நிலுவை மீதியினை தீர்ப்பதற்கான உடன்படிக்கையும் இன்றி கூட்டுத்தாபனம் சேவையினை தொடர்ந்து வழங்கியிருந்தது. எவ்வாறாயினும், அவரால் வழங்கப்பட்டிருந்த மேலும் இரண்டு காசோலைகள் 2014 ஒக்தோபர் 21 ஆந் திகதி திரும்பிவந்திருந்தது. அதன் விளைவாக, 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வட்டியுடன் கூடிய நிலுவை மீதி ரூபா 8,102,409 ஆகக் காணப்பட்டது.

**2.2.2.6 இடர் குறைத்தல் (ஹெட்ஜிங்) கொடுக்கல் வாங்கல்கள்கள்**

கூட்டுத்தாபனத்தின் இடர் குறைத்தல் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம்,2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இக் கொடுக்கல் வாங்கல்கள் மீது நாட்டிற்கு ஏற்பட்ட மொத்த நட்டம் ரூபா 14,062 மில்லியன் என்பது அவதானிக்கப்பட்டது.

பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொடுக்கல்வாங்கல்களின் படி, பல்வேறு வர்த்தக வங்கிகளுடன் செய்து கொள்ளப்பட்ட இடர் குறைத்தல் ஒப்பந்தங்கள் தொடர்பான நடுவர் தீர்ப்பு

செயற்பாடுகளில் கூட்டுத்தாபனம் ஒரு தரப்பாகக் கலந்துகொண்டிருந்ததுடன் தரப்பினர்களிற்கிடையே கைச்சாத்திடப்பட்டிருந்த தீர்ப்பனவு உறுதியின் கீழ் ஸ்ரான்டர்ட் சார்ட்ட் வங்கிக்கு (எஸ்சீபீ) யூஎஸ்டொலர் 60 மில்லியன் (ரூபா 7,612 மில்லியன்) தொகையினை 2013 யூன் 03 ஆந் திகதி செலுத்தியிருந்ததுடன் டச் வங்கி ஏஜீ இற்கு யூஎஸ்டொலர் 27 மில்லியன் (ரூபா 3,864.37 மில்லியன்) தொகையினை 2016 ஆகஸ்ட் 04 ஆந் திகதி செலுத்தியிருந்தது (2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது). கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டிருந்த மொத்த நட்டம் ரூபா 13,641.12 மில்லியன் ஆகும்.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் இடர் குறைப்பு கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கிக்கு ஏற்பட்டிருந்த சட்டச் செலவினம் ரூபா 570.6 மில்லியனாக காணப்பட்டதுடன் அதில் ரூபா 567.5 மில்லியன் தொகை 2011 முதல் 2014 வரையான காலத்தில் இலங்கை மத்திய வங்கிக்கு ஏற்கனவே மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது.

(இ) அத்துடன், இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக டச் வங்கியினால் தொடரப்பட்டிருந்த நடுவர்தீர்ப்பு விவாதங்களில் பங்குபற்றிய வெளிநாட்டு வழக்கறிஞர்களின் சேவைகளைப் பெற்றுக்கொண்டமைக்காக 2015 திசெம்பர் 31 வரை இலங்கை மத்திய வங்கிரூபா 404.3 மில்லியன் தொகையினை செலுத்தியிருந்ததுடன், இது தொடர்பில் இலங்கை மத்திய வங்கி 2015 ஆம் ஆண்டில் ரூபா 13.1 மில்லியன் ஏற்பாடொன்றை மேற்கொண்டிருந்தது.

(ஈ) அதற்கும் மேலாக, கொமர்ஷல் வங்கி கொழும்பு வர்த்தக உயர் நீதி மன்றத்தில் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக யூஎஸ்டொலர் 8,648,300 கோரி வழக்குத் தொடர்ந்திருந்தது.

(உ) 2008 முதல் கட்டாய விடுமுறையில் அனுப்பிவைக்கப்பட்டிருந்த கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) இற்கு எதிராக முறைசார்ந்த புலானாய்வொன்று ஆரம்பிக்கப்பட்டு அவரது சேவை 2016 ஆகஸ்ட் 04 ஆந் திகதி இடைநிறுத்தப்பட்டது. இருப்பினும், அந்தக் கொடுக்கல் வாங்கல்களிற்குப் பொறுப்பான ஆட்களிற்கு எதிராக கூட்டுத்தாபனத்தினால் எவ்வித ஏனைய புலானாய்வுகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க நல்லாளுகைக்கானபொது முயற்சிகள் வழிகாட்டல்கள் மீதான பொது முயற்சிகள் திணைக்கள சுற்றுநிருபத்தின் பிரிவு 3.2 | கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை பெற்றோலிய தொழிற் துறையைச் சேர்ந்த ஒருஉறுப்பினரையாவது உள்ளடக்கியிருக்கவில்லை. |
| (ஆ) நிதி, திட்டமிடல் அமைச்சின் 1997 ஒக்தோபர் 24 ஆம் திகதிய 124 ஆம் இலக்க சுற்றுநிருபம். | ஒரு வெற்றிடமான பதவியின் பணிகளைக் கவனிக்கும் காலம் 03 மாதங்களாக மட்டுப் படுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரை 08 மாதங்கள் முதல் 04 வருடங்கள் வரையான வீச்செல்லைக் காலமாக வெற்றிடமான பதவிகளிற்கான பணிகளை கவனிப்பதற்காக 04 ஊழியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். |
| (இ) 2013 நவம்பர் 04 ஆந் திகதிய எவ்பி/06/35/02/01ஆம் இலக்க மற்றும் 2016 ஏப்ரல் 29 ஆந் திகதிய பிஈடீ 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைகள் | ஊழியர்களது ஆளுக்குரிய வேதனங்களிலிருந்து கழித்துக்கொள்ளாது அதன் ஊழியர்களின் மீளாய்வாண்டிற்கான ரூபா 213,986,411 உழைக்கும் போதே செலுத்தும் வரியினை கூட்டுத்தாபனம் தாங்கிக் கொண்டிருந்தது. |
| (ஈ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்களின் 5.4.12 ஆம் வழிகாட்டல் | பெறுமதிசேர் வரிப் பொறுப்பினை தீர்ப்பதற்காக கொடுப்பனவினை மேற்கொண்டதன் பின்னர், அக் கொடுப்பனவு விபரங்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் தொடர்ந்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரிகள் ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும். இருப்பினும், அவ்வாறான விபரங்கள் 2016 யூலை 31 ஆந் திகதி வரையிலும் கூட்டுத்தாபனத்தினால் |

| | |
|---|---|
| | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் நிதிப்பிரமாணம் 135 | 2007 ஆம் ஆண்டிலிருந்து நிதி அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாடுகள் விளைவித்திருந்த ரூபா 20,176 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய நட்டத்தை முன்னைய ஆண்டிற்கு எதிரான வரிக்கு முன்னரான தேறிய இலாபமானரூபா 1,129 மில்லியனுடன் ஒப்பிடுகையில், நிதி விளைவுகளில் ரூபா 21,305 மில்லியனான பின்னடைவு காட்டப்படுகின்றது. நாணயமாற்று முரண்களின் பாதகமான தாக்கம், விற்பனை விநியோக செலவினத்திலும் நிதிச் செலவினத்திலும் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் வரிகளின் அதிகரிப்பு போன்றன இப்பின்னடைவிற்கு பிரதான காரணங்களாக காணப்பட்டன.

மீளாய்வாண்டிற்கான வரிக்கு முன்னரான நட்டம் ரூபா 20,176 மில்லியனாகக் காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் நாட்டிற்கான பங்களிப்பு ரூபா 78,440 மில்லியனாக காணப்பட்டது.மீளாய்வாண்டிலும் முன்னைய நான்கு ஆண்டுகளிலும் கூட்டுத்தாபனத்தின் நாட்டிற்கான பங்களிப்பு கீழே தரப்படுகின்றது.

| | 2015 | 2014 | 2013 | 2012 | 2011 |
|---|---|---|---|---|---|
| | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். |
| **வரிக்குப் பின்னரான தேறிய இலாபம்/(நட்டம்)** | **(21,735)** | **1,129** | **(7,889)** | **(97,181)** | **(94,357)** |
| கூட்டுக: | | | | | |
| ▪ ஆளுக்குரிய வேதனங்கள் | 4,530 | 3,727 | 3,572 | 2,658 | 2,610 |
| ▪ அரசாங்கத்திற்கு செலுத்திய வரிகள் | | | | | |
| · வருமான வரி | 1,559 | - | - | - | - |
| · தேசத்தை கட்டியெழுப்புதல் வரி (என்பீரீ) | 2,074 | 2,936 | 2,652 | 3,147 | 1,897 |
| · சுங்கத் தீர்வை | 44,713 | 11,730 | 10,187 | 9,735 | 440 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| · பெறுமதிசேர் வரி (வீஏரீ) | 1,280 | 2,741 | 1,685 | 1,538 | 1,337 |
| · மது வரி | 35,687 | 30,205 | 25,148 | 26,089 | 23,935 |
| · துறைமுக அதிகாரசபை வரி (பிஏஎல்) | 8,648 | 15,289 | 15,823 | 20,810 | 14,537 |
| · ஏனைய வரிகள் | - | 447 | - | - | - |
| ▪ விசேட கட்டணம்* | 750 | 250 | - | - | - |
| ▪ பெறுமானத்தேய்வு | 934 | 634 | 485 | 516 | 417 |
| **மொத்தப் பங்களிப்பு** | **100,175** | **67,959** | **59,552** | **64,493** | **45,173** |
| **பெறுமதி சேர்ப்பனவு** | **78,440** | **69,088** | **51,663** | **(32,688)** | **(49,184)** |

***விசேட கட்டணம்** - 2014 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 10,000 மில்லியன் தொகையினை கூட்டுத்தாபனம் விசேட கட்டணமாக பொதுத் திறைசேரிக்குச் செலுத்தியிருந்ததுடன், அதில் ரூபா 250 மில்லியன் மற்றும் ரூபா 750 மில்லியன் தொகைகள் முறையே 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளிற்கான செலவினத்திற்கு சாட்டுதல் செய்யப்பட்டிருந்தன. நிலுவைத் தொகையான ரூபா 9,000 மில்லியன் 2016 – 2024 காலப்பகுதிக்காக பிற்போடப்பட்டிருந்தது.

## 3.2 நிதி ரீதியான மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) இலாபத்தன்மை

கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் மீளாய்வாண்டில் 11.75 சதவீத இலாப எல்லையை விளைவித்திருந்தமையால் முன்னைய ஆண்டின் 5.05 சதவீதஇலாப எல்லையுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் 6.70 சதவீத முன்னேற்றத்தைக் காண்பித்திருந்தது. அவ்வாறே முன்னைய ஆண்டின் ரூபா 25,227 மில்லியன் நேரொத்த மொத்த இலாபத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான மொத்த இலாபம் ரூபா 14,389 மில்லியனால் அல்லது 57 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. இந்த முன்னேற்றங்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| விபரம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு 2015 | 2014 மீளமைக்கப்பட்ட | மாற்றம் சாதகமானது/ (பாதகமானது) | சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| வருமானம் | 376,734 | 525,182 | (148,448) | 28.3 |
| விற்பனைக் கிரயம் | (337,118) | (499,955) | 162,837 | 32.6 |
| **மொத்த இலாபம்** | **39,616** | **25,227** | **14,389** | **57.0** |
| ஏனைய வருமானம் | 4,234 | 3,506 | 728 | 20.8 |
| விற்பனை விநியோக செலவினம் | (13,618) | (11,533) | (2,085) | 18.1 |
| நிர்வாக செலவினம் | (2,814) | (4,904) | 2,090 | 42.6 |
| **செயற்பாட்டு இலாபம்** | **27,418** | **12,296** | **15,122** | **123.0** |
| நாணயமாற்று வீத முரண் | (32,841) | (967) | (31,874) | 3,296.2 |
| நிதிச் செலவினம் | (15,049) | (13,980) | (1,069) | 7.6 |
| நிதி வருமானம் | 4,910 | 4,030 | 880 | 21.8 |
| இடர் குறைப்பு செலவினம் | (3,864) | - | (3,864) | ∞ |
| விசேட கட்டணம் | (750) | (250) | (500) | 200 |
| **வருமான வரிக்கு முந்திய இலாபம் /(நட்டம்)** | **(20,176)** | **1,129** | **(21,305)** | **1,887.1** |

**(ஆ) தேறிய சொத்துக்களிற்கு எதிராக தேறிய இலாபம் /(நட்டம்)**

2015 ஆம் ஆண்டிற்கும் கடந்த ஆறு ஆண்டுகளிற்குமான கூட்டுத்தாபனத்தின் தேறிய இலாபம்/(நட்டம்) மற்றும் தேறிய சொத்து நிலைமை என்பன கீழே உள்ள அட்டவணையிலும் வரைபிலும் காட்டப்பட்டுள்ளன.

| ஆண்டு | தேறிய இலாபம்/(நட்டம்) | ஆண்டின் இறுதியில் உள்ளவாறு தேறிய சொத்துக்கள் நிலைமை |
|---|---|---|
| | ரூபா மில். | ரூபா மில். |
| 2008 | (14,952) | (1,416) |
| 2009 | (11,353) | (13,038) |
| 2010 | (26,923) | (39,952) |
| 2011 | (94,357) | (131,236) |
| 2012 | (97,181) | (228,545) |
| 2013 | (7,947) | (236,529) |
| 2014* | 1,129 | (232,257) |
| 2015 | (21,735) | (229,153) |

*மீளமைக்கப்பட்ட




பெற்றல் மற்றும் சுபர் டீசல் தவிர்ந்த ஏனைய பெற்றோலிய உற்பத்திப் பொருட்களை இறக்குமதிக் கிரயம் மற்றும் உள்நாட்டு சுத்திகரிப்புக் கிரயம் என்பவற்றிற்குக் குறைவாக உள்நாட்டு சில்லறைச் சந்தையில் விற்பனை செய்தல்,சிட்டைகளை உரிய நேரத்தில் தீர்க்காமை மற்றும் யூஎஸ்டொலருக்கு எதிராக ரூபாவின் பெறுமதியிலேற்பட்ட தொடர்ச்சியான

தேய்வு காரணமாக ஏற்பட்ட நாணயமாற்று வீத முரண்கள், வங்கிகளிலிருந்து பெறப்பட்ட அதிகளவு கடன்கள் காரணமாக நிதிச் செலவு அதிகரித்தல், சுங்கத் தீர்வைகளின் அதிகரிப்பு,நப்தா மற்றும் பர்னஸ் எண்ணெய் ஏற்றுமதி மீதான நட்டம் (சுத்திகரிப்பின் கீழ்நிலை உற்பத்திகள்),குறைந்த எல்லை மற்றும் நலிவான உற்பத்தியுடன் கூடிய சுத்திகரிப்பு செயற்பாட்டு வினைத்திறனின்மையின் விளைவாக உள்நாட்டுக் கேள்வியை சமாளிப்பதற்காக சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுதல்,இடர் குறைத்தல் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் ஏற்பட்டிருந்தபெருமளவு நட்டம்,இலங்கை மின்சார சபை (சீஈபீ) இற்கு மானிய விலையில் எரிபொருளை (பர்னஸ் எண்ணெய் மற்றும் நப்தா) வழங்குதல்என்பன கூட்டுத்தாபனத்தின் தொடர்ச்சியான நிதிசார் நட்டங்களுக்கும் மூலதனக் குறைவிற்கும் தாக்கமளித்துள்ள பிரதான காரணிகளாகும்.

கூட்டுத்தாபனத்தின் இந்த நிதிப் பிரச்சினைகளைத் சமாளிப்பதற்காக 2014 செப்தெம்பர் வரை தொடர்ச்சியாக எரிபொருள் பொருட்களின் உள்நாட்டு சில்லறை விலைகள் அதிகரிக்கப்பட்டிருந்த போதிலும், சர்வதேச எரிபொருள் விலைகளில் ஏற்பட்ட குறைவுக்கு ஏற்ப 2014 இரண்டு தடவைகளும் 2015 இல் ஒரு தடவையும் விலைகள் குறைக்கப்பட்டன. எவ்வாறாயினும்,சர்வதேச எண்ணெய் விலை அசைவுகளை வெளிக்காட்டும் விதத்திலும் அரசாங்க குறிக்கோள்களிற்கு அமைவாகவும் தாக்கமுள்ள விலையிடல் உபாயமொன்று கூட்டுத்தாபனத்தினால் வடிவமைத்து அமுலாக்கப்பட்டிருக்கவில்லை. 2015 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் சில்லறை விலைகளிற்கு கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த பிரதான மாற்றங்கள் கீழே தரப்படுகின்றன.

| பெற்றோலிய பொருட்கள் | ஆந் திகதி முதல் அமுலுக்குவரும் வகையில் லீற்றருக்கான விலை | | | | |
|---|---|---|---|---|---|
| | 2015 நவம். 28 | 2015 சன. 22 | 2014 திசெ. 06 | 2014 செப்.17 | 2013 பெப். 23 |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| பெற்றோல் 95 ஒக்டேன் | 128.00 | 128.00 | 158.00 | 165.00 | 170.00 |
| பெற்றோல் 92 ஒக்டேன் | 117.00 | 117.00 | 150.00 | 157.00 | 162.00 |
| லங்கா ஒடோ டீசல் | 95.00 | 95.00 | 111.00 | 118.00 | 121.00 |
| லங்கா சுபர் டீசல் | 110.00 | 110.00 | 133.00 | 140.00 | 145.00 |
| லங்கா மண்ணெண்ணெய் | 49.00 | 65.00 | 81.00 | 86.00 | 106.00 |
| லங்கா கைத்தொழில் மண்ணெண்ணெய் | 88.00 | 94.00 | 110.00 | 115.00 | 115.00 |

AGDSL
Auditor General's Department

**(இ) முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள்**

கிடைக்கக்கூடியதாகவிருந்த தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் சில முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **விகிதங்கள்** | **2014** | **2013** |
|---|---|---|
| **இலாபத்தன்மை விகிதங்கள்** | | |
| மொத்த இலாப விகிதம் (ஜீபீ) (%) | 10.52 | 4.80 |
| செயற்பாட்டு இலாப விகிதம் (%) | 7.28 | 2.34 |
| தேறிய இலாப விகிதம் (என்பீ) (%) | (5.77) | 0.21 |
| **திரவத்தன்மை விகிதங்கள்** | | |
| நடைமுறைச் சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 0.31:1 | 0.34:1 |
| விரைவுச் சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 0.21:1 | 0.19:1 |
| தொழிற்படு மூலதனம் (ரூபா மில்லியன்) | (295,113) | (271,581) |
| **முதலீட்டு விகிதங்கள்** | | |
| சொத்துக்கள் மீதான திரும்பல் (ஆர்ஓஏ) (%) | (10.9) | 0.62 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான மொத்த இலாப விகிதம் 5.71 சதவீதத்தினால் முன்னேற்றமடைந்திருக்க தேறிய இலாப விகிதம் 5.57 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(ii) 2015 இல் கூட்டுத்தாபனத்தின் தொழிற்படு மூலதன நிலைமை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஓரளவு குறைவடைந்திருந்தது. குறுங்கால கடன்படுதல்களின் அதிகரிப்பு மற்றும் இருப்புக்களினதும் வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளினதும் குறைவு என்பன இதற்கு பிரதான காரணிகளாக காணப்பட்டன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

கூட்டுத்தாபனத்தின் நிதிப் பிரச்சினைகளைத் சமாளிப்பதற்காக 2014 செப்தெம்பர் வரை தொடர்ச்சியாக எரிபொருள் பொருட்களின் உள்நாட்டு சில்லறை விலைகள் அதிகரிக்கப்பட்டிருந்தன. அதேவேளை, சர்வதேச எரிபொருள் விலைகள் தொடர்ச்சியாக குறைவடையும் போக்கினை காட்டியமையால் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் உள்நாட்டு சில்லறை விற்பனை விலைகள் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் இரண்டு தடவைகள் குறைக்கப்பட்டன. எவ்வாறாயினும், மேற்படி விலை மாற்றங்கள் சர்வதேச சந்தை விலைகளின் குறைவினை முழு அளவில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. அத்துடன்,பின்வரும் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களிலிருந்து கூட்டுத்தாபனம் தொடர்ச்சியாக நட்டத்தை அனுபவித்திருந்தது.

| துறை | ஆண்டிற்காக ஏற்பட்டிருந்த மொத்த நட்டங்கள் | | | |
|---|---|---|---|---|
| | 2015 | 2014 | 2013 | 2012 |
| | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். |
| **மின்வலு உற்பத்தி** | | | | |
| எரிபொருள் எண்ணெய் 1500 | 252 | 299 | 1,240 | 34,959 |
| **கைத்தொழில் மற்றும் உள்நாடு** | | | | |
| எரிபொருள் எண்ணெய் 1500 | 262 | 69 | 350 | 2,003 |
| உள்நாட்டு மண்ணெண்ணெய் | 3,860 | 2,715 | 2,449 | 3,525 |
| **ஏற்றுமதி** | | | | |
| நப்தா | 827 | 1,799 | - | - |
| எரிபொருள் எண்ணை | 5,346 | 1,627 | - | - |

மேலும், 2014 திசெம்பர் மாதத்தில் பெற்றல் லீற்றர் ஒன்றுக்கான சுங்கத்தீர்வை ரூபா 20 இனால் (ரூபா 15 இலிருந்து ரூபா 35 வரை) அதிகரித்தமை மற்றும் 2015 சனவரியில் உள்நாட்டு விற்பனை விலைகள் குறைக்கப்பட்டமை காரணமாக பெற்றல் 92 ஒக்டேன் மற்றும் 95 ஒக்டேன் இலிருந்து கூட்டுத்தாபனத்திற்கு முறையே ரூபா 26,530 மில்லியன் மற்றும் ரூபா 2,787 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது.

2015 ஆம் ஆண்டிற்காக பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (லீற்றரொன்றுக்கு) மீதான இலாபத்தன்மை

| உற்பத்திப் பொருள் | லீற்றரொன்றுக்கான விற்பனை விலை | லீற்றரொன்றுக்கான வணிகர் எல்லையின் தேறிய விற்பனை வருமானம் | லீற்றரொன்றுக்கான மொத்த இலாபம் | லீற்றரொன்றுக்கான விற்பனைக் கிரயம் | லீற்றரொன்றுக்கான மொத்தக் கிரயம் | லீற்றரொன்றுக்கான சகல வரிகளையும் உள்ளடக்கிய மொத்தக் கிரயம் | லீற்றரொன்றுக்கான தேறிய இலாபம்/(நட்டம்) | ஆண்டிற்கான மொத்த தேறிய இலாபம்/(நட்டம்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா. | ரூபா | ரூபா | ரூபா மில். |
| பெற்றல் 95 | 128.00 | 125.51 | 103.73 | 21.78 | 151.48 | 66.83 | (25.97) | (2,787) |
| பெற்றல் 92 | 117.00 | 115.13 | 96.56 | 18.57 | 141.83 | 66.56 | (26.70) | (26,530) |
| ஒடோ டீசல் | 95.00 | 93.68 | 71.37 | 22.31 | 90.52 | 16.35 | 3.17 | 5,647 |
| சுபர் டீசல் | 110.00 | 108.23 | 75.75 | 32.48 | 94.98 | 16.28 | 13.24 | 734 |
| மண்ணெண்ணெய் | 59.00 | 57.80 | 66.84 | (9.04) | 82.60 | 0.04 | (24.80) | (3,860)* |

*மீளாய்வாண்டில் பொதுத் திறைசேரியிடமிருந்து ரூபா 3,860 மில்லியன் மண்ணெண்ணெய் மானியம் கிடைத்திருந்தது.

இது தொடர்பில் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பின்வருமாறு கருத்துத் தெரிவித்திருந்தார்.

*"கிரயத்தினை வெளிக்காட்டும் விலை பொறிமுறை அறிமுகப்படுத்தப்படுமாயின் இந்த பொருட்களிலிருந்தான நட்டத்தினை குறைத்துக்கொள்ள முடியும்."*

(ஆ) திரவ பெற்றோலிய வாயுவினை விற்பனை செய்தல் சம்பந்தமாக தனியார் எரிவாயுக் கம்பனியொன்றுக்கும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை 2006 ஒக்தோபர் 20 ஆந் திகதி காலாவதியாகியிருந்தது. இருப்பினும், புதிய உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடாது அல்லது பழைய உடன்படிக்கையினை புதுப்பிக்காது அக் கம்பனிக்கு தொடர்ச்சியாக திரவ பெற்றோலிய வாயுவினை கூட்டுத்தாபனம் வழங்கியிருந்தது. அதற்கும் மேலாக, உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடாதுதிரவ பெற்றோலிய வாயுவினை மற்றுமொரு கம்பனிக்கு கூட்டுத்தாபனம் வழங்கியிருந்தது. இருப்பினும், 10 மணித்தியாலங்களில் 13.5 கிலோகிராம் எடையுள்ள சிலிண்டர்களிற்கு எல்பி எரிவாயு 60 தொன்களை நிரப்புவதற்கான இயலளவுடைய எல்பி எரிவாயு நிரப்பும் உபகரணங்கள் (நடமாடும் எல்பிஜீ நிரப்பும் பொறி), எல்பி எரிவாயு சில்லறை வணிகத்தினை ஆரம்பிப்பதற்காக ரூபா 24 மில்லியன் கிரயத்தில் 2009 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2015

யூலை 31 ஆந் திகதி வரையிலும் கூட்டுத்தானம் வணிகச் செயற்பாட்டினை ஆரம்பிக்காதிருந்ததுடன், அன்று முதல் சொத்துக்கள் பயனற்றவையாக வைக்கப்பட்டிருந்தன.

இது தொடர்பில் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பின்வருமாறு கருத்துத் தெரிவித்திருந்தார்.

*"சகல வழிமுறைகளும் தோல்வியடைந்த பின்னர், எல்பி எரிவாயு சில்லறை சந்தைப்படுத்தல் வணிகத்தில் ஈடுபடுவதற்கு இறுதியாக கூட்டுத்தாபனம் தீர்மானித்திருந்தமையால், அதனைத்தொடர்ந்து ரோடன் தாக்கம் காரணமாக அதன் உண்மையான வழங்குனரைக் கொண்டு இயந்திரத்தில் தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டது. இத் தெரிவானது தற்போது கூட்டுத்தாபனத்தினால் மிகவும் முன்னுரிமை அளிக்கப்பட்டு மிக முனைப்பாக கருத்திலெடுக்கப்பட்டு வருகின்றது."*

## 4.2 முகாமைத்துவ திறமையின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) தொழில் முயற்சி வளத்திட்டமிடல் (ஈஆர்பீ) முறைமை

(i) சீபிஎஸ்ரீஎல் துணைக்கம்பனியினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த தொழில்முயற்சி வளதிட்டமிடல் முறைமையின் ஈடுபாடு தொடர்பில் அவரவர்களுக்கு உரிய பொறுப்புக்கள் தொடர்பாக கூட்டுத்தாபனம், இலங்கை பெற்றோலிய குத இறங்குதுறை (சீபிஎஸ்ரீஎல்) மற்றும் இலங்கை இந்திய எண்ணெய்க் கம்பனி என்பவற்றுக்கிடையில் உடன்படிக்கையோ அல்லது புரிந்துணர்வு விஞ்ஞாபனமோ இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டதுடன் அதன் காரணமாக இந்த முறைமை விசேடமாக எண்ணெய் இருப்பு மீளாய்வு நோக்கங்களிற்காக போதியளவில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) பேரேட்டுக் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்ட சீராக்கல்களிற்கு விளம்பல்கள் தெளிவாக எழுதப்படாதிருந்தமையால், மீளாய்வாண்டில் பேரேட்டுக் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்ட சீராக்கல்களை இனங்காண்பது சிரமமாக காணப்பட்டது.

### (ஆ) மாதாந்த பாவனைக் கட்டணங்களை சேகரித்தல் (எம்யூஎவ்)

2013 ஒக்தோபர் 29 ஆந் திகதிய 38/1140 ஆம் இலக்க சபை தீர்மானத்தின் பிரகாரம், அனைத்து கூட்டு உரித்துடைய செயற்படுத்தப்பட்ட வணிகர்கள் (சீஓடீஓ) மற்றும் திறைசேரிக்கு உரித்துடைய செயற்படுத்தப்பட்ட வணிகர்களால் (ரீஓடீஓ) முன்னைய ஆண்டில் உழைக்கப்பட்ட எந்தவொரு உற்பத்திப் பொருளினதும்

AGDSL
Auditor General's Department

லீற்றரொன்றுக்கான2.25 சதவீதத்திலமைந்த சாராசரி மாதாந்த தரகின் மீது 35 சதவீதத்தில் கணிப்பிடப்பட்ட மாதாந்த பாவனை கட்டணத்தினை (எம்யூஎவ்) மாதாந்த வாடகையாக (மாதாந்த பாவனை கட்டணம்) 2014 சனவரி 01 இலிருந்து அமுலுக்குவரும் வகையில் சாட்டுவதற்கு சபை அங்கீகரித்திருந்தது. இருப்பினும், விசேட வணிகர் உடன்படிக்கைகளை தயாரிப்பதில் காணப்பட்ட தாமதம் காரணமாக 2016 யூன் 30 வரை குறித்த திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு கூட்டுத்தாபனத்திற்கு முடிந்திருக்கவில்லை. அத்துடன், 248 சீஓடீஓ வணிகர்களில் 12 வணிகர்களிடமிருந்து மாத்திரமே ரூபா 23 மில்லியன் தொகையான எம்யூஎவ் மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருந்தது.

**(இ) வங்கித் துறையிலிருந்து பெறும் கடன்களின் அதிகரிப்பு**

தனது எண்ணெய் சிட்டைகளுக்கு நிதியளிப்பதற்காக வங்கித் துறையிலிருந்து கூட்டுத்தாபனம் கடன்களை பெற்றிருந்ததுடன் அதன் விளைவாக கூட்டுத்தாபனத்தின் நட்டங்கள் அதிகரித்து தேறிய சொத்து நிலைமை மேலும் வீழ்ச்சியடைந்திருந்தது.அதற்கமைய, கீழே காட்டப்பட்டவாறு குறிப்பிடத்தக்களவு கடன் தொகைகளை வைத்திருந்தமையால் தொடர்ச்சியாக முன்னைய ஆண்டுகளில் பாரிய நிதிக் கிரயம் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டிருந்தது.

| ஆண்டு | திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்கள் மற்றும் பெறுதல்கள் | ஆண்டில் வங்கி கடன் பெறுதல்கள | நிதிக் கிரயம் | சாதாரண செயற்பாடுகளின் மீதான வருடாந்த இலாபம்/(நட்டம்) |
|---|---|---|---|---|
| | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் |
| 2015 | 267.926 | 356.57 | 15.05 | (21.74) |
| 2014 | 249.139 | 376.61 | 13.98 | 1.13 |
| 2013 | 228.758 | 406.85 | 18.54 | (7.89) |
| 2012 | 213.161 | 399.52 | 18.36 | (97.18) |
| 2011 | 150.622 | 310.06 | 9.00 | (94.36) |
| 2010 | 46.626 | 168.02 | 6.86 | (26.92) |

**(ஈ) எண்ணையினை எடுத்துச்செல்வதற்காக குழாய்வழி வலையமைப்பு**

பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், மற்றும் பர்னஸ் எண்ணெய் போன்ற முடிவடைந்த பெற்றோலியப் பொருட்களை கொழும்பு துறைமுகத்திலிருந்து கொலன்னாவைக்கு போக்குவரத்துச் செய்வதற்காக பல தசாப்தங்களுக்கு முன்னர் பொருத்தப்பட்ட பெற்றோலியக் குழாய்வழிகள் மோசமாக சேதமடைந்துள்ளதுடன் அவற்றில் சில குழாய் வழிகள் சேதமடைந்து திருத்த முடியாத அளவில் காணப்பட்டன. நாட்டின் மொத்தக் கேள்வியில் அதிகளவிலான பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் கொலன்னாவை எண்ணெய் குதத்திற்கு இச்சேதமடைந்த குழாய்வழிகளூடாக போக்குவரத்துச் செய்யப்படுவதனால் இக் குழாய் வழிகளை நவீனமயப்படுத்தி புதுப்பித்தல் மிக அவசர தேவையாக உள்ளது. இறக்குமதி செய்யப்படுகின்ற பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் இச்சேதமடைந்த குழாய்வழிகளூடாகவே இறக்குமதி செய்யப்படுவதனால் தடங்கல்களுக்கான ஆபத்து காரணமாக நாடு முழுவதிலும் பாரிய எரிபொருள் பிரச்சினை ஏற்படுவதற்குள்ள வாய்ப்பினை கணக்காய்வில் புறக்கணிக்க முடியாதுள்ளது.

இது தொடர்பில் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பின்வருமாறு கருத்துத் தெரிவித்திருந்தார்.

*"முறையே 18" மற்றும் 14" விட்டமுடைய இரண்டு புதிய பரிமாற்றல் வழிகளை நிர்மாணிப்பதற்காக கேள்வியினைக் கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த வழிகள் டொல்பின் எண்ணெய்க் குத இறங்குதுறையிலிருந்து (டீரீபீ) (இரண்டு புதிய ஏற்றும் உபகரணத்துடன் கூடிய) ஆரம்பித்து சீபிஎஸ்ரீஎல் இன் கொலன்னாவ எண்ணெய் பொருத்துதலுடன் முடிவடையவுள்ளது. அத்துடன், தேவைப்படுகின்ற செங்குத்தாக துழையிட்டு பிரித்தல் வேலை மேற்கொள்ளப்படுகின்றமையால்தற்போது திருத்தப்பட்டு வருகின்ற 12" விட்டமுடைய வழியும் முடிவடையவுள்ளது."*

முத்துராஜவெல இலிருந்து அண்ணளவாக 7.2 கிலோ மீற்றருக்கு அப்பாலும் கடற்கரையிலிருந்து 6 கிலோ மீற்றருக்கு அப்பாலும் நடுக்கடலில் அமைந்துள்ள "சிங்கல் பொயின்ட் போய் "மூரிங்" (SPBM) ஊடாக முத்துராஜவெல தாங்கிக்கு எரிபொருள் பாய்ச்சப்படுகின்றது. கடல் கொந்தளிப்பாக இருக்கும் சந்தர்ப்பத்தல் அல்லது எஸ்பீஎம் பராமரிப்பிற்கு உட்பட்டிருக்கும் வேளையில் மாற்று விநியோக மூலங்கள் காணப்படவில்லை. அதேவேளை பெற்றோலிய உற்பத்திப் பொருட்களை குதங்களுக்கிடையே மாற்றுவதற்காக முத்துராஜவெல குதத்திற்கும் கொலன்னாவ தாங்கிக்குமிடையே இணைப்புக்கள் காணப்படவில்லை. அவற்றிலுள்ள இவ்வாறான

சிக்கலான தன்மைகள் காரணமாக அந்தக் குதங்களை உச்ச அளவில் பயன்படுத்திக் கொள்வதற்கு முடியாதிருந்ததது.

"நாட்டிற்கு குறுக்கான குழாய் வழிச் செயற்திட்டம்" இற்காக 2012 செப்தெம்பர் 13 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான செயற்திட்டம் 2015 திசெம்பர் 31 வரை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. "நாட்டிற்கு குறுக்கான குழாய் வழிச் செயற்திட்டம்"– கொழும்பு துறைமுகத்தலிருந்து கொலன்னாவை குதம் வரையிலுமான எரிபொருள் வழிகளின் தற்போதைய நிலைமை கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வழியின் விட்டம் (அங்குலம்) | உற்பத்திப் பொருள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|
| 10 | எரிவாயு எண்ணெய் | செயற்படு நிலையில் உள்ளது |
| 10 | ஏணைய வெள்ளை எண்ணெய் | செயலிழந்துள்ளது |
| 10 | நப்தா எண்ணெய் | செயலிழந்துள்ளது |
| 12 | நப்தா எண்ணெய் | செயலிழந்துள்ளது. சிபிஎஸ்ரீஎல் வழியினை மீளமைத்து வருகின்றது. (2 கிலோமீற்றர் ஏற்கனவே பூரணப்படுத்தப்பட்டுள்ளது) |
| 14 | எரிபொருள் எண்ணெய் | செயற்படு நிலையில் உள்ளது |

**(உ) திருகோணமலை தாங்கிப் பண்ணை**

ஒவ்வொன்றும் 12,500 கியுபிக் மீற்றர் இயலளவினையும் ($m^3$) (10,000 மெ.தொன்) ஏனைய தொடர்புடைய வசதிகளையும் கொண்டமைந்த 100 எண்ணெய் தாங்கிகளைக் கொண்ட தாங்கிகள் பண்ணை, 1930 இல் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. தாங்கிப் பண்ணைக்கு சொந்தமாகவுள்ள 358,533 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணி, இலங்கைக்கு சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னர் இலங்கை அரசாங்கத்தினால் பிரித்தானிய அரசாங்கத்தின் "லோர்ட் ஹை அடமிரல்ரி ஆணையாளர்களிற்கு" 999 ஆண்டு கால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. 1961 இல் இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கையின் பேரில் மூன்று தவணைகளில் ஸ்ரேலிங் பவுன் 250,000 இனை செலுத்தி காணி, தாங்கிப் பண்ணை, கட்டிடங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களின் உரித்தினை 1964 ஏப்ரல் 01 முதல் அமுலுக்கு வரும் வகையில் கூட்டுத்தாபனம் கையேற்றது. இருப்பினும், மேற்குறிப்பிட்ட காணிக்காக

அரசாங்கத்திடமிருந்து எந்தவொரு சட்டரீதியான ஆவணங்களும் பெறப்பட்டிருக்கவில்லை.

2003 இல், இலங்கை அரசாங்கம் களஞ்சிய வசதிகளையும் காணியினையும் எல்ஐஓசீ இற்கு 35 ஆண்டு காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்காக இலங்கை இந்திய ஒயில் கம்பனியுடனும் (எல்ஐஓசீ) கூட்டுத்தாபனத்துடனும் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருந்ததுடன் உடன்படிக்கை திகதியிலிருந்து 06 மாத காலத்திற்குள் குத்தகை உடன்படிக்கை செயல்வலுப்பெறுதல் வேண்டும். இருப்பினும், கூட்டுத்தாபனம் இதுவரை உடன்படிக்கையில் கைச்சாத்திடாதிருந்ததுடன் களஞ்சிய வசதிகளைப் பயன்படுத்தியமைக்காக எல்ஐஓசீ இடமிருந்து தொடர்புடைய குத்தகை வாடகைகள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

1942 இல் ஒரு எண்ணைய் தாங்கி யுத்தத்தினால் முழுமையாக அழிவடைந்திருந்தது. தற்போதுள்ள 99 எண்ணெய் தாங்கிகளில், 14 தாங்கிகள் எல்ஐஓசீ இனால் பயன்படுத்தப்படுவதுடன் எஞ்சிய 85 தாங்கிகள் பயன்படுத்தப்படாதுள்ளன. 2015 மார்ச் இல் இந்தியப் பிரதமரின் இலங்கைக்கான விஜயத்தின் போது, இலங்கை ஐஓசீ மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் என்பன கூட்டிணைந்து சீனக் குடா மேற்புர தாங்கிப் பண்ணையினை அபிவிருத்தி செய்தல் வேண்டுமென இணக்கம் காணப்பட்டிருந்தது. அதன் பின்னர், 2015 ஏப்ரல் 29 முதல் அமுலுக்குவரும் வகையில் கூட்டு வேலைப் படை (ஜேரீஎவ்) தாபிக்கப்பட்டதுடன் ஜேரீஎவ் 10 உறுப்பினர்களை (இந்தியாவிலிருந்து 04 உறுப்பினர்களையும் இலங்கையிலிருந்து 06 உறுப்பினர்களையும்) உள்ளடக்கியிருந்ததுடன் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் தலைவராக நியமிக்கப்பட்டார்.

**(ஊ) கூட்டுத்தாபனத்திற்கும் சீபிஎஸ்ரீஎல் இற்கும் இடையிலான சேவை உடன்படிக்கை**

கூட்டுத்தாபனத்திற்கும் சீபிஎஸ்ரீஎல் இற்கும் இடையிலான சேவை உடன்படிக்கையொன்று காணப்படாதிருந்ததுடன், அதன் காரணமாக ஒவ்வொரு நிறுவனத்தினாலும் வழங்கப்பட்ட சேவைகளைப் பொருத்தமாக புரிந்துகொள்ளல் தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், கூட்டுத்தாபனம் சீபீஎஸ்ரீஎல் இனால் வேண்டப்பட்ட தரத்திலும் தொகையிலும் பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக செயலாற்றல் சுட்டிகளை உள்ளடக்கிய கண்காணித்தல் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை பொருத்தமாக வடிவமைத்து அமுல்படுத்தியிருக்கவில்லை.

**(எ) இருப்பு மீளாய்வுக் குழு**

இருப்பு மீளாய்வுக் குழுவானது கூட்டுத்தாபனம்,சீபிஎஸ்ரீஎல், ஜேசீரீ எண்ணெய் வங்கி மற்றும் இலங்கை இந்திய எண்ணெய்க் கம்பனியிலிருந்தான உறுப்பினர்களையும் இலங்கை மின்சார சபையின் (சீஈபீ) உறுப்பினர்களையும் வரிசை அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவரையும் உள்ளடக்கியிருந்ததுடன், அதன் கூட்டங்கள் ஒவ்வொரு வாரமும் நடாத்தப்பட்டிருந்தன. இருப்பினும், கூட்டுத்தாபனம் ஒவ்வொரு பெற்றோலிய உற்பத்திப் பொருட்களிற்குமான மறு கட்டளை மட்டம், உச்ச மட்டம், இழிவு மட்டம் மற்றும் மறு கட்டளைத் தொகை போன்ற இருப்பு மட்டங்களுடன் தொடர்புடைய பொருத்தமான பதிவேடுகளை பேணியிருக்கவில்லை. பெற்றோலிய உற்பத்திப் பொருட்களிற்கான கட்டளைத் தொகை சீபிஎஸ்ரீஎல் இனால் சமர்ப்பிக்கப்பட்ட இருப்புத் தொகை பேணுதல் அறிக்கையினை மாத்திரம் அப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் இருப்பு பேணுதல் தொடர்பான வேறு எவ்வித ஆவணங்களும் கூட்டுத்தாபனத்தின் இருப்பு மீளாய்வுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், எஸ்ஏபி முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது முதல், தரவுகளை பிரித்தெடுக்கவும் இருப்பு தொடர்பான அறிக்கைகளை வழங்கவும் கூட்டுத்தாபனத்திற்கு முடியாதுள்ளமை வெளிப்படுத்தப்பட்டது.

**(ஏ) முதுராஜவல இறங்குதுறையினை பயன்படுத்துதல்**

பெற்றோலிய உற்பத்திப் பொருட்களை வழங்குகையில் முதுராஜவல இறங்குதுறை உத்தம அளவில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, மேற்கொள்ளப்பட்ட முதலீட்டிலிருந்து பின்வரும் அனுகூலங்களை கூட்டுத்தாபனம் அடைந்திருக்கவிலலை.

- துறைமுகக் கட்டணங்களை சேமித்தல்.
- கப்பல்கள் தரித்து நிற்கும் காலத்தைக் குறைத்தல்.
- தாமதக் கட்டணங்களை குறைத்தல்.
- விநியோக கிரயங்களைக் குறைத்தல்.
- மனித வளக் கிரயங்களைக் குறைத்தல்.
- குளாய் வழிகளினூடாக எரிபொருளை வழங்குவதன் மூலம் விநியோக இழப்பை சேமித்தல்.
- பவுசர்கள் மூலம் எரிபொருளை விநியோகிப்பதன் மூலம் போக்குவரத்து நெரிசலை குறைத்தல்.

(ஐ) **மீன்பிடி கூப்பன் முறைமை**

எரிபொருள் விலைகளின் திருத்தத்தின் விளைவாக மீன்பிடிக் கைத்தொழிலின் மீதான பாதகமான தாக்கங்களை குறைக்கும் நோக்கில்,மீன்படி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்துடன் இணைந்து 2012 மார்ச் முதல் அமுலுக்கு வரும் வகையில் மீன்பிடி படகுகளின் உரிமையாளர்களிற்குஎரிபொருள் மானியத்தினை வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை கூட்டுத்தாபனம் ஆரம்பித்திருந்தது. மானிய கூப்பன்கள் மீன்படி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தினால் மீன்பிடி படகுகளின் உரிமையாளர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் அது 2013 செப்தெம்பர் முதல் நிறுத்தப்பட்டிருந்தது.மானியக் கூப்பன்களிற்காக எரிபொருளை விநியோகிப்பதற்கு கூட்டுத்தாபனம் வணிகர்களை தெரிவுசெய்திருந்ததுடன் அதற்கமைய, மீன்பிடி படகுகளின் உரிமையாளர்கள் கூப்பன்களை அவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட பிராந்திய வணிகர்களிற்கு சமர்ப்பித்து எரிபொருளை பெற்றுக்கொண்டிருந்தனர். வணிகர்களால் கூட்டுத்தாபனத்திற்கு கூப்பன்கள் சமர்ப்பிக்கப்படுகையில் கூட்டுத்தாபனம் நிலுவைத் தொகையினை தீர்ப்பனவு செய்திருந்தது. அதற்கிணங்க,மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் ஊடாக பொதுத் திறைசேரியிடமிருந்து கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட்ட தொகை மீளப் பெறப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கிடைக்கக் கூடியதாகிவிருந்த தகவல்களின் படி, மீன்பிடிக் கூப்பன்கள் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தினால் வணிகர்களிற்குச் செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 4,371,312,889 ஆகக் காணப்பட்டது. இருப்பினும், கூட்டுத்தாபனம் பொதுத் திறைசேரியிடமிருந்து மூன்று தவணைகளில் ரூபா 4,549,775,00 தொகையினை மீளப் பெற்றிருந்தது.

கூட்டுத்தாபனம் ரூபா 178,462,111 தொகையினை மேலதிகமாக மீளப்பெற்றிருந்த போதிலும், அத் தொகை 2016 யூலை 31 ஆந் திகதி வரையிலும் மீளளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கூட்டுத்தாபனத்தின் மீன்பிடி மானிய செயன்முறை தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- மீன்பிடி கூப்பன்களிற்கு அனுமதிக்கப்பட்ட எரிபொருள் அளவு மீன்பிடி படகுகளின் உரிமையாளர்களால் பெற்றுக்கொள்ளப்படாது அதற்குப் பதிலாக கூப்பன்களின் (மானியம்) முகப்பெறுமதிக்குச் சமமான தொகையினை வணிகர்களிடமிருந்து அவர்கள் பெற்றுக்கொண்டிருந்தனர்.

- எரிபொருளை பெறுவதற்குப் பதிலாக எரிபொருள் கூப்பன்களை கழிவுடன் மாற்றி மீன்பிடி படகுகளின் உரிமையாளர்களால்வணிகர்களிடமிருந்து காசினைப் பெற்றுக்கொண்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன், வணிகர்கள் அக் கூப்பன்களை கூட்டுத்தாபனத்திற்குச் சமர்ப்பித்து கூப்பன்களின் பெறுமதியின் மொத்தத் தொகையினை மீளப் பெற்றிருந்தனர்.

- விநியோகத்தர்களின் கணக்குகளிற்கு மீளளிக்கப்பட வேண்டிய தொகையினைக் காட்டிலும் கூடுதலான தொகை செலவு வைக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. தெரிவுச் செவ்வையின் படி, 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீளளிக்கப்பட வேண்டிய தொகையினைக் காட்டிலும் ரூபா 9,759,350 விநியோகத்தர்களின் கணக்குகளிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. கூட்டுத்தாபன தலைவரின் கருத்துப் படி, அவ்வாறன மேலதிக மீளளித்தல்களின் ஒரு பகுதி பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது.

- சில சந்தர்ப்பங்களில் மீன்பிடி கூப்பன்களைப் பெற்றுக்கொள்ளாது வணிகர்களின் கணக்குகளிற்கு பணத் தொகைகள் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன், அத் தொகையினை தீர்ப்பதற்காக பின்னர் அவர்கள் கூப்பன்களை வழங்கியிருந்தனர். அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில், விநியோகத்தர்களின் கணக்குகளிற்கு ரூபா 24,310,000 தொகை செலவு வைக்கப்பட்டு 01 முதல் 12 மாத கால வீச்சில் கூட்டுத்தாபனம் அத் தொகையினை பின்னர் கிடைத்த கூப்பன்களைப் பயன்படுத்தி நாட்குறிப்புப் பதிவின் மூலம் தீர்த்திருந்தது.

(iii) மீன்பிடி கூப்பன்களிற்காக எரிபொருளை வழங்குவதற்கு பொருத்தமற்ற வணிகர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன. உதாரணமாக, மாத்தறை கரையோரப் பிரதேசத்திலிருந்து 24 கிலோமீற்றர்களிற்கு தொலைவில் ஹக்மன இல் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பும் நிலையமொன்று மீன்பிடி கூப்பன்களிற்கான எரிபொருளைவிநியோகிப்பதற்கு தெரிவு செய்யப்பட்டிருந்தது.

(iv) மீன்பிடி படகுகளின் உரிமையாளர்களிற்கு வழங்கப்பட்டிருந்த மீன்பிடி கூப்பன்களின் உண்மையான பெறுமதிக்கும் வணிகர்களால் தீர்ப்பனவிற்காக கூட்டுத்தாபனத்திடம் சமர்ப்பித்திருந்த கூப்பன்களின் பெறுமதிக்கும் இடையே ரூபா 81,886,701 வேறுபாடு காணப்பட்டது.

(v) வணிகர் ஒருவருக்கு தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்த எரிபொருள் சிட்டைகளின் தொகை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் செவ்வையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- மேற்படி வணிகருக்கு 2012 மார்ச் முதல் 2013 செப்தெம்பர் வரையான காலத்தில் ரூபா 321 மில்லியன் தொகையான மீன்பிடி கூப்பன் மானியத்தினை கூட்டுத்தாபனம் தீர்வு செய்திருந்த போதிலும், அக் காலப்பகுதியில் அவர் அனுமதிக்கப்பட்ட எரிபொருள் அளவை கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

- மீன்படி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் மீன்பிடி கூப்பன் நடைமுறையின் பிரகாரம், ஏனைய மாவட்டங்களிலுள்ள மீன்பிடி படகுகளின் உரிமையாளர்களிற்கு எரிபொருளை வழங்குவதற்கு வணிகர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. மேற்குறித்த வணிகரின் எரிபொருள் நிரப்பு நிலையம் திருகோணமலையில் அமைந்திருந்த போதிலும், அவர் முல்லைதீவு மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களிலுள்ள படகுகளின் உரிமையாளர்களிடமிருந்து மீன்பிடி கூப்பன்களை கழிவுடன் (எரிபொருளை வழங்காது) பெற்று, எரிபொருள் சிட்டைகளைத் தீர்ப்பதற்காக கூட்டுத்தாபனத்திற்குச் சமர்ப்பித்திருந்தார். அதற்கமைய,ரூபா 17,508,875 தொகைக்குரிய மீன்பிடி கூப்பன்கள் கூட்டுத்தாபனத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தினால் அவை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன்,கூட்டுத்தாபனம் ஏற்பதற்கு மறுத்திருந்தமை காரணமாக ரூபா 6,281,250 தொகையான ஏனைய கூப்பன்கள் 2016 யூன் 30 இல் உள்ளவாறு அவரிடம் வைத்திருக்கப்பட்டிருந்தன.

- இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட உள்ளகக் கணக்காய்வு புலனாய்வின் பிரகாரம், அவரால் சமர்ப்பிக்கப்பட்ட மோசடியான கூப்பன்களிற்கு மேற்படி முகவருக்கு கூட்டுத்தாபனம் ரூபா 2,658,015 தொகை செலுத்தியிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. இருப்பினும், இது தொடர்பில் பொறுப்புடைய உத்தியோகத்தருக்கு எதிராக கூட்டுத்தாபனம் எந்தவொரு புலானாய்வினையும் ஆரம்பித்திருக்கவில்லை.

**(ஓ) "பிடமென்" வணிகம்**

2004 சனவரி வரையிலும் நாட்டின் பிடமன் வணிகம் கூட்டுத்தாபனத்தினால் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், 2004 சனவரி 21 ஆந் திகதி அமுலுக்கு வரும் வகையில் பிடமென் இனை இறக்குமதி செய்து விற்பனை செய்வதற்கு லங்கா

இந்தியன் எண்ணெய் கம்பனிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. அத்துடன், 2011 நவம்பர் 16 இல் எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய, கூட்டுத்தாபனத்திடமிருந்து எதிர்ப்பு தெரிவிக்காமைக்கான கடிதத்தைப் பெற்று நாட்டிற்கு பிடமென் இனை இறக்குமதி செய்வதற்கான அங்கீகாரம் பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய, துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பரிந்துரையுடன்,பதினைந்து ஏனைய தன்யார் கம்பனிகளின் இனங்காணப்பட்ட செய்றதிட்டங்களிற்காக பிடமென் இனை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

பிரதானமாக, எஸ்பல்ட் 80/100 மற்றும் எஸ்பல்ட் 60/70 என்ற இரண்டு பிடமென் வகைகள் கடந்த ஆண்டு காலத்தில் கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்து விற்பனை செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் பிடமென் வணிகம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) எஸ்பல்ட் 60/70 என்ற 140,123 பீப்பாய் பிடமென் தொகை 2014 இன் இறுதிக் காலாண்டில் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட இறக்குமதிக் கட்ளைகளிற்காக 2015 இல் கிடைத்திருந்ததுடன் அதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இறக்குமதி செய்யப்பட்டிருந்த பிடமென் தொகை 28,015 பீப்பாய்களால் அல்லது 25 சதவீதத்தினால் மீளாய்வாண்டில் அதிகரித்திருந்தது. அவ்வாறே, அப் பொருளின் விற்பனைத் தொகையும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 80,258 பீப்பாய்களால் அல்லது 67 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அதன் விளைவாக, அப் பொருளின் இறுதி இருப்பு மீளாய்வாண்டில் 101,195 பீப்பாய்களால் அல்லது 336 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது .

(ii) நாட்டின் மீளாய்வாண்டிற்கான பிடமென் தேவை தொடர்பான தகவல்கள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் மீளாய்வாண்டில் இறக்குமதி செய்யப்பட்டிருந்த பிடமென் தொகை தொடர்பான விபரங்கள் கூட்டுத்தாபனத்தினால் அல்லது அமைச்சினால் பேணப்பட்டிருக்கவில்லை. ஆகையால், மீளாய்வாண்டில் இறக்குமதி செய்யப்பட வேண்டிய பிடமென் தொகையினை உரிய முறையில் மதிப்பீடுசெய்ய கூட்டுத்தாபனத்திற்கு முடிந்திருக்கவில்லை. அதன் விளைவாக, தேவையற்ற இருப்பு கூட்டுத்தாபனத்தினால் பேணப்பட்டிருந்தது.

(iii) கூட்டுத்தாபனம் பொருத்தமான இருப்புக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை வடிவமைத்து அமுல்படுத்தியிருக்காமையால், மறு கட்டளை மட்டம், மறு கட்டளைத் தொகை, இழிவு மட்டம் மற்றும் உச்ச இருப்பு மட்டம் என்பன பிடமென் இற்காக பேணிவரப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக, இருப்புச் சேதங்கள் மற்றும் பொருத்தமற்ற இருப்புக் கட்டுப்பாடுகள் காரணமாக குறைந்த விலைகளில் பிடமென் விற்கப்பட்டமையால் நட்டங்கள் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டன.

(iv) பிடமென் இற்கான கொள்வனவுத் திட்டமொன்று கணக்காய்விற்குக் கிடைக்கப்பெறாதிருந்ததுடன் அத்துடன் 2015 அல்லது 2016 ஆம் ஆண்டுகளிற்காகத் தயாரிக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்திலும் அவ்வாறான திட்டம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(v) 2014 திசெம்பர் முதல் 2015 செப்தெம்பர் வரையான காலத்தில் யூஎஸ்டொலர் 13,350,480 தொகையான 147,180 பீப்பாய் பிடமென் (எஸ்பெல்ட் 60/70) கூட்டுத்தாபனத்திற்குக் கிடைத்திருந்ததுடன் அதில் 129,802 பீப்பாய்கள் (23,364 மெ.தொன்) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இருப்பில் வைக்கப்பட்டிருந்தது. இருப்பினும், சந்தையில் பிடமென் இன் விலை வீழ்ச்சியடைந்திருந்தமையால், அந்த பிடமென் இருப்பினை இலாப எல்லையுடன் விற்பனை செய்வதற்கு கூட்டுத்தாபனத்திற்கு முடியாதுள்ளது. அதற்கிணங்க, அந்த இருப்பு 2016 சனவரி 22 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் பீப்பாய் ஒன்று ரூபா 6,480 ஆல் (ரூபா 15,480 இலிருந்து ரூபா 9,000 வரை) விலை குறைப்புச் செய்யப்படும் வரை மெதுவாக நகரும் இருப்பாக காணப்பட்டது. கூட்டுத்தாபனம் 2016 பெப்ரவரி 01 முதல் யூலை 31 வரையான காலத்தில் 88,833 பிடமென் பீப்பாய்களை பீப்பாய் ஒன்று ரூபா 3,504.60 நட்டத்தில் விற்பனை செய்திருந்ததுடன் அதற்கிணங்க, அக் காலப்பகுதியில் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட நட்டம் ரூபா 311.3 மில்லியனாகும்.

(vi) 2016 யூலை 31 இல் உள்ளவாறான எஸ்பெல்ட் 60/70 பிடமென் இறுதி இருப்பு 2014 இல் ரூபா 485.9 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டு 2015 செப்தெம்பர் வரை கிடைத்திருந்த 36,679 பிடமென் பீப்பாய்களை உள்ளடக்கியிருந்தது. அதன்படி, அவ்வாறான பெருந்தொகையான பணத்தினை முதலீடு செய்தல், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்குத் தேவையான பிரதான வணிகச் செயற்பாடொன்றாக இருக்கவில்லை என்பது கணக்காய்வில் வினாவுக்குரியதாகும்.

AGDSL
Auditor General's Department

(vii) இருப்பு மட்டங்களை பேணுதல், விற்பனை இலக்குகள், வாடிக்கையாளர் கேள்வி மற்றும் சந்தை நிலைமை தொடர்பான தகவல்கள் போன்றவற்றிற்கு உரிய திட்டங்கள் இல்லாதிருந்த போதிலும், கூட்டுத்தாபனம் 2016 மார்ச் 15 ஆந் திகதி யூஎஸ்டொலர் 2,360,000 (ஏறத்தாழ ரூபா 344.1 மில்லியன்) கிரயத்தில் 55,556 பீப்பாய்கள் (10,000 மெ.தொன்) எஸ்பெல்ட் 60/70 பிடமென் இருப்பினை கொள்வனவு செய்திருந்ததுடன், அந்த இருப்பானது 2016 யூலை 31 இல் உள்ளவாறான இருப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

**(ஓ) தண்டப்பணம் செலுத்துதல்**

திறைசேரியிடமிருந்து அத் தொகையினை மீளப்பெறுதல் அடிப்படையில் நிலக்கீழ் செயற்பாடுகளை ஆரம்பித்தல் நோக்கத்திற்கென 2002 முதல் நிலுவையாக உள்ள தொகையினை தீர்ப்பதற்காக 2014 யுன் 20 ஆந் திகதி சுங்கத் திணைக்களத்திற்கு ரூபா 57,736,913 தொகையினை கூட்டுத்தாபனம் செலுத்தியிருந்தது. இருப்பினும், இப் பணம் தண்டப்பணமாக செலுத்தப்பட்டுள்ளதாக சுங்கத் திணைக்களம் இனங்கண்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட்ட தொகை 2016 யூலை 31 வரை திறைசேரியினால் மீளளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2016 யூலை 31 வரையிலும் நிலக்கீழ் வணிகம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கிடைக்கக் கூடியதாகவுள்ள தகவல்களின் படி, அக் கொடுப்பனவில் 50 சதவீதமானவை அல்லது ரூபா 28,868,456 தொகை சுங்க உத்தியோகத்தர்களிடையே பகிரப்பட்டிருந்தமையும் ஏனைய 20 சதவீதம் அல்லது ரூபா 11,547,383 தொகை சுங்க உத்தியோகத்தர்களின் நலன்புரி நிதியத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(iv) இரண்டு நிறுவனங்களும் அரசாங்க நிறுவனங்களாக காணப்பட்டமையால் அத் தொகையினை எதிரீடு செய்வதற்கான வாய்ப்புக் காணப்பட்ட போதிலும், சுங்க கட்டளைச் சட்டத்தின் 154 மற்றும் 165 ஆம் பிரிவுகளின் பிரகாரம் முறையீடு செய்வதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

AGDSL
Auditor General's Department

**(ஔ) இலங்கை மின்சார சபையுடனான (சீஈபீ) உடன்படிக்கை**

கடந்த பல ஆண்டுகளாக மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காக எரிபொருளை கூட்டுத்தாபனம் சீஈபீ இற்கு விற்பனை செய்து வருகின்ற போதிலும், தணிப்பட்ட நிறுவனங்களின் சீரான செயற்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக இரண்டு தரப்பிற்கும் இடையே முறையான உடன்படிக்கை ஒன்று அல்லது புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

**4.3 செயற்பாட்டின் வினைத்திறனின்மை**

**(அ) சுத்திகரிப்பு செயற்பாடுகள்**

1969 இல் நிறுவப்பட்ட தற்போதுள்ள 45 வருடங்கள் பழமைவாய்ந்த சுத்திகரிப்பு ஆலையினால் நாட்டின் அதிகரித்துச் செல்லும் பெற்றோலியப் பொருட்களிற்கான தேவையை நிறைவேற்ற முடியாதுள்ளதுடன் உலகிலுள்ள ஏனைய நவீன தொழல்நுட்பம் மற்றும் வசதிகளுடன் உயர் வினைத்திறனுடன் செயற்பட்டு குறைந்த கிரயத்தில் உற்பத்தியை மேற்கொள்ளக்கூடிய சுத்திகரிப்பு ஆலைகளுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைந்த எல்லையில் காணப்படுகின்றது. இருப்பினும், குறைந்த கிரயத்தில் சந்தைக்கு எரிபொருள் வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக தீர்மானமாகியுள்ள சபுகஸ்கந்த எண்ணெய்ச்சுத்திகரிப்பு விரிவாக்கல் மற்றும் நவீனமயப்படுத்தல் செயற்திட்டம் (எஸ்ஓஆர்ஈஎம்) இதுவரை கூட்டுத்தாபனத்தினால் அமுல்படுத்தப்படவில்லை. ஆரம்ப சாத்தியவள ஆய்வு பூரணப்படுத்தப்பட்டு இந்த நோக்கத்திற்கு தேவையான காணி (35 ஏக்கர்) பெறப்பட்டிருந்த போதிலும், இச் செயற்திட்டத்திற்கு முதலீடு செய்வதற்கான போதிய நிதிப்பலம் இன்மை காரணமாக இச் செயற்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு கூட்டுத்தாபனத்திற்கு இயலாதுள்ளது. செயற்திட்டத்தின் மொத்தக் கிரயம் 8 ஆண்டுகளிற்கும் குறைவான முதலீடு திரும்பிவரும் காலத்துடன் யூஎஸ்டொலர் 2.1 பில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளதுடன் செயற்திட்டத்தின் தேறிய நிகழ்காலப் பெறுமதி (என்பிவீ) யூஎஸ்டொலர் 1,535 மில்லியனாக காணப்படும். அத்துடன், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழுள்ள சொத்துக்கள் மற்றும் நடைபெபெற்றுவரும் மூலதன செயற்திட்டங்களில் உள்ளடங்கியுள்ள கூட்டுத்தாபனத்தினால் செய்யப்பட்ட ரூபா 837 மில்லியன் செலவினம் சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கலொன்றாகும் என்பது அவதானிக்கப்பட்டது.

கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி, எஸ்பிபீஎம் இல்லத்தின் செயலிழப்புடன் மசகு எண்ணெய் வழங்கலில் ஏற்பட்ட குறைவு காரணமாக மொத்தமாக ஒரு மாத காலத்திற்கு 2014 ஆம் ஆண்டில் ஒரு தடவை சுத்திகரிப்பு மூடப்பட்டிருந்ததுடன் 2014 இன் குறைவான உற்பத்திச் செயற்பாட்டுடன் ஏறத்தாழ

மேலுமொரு மாதத்திற்கு இரண்டு மீள் உற்பத்திக்கான தேவை காணப்பட்டது. ஆகவே, பழைய உபகரணங்களின் செயலிழப்பையும் மீள உற்பத்தியினையும் தவிர்த்து இலாபத்தன்மையினையும் நெகிழ்வான செயற்பாட்டினையும் மேம்படுத்துவதற்கு அவசர தொழில்நுட்ப திருத்தங்கள் சுத்திகரிப்புக்கு மேற்கொள்ள வேண்டிய தேவை காணப்படுகின்றது.

**(ஆ) வாடிக்கையாளர்களிற்கு எரிபொருளை மொத்தமாக விற்பனை செய்தல்**

கூட்டுத்தாபனத்தினால் வாடிக்கையாளர்களிற்கு எரிபொருளை மொத்தமாக விற்பனை செய்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி, பிழையான அளவுகள் மீதான முறைப்பாடுகளை குறைத்தல்,உரிய வேளையில் எரிபொருள் விநியோகிக்கப்படாமை மற்றும் ஏனைய இடையீட்டுப் பொருட்கள் கலப்பதனால் பொருளின் தரம் குறைவடைதல் போன்ற பிரச்சினைகளை தவிர்க்கும்நோக்குடன் தங்களிற்குச் சொந்தமான பவுசர்களைப் பயன்படுத்தி எரிபொருளை அவர்களது எரிபொருள் நிரப்பும் நிலையங்களிற்கு போக்குவரத்துச் செய்வதற்கு 1996 இல் வணிகர்களிற்கு கூட்டுத்தாபனம் அங்கீகாரம் வழங்கியது.

(ii) மேலும், 2008 யூன் 23 ஆந் திகதிய 43/1073 ஆம் இலக்க சபை தீர்மானம் 2008 ஆகஸ்ட் 29 ஆந் திகதிய 898 ஆம் இலக்க கூட்டுத்தாபன உள்ளக சுற்றறிக்கையினால் 2008 ஆம் ஆண்டில் நடைமுறை திருத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, பின்வரும் விதிகள் மற்றும் நிபந்தனைகளிற்கு உட்பட்டு எரிபொருளை போக்குவரத்துச் செய்வதற்காக வாடிக்கையாளர்களிற்கு வணிகர்கள் அங்கீகாரம் வழங்கியிருந்தனர்.

- பாவனையாளர்களிற்கு நேரடியாக எரிபொருளை விநியோகித்தல்.
- வணிகரின் பெயரில் பட்டியல்களை தயாரிக்க முடிதல்.
- 2.5 சதவீத தரகினைப் பெற்றுக்கொள்ள முடிதல் ஆனால் போக்குவரத்துக் கட்டணங்கள் அனுமதிக்கப்படுவதில்லை.
- இந்த விற்பனை வணிகரின் மொத்த விற்பனை என அழைக்கப்படுதல்.

- அருகிலுள்ள மொத்த டிப்போக்கள் மற்றும் கொலன்னாவ, சபுகஸ்கந்த மற்றும் முத்துராஜவல இறங்குதுறைகளிலிருந்து டீசலை மாத்திரம் பெற்றுக்கொள்ள அனுமதியளித்தல்.

- தமக்குரிய எரிபொருள் நிரப்பு நிலையங்களிற்கு எரிபொருளை போக்குவரத்துச் செய்வதற்காக அவருக்குச் சொந்தமான பவுசர்களைப் பயன்படுத்தி கூட்டுத்தாபனத்திடமிருந்து போக்குவரத்துக் கட்டணங்களை பெற்றுக்கொண்ட வணிகர்கள், மொத்த விற்பனையினை செய்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

(iii) மேற்படி பொறிமுறையில் காணப்பட்ட சில தவறுகள் காரணமாக 2013 ஆகஸ்ட் 15 ஆந் திகதிய எம்கேரீ/13/35 ஆம் இலக்க தமது கடிதத்தினால் கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் முகாமையாளரினால் பின்வரும் நிபந்தனைகள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன.

- வணிகர்கள் சபுகஸ்கந்த இறங்குதுறையிலிருந்து மாத்திரமே டீசலை பெற்றுக்கொள்ள முடியும்.
- விற்பனையின் அடிப்படையிலேயே கழிவுகள் வழங்கப்படும் ஆனால் போக்குவரத்துக் கட்டணங்கள் அனுமதிக்கப்படுவதில்லை.

களஞ்சிய மற்றும் விநியோக வசதிகளிற்காக சீபிஎஸ்ரீஎல் இற்குச் செலுத்த வேண்டிய இறங்குதுறைக் கட்டணங்களை சேமித்தல் மற்றும் சபுகஸ்கந்த குதத்தின் செயற்பாட்டு இயலளவினை உத்தம அளவில் பயன்படுத்துவதனை ஊக்குவித்தல் என்பன கூட்டுத்தாபனம் மேற்படி புதிய நிபந்தனைகளை அறிமுகப்படுத்தியமையின் குறிக்கோள்களாக இருந்தன.

(iv) எவ்வாறாயினும், சபுகஸ்கந்த குதத்திலிருந்து வாடிக்கையாளர்களிற்கு நேரடியாக எரிபொருளை விநியோகிப்பதற்குப் பதிலாக, இரண்டு குளாய்களை (குளாய் இல. 04 மற்றும் 05) பயன்படுத்தி வணிகர் ஒருவர் அவரது சொந்த இருப்பிலிருந்து வாடிக்கையாளர்களிற்கு மொத்தமாக டீசலை விநியோகித்திருந்தார். அத்துடன், வணிகர் அந்த எரிபொருளை காலி மற்றும் மாத்தறையிலுள்ள மொத்த டிப்போக்களிலிருந்து அவர் கொள்வனவு செய்திருந்தார்.

(v) அவரது சொந்த இருப்பிலிருந்து மொத்த விற்பனைக்காக மாத்திரம் பயன்படுத்தியிருந்த மேற்குறிப்பிட்ட இரண்டு விநியோகக் குளாய்களையும் (குளாய் இல. 04 மற்றும் 05) கண்காணித்தல், அளவீட்டுப் பிரிவு

நியமங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் சேவை திணைக்களத்தின் (எம்யூஎஸ்எஸ்டீ) உதவியுடன் பிராந்திய மேற்பார்வையாளரால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையில் அக் குளாய்களின் உண்மையான அளவுகள் நியம மட்டத்தில் காணப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. பின்வரும் மேலதிக அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன.

- மேற்படி இரண்டு குளாய்களும் மொத்த வழங்களிற்காக மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தன.
- அந்த இரண்டு விநியோகக் குளாய்களினதும் அளவுகளை சரி பார்க்க வேண்டிய பிராந்திய மேற்பார்வையாளரின் பொறுப்பு நிறைவேற்றப்பட்டிக்கவில்லை.
- வணிகர்களால் அவர்களது சொந்த இருப்புக்களிலிருந்து முறையற்ற விதத்தில் மேற்கொண்டிருந்த மொத்த விற்பனைகள் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டிருந்த குறைபாடுகளை திருத்துவதற்கு பிராந்திய முகாமையாளரும் சந்தைப்படுத்தல் முகாமையாளரும் தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

(vi) 2013 ஆகஸ்ட் 15 ஆந் திகதிய எம்கேரீ/13/35 ஆம் இலக்க மேற்படி கடிதத்தினால் வழங்கப்பட்டிருந்த அறிவுறுத்தல்களிற்கு அமைய, மேற்படி வணிகருக்கு மொத்த விற்பனைக்காக மாத்திரமே கழிவினை வழங்கியிருத்தல் வேண்டும். இருப்பினும், வணிகருக்கு கழிவினைச் செலுத்தியமைக்கு மேலதிகமாக களஞ்சிய மற்றும் விநியோக வசதிகளிற்காக சீபிஎஸ்ரீஎல் இற்கு இறங்குதுறைக் கட்டணமும் "சிலேப்" (போக்குவரத்துக் கட்டணம்) கட்டணமும் செலுத்தப்பட்டிருந்தது. மேற்படி வணிகருக்கு கழிவினைச் செலுத்தியமைக்கு மேலதிகமாக அவரால் மேற்கொள்ளப்பட்ட மொத்த விற்பனைக்காக சீபிஎஸ்ரீஎல் இற்கு 2015 பெப்ரவரி முதல் ஏப்ரல் வரையான காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மொத்த விற்பனைகள் மீது ரூபா 12,012,134 இனை கூட்டுத்தாபனம் செலுத்தியிருந்தமை கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையில் அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | தொகை |
|---|---|
| | ரூபா |
| (i) இறங்குதுறைக் கட்டணம் | 8,678,928 |
| (ii) போக்குவரத்துக் கட்டணம் (குதத்திலிருந்து டிப்போ வரை) | 830,519 |
| (iii) போக்குவரத்து – (காலியிலிருந்து வணிகருக்கு) | 2,502,687 |
| **மொத்தம்** | **12,012,134** |

மேற்குறித்த பொருத்தமற்ற நடைமுறைகளின் காரணத்தால், 2015 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனம் அடைந்து கொண்டு மொத்த மதிப்பீட்டு நட்டம் ஏறத்தாழ (12,012 x 4) ரூபா 48,048,536 ஆகும்.

(vii) மொத்த விற்பனைகளிற்காக வணிகர்களை தெரிவு செய்வதற்கான பொருத்தமான நடைமுறையொன்று இன்மை காரணமாகவும் மொத்த விற்பனைகளின் செயன்முறையினை கண்காணித்தலிலுள்ள பலவீனங்கள் தொடர்பிலும் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- சபுகஸகந்த குதத்திலிருந்து மாத்திரம் நேரடியாக பாவனையாளர்களிற்கு எரிபொருளை விநியோகிப்பதற்குப் பதிலாக பாவனையாளர்களிற்கு எரிபொருளை விநியோகிப்பதற்காக வணிகர்கள் முறையற்ற விதத்தில் அவர்களது சொந்த இருப்பினை பயன்படுத்தியிருந்தமை.

- பாவனையாளர்களிற்கு அவர்களது சொந்த இருப்பிலிருந்து வணிகர்களால் எரிபொருளை விநியோகிக்கையில் அந்த நோக்கத்திற்காக பயன்படுத்தியிருந்த பவுசர்கள் பொறியிடப்பட்டிருக்காமை வெளிப்படுத்தப்பட்டது. அதற்கமைய, மொத்த விற்பனை அடிப்படையில் வணிகர்களால் விநியோகித்திருந்த எரிபொருளின் தரத்தினையும் அளவினையும் உறுதிப்படுத்துவதற்காக கூட்டுத்தாபனம் உரிய முறையொன்றை தாபித்திருக்காமை அவதானிக்கப்பட்டது.

- வணிகர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த விற்பனைகளிற்காக உரிய நடைமுறையொன்று இன்மை காரணமாக வாடிக்கையாளர்களிற்கு பாவனையிலிருந்து அகற்றப்பட்ட எரிபொருள் ஏற்றியனுப்பப்படுவதற்கான ஆபத்து காணப்படுதல்.

- பாவனையாளர்களிடமிருந்து அங்கீகரிக்கப்படாத கட்டணங்களைப் பெறுதல். உதாரணமாக: மொத்த விற்பனைகள் தொடர்பில் சில்லறை விற்பனை விலையினைக் காட்டிலும் கூடுதலான கட்டணம் பாவனையாளர்களிடமிருந்து அறவிடப்படுதல் அவதானிக்கப்பட்டமை.

- மொத்த விற்பனைகள் மீது இறங்குதுறைக் கட்டமணங்கள் மற்றும் போக்குவரத்துக் கட்டணங்கள் போன்ற தேவையற்ற கொடுப்பனவுகள் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு பெருமளவு நட்டம் ஏற்பட்டிருந்தமை.

- சில வணிகர்கள் கூட்டுத்தாபனத்தின் அனுமதியின்றி மொத்த விற்பனைகளை மேற்கொண்டு அதிகாரமற்ற இலாபங்களை பெற்றிருந்தமை. கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் பிரகாரம், சில வணிகர்கள் எவ்வித அனுமதியினைப் பெறாது தமது சொந்த இருப்புக்களிலிருந்து மொத்த விற்பனை அடிப்படையில் எரிபொருளை விநியோகித்து அதிகாரமற்ற இலாபங்களை பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. உதாரணமாக:

  - வணிகர் ஒருவர் 2015 செப்தெம்பரில் அனுமதியின்றி கப்பற் சேவைகளிற்காக மொத்த விற்பனை அடிப்படையில் 54,800 லீற்றர் டீசலை விற்பனை செய்திருந்தமை. அதற்கமைய, 2015 செப்தெம்பர் மாதத்தில் ரூபா 136,285 மதிப்பிடப்பட்ட நட்டம் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டிருந்தமை.

  - அந்த வணிகர் அனுமதியின்றி மொத்த விற்பனை அடிப்படையில் 13,200 லீற்றர் விற்பனை செய்திருந்தமையால் இரண்டு சந்தர்ப்பங்களில் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 32,828 மதிப்பிடப்பட்ட நட்டம் ஏற்பட்டிருந்தமை கணக்காய்வில் வெளிப்பட்டிருந்தது.

(viii) சில்லறை வலைப்பின்னலை ஆளுகின்ற “சிபெட்கோ” இன் கொள்கைகள் மற்றும் எண்ணைத்தாங்கி வாகனங்களிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பயண நேரத் தகவல்களுடன் மொத்த உற்பத்திப்பொருட்களை விநியோகித்தல், தரையிறக்குவதற்கான காலம், வாடகைக்கு பெறப்பட்ட எண்ணைத் தாங்கி

AGDSL
Auditor General's Department

வாகனங்களிற்கு போக்குவரத்துக் கட்டணங்களை செலுத்துதல் போன்றவற்றைக் கருத்திற்கொண்டு ஒவ்வொரு எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் போதியளவு எரிபொருள் இருப்பினை பேணுதல் பிராந்திய முகாமையாளர்களினதும் பிராந்திய மேற்பார்வையாளர்களினதும் பொறுப்பாக உள்ளது. இருப்பினும், மேற்படி கணக்காய்வு தெரிவுச் செவ்வைக்கு அமைய, பிராந்திய முகாமையாளர்களும் பிராந்திய மேற்பார்வையாளர்களும் பின்வரும் விடயங்கள் தொடர்பில் தங்களது பொறுப்புக்கள் தொடர்பில் பாராமுகமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

- வணிகர்களின் எரிபொருள் மொத்த விற்பனைகளுடன் தொடர்புடைய சிபெட்கோவின் கொள்கைகளுடன் இணங்குதல்.
- வணிகர்களின் எரிபொருள் இருப்புக்களிலிருந்து அனுமதியற்ற மொத்த விற்பனைகளை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- வணிகர்களின் அவ்வாறான முறையற்ற செயற்பாடுகள் தொடர்பில் கூட்டுத்தாபனத்திற்கு உண்மையான மற்றும் உரியகாலத் தகவல்களை வழங்குதல்.

(ix) எரிபொருள் நிரப்பு நிலையங்களின் செயற்பாடுகள் தொடர்பிலான கண்காணித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் குறைபாடுகள் காரணமாக வணிகர்களால் எரிபொருள் நிரப்புதல்களின் முறையற்ற பயன்பாட்டுச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் வருமாறு.

- காலியிலுள்ள சில்லறை விற்பனை நிலையத்தில் 2015 ஒக்தோபர் 01 ஆந் திகதி மேற்கொண்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.
  - 1 மற்றும் 2 ஆம் இலக்க நிரப்பும் குளாய்களின் பிரதான பலகையின் பொறியிடுதல்கள் பிராந்திய மேற்பார்வையாளர் மற்றும் பிராந்திய முகாமையாளருக்கு அறிவிக்கப்படாது திருத்தும் நோக்கத்திற்காக வணிகரால் அகற்றப்பட்டிருந்ததுடன் பிராந்திய மேற்பார்வையாளர் அது தொடர்பில் அறிந்திருக்கவில்லை. இருப்பினும், பிரதான பலகையின் பொறியிடுதல் இன்றி அந்த நிரப்பும் குளாய்கள் எரிபொருளை வழங்குவதற்குப் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

  - 3 ஆம் இலக்க நிரப்பும் குளாயின் பிரதான பலகையின் திருத்தும் நோக்கத்திற்காக அகற்றப்பட்டிருந்ததுடன் இது தொடர்பில்

பிராந்திய மேற்பார்வையாளருக்கு வணிகர் அறிவித்திருந்தார். இருப்பினும், பிராந்திய மேற்பார்வையாளர் இதனை வலய அலுவலகத்திலுள்ள முறைப்பாட்டு புத்தகத்தில் இதனை பதிவுசெய்திருக்கவில்லை. மேலும், பிரதான பலகையின் பொறியிடுதல் இன்றி அந்த நிரப்பும் குளாய் எரிபொருளை வழங்குவதற்குப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

- சில்லறை விற்பனை நிலையமொன்றில் 2015 ஒக்தோபர் 02 ஆந் திகதி மேற்கொண்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையில், 03 ஆம் இலக்க நிரப்பும் குளாய் சில கோளாறுகள் காரணமாக செயலிழந்திருந்தது. இந்தக் கோளாறு தொடர்பில் வணிகர் பிராந்திய மேற்பார்வையாளருக்கு அறிவித்திருந்த போதிலும், விடயத்தினை திருத்துவதற்கு பிராந்திய முகாமையாளர் எவ்வித நடவடிக்கையினையும் எடுத்திருக்கவில்லை.

**(இ) இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி, உராய்வு நீக்கி கொள்கலன்கள் மற்றும் இருப்புக்களை முறையற்ற விதத்தில் கையாண்டிருந்தமையின் சேதங்கள் காரணமாக பின்வரும் நட்டங்கள் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டிருந்தன. இருப்பினும், இச் சேதங்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 103 மற்றும் 104 இன் பிரகாரமான நடவடிக்கைகள் முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| ஆண்டு | சேதத் தொகை | சேதத்திற்கான காரணமும் முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கையும் |
|---|---|---|
| | ரூபா | |
| 2012 | 8,670,455 | கிடைக்கப்பெறவில்லை |
| 2013 | கிடைக்கவில்லை | - |
| 2014 | 14,822,315 | கிடைக்கப்பெறவில்லை |
| 2015 | 16,759,825 | கிடைக்கப்பெறவில்லை |

(ii) 2015 ஆம் ஆண்டில் சுத்திகரிப்பு செயன்முறையில் உற்பத்தி செய்யப்பட்ட பின்வரும் மூன்று உற்பத்திப் பொருட்கள் தொடர்பில் ரூபா 70.5 மில்லியன் அசாதாரண நட்டம் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டிருந்தது. விபரங்கள் வருமாறு.

| உற்பத்திப் பொருள் | அனுமதிக்கப்பட்ட செயற்பாட்டு நட்டம் (0.5%) | கிரயத் தாளின் படி உண்மையாக ஏற்பட்ட நட்டம் | அனுமதிக்கப்பட்ட நட்டத்திற்கு மேலான அசாதாரண நட்டம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| லங்கா பேர்னஸ் எண்ணெய் (800) | 73,224,814 | 116,508,897 | 43,284,083 |
| லங்கா பேர்னஸ் எண்ணெய் (1500) | 46,525,010 | 71,713,240 | 25,188,230 |
| விசேட கொதித்தல் முனை (S.B.P.) | 778,404 | 2,852,103 | 2,073,699 |
| **மொத்தம்** | **120,528,228** | **191,074,240** | **70,546,012** |

### 4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் சொத்துக்கள், அந்தச் சொத்துக்கள் சுவீகரிக்கப்பட்டதிலிருந்து பயன்படுத்தாது வைக்கப்பட்டிருந்தன.

(அ) வனாத்தமுல்லையிலுள்ள கலகஹ கும்புற காணி - எல்பீ எரிவாயு செயற்திட்டம் மற்றும் விளையாட்டு மைதானம் ஆகிய நோக்கங்களிற்காக இந்தக் காணி ரூபா 10.6 மில்லியனிற்கு சுவீகரிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், 700 இற்கும் மேற்பட்ட அத்துமீறிய குடியிருப்பாளர்களால் இக் காணி கைப்பற்றப்பட்டுள்ளது.

(ஆ) மஹெனா காணி – கிடைக்கக் கூடியதாகவுள்ள தொடர்புகளின்படி, இந்தக் காணியின் சுவீகரிப்பிற்காகச் ரூபா 0.625 மில்லியன் தொகையை கூட்டுத்தாபனம் செலுத்தியிருந்த போதிலும், இந்தக் காணி கூட்டுத்தாபனத்தின் பதிவேடுகளில் கணக்கிடப்பட்டிருக்காததுடன் அது 1986 இல் கொள்வனவு செய்ததிலிருந்து முன்னைய சொந்தக்காரால் பயன்படுத்தப்படுகிறது.

(இ) முதலீடுகள் - 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நான்கு கம்பனிகளின் விலைகூறப்பட்ட மற்றும் விலை கூறப்படாத பங்குகளில் மேற்கொள்ளப்பட்டிருந்த முதலீடுகளின் முன்கொண்டுசென்ற பெறுமதி ரூபா 34.63 மில்லியனாகும். எவ்வாறாயினும், நீண்ட காலமாக அதிலிருந்து எவ்வித பங்கிலாபமும் கூட்டுத்தாபனத்திற்குக் கிடைத்திருக்கவில்லை.

## 4.5 ஏனைய நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்டிருந்த வளங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நல்லாளுகைக்கான பொது முயற்சிகள் வழிகாட்டல்கள் மீதான 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை, அதிமேதகு சனாதிபதி அவர்களால் வெளியிடப்பட்ட 2006 சனவரி 04 ஆந் திகதிய சீஎஸ்ஏ/பி1/40 ஆம் இலக்க மற்றும் 2010 மே 14 ஆந் திகதிய சீஎஸ்/1/17/1 ஆம் இலக்க கடிதங்கள் மற்றும் 2004 சனவரி 08 ஆந் திகதிய 21 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை என்பவற்றிற்கு முரணாக, கூட்டுத்தாபனம் வளங்களை வெளித் தரப்பினர்களிற்கு விடுவித்திருந்ததுடன், விடுவிக்கப்பட்ட ஊழியர்கள் சார்பான சம்பளம் மற்றும் ஏனைய படிகளிற்காகவும் விடுவிக்கப்பட்ட வாகனங்களிற்கான எரிபொருள் மற்றும் பேணுதல் கொடுப்பனவுகளிற்காகவும் பெருமளவு தொகையினை கூட்டுத்தாபனம் செலவிட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விடுவிக்கப் பட்ட வளங்களின் வகை | 2015 | | 2014 | | 2013 | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | கூட்டுத்தாபனத்தால் உரப்பட்ட கிரயம் | எண்ணிக்கை | கூட்டுத்தாபனத்தால் உரப்பட்ட கிரயம் | எண்ணிக்கை | கூட்டுத்தாபனத்தால் உரப்பட்ட கிரயம் |
| | | ரூபா. | | ரூபா. | | ரூபா. |
| மனித வளங்கள் | 11 | 3,452,737 | 56 | 46,261,907 | 44 | 41,980,142 |
| வாகனங்கள் | 03 | 641,375 | 07 | 7,808,961 | 07 | 4,461,920 |
| **மொத்தம்** | | **4,094,112** | | **54,070,868** | | **46,442,062** |

(ஆ) மேலும் 02 உத்தியோகத்தர்கள் 2014 முதல் சம்பளமற்ற அடிப்படையில் கூட்டுத்தாபனத்தினால் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

(இ) அத்துடன், கிடைக்கக்கூடியதாகவிருந்த தகவல்களின் படி, கூட்டுத்தாபனம் இதே நடைமுறையினை 2016 ஆம் ஆண்டின் போதும் தொடர்ந்து மேற்கொண்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

(ஈ) அதற்கமைய, இந்த நிலைமையினை சரிசெய்வதற்கும் இந்த தவறான முகாமைத்துவத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையினை எடுப்பதற்கும் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் உரிய நடவடிக்கையினை எடுத்திருக்காமை அவதானிக்கப்பட்டது.

## 4.6 மனித வளங்கள் முகாமைத்துவம்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் 3,284 மொத்த அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பில் 705 பதவிகள் அல்லது 21 சதவீதமானவை 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அதில் 120 பதவிகள் அல்லது 27 சதவீதமானவை உள்ளக கணக்காய்வு முகாமையாளர், விவசாய இரசாயண முகாமையாளர் போன்ற உள்ளிட்ட சிரேஷ்ட பதிவியணி நிலையிலுள்ள வெற்றிடங்களாகும். அதன்படி, பிரதான செயற்பாடுகளிற்கு எவ்வித தாக்கமுமின்றி அவ்வாறானதோர் பாரிய வெற்றிடத்துடன் இயங்குதல் கணக்காய்வில் கேள்விக்குரியாக உள்ளது.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் போப்பிற்கமைய, முகாமையாளர் (செயலக/சபைச் செயலாளர்) பதவி 2012 முதல் வெற்றிடமாக காணப்படுகின்றது.

(இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.14 ஆம் பிரிவின் பிரகாரம், மனித வளங்கள் முகாமைத்துவம் மீதான நடைமுறைக் கையேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சிரேஷ்ட முகாமைத்துவ நிலைப் பதவிக்குரிய சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றவர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கான ஆபத்தினைக் குறைப்பதற்காக மேற்படி சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய வெற்றிகரமான திட்டமொன்றை கூட்டுத்தாபனம் பேணியிருக்கவில்லை. இருப்பினும், அவ்வாறான வெற்றிகரமான திட்டமொன்று இன்மை காரணமாக ஓய்வுபெற்ற ஊழியர்களின் சேவையினை ஒப்பந்த அடிப்படையில் கூட்டுத்தாபனம் காலநீடிப்புச் செய்திருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டமும் செயல்நடவடிக்கைத் திட்டமும்

2014 முதல் 2018 வரைக்குமான காலத்திற்கான கூட்டிணைந்த திட்டமும் 2015 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், பின்வரும் பிரதான இலக்குகளை அடைந்துகொள்வதற்கு 2015 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.

(அ) 2 ஆவது பிடமென் தாங்கியினை நிர்மாணித்தல்.

(ஆ) விசேடமாக சிபெட்கோவின் வணிகளிர்களிற்குச் சொந்தமான புதிய 25 விற்பனை நிலையங்களில் இலத்திரனியல்/ஹைட்ரஜன் கலன் வாகனங்களிற்காக (மீள்வலுப்படுத்தல் வசதிகள்) வலுப்படுத்தல் இடங்களை தாபித்தல்.

(இ) ஹைரக்ஸ் ஒயில் கம்பனியுடன் இணைந்து முத்துராஜவல இல் உராய்வு நீக்கி கலப்பு தொழிற்சாலையொன்றை நிர்மாணித்தல் (2016 மே 06 ஆந் திகதி இது தொடர்பில் மலேசியாவின் ஹைரக்ஸ் ஒயில் கம்பனியுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.)

(ஈ) பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் எரிபொருள் ஹைட்ரஜன் முறைமையினை நிர்மாணித்தல். (விமான நிலையத்தில் தற்போதுள்ள விமான எரிபொருள் நிரப்புதல் குதத்தின் வசதிகளை மேம்படுத்தி அபிவிருத்தி செய்தல் இரண்டாம் படிமுறையின் II ஆம் கட்டம்)

## 5.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வின் தலைவரும் உள்ளக கணக்காய்வுத் திணைக்களமும் நிதிப் பணிப்பாளர் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்களிலிருந்து சுதந்திரமானவை என்பதனை உறுதிப்படுத்தி, கணக்காய்வுக் குழுவிற்கு உள்ளகக் கணக்காய்வு வேலைகளின் பெறுபேறுகளை அறிக்கையிடுவதற்குப் பொறுப்புடைய உள்ளகக் கணக்காய்வு பணிகள் தகைமையுடைய மற்றும் ஆற்றல் மிக்க ஆள் வளத்தினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனையும் போதுமான தன்மையினையும் பரிசோதித்தல், மதிப்பிடுதல் மற்றும் கண்காணித்தல் உள்ளிட்ட சகல பரப்புக்களையும் மீளாய்வு செய்வதற்காக உள்ளக் கணக்காய்வுத் தொழிற்பாடுகள் பலப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தினால் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகள் பின்வருமாறு புறக்கணிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(அ) உள்ளகக் கணக்காய்வு பிரிவின் அங்கீகரிக்கப்பட்ட மொத்தம் 42 பதவிகளில், 15 பதவிகள் அல்லது 36 சதவீதமானவை 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெற்றிடமாகக் காணப்பட்டதுடன், அவற்றில் 7 பதவிகள் சிரேஷ்ட பதவிநிலை பதவிகளாக இருந்தன.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் அமைப்பு வரைபடத்தின் பிரகாரம், பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ பணிப்பாளருக்கு நேரடியாக பொறுப்புக்கூற வேண்டியவராக உள்ளார்.

(இ) இடர்குறைப்பு கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் நடாத்தப்பட்ட ஒழுக்காற்று விசாரணையின் தீர்மானத்திற்கமைய 2008 ஆம் ஆண்டிலிருந்து கட்டாய விடுமுறையில் அனுப்பிவைக்கப்பட்டிருந்த முன்னாள் பிரதி பொது முகாமையாளர் (நிதி) இற்குப் பதிலாக 2011 இன் நடுப்பகுதியிலிருந்து பிரதான உள்ளகக் கணக்காய்வாளர், பிரதி பொது முகாமையாளர் (நிதி) பதவியில் பதிற்கடமையாற்றி வந்திருந்தார். அத்துடன், முன்னாள் பிரதி பொது முகாமையாளர் (நிதி) 2016 ஆகஸ்ட் 01 முதல் பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

(ஈ) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும், கூட்டுத்தாபனத்தினால் கணக்காய்விற்கு முற்திய செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அதற்கமைய தற்போதுள்ள உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்கள் கணக்காய்விற்கு முந்திய செயற்பாடுகளில் முழுநேர அளவில் ஈடுபட்டிருந்தமையின் விளைவாக முறைசார்ந்த உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகள் புறக்கணிக்கப்பட்டிருந்தன.

## 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக பாதிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானங்கள் செலவினங்களிற்கிடையில் குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு தாக்கமான கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின்போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க அவதானிப்புக்கள் காலத்திற்குக் காலம் கூட்டுத்தாபன தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| பிரதான பரப்புகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) ஆளணி நிர்வாகம் | முகாமைத்துவ பணிப்பாளர் கூட்டுத்தாபனத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராக (சீஈஓ) காணப்படுவதுடன் தலைவரும் சீஈஓ உம் ஒருவரேயாவர். 2016 இல் இடம்பெற்ற பொது முயற்சிகள் குழுக் (சீஓபிஈ) கூட்டத்தில் அப் பதவிகளிற்கு இருவரை நியமிக்குமாறு பணிப்புரை வழங்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு |

| | |
|---|---|
| | செய்வதற்கு பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சினால் இதுவரை தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்ள தவறியமை |
| (ஆ) நிதிக் கட்டுப்பாடு | கூட்டுத்தாபனத்தின் பிரதான குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக நிதியங்களை பயன்படுத்துதல் |
| (இ) வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவை | நிலுவைகளை உரிய வேளையில் சேகரித்தல் மீதான கட்டுப்பாடுகளிலும் கடன்ஏய்ப்புச் செய்யப்படுதல் ஆபத்தினைக் குறைப்பதிலும் பலவீனங்கள் காணப்படுதல். |
| (ஈ) கணக்கீட்டு மற்றும் நிதி முகாமைத்துவம் | கூட்டுத்தாபனத்தின் பிரதான குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக நிதியங்களை பயன்படுத்துதல் போதியளவில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (உ) கொள்வனவுகள் | அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்களிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்குதல் |
| (ஊ) வளங்களைப் பயன்படுத்துதல் | வளங்களை ஈடுபடுத்துகையில் சுற்றறிக்கையிலுள்ள அறிவுறுத்தல்களுடன் இணங்குதல் |

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன
பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி

## ஒரே பார்வையில் பததாண்டுகள்

மொத்த உற்பத்திகளின் உள்நாட்டு விற்பனை

| ரூபா மில்லியக் | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 (மீ.கு) | 2015 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **(அ) பெறுமதி** | | | | | | | | | | |
| பெற்றோல் | 36,677 | 6,580 | 66,434 | 60,055 | 65,158 | 90,499 | 117,600 | 132,398 | 140,885 | 127,879 |
| ஓட்டோ டீசல் | 92,475 | 113,737 | 151,070 | 119,046 | 122,360 | 165,800 | 246,441 | 216,420 | 244,407 | 174,984 |
| சுப்பர் டீசல் | 350 | 468 | 885 | 866 | 1,170 | 1,588 | 3,540 | 4,152 | 5,104 | 5,998 |
| மண்ணெண்ணெய் | 13,210 | 12,459 | 14,000 | 9,755 | 10,711 | 12,804 | 18,100 | 16,803 | 15,366 | 9,831 |
| உலை எண்ணெய் | 36,422 | 43,941 | 66,220 | 33,157 | 35,791 | 49,991 | 84,790 | 60,651 | 70,021 | 34,841 |
| **மொத்தம்** | **179,134** | **217,185** | **298,609** | **222,879** | **235,191** | **320,682** | **470,471** | **430,424** | **475,783** | **353,533** |
| **(ஆ) அளவு ஆயிரம் மெ.தொ.** | | | | | | | | | | |
| பெற்றோல் | 368 | 382 | 384 | 416 | 484 | 563 | 619 | 640 | 687 | 838 |
| ஓட்டோ டீசல் | 1,335 | 1,450 | 1,371 | 1,427 | 1,422 | 1,849 | 1,930 | 1,559 | 1,757 | 1,579 |
| சுப்பர் டீசல் | 5 | 5 | 7 | 9 | 11 | 14 | 22 | 25 | 31 | 47 |
| மண்ணெண்ணெய் | 197 | 169 | 151 | 151 | 165 | 147 | 143 | 126 | 122 | 130 |
| உலை எண்ணெய் | 911 | 985 | 995 | 1,096 | 1,004 | 1,093 | 1,187 | 668 | 722 | 512 |
| **மொத்தம்** | **2,816** | **2,991** | **2,908** | **3,099** | **3,086** | **3,666** | **3,901** | **3,018** | **3,319** | **3,106** |

(இ) பெற்றோலிய உற்பத்தி பொருட்கன் சில்லறை விற்பனை வழலை

(டிசம்பர் 31 இல் உள்ளவாறு லீ ஒன்றுக்கு கொழும்பு அவ்விடத்திலேயான ளவிலை ரூபா

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பெற்றோல் | 95.00 | 92.00 | 120.00 | 115.00 | 115.00 | 125.00 | 159.00 | 162.00 | 150.00 | 117.00 |
| ஓ்டொ டீசல் | 92.00 | 60.00 | 70.00 | 73.00 | 73.00 | 76.00 | 115.00 | 121.00 | 111.00 | 95.00 |
| சப்பர் டீசல் | 65.30 | 65.30 | 85.30 | 88.30 | 88.30 | 98.30 | 142.00 | 145.00 | 133.00 | 110.00 |
| மண்ணெண்ணெய் | 48.00 | 48.00 | 50.00 | 51.00 | 51.00 | 61.00 | 106.00 | 106.00 | 81.00 | 49.00 |
| உலை எண்ணெய் 800" | 44.40 | 44.40 | 33.90 | 34.90 | 40.00 | 52.20 | 92.20 | 92.20 | 92.20 | 80.00 |
| உலை எண்ணெய் 1500" | 43.30 | 43.30 | 31.70 | 32.70 | 40.00 | 50.00 | 65.00 | 90.00 | 90.00 | 80.00 |
| உலை எண்ணெய் 3500" | 41.00 | 41.00 | 25.00 | 26.00 | 40.00 | 50.00 | 65.00 | 90.00 | 90.00 | 80.00 |

**தொழிற்பாட்டு பெறுபேறுகள்**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | 196,767 | 38,364 | 341,670 | 237,663 | 256,329 | 356,442 | 512,910 | 490,381 | 525,182 | 376,734 |
| விற்பனை செலவுகள் | (187,231) | (222,763) | (334,849) | (232,271) | (269,316) | (420,227) | (540,439) | (464,374) | (499,956) | (337,119) |
| அமாத்த இலாபம் | 9,536 | 15,601 | 6,821 | 5,392 | (12,987) | (63,785) | (27,529) | 26,007 | 25,226 | 39,615 |
| வட்டி உள்ளடற்கலாக பணியாற்று மற்றும் தாபனச் செலவுகள் செலவுகள் | (11,451) | (11,617) | (21,557) | (16,745) | (13,936) | (30,572) | (62,041) | (33,897) | (24,097) | (55,927) |
| ஹெட்ஜிங் செலவுகள் | | | - | - | - | - | (7,612) | - | - | (3,864) |
| **வரிக்கு முந்திய இலாபம் ∴ (நட்டம்)** | **(1,915)** | **3,984** | **(14,736)** | **(11,353)** | **(26,923)** | **(94,357)** | **(97,182)** | **(7,890)** | **1,129** | **(20,176)** |

| ரூபா மில்லியன் | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 (மீ.கு) | 2015 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **பங்கு மூலதன பொறுப்புக்கள்** | | | | | | | | | | |
| மூலதனம் | 1,000 | 1,000 | 1,000 | 1,000 | 1,000 | 3,500 | 3,500 | 3,500 | 3,500 | 28,500 |
| ஒதுக்குகள் | 10,066 | 12,568 | (2,416) | (14,038) | (38,369) | (134,736) | (232,045) | (239,967) | (235,757) | (253,653) |
| நீ.கா பெறுப்புக்கள் | 16,705 | 13,728 | 10,908 | 32,779 | 28,478 | 27,646 | 1,998 | 1,351 | 703 | 342 |
| பணிக்கொடை ஏற்பாடுகள் | 514 | 541 | 567 | 735 | 746 | 626 | 547 | 538 | 664 | 861 |
| **மொத்தம்** | 28,285 | 27,837 | 10,059 | 20,476 | (8,145) | (102,964) | (226,000) | (234,578) | (230,890) | (227,950) |
| **பிரதி நிதித்துவப்படுத்தியது** | | | | | | | | | | |
| முன்னெடுக்கப்படும் பணி அடங்கலாக நிலையான சொத்துக்கள் | 4,461 | 4,374 | 4,624 | 5,041 | 8,280 | 8,850 | 9,599.17 | 13,136 | 13,616 | 13,638 |
| முதலீடுகள் | 2,553 | 2,547 | 2,542 | 2,542 | 2,542 | 5,042 | 5,058.13 | 5,044 | 15,028 | 41,849 |
| தேறிய நடைமுஜற வொத்துக்கள் | 21,271 | 20,916 | 2,893 | 12,893 | (18,967) | (116,856) | (240,656.66) | (252,758) | (259,534) | (283,437) |
| **மொத்தம்** | **28,285** | **27,837** | **10,059** | **20,476** | **(8,145)** | **(102,964)** | **(226,000)** | **(234,578)** | **(230,890)** | **(227,950)** |
| **சார சம்பப்படுத்தப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று** | | | | | | | | | | |
| தொழிற்படுத்தலில் இருந்து காசுப்பாய்ச்சல் | (7,034) | 37 | (1,228) | 41,840 | (24,169) | (102,756) | (68,408) | (13,920) | (1,817) | 9,416 |
| முதலீட்டுச் செயற்பாடுகளில் பயன்படுத்தப்பட்ட காசு | 662 | 1,166 | 41 | (309) | (3,376) | (644) | 1,148 | (7,547) | (1,826) | (23,568) |
| நிதியியல் செயற்பாடுகளிலிருந்து பயன்படுத்தப்பட காசு | (2,478) | (3,326) | (1,001) | (21,340) | (4,379) | 119,017 | 62,540 | 7,232 | 28,745 | 41,049 |
| காசு காசுக்கு சமமான வற்றில் (குறைவு) அதிகரிப்பு | (8,850) | (2,123) | (2,188) | (20,191) | (31,924) | 15,617 | (4,720) | (14,235) | 25,102 | 26,897 |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசு காசுக்கு சமமானவை | 20,934 | 12,084 | 9,961 | 7,772 | 27,963 | (3,961) | 11,656 | 6,936 | (7,299) | 17,803 |
| ஆண்டின் இறுதியில் காசு காசுக்கு சமமானவை | 12,084 | 9,961 | 7,772 | 27,963 | (3,961) | 11,656 | 6,936 | (7,299) | 17,803 | 44,700 |
| **கணக்கீட்டு விகிதசாரங்கள்** | | | | | | | | | | |
| இலாபத்தன்மை வீகிதசாரம் | | | | | | | | | | |
| மொத்த இலாப விகிதசாரம் | 4.8% | 6.5% | 2.0% | 2.3% | -5.1% | -17.9% | -5.4% | 5.3% | 4.8% | 10.5% |
| தேறிய இலாப விகிதாசாரம் | -0.5% | 1.2% | -4.4% | -4.9% | -10.5% | -26.5% | -18.9% | -1.6% | 0.2% | -5.8% |
| **தொழிற்பாட்டு விகிதாசாரங்கள்** | | | | | | | | | | |
| வருமானத்திற்கான செலவு விகிதாசாரம் | 99.8% | 97.9% | 102.6% | 102.7% | 109.4% | 121.8% | 108.9% | 97.8% | 97.7% | 92.8% |
| சொத்து வளர்ச்சி விகிதாசாரம் | | | | | | | | | | |
| பொருட்பதிவேட்டு புரள்வு விகிதாசாரம் | 6.97 | 6.65 | 9.34 | 8.13 | 8.04 | 10.70 | 10.89 | 7.30 | 7.77 | 6.44 |
| வட்டிக் காப்பு | 0.20 | 2.28 | (3.66) | (1.39) | (2.93) | (9.48) | (3.88) | 0.57 | 1.08 | (0.08) |
| **திரவத்தன்மை விகிதாசாரம்** | | | | | | | | | | |
| நடைமுறைச் சொத்து விகிதாசாரம் | 1.32 | 1.22 | 0.98 | 1.06 | 0.82 | 0.58 | 0.43 | 0.39 | 0.34 | 0.31 |
| துரித விகிதாசாரம் | 0.73 | 0.64 | 0.69 | 0.86 | 0.57 | 0.45 | 0.28 | 0.24 | 0.19 | 0.21 |

# நிதியியல் கலைச் சொற்கள்

**கணக்கீட்டுக் கொள்கைகள்** – நிதிக் கூற்றுகளைத் தயாரித்து எடுத்துரைக்கையில், நிறுவனமொன்றினால் பின்பற்றப்படுகின்ற குறித்துரைத்த கோட்பாடுகள் அடிப்படைகள், சமவாயங்கள், விதிகள் மற்றும் நடைமுறைகள்.

**திரளுகின்ற அடிப்படை** – காசு அல்லது அதற்குச் சமமானவற்றின் பெறுகைக்காக அல்லது கொடுப்பனவிற்காக காத்திராது, கொடுக்கல் வாங்கல்கள் அல்லது ஏனை நிகழ்வுகள் நிகழுகின்றபோது, விளைவுகளை அடையாளப்படுத்தல்.

**காசுக்குச் சமமாதல்** - பெறுமதியில் முக்கியமற்ற மாற்றங்களுக்கு உட்படுகின்ற அறியப்பட்ட பணத்தொகைகளாக உடனடியாக மாற்றத்தக்க குறுகிய கால ஊயர் திரவத் தன்மையுடைய முதலீடுகள்.

**எதிர்பாரா பொறுப்புகள்** - நிகழக் கூடிய அல்லது நிகழாத எதிர்கால நிகழ்வுகளின் மூலம் நிர்ணயிக்கப்பட வேண்டிய நிதியியல் விளைவுகள் காணப்படுகின்ற நிதி நிலைமைக் கூற்று மீது காணப்படும் நிபந்தனைகள் அல்லது நிலைமைகள்.

**நடைமுறை விகிதாசாரம்** - கிடைக்கப் பெறுகின்ற நடைமுறைச் சொத்துகளுடன் நடைமுறைப் பொறுப்புகளிள் ஈடுசெய்கின்ற தடவைகளை அளவிடுதல்.

**புறழ்வுக்கான கடன்படுனர்கள்** - வாடிக்கையாளர்களுக்கு வழுங்கப்பட்டுள்ள கடன் அளவீடு (அதாவது, நாட்களில் குறிப்பிடப்பட்டிருப்பின் சராசரி படுகடன் தீர்ப்பனவுக் காலம்)

**அறிக்கையிடும் திகதிக்குப் பிந்திய நிகழ்வுகள்** - நிதியியல் கூற்று திகதிக்குப் பிந்திய அத்துடன் நிதியியல் கூற்றுகள் வெளியிடப்படுவதற்கு அனுமதிக்கப்படுகின்ற திகதிக்குப் பின்னர் நிகழ்கின்ற முக்கிய நிகழ்வுகள்.

**நியாயப் பெறுமதி** – மதிநுட்பமாக குறுகிய தூர கொடுக்கல் வாங்கல் ஒன்றின் விரும்புகின்ற தரப்பினர்களுக்கிடையில் சொத்து பரிமாற்றப்படக் கூடிய அல்லது பொறுப்பொன்று தீர்ப்பனவு செய்யப்படக் கூடிய தொகை.

**வட்டி உள்ளடக்கம்** - வட்டி மற்றும் வரிக்கு முன்னர் இலாபத்தின் மூலம் வட்டி விதிப்பனவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்ற ரீதியிலான அளவீடு.

**ஏற்பாடு** – நிச்சயமற்ற காலம் அல்லது தொகை பற்றிய பொறுப்பு.

**தொடர்புடைய தலைப்பினர்** - நிதியியல் மற்றும் தொழிற்பாட்டுத் தீர்மானங்கள் / கொள்கைகளை ஆக்குவதில் வேறு தரப்பினரைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது கணிசமாகச் செல்வாக்குச் செலுத்துவதற்கு இயலுமையினைக் கொண்டிருக்கின்ற ஒரு தரப்பினர் காணப்படுகின்ற தரப்பினர்கள்.

**துறைகள்** - தொழிற்பாடுகளின் தன்மையிலான அத்துடன் அதனையொத்த நியதிகளில் வகைப்படுத்தப்பட்டுள்ள தொழில் அலகுகளில் ஒன்று சேர்வு.

**பணியாற்று மூலதனம்** - நாளாந்தத் தொழிற்பாடுகளுக்கு நிதியளிப்பதற்குத் தேவையான மூலதனம். (நடைமுறைப் பொறுப்புகளைக் கழித்து நடைமுறைச் சொத்துகள்).